யாழ்ப்பாணத் தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும்

யுத்தம், இடப்பெயர்வு மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தியால் தூண்டப்பட்டு மாற்றத்திற்குள்ளாகும் அடையாளங்கள்

பரம்சோதி தங்கேஸ்

யாழ்ப்பாணத் தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும்

யுத்தம், இடப்பெயர்வு மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தியால் தூண்டப்பட்டு மாற்றத்திற்குள்ளாகும் அடையாளங்கள்

யாழ்ப்பாணத் தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும்

யுத்தம், இடப்பெயர்வு மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தியால் தூண்டப்பட்டு மாற்றத்திற்குள்ளாகும் அடையாளங்கள்

பரம்சோதி தங்கேஸ்

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியற் துறையில் கலைமாணிப் பட்டத்தினையும், கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் அகதிகள் கற்கையில் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சமூகவியற்துறையில் விரிவுரையாளராகவும் இலங்கையிலுள்ள திட்டமிடல் சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் ஆய்வாளராகவும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் ஆலோசகராகவும் கடமையாற்றியவர். குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின் சாதி, வர்க்கம், இனத்துவம், பால்நிலை, இடப் பெயர்வு முதலிய விடயங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றார்.

காலிங்க டியூடர் சில்வா

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட சமூகவியற் பேராசிரியராகக் கடமையாற்றும் இவர், அப்பல்கலைக் கழகத்தின் கலைப்பீடப் பீடாதிபதியாகவும் விளங்கினார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் அவுஸ்ரேலியாவிலுள்ள மொனாஷ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டவர். இவர், சாதி, வறுமை, வர்க்க இயங்குநிலைகள், இனத்துவம், ஆரோக்கியம் மற்றும் அபிவிருத்தி உட்பட இலங்கைச் சமூகத்தின் வேறுபட்ட தோற்றநிலைகள் பற்றி பரந்தளவில் ஆய்வுகள் மேற்கொண்டும் அவற்றினை வெளியிட்டும் வருகின்றார்.

யாழ்ப்பாணத் தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும்

யுத்தம், இடப்பெயர்வு மற்றும் சமூகபொருளாதார அபிவிருத்தியால் தூண்டப்பட்டு மாற்றத்திற்குள்ளாகும் அடையாளங்கள்

பரம்சோதி தங்கேஸ்

எழுநா வெளியீடு

PRICE: 100 INR, 160 SLR, 10 USD, 7 EUR

யாழ்ப்பாணத் தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும் * ஆசிரியர்: பரம்சோதி தங்கேஸ் * © ஆசிரியருக்கு * பக்கம்: 150 * முதல் பதிப்பு : ஜனவரி 2013 * வெளியீடு : எழுநா ஊடக நிறுவனம் No:4, Kettering Road, Isham, Kettering, NN141HQ United Kingdom * தொலைபேசி : 0044 79 155 55 458 * மின்னஞ்சல் info@ezhunamedia.org * அட்டை வடிவமைப்பு : ந. இரமேஷ் குமார் * அச்சாக்கம் : SV பிரின்ஸ், சென்னை 5 * வடிவமைப்பு மற்றும் அச்சாக்க ஒருங்கிணைப்பு : சுவடி, சென்னை 5.

எழுநா ஊடக நிறுவன வெளியீடு : 6

yAzhppANath thamizhar kalAsAraththil sAthiyamum inathuvamum * Author : Paramsothy Thanges * © Author * Pages: 150 * First Editon: January 2013 * Published by Ezhuna Media Foundation, No:4, Kettering Road, Isham, Kettering, NN141HQ United Kingdom * Phone: 0044 79 155 55 458 * e-mail: info@ezhunamedia.org * Cover Design: N. Ramesh Kumar * Print: S.V. Prints, Chennai 5 * Design and Printing Co-odination: Chuvadi, Chennai 5.

Selling rights in India :

Discovery Book Palace (P)Ltd
No.6, Magavir Comlex, 1st Floor Munusamy Salai,
K K Nagar West, Chennai - 600078
Phone: 0091 44 65157525
Mail: discoverybookpalace@gmail.com
Buy Online: www.discoverybookpalace.com

ISBN :

பேராசிரியர் அர்ஜூன பராக்கிரமவிற்கு

இந்நூலின் உரைப்பகுதி Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported (CC BY-NC-SA 3.0) உரிமத்தின் கீழ் வெளியாகிறது. அதனை விட உரிமை கூடிய விதத்தில் பயன்படுத்த விரும்புவோர் பதிப்பாளரைத் தொடர்பு கொள்ளலாம். இந்நூலின் தளக்கோலமும் வடிவமைப்பும் 2015 டிசம்பர் வரை முழுப் பதிப்புரிமைக்கு உட்படுகிறது. 2016 இல் இந்நூலின் தளக்கோலமும் வடிவமைப்பும் Creative Commons Attribution-NonCommercial-NoDerivs 3.0 Unported (CC BY-NC-ND 3.0) உரிமத்திற்கு மாற்றம் பெறுவதோடு, திறந்த அணுக்கத்தில் வெளியாகும்.

The Text within this book is available under the Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported (CC BY-NC-SA 3.0) licence. If anyone wants to use the content of the book with less copyright restrictions, please contact the publisher. The design and layout of the book are under copyright upto December 2015. In 2016, layout and design will accommodate to Creative Commons Attribution-NonCommercial-NoDerivs 3.0 Unported (CC BY-NC-ND 3.0) and a digital copy of this book will be made available sans access restrictions.

For more information :
http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/
http://creativecommons.org/licenses/by-nc-nd/3.0/



பதிப்புரை

தொண்ணூறுகளில், குறிப்பாக அம்பேத்கார் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகத்தில் தலித் அரசியல் எழுச்சி பெறுகின்றது. இந்த எழுச்சியானது தமிழகத்தின் சமூக, பண்பாட்டுச் சூழலில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியதுடன், தலித் சமூகத்தின் அரசியல், வாழ்வியல், சமூகவியல் சார்ந்த பல்வேறு கற்கை நெறிகளும் ஆய்வுகளும் தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணமாகவும் அமைந்தது. இதே காலப்பகுதியில் ஈழத்தில் தேசிய விடுதலைப் போராட்டம் அதன் முழுவீச்சில், ஆயுதப் போராட்டமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்தமும், மக்கள் எதிர்கொண்ட நெருக்கடி நிலைகளும் மக்களை அப்போதைய முதன்மையான பிரச்சினையாக சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையே கருதவைத்தன. தவிர, இக்காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமற்ற தமிழர் அரசொன்றை நிர்வகித்து வந்தார்கள். புலிகளுடைய நிர்வாகத்தால் சாதியப் பாகுபாடு சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டிருந்ததனால் வெளிப்படையாகச் சாதிகளைக் குறிப்பிட்டுக் கதைப்பதும் சாதியத்தை அடிப்படையாகக் கொண்ட பிற கதையாடல்களும் மிகவும் குறைவாகவே இருந்தன. ஆனால், பேசாமல் இருப்பதன் மூலம் சாதியத்தை ஒழித்துவிடலாம் என்பது மிகத் தவறான அணுகுமுறை என்பதையே வரலாற்றில் இருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. சாதி ஒழியவேண்டும் என்று நினைப்பவர்களும், அதற்காகச் செயற்படுபவர்களும் சாதியமைப்பு மற்றும் சாதியமைப்பின் காலத்திற்கேற்ற பரிமாணம் மாற்றம் பற்றிய ஆழமான அறிவுடனும் புரிதலுடனும் இருந்தால் மாத்திரமே சாதி ஒழிப்புக் கைகூடும் என்பது நடைமுறையில் உணரப்பட்டுமிருக்கின்றது.

ஈழத்துச் சாதியமைப்புப் பற்றிய தரவுகளும், ஆய்வுகளும், புத்தகங்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பது ஈழத்துச் சாதியமைப்புப் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுபவர் களுக்கும், சாதி ஒழிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கும் மிகப் பெரிய தடையாக உள்ளது. குறிப்பாக தமிழில் ஈழத்துச் சாதியக்கட்டமைப்பு தொடர்பாக விரல் விட்டு எண்ணக் கூடிய நூல்களை மாத்திரமே காணக் கூடியதாக உள்ளது. இதன் காரணமாக தமிழகச் சாதியமைப்பே ஈழத்திலும் இருப்பதாகக் கருதுவதோடு, ஈழத்துச் சாதியமைப்புகளில் காட்டப்படும் பாகுபாடு, ஆதிக்க சாதியினரின் சாதி வெறி போன்றவற்றைப் பற்றிப் பேசும்போது சர்வசாதாரணமாக தமிழகத்து நிகழ்வுகளை மேற்கோள் காட்டிப் பேசுவதையும் அவதானித்திருக்கின்றோம். நுணுக்கமான வேறுபாடுகளைத் தம்மிடத்தே கொண்டுள்ள ஈழத்துச் சாதியமைப்பையும், தமிழகத்துச் சாதியமைப்பையும் ஒரே விதமாக அணுகுவது சாதியம் தொடர்பான கற்கை களையும், செயற்பாடுகளையும் ஒருபோதும் ஆரோக்கியமான பாதையில் நகர்த்தாது.

இந்தச் சூழ்நிலையில் அறிவுசார் செயற்பாடுகள் ஊடாக சாதியம் பற்றிய முறைமையான அறிவுசார் கற்கை நெறிகளை ஊக்குவிக்கவும், சாதியமைப்புகளைத் தெரிந்துகொள்வதிலும், சாதி ஒழிப்பிலும் அக்கறை உள்ளோரிடம் பரவலாக அறிமுகப்ப டுத்தவேண்டும் என்ற எழுநா பதிப்பகத்தின் நோக்கங்களில் ஒன்றின் முதன் முயற்சியாக "யாழ்ப்பாண தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும்" என்ற இந்நூலை வெளியிடுகின்றோம். ஈழத்துச் சாதியமைப்பு என்று எடுத்துக்கொண்டாலும், அங்கே மட்டக்களப்புச் சாதியமைப்பிற்கும், யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பிற்கும் இடையே சமூகரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் அனேக வேறுபாடுகள் உண்டு. இந்த வேறுபாடுகள் கருத்திற் கொள்ளப்படவேண்டும் என்பதாலேயே "யாழ்ப்பாண தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும்" என்கிற இந்நூலில் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பை மையமாகக் கொண்ட ஆய்வுக்கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் தொகுப்பில் *1) யாழ்ப்பாணத்தில் சாதி: மரபும் மாற்றமும், 2) யாழ்ப்பாணச் சமூகத்தின் புலப்பெயர்வு,* பணவருவாய் மற்றும் சாதி, வகுப்பு, மத அடையாளங்களின் இயங்குநிலைகள், *3) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச்* சமூகத்தில் சாதியும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களும், *4) யாழ்ப்பாணத்தில் சாதியும் இனத்துவமும்: அடையாளக்* கட்டுமானங்கள் என்கிற நான்கு கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. இந்தக் கட்டுரைகளுடாக போரும், அதன்

நிமித்தம் நடந்த தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும் சாதியக் கட்டுமானத்தில் என்னென்ன மாற்றங்களை உருவாக்கியுள்ளன என்பது புள்ளிவிபரங்கள் ஊடாகவும், பரவலாகச் சேர்க்கப்பட்ட வாய்மொழித்தரவுகளூடாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட கருதுகோள்கள், அனுமானங்கள், முடிவுகள் என்பனவற்றின் ஊடாக அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கட்டுரையாசிரியர் பரம்சோதி தங்கேஸ் சாதியம் தொடர்பான கற்கைசார் செயற்பாடுகளில் தொடர்ச்சியாகத் தன்னை ஈடுபடுத்தி வருபவர். தனது கலைமாமணிப் படிப்பிற்கான ஆய்வுக்கற்கையை யாழ்ப்பாணத்தில் சாதி மற்றும் இனத்துவ அடையாளங்களுக்கிடையிலான இடைவினைவுகள் பற்றியதாக மேற்கொண்டவர். ஒரு சமூகவியலாளராக சாதியத்தின் கட்டுமானத்தை குறிப்பாக போர் மற்றும் போரின் விளைவுகளால் அதன் கட்டுமானத்தில் ஏற்பட்ட தாக்கங்களை கற்கைசார் ஒழுங்குடனும் தரவுகளுடனும் தனது எழுத்துக்களில் முன்வைத்துள்ளார். சாதியக்கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள நுணுக்கமான மாற்றங்களையும் மாற்றங்களினூடு சாதியம் தன்னை எவ்வாறு நிலைநிறுத்தியுள்ளது என்பதையும் ஆராய்வது சாதிய விடுதலையை நோக்கமாகக் கொண்டு செயற்படும் ஒவ்வொருவருடைய மிக முக்கிய கடமையாகும். அவ்வகையில் இன்றைய யாழ்ப்பாண சாதியக் கட்டமைப்பை விளங்கிக் கொள்ள உதவும் இவ் ஆய்வுப் பிரதி, சாதிய விடுதலையுடன் தொடர்புடைய செயற்பாட்டாளர்களுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. அதுமட்டுமல்லாது, வர்க்க விடுதலையை நோக்கமாகக் கொண்டு செயற்படுபவர்களுக்கு புதிய வர்க்க ஆய்வுக்கான ஆதாரமாகவும், தேசிய விடுதலையை முன்னகர்த்தும் செயற்பாட்டாளர்களுக்கு ஆரோக்கியமான தேசிய உள்ளடக்கத்தை உருவாக்கும் ஆதாரமாகவும் இருக்கும் என்று நம்பிக்கையுடன் இந்நூலை வெளியிடுகின்றோம்.

எழுநா
டிசம்பர் 2012

என்னுரை

இலங்கையில் அறுபது மற்றும் எழுபதுகளில் சாதி பற்றிய முக்கியமான ஆய்வுக்கற்கைகள் பல இடம்பெற்றன. குறிப்பாக மேற்கத்தேய மானிடவியலாளர்களால் சிங்களவர், இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர்களின் சாதிமுறைமை பற்றிய மிக முக்கியமான பல ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன. Nur Yalman (1967), E. R. Leach (1961), J. Jiggins (1979), Bryce Ryan (1993), Roberts Michael (1982, 1983), R. Jayaraman (1975), Michael Banks (1957, 1960), Kenneth David (1973a, 1973b, 1974a, 1974b), M. D. Raghavan (1957, 1953, 1967), Pfaffenberger (1982, 1990) முதலிய ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கற்கைகளை இதற்கான எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிட முடியும்.

எண்பதுகளைத் தொடர்ந்து இலங்கையில் இனமுரண்பாடு வலுவடைந்து, இனத்துவப் பிரக்ஞை மேலோங்கத் தொடங்கியது. இப்பின்னணியில் சாதி என்ற சமூக முறைமையின் முக்கியத்துவம் குறைந்து, இனத்துவவாதம், தேசியவாதம், விடுதலைப் போராட்டம், பயங்கரவாதம் முதலிய எடுத்துரைப்புக்கள் சமூக விஞ்ஞானக் கற்கைகளில் முக்கிய ஆய்வுப் பொருள்களாக உருவாகின. மதம், திருமணம், அரசியல், புலப்பெயர்வு, சமூக அபிவிருத்தி போன்ற இன்னோரன்ன சமூக, பொருளாதார, கலாசார விடயங்களில் தாக்கம் செலுத்தி நிற்கும் சாதி என்ற சமூக முறைமை முக்கியமற்ற அல்லது தேவையற்றதொன்றாக மாறியது. இந்தக் காரணிகளால் சமூக அறிவியலில் சாதி பற்றிய தற்கால இயங்குநிலையினைப் புரிந்துகொள்வதற்குப் பாரியதொரு இடைவெளி ஏற்பட்டுள்ளது. இந்த இடைவெளியினை நிவர்த்தி செய்யும் ஒரு முயற்சியாக இப்புத்தகத்தில் இடம்பெறும் ஆய்வுக் கட்டுரைகள் அமைகின்றன.

யாழ்ப்பாணச் சாதியமைப்பு தொடர்பாக ஆங்கிலம், தமிழ் மொழிகளில் வெளிவந்த எழுத்துக்கள் பல்வேறு அறிவியல்

தளங்களில் இடம்பெற்றமை கவனிக்கத்தக்கது. இவ்வெழுத்துக் களை "நிறுவனப்படுத்தப்பட்ட" சமூக ஆய்வுசார் கற்கைகளுடன் (மானிடவியல், சமூகவியல், அரசியல், கலாசாரக் கற்கைகள்) மட்டும் குறுக்கிவிடாமல் நோக்கும்போது யாழ்ப்பாணச் சாதி பற்றிய எழுத்துக்கள் பின்வரும் நான்கு தளங்களில் இடம்பெறுவதாகக் கூறமுடியும்.

முதலாவதாக யாழ்ப்பாணத் தமிழர் தொடர்பாக வெளிவந்த நாவல்கள், சிறுகதைகள் மற்றும் கவிதைகளில் சாதிபற்றிய முக்கிய பல விடயங்கள் இடம்பெறுகின்றன. இவ்வெழுத்துக்கள் பெரும்பாலும் சாதிக் கொடுமைகள் மற்றும் தீண்டாமை தொடர்பான கருத்துக்களைக் கூறுவதாக அமைகின்றன. கே. டானியல், டொமினிக் ஜீவா, தெணியான், குத்திரமூர்த்தி போன்றோர்களின் எழுத்துக்களை இதற்கான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். இவர்களது எழுத்துக்கள் பல கற்பனைக் கதாபாத்திரங்களுடன் பின்னப்பட்ட சமூகத்திலுள்ள நிஜவாழ்க்கைக்கான எடுத்துரைப்புகளாக உள்ளன.

இரண்டாவதாக வரலாற்று ரீதியில் இடம்பெற்ற சாதி அடக்கு முறைகள், அதற்கு எதிராக இடம்பெற்ற போராட்டங்களை ஆவணப்படுத்தும் முகமாகத் தோற்றம்பெற்ற எழுத்துக்கள். இதற்கு உதாரணமாக வெகுஜனன், இராவணாவினால் (2007) எழுதப்பட்ட "இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட் டங்களும்" என்ற நூலைக் கூறலாம். இந்நூல் வரலாற்றுரீதியில் இடம்பெற்ற சாதி ஒழிப்புப் போராட்டம் பற்றிய குறிப்புக்களை அதன் கால எல்லையுடன் புரிந்துகொள்ள தமிழில் வெளிவந்திருக்கும் முக்கியமான நூலாகும்.

மூன்றாவதாக சாதி தொடர்பாக ஒருவர் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஆவணப்படுத்தும் முகமாகத் தோன்றிய எழுத்துக்களைக் குறிப்பிடலாம். இவ்வெழுத்தினை சுயசரிதை (Autobiogrpahy) என்று கூறலாம். ஆங்கிலக் கலாசாரத்தில் இத்தகைய எழுத்துக்கள் பிரசித்தி பெற்றவையாக உள்ளபோதும் தமிழில் மிக அரிதாகவேயிருக்கின்றன. அத்தவகையில் அண்மையில் யோகரட்ணம் (2011) என்பவரால் எழுதப்பட்ட "தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும்" என்ற நூலினை ஒரு முன்னுதாரணமாகக் குறிப்பிட முடியும்.

நான்காவதாக நிறுவனப்படுத்தப்பட்ட கல்விசார் துறைகளான மானிடவியல், சமூகவியல், அரசியல் மற்றும் கலாசாரக் கற்கைகளின் துறைகளைச் சேர்ந்த புலமையாளர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கற்கைகள் உள்ளன. அதிலும் யாழ்ப் பாணத்துச் சாதியமைப்புப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய

நிறுவனப்படுத்தப்பட்ட அறிவியல் கற்கைகள் ஆங்கில மொழியிலேயே அதிகமாக உள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக மேற்கத்தேய புலமையாளர்களான David Kenneth, Michael Banks, Bryan Pfaffenberger, M. D. Raghavan போன்றோர்களது ஆய்வுக் கற்கைகளைக் குறிப்பிட முடியும். இவ்விடத்தில் கா. சிவத்தம்பி, க. அருமைநாயகம், சைமன் காசிச் செட்டி, 'ஹண்டி' பேரின்பநாயகம் போன்றோர்களது பங்களிப்பும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதே. பெரும்பாலான நிறுவனப்படுத்தப்பட்ட அறிவியல்சார் கற்கைகள் சமூகத்தினை ஒழுங்குபடுத்துமொரு முறைமையாக சாதியினைக் கற்பதற்கு (Caste as a Social and Functional System) முயற்சிக்கின்றன. அத்தவகையில் இக்கற்கைகள் தொழிற்பாட்டுவாத அணுகுமுறையினை (Funtional Perspective) கொண்டுள்ளன எனலாம். மேலும் இவ்வறிவியல் கற்கைகள் சாதி என்ற சமூக முறைமையில் நிலவும் உள்வாரியான பாகுபாட்டு வடிவங்களை ஆராய்வதில் அதிகம் அக்கறை செலுத்துவதில்லை என்ற விமர்சனமும் உண்டு. அவ்விமர்சனத்தின் பின்னணியில் தோன்றியதாக "Casteless or Casteblind? Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka (2009)" என்ற ஆய்வு நூல் உள்ளது.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு காலகட்டத்தில் ஆய்ந்து எழுதப்பட்ட யாழ்ப்பாணத் தமிழர்களின் சாதி, இனத்துவம், வகுப்பு மற்றும் மத அடையாளங்களின் இயங்குநிலை தொடர்பான நான்கு கட்டுரைகள் இப்புத்தகத்தில் இடம்பெறுகின்றன. இக்கட்டுரைகள் வெவ்வேறு நோக்கங்களுக்காக குறிப்பாகச் சாதி என்ற சமூகமுறைமையினைப் பற்றி எழுதப்பட்டமையால் சிலசமயம் கூறியது கூறல் இடம் பெறுகின்றது. எனினும், கட்டுரைகளின் வாசிப்பமைதி கருதி அவை அவ்வாறே விடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணச் சாதி யமைப்பின் தற்காலப்போக்கினை பகுப்பாய்வு செய்வதில் இப்புத்தகத்தின் தேவை சமூக அறிவியலில் அவசியமானதொன்று என்பது எனது வலுவான நம்பிக்கையாகும்.

இப்புத்தகத்தினை வெளியிடுவதற்கு முன்வந்த எழுநா நிறுவனத்திற்கு எனது நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

பரம்சோதி தங்கேஸ்

London, January 2013

பொருளடக்கம்

1. யாழ்ப்பாணத்தில் சாதி: மரபும் மாற்றமும்
பரம்சோதி தங்கேஸ் 17

2. யாழ்ப்பாணச் சமூகத்தின் புலப்பெயர்வு,
பணவருவாய் மற்றும் சாதி, வகுப்பு,
மத அடையாளங்களின் இயங்குநிலைகள்
பரம்சோதி தங்கேஸ் 57

3. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச்
சமூகத்தில் சாதியும் உள்ளூரில் இடம்பெயர்ந்த
மக்களும்
பரம்சோதி தங்கேஸ், காலிங்க டியூடர் சில்வா 98

4. யாழ்ப்பாணத்தில் சாதியமும் இனத்துவமும்:
அடையாளக் கட்டுமானங்கள்
பரம்சோதி தங்கேஸ் 126

உள்ளடக்க அட்டவணை

அத்தியாயம் ஒன்று

1. அட்டவணை—01: சாதியும் குலதெய்வங்களும் 26

2. அட்டவணை—02: சாதியும் சாதித் தொழில்களும் 30

3. அட்டவணை—03: சாதிக்குள் சாதி 48

அத்தியாயம் இரண்டு

1. அட்டவணை—1: மல்லாகத்தில் சாதி 72

2. அட்டவணை—2: மல்லாகத்தின் சாதியும்,
உள்ளூர் மற்றும் சர்வதேசப் புலப்பெயர்வும் 78

3. அட்டவணை—3: மல்லாகக் கிராமத்தின் உள்ளூர் மற்றும் சர்வதேச புலப்பெயர்வுக்கான காரணங்கள் 78

4. அட்டவணை—4: மல்லாகக் கிராமத்தின் பணவருவாய் மூலங்கள் 83

அத்தியாயம் மூன்று

1. அட்டவணை— 1: யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிகள் 105

2. அட்டவணை—2: சாதியும் மல்லாகத்தில் அகதி முகாம்களில் வாழும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் பரம்பலும் 116

ஆங்கில உசாத்துணை நூல்கள் 151

தமிழ் உசாத்துணை நூல்கள் 156

சுட்டிகள் 157

யாழ்ப்பாணத்தில் சாதி: மரபும் மாற்றமும்

பரம்சோதி தங்கேஸ்

சுருக்கம்

இக்கட்டுரை மரபுரீதியான யாழ்ப்பாணத்துச் சாதி யமைப்பில் கடந்த சில தசாப்தங்களாக ஏற்பட்டுவரும் மாற்றங்களை சமூக, பொருளாதார, கலாசார, வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பரந்த தளத்தில் ஆராயமுற்படுகின்றது. பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இக்கட்டுரை யாழ்ப்பாணத் தமிழர்களின் சாதிகளை பல்வேறு பிரிவுகளுக்குள் உட்படுத்தி மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்துவதுடன் சாதி என்ற சமூக நிறுவனம் மதம், தொழில், கல்வி, அரச கொள்கைகள், தனியார் அமைப்புகள் போன்ற இன்னோரன்ன சமூக நிறுவனங்களின் தாக்கத்திற்குட் பட்டு மாற்றத்திற்குள்ளாகி வருகின்றமையையும் பகுப்பாய்வு செய்கின்றது. இம்மாற்றத்தினை தாழ்த்தப் பட்ட சாதிகளின் கல்வி வளர்ச்சி, நிறுவனமயப்படுத்தப் பட்ட தொழில்முறைமை, பொருளாதார வளர்ச்சி, சாதியடிப்படையிலான ஆலயங்களின் குறியீட்டு ரீதியான மேல்நோக்கிய அசைவியக்கம் முதலிய பல விடயங்கள் ஒன்றுடனொன்று தொடர்புற்று செயல் நிலைப்படுத்தி நிற்கின்றன. மேலும் சாதி முறையில் ஏற்பட்டுவரும் சமூக மாற்றம், பெருங்குழும உருவாக்கம், சமஸ்கிருதமயமாதல், சாதிப் புவியியல் முதலிய பல விடயங்களுடன் தொடர்புபடுத்தி பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

அறிமுகம்

சாதியினைப் பிரதான அளவுகோலாகக் கொண்டு உயர்வு, தாழ்வு போற்றப்படும் நிலையும், சாதி வேறுபாட்டிற்கேற்ப வேறுபட்ட அடையாளங்களை வெளிப்படுத்தும் போக்கும் தெற்காசிய சமூகத்தில் பொதுவாகக் காணப்படுகின்றது. இவ்வெளிப்படுத்தல்களின் வடிவங்கள் தெற்காசிய சமூகங்களிடையே ஒரேமாதிரியான அல்லது ஒத்த நிலைகளைக் கொண்டிருப்பதில்லை. நாடுகளுக்கிடையேயான வேறுபாடுகள், ஒரு நாட்டில் உள்ள இனத்துவக் குழுக்களுக்கிடையேயான வேறுபாடுகள், ஒரு நாட்டின் பிரதேசங்களுக்கிடையேயான வேறுபாடுகள் முதலியவற்றின் அடிப்படையில் சாதிகள், சாதி அடையாளங்கள், சாதி தொடர்பில் எழும் பாரபட்சங்கள், சாதி வெளிப்படுத்தல்கள், சாதி மாற்றங்கள் என்பவற்றிலும் வேறுபாடுகள் இடம் பெறுகின்றன. இலங்கை, இந்தியச் சாதியமைப்புமுறை என்ற விடயம் இரு நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகளையும், இலங்கையில் சிங்களச் சாதியமைப்பு, தமிழர் சாதியமைப்பு என்ற விடயம் ஒரு நாட்டின் இருவேறு இனத்துவக் குழுக்களுக்கிடையேயான வேறுபாடுகளையும், இலங்கையில் வாழும் தமிழரிடத்தே யாழ்ப்பாணச் சாதியமைப்பு, மட்டக்களப்புச் சாதியமைப்பு, மலையகச் சாதியமைப்பு என்ற விடயம் ஒரு நாட்டின் பிரதேசங்களுக்கிடையேயான வேறுபாடுகளையும் புலப்படுத்தி நிற்பதனை ஒட்டுமொத்த சாதியமைப்பில் உள்ள வேறுபாடுகளுக்கான எடுத்துக்காட்டாகக் குறிப்பிடமுடியும். இவ்வாறான மிகச்சுருக்கமான விளக்கத்துடன், எனது ஆய்வு நோக்கம் கருதிய யாழ்ப்பாணச் சாதியமைப்புத் தொடர்பான விளக்கத்திற்கும், விவாதத்திற்கும் செல்கின்றேன்.

யாழ்ப்பாணச் சமூகம் நீண்டகாலமாகவே சாதியினை பிரதான அடையாளங்களுள் ஒன்றாகக் கொண்டுள்ளது. சாதி அடையாளங்கள் யாழ்ப்பாண மக்களின் தொழில், திருமணம், சமயம், சடங்கு, உறவுமுறை, வாழ்வியல், அமைவிடம் முதலிய பல அம்சங்களிலும் பரவியுள்ளன. ஒவ்வொரு சமூக நிலைமைகளுக்கேற்ப சாதி அடையாளங்களின் தாக்கங்கள் கூடியும், குறைந்தும், நெகிழ்ச்சிக்குட்பட்டும் நிலைத்துநிற்கும் போக்கினை இன்று வரையிலும் கண்டுகொள்ளமுடிகின்றது. இந்தக் கட்டுரையின் பிரதான நோக்கம் மரபுரீதியான யாழ்ப்பாணச் சாதியமைப்பில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் மாற்றங்களைப் புரிந்துகொள்வதாக அமைகின்றது.

இக்கட்டுரையின் பிரதான நோக்கத்தினை ஆய்வு செய்வதற்கு முன்னர், யாழ்ப்பாண சமூகத்தில் காணப்படும் சாதி அமைப்பு

பற்றி ஏற்கெனவே இடம்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளை ஒரு மீள்வாசிப்புக்கு உட்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன். இந்த மீள்வாசிப்பு யாழ்ப்பாணத்துச் சாதிகளைப் பிரிப்பு முறைக்குள் உட்படுத்தி மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின் சிக்கல் தன்மையை விசாரணைக்கு உட்படுத்துகின்றது.

யாழ்ப்பாணச் சாதிப்பகுப்பில் உள்ள சிக்கல்கள்

யாழ்ப்பாணச் சாதி அமைப்பை பகுத்து அல்லது பிரித்து ஆய்வு செய்வதனையும் அவ்வாறு ஆய்வு செய்வதன் மூலம் ஏற்படும் சிக்கல்களையும் ஆராய்வதே இத்தலைப்பின் பிரதான நோக்கமாகும். யாழ்ப்பாணச் சாதியை ஆய்வுப் பொருளாகக் கொண்ட பல ஆய்வாளர்கள், குறிப்பாக கெனத் டேவிட், கார்த்திகேசு சிவத்தம்பி போன்றவர்கள் அனைத்துச் சாதிகளையும் வெவ்வேறு முறையில் வகைப்படுத்தி ஆராய்ந்தனர். கெனத் டேவிட் யாழ்ப்பாணச் சாதியினை உயர்சாதி (High Caste), நல்லசாதி (Good Caste), குறைந்தசாதி (Low Caste) என மூன்றாகப் பகுக்கின்றார். இப்பகுப்பின் அடிப்படையில் பிராமணர், சைவக் குருக்கள், வெள்ளாளர், கோவியர், சைவச் செட்டி ஆகிய சாதிக் குழுக்களை "உயர்சாதியாகவும்" ஆச்சாரி, தட்டார், கைக்குழார், சேணியர், சாண்டார், முக்குவர், திமிலர், பண்டாரம், நட்டுவர், கரையார், தச்சர், கொல்லர், குயவர் ஆகிய குழுக்களை "நல்ல'' சாதியாகவும் நளவர், பறையர், வண்ணார், அம்பட்டர், பள்ளர், துரும்பர் ஆகிய குழுக்களை குறைந்த சாதியாகவும் பகுக்கின்றார். (David, *1973: 35)* கார்த்திகேசு சிவத்தம்பி இப்பகுப்பு முறையிலிருந்து விலகி யாழ்ப்பாணச் சாதிகளை "உயர் சாதியினர்", "உயர்சாதி" அல்லாதார், குடிமக்கள் (குடிமைகள்) எனப் பகுக்கின்றார். வெள்ளாளர் அதிகார மேன்மையால் "உயர்" சாதியாகக் கருதப்பட்டனர். பின்னர் பிராமணரும் "உயர்சாதி" என்ற வகைமைக்குள் உட்படுத்தப்படுகின்றனர். நட்டுவர், செட்டியர், சேணியர், கைக்குழார், தட்டார், கொல்லர், திமிலர், முக்குவர் ஆகிய சாதிகளை உள்ளடக்கிய ஒரு பட்டியலை "உயர்சாதி" அல்லாதோர் என்ற வகுப்பிலும் கோவியர், நளவர், பள்ளர், சாண்டார், சிவியார் என்போரை "குடிமக்கள்" என்ற வகுப்பிலும் உட்படுத்துகின்றனர். இந்த ஐந்து சாதிகளும் குடிமக்களாக ஒல்லாந்தரால் கணிப்பிடப்பட்டதாக யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை என்ற நூலில் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். *(சிவத்தம்பி 2000:10)* எனினும்

அம்பட்டர், வண்ணார், பறையர் போன்றோரும் குடிமக்கள் என அழைக்கப்பட்டனர் என்பதற்கு ஆதாரமாக க. அருமைநாயகம் குடிமக்கள் என்ற கட்டுரையில் திகண்டு சூடாமணி என்ற நூலினை மேற்கோள்காட்டி பதினெட்டு குடிமக்களைக் குறிப்பிடுகின்றார். 1. வெற்றிலை வாணிகன் (Betel Vendor) 2. காவற்காரர் (Watchman), 3. பாணர் (Tailor), 4. வேட்டையாடும் மிருகங்களைக் காப்பவர்/வலையர் (Game-keeper), 5. ஒச்சர் (Informer of Weddings and Deaths), 6. பூ மாலைக் காரர் (Garland Maker), 7. வாத்தியங்கள் இசைப்பவர்/வீரக் குடியார் (Musician), 8. சுண்ணாம்பு வாணிகர் (Lime Burner), 9. செக்கு வாணிகர் (Oil Monger), 10. குயவர் (Potter), 11. கற்சிற்பர் (Mason), 12. உலோகங்கள் உருக்குபவர்/கன்னார் (Brass Founder), 13. தட்டார் (Gold Smith), 14. வெட்டியான் (Pariah/Grave-digger), 15. தச்சர் (Carpenter), 16. கொல்லர் (Black Smith), 17. அம்பட்டர் (Barber), 18. வண்ணார் (Washerman) ஆகியோர் அக்குடிமக்களாவர். குடிமக்கள் பற்றிய இந்நீண்ட பட்டியல் இந்தியத் தமிழ்ச்சாதி அமைப்புக்குப் பொருத்தமாக இருக்கக்கூடும். ஏனெனில், க. அருமைநாயகம் இவற்றில் இறுதி யாகக் கூறப்பட்ட ஐந்து சாதிகளையும் யாழ்ப்பாணச் சாதியமைப்பில் தற்பொழுது குடிமக்களாகக் கருதமுடியும் எனச் சுட்டுவதிலிருந்து உணரலாம் (Arumainayagam 1979: 31). கெனத் டேவிட்டின் யாழ்ப்பாணச் சாதிகள் பற்றிய பட்டியலை மேற்கோள்காட்டி, பிறைன் ஃபாபன்பேக்கர் யாழ்ப்பாணச் சாதியில் ஏழு சாதியினரை மட்டுமே குடிமக்களாகக் குறிப்பிடு கின்றார். தச்சர், தட்டார், கொல்லர், குயவர், வண்ணார், அம்பட்டர், பறையர் ஆகியோர் அக்குடிமக்களாவர் (Pfaffenberger 1982: 39).

மேலே சுட்டிக்காட்டப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் ஆய்வாளர்கள் பலரும் யாழ்ப்பாணத்தில் குடிமக்கள் என்ற குழுக்கள் தொடர்பான ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்க வில்லை என்பது புலனாகின்றது. குடிமக்கள் தொடர்பான இந்த ஆய்வாளர்களின் கருத்துக்கள் அவர்களது புலக்காட்சியை வெளிப்படுத்துவதாகவோ அல்லது அவர்கள் எவ்வாறு சமூகத்தினைப் புரிந்து கொண்டார்கள் என்பதை மையப் படுத்தியதாகவோ கொள்ளவேண்டும். எது எவ்வாறாயினும் குடிமக்கள் என்ற சாதிக்குழு பற்றிய கருத்துக்களில் ஒருமித்த பன்மைத் தன்மைகளுக்கு அப்பால், இன்றைய நிலையில் அக்குடிமக்களினது நிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அவதானிக்க வேண்டியதே அவசியமாகும். கடப்பாட்டுணர் வுடன் குடிமைத் தொழில்களைச் செய்துவந்த அக்குடிமைக்

குழுக்கள் பண்பாட்டு மாற்றங்களினால் அத்தொழில்களை தமது வாழ்வியல் தேவைகளுக்கான கௌரவத் தொழில்களாக மேற்கொள்ள முனைவதை அவதானிக்கலாம். இந்த முனைப்பு யாழ்ப்பாணத்தில் பல பிரதேசங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனடிப்படையில் அவர்கள் தொழில் செய்யும் முறைமை, அதன் மூலம் கிடைக்கும் ஊதியம், தொழில் செய்யும் இடம் போன்ற பலவற்றில் மாற்றத்தை விரும்பு கின்றனர். சமூக வளர்ச்சிப்போக்கில் தவிர்க்கமுடியாத இம்மாற்றம் குறுகிய காலப்பகுதியில் நிலைபேறு அடையத் தொடங்க குடிமக்கள் என்ற சொல்லின் பொருள் மாற்றமடை கின்றது. இப்புதிய மாறுதலின் பின், குடிமக்களாகக் கருதப்பட்ட குழுவில் இருந்து வந்த இளம் தலைமுறையினர் பலருக்கு தாம் பிறந்து வளர்ந்த குழுக்கள் பற்றியும் அதன் முன்னைய நிலைப்பாடு பற்றியும், அக்குழுக்கள் பற்றி ஏனைய சாதிக் குழுக்கள் கொண்டிருந்த கருத்துப் பற்றியும் பொதும் தெரிய வாய்ப்பில்லை. இவை தொடர்பான விடயங்களைத் தேடிப் புரிந்து கொள்வதுகூட தேவையானதாகவோ பயனுள்ளதாகவோ இருப்பதில்லை. இத்தகைய காரணங்களினால் குடிமக்கள் என்ற சொல் பெரும்பாலும் எழுத்துக்களில் மட்டுமே பேசப்பட்டு வரும் ஒன்றாக மாறியுள்ளது. நடைமுறையில் அத்தகையதொரு குழு மரபுரீதியான கருத்தியல் கட்டமைப்போடு யாழ்ப்பாணச் சமூகத்தில் இன்று நிலைபெறவில்லை எனலாம்.

யாழ்ப்பாணத்தில் அடிமைகள் என்ற சாதிக்குழுக்கள் பற்றி தொடர்ந்து நோக்குவோமாயின், அவ்விடயத்திலும் சில சிக்கல்கள் உள்ளன. யாழ்ப்பாணச் சாதி தொடர்பான ஆய்வுகளில் அடிமைகள் என்ற பெயரீடு, "அடிமைகள்" என்ற குழுவுக்குள் உள்ளடங்கும் சாதிகள் ஆகியவற்றில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. உதாரணமாக கெனத் டேவிட் நளவர், பள்ளர், கோவியர் ஆகிய சாதிகளை அடிமைகள் என்ற வகைக்குள் உட்படுத்துகின்றார். இதே சாதியினரை ஒல்லாந்தர் குடிமக்கள் என்ற வகைக்குள் உட்படுத்தியுள்ளதாக சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். இது "அடிமைகள்", "குடிமைகள்" தொடர்பாக இருந்துவரும் குழப்ப நிலையைக் காட்டுகின்றது. இருப்பினும் முன்னைய யாழ்ப்பாணச் சமூகத்தில் "அடிமைகள்'', "குடிமைகள்'' என்ற இவ்விரு சொற்களும் எத்தகைய பொருள்பட உபயோகத்தில் இருந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. சிலவேளை இவ்விரு சொற்களும் ஒரு பொருள்பட இருந்ததோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தில் "அடிமைகள்" என்ற சொல் ஐரோப்பாவில் இடம்பெற்ற ரோம அடிமைகள், நீக்ரோ

அடிமைகள் என்ற சொற்பிரயோகத்தில் இருந்து வேறுபட்டதொன்றாகவே கொள்ளவேண்டும். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் அடிமைகள் நிலத்துடன் வாங்கப்பட்டது, விற்கப்பட்டது தொடர்பான வரலாற்றுக் குறிப்புக்களை தக்க ஆதாரங்களுடன் அறியமுடியவில்லை. உண்மையில் "அடிமைகள்" என்ற சொல் தொடர்பான வரைவிலக்கணம் அல்லது அச்சொல் தொடர்பான பொருள்கொள்ளல் என்பது ஆய்வாளர்களின் புரிதலின்பாற்பட்டதாகவே அமைகின்றது.

யாழ்ப்பாணச் சாதிகளை வகைப்படுத்தி ஆய்வினை மேற்கொண்டு தமது கருத்துக்களைக் கூறிய ஆய்வாளர்கள், அவ்வகைப்படுத்தலுக்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்ற விடயத்தினைத் தெளிவுபடுத்தவில்லை. ஆயினும் அதற்கான அடிப்படைகள் கருத்தியல், மனப்பாங்குகள், தொழில் முறைகள், பொருளாதாரம், மத வழிபாடுகள் முதலிய பல்வேறு விடயங்களின் பாற்பட்டவை என ஊகிக்க முடியும். எவ்வாறாயினும் யாழ்ப்பாணச் சாதி தொடர்பாகவுள்ள பிரிப்பு முறையில் ஆய்வாளர்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் ஒவ்வொரு ஆய்வாளரும் எவ்வாறு சமூகத்தினைப் புரிந்துகொள்கின்றார், அப்புரிதலுக்கு எவ்வாறு பொருள் விளக்கம் செய்கின்றார், அதனை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார் என்பதன் பாற்பட்டது.

ஒரு சமூகம் பற்றிய ஆய்வாளர்களின் புரிதல், அப்புரிதலினூடாக ஒரு சமூக இயங்கியலுக்கு கொடுக்கப்படும் விளக்கம் ஆகிய விடயங்கள் புதிய ஆய்வு முயற்சிகளுக்குப் பயனுள்ளதாக இருப்பினும், அவற்றினை எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தாது பின்பற்றுவதென்பது சமூக இயங்குதிலை தொடர்பான புதிய புரிதலுக்கான தடையை உருவாக்கிவிடுகின்றது. இந்த வகையில், யாழ்ப்பாணச் சாதி தொடர்பாக முன்னர் நடைபெற்ற ஆய்வுகளில் குறிப்பிடப்படும் வகைப்பாடுகளையும், அவை தொடர்பான கருத்துக்களையும் பின்பற்றி ஆய்வுகளை மேற்கொள்வதென்பது தற்கால யாழ்ப்பாணச் சாதி பற்றிய ஆய்வுக்கு எவ்வகையில் பொருத்தப்பாடு உடையதென்பது முக்கியமானதொரு கேள்வியாக எழுகின்றது. இது போன்ற விமர்சனங்கள் எழுவதற்கான காரணங்களை ஆராய "தாழ்ந்த" சாதியாகக் கருதப்பட்டோரில் பலரது பின்வரும் கருத்துக்களை அவதானிப்போம்.

> "தாழ்ந்த" சாதிகள் எனக் கருதப்பட்டோரில் பலர் தாம் தாழ்ந்தவர்கள் அல்லர் என்றும், சமூகத்தில் ஆதிக்க நிலையுடைய குழுக்களால் உள்நோக்கத்தோடு தமக்குக் கொடுக்கப்பட்ட அடையே "தாழ்" என்றும் கூறுகின்றனர். ஒரு சில ஆதிக்க சாதிகளால் சாதிப் பாரபட்சத்திற்

கும் அடக்குமுறைக்கும் உட்பட்டு நாம் இருந்தோம் என்பது உண்மை. இதற்கு நாம் தாழ்ந்தவர் என்றோ, சாதி சொல்லி எம்மை அடக்கியோர் உயர்ந்தவர்கள் என்றோ பொருளல்ல.

இவ்வாறு மக்களிடையேயுள்ள சாதி "உயர்வு, தாழ்வு" பற்றிய கருத்துக்கள் புதியதொரு புரிதலுக்குச் செல்லும்போது, ஆய்வாளர்கள் குறிப்பிட்ட சமூகத்தினை "தாழ்ந்த சாதி" என்றும் இன்னோர் சமூகத்தினை "உயர்ந்த சாதி" என்றும் கருதி தொடர்ந்தும் ஆய்வுகள் மேற்கொள்வது விமர்சனத்துக்கும், விவாதத்திற்கும் உரியதாகின்றது.

சாதி பற்றிய சமூகவியல் ஆய்வுகள் ஏற்கெனவே செய்யப் பட்ட வகைப்பாடுகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றைக் கடந்த தாகவும், சாதிக் குழுக்களை அவற்றின் இயல்பான நிலையிலும், காலமாற்றத்தைக் கருத்தில் கொண்டும் ஆராய்வதாகவும் இருப்பது பொருத்தமானது. எனவே சாதி தொடர்பான கற்கைகள் "உயர்வு", "தாழ்வு" என்ற மனப்பாங்கை விடுத்து ஒரு சமதளத்தில் இடம்பெற வேண்டும். அதாவது சாதிபற்றிய கற்கைகள் அனைத்துச் சாதிக் குழுக்களையும் ஒரு பொதுப்பரப்பில் வைத்து சாதி வேறுபாடுகள், பிரச்சினைகள், சாதி அரசியல், சாதிகளுக்கிடையேயான ஊடாட்டம், சாதிப் பாரபட்சங்கள், அடக்குமுறைகள், சாதிக்குழுக்கள் தமது சாதி தொடர்பாகக் கொண்டுள்ள புதிய புரிதல்கள் போன்ற விடயங்களை ஆராய்வதாக அமைய வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் சாதி அடையாளங்கள்: மரபும் மாற்றமும்

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு சாதிக்குமென மரபுரீதியான கற்பிதங்களின் அடிப்படையில் சாதி அடையாளங்கள் உள்ளன. தொழில், உறவுமுறை, புவியியல் அமைவிடம், சடங்குகள், அநுட்டானங்கள், கடவுளர்கள், மொழி முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த அடையாளங்கள் உருவாக்கப்படுகின்றன. பின்னர் இந்த அடையாளங்கள் குறிப்பிட்ட சாதிகளை சமூகத்தில் தனித்து இனம் காண்பதற்கான தொடர்பாடல் வலுவுள்ள மொழிநிலையை அடைகின்றன. அந்த வகையில் சாதியினுடைய நிலைபேறு, மாற்றம் முதலிய விடயங்களில் அவற்றை அடையாளப்படுத்தும் அடையாளங்கள் முக்கியமானவையாகின்றன. ஒருவரது சாதியை அறிந்துகொள்ள அவரைப் பார்த்து அவர் எச்சாதியைச் சார்ந்தவர் என்று வினவுவதைவிட சாதி அடையாளங்களினூடாக சாதியைக் கண்டறிவது வழமையான

விடயமாக யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவி வந்தது, வருகின்றது.

சாதிக்குழுக்களின் அடையாள வெளிப்படுத்தலில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது என்பது பொதுவான அறிதல். மரபுக் கட்டமைப்பிலிருந்து மாற்றமடைந்து கொண்டிருந்தாலும் சாதி அடையாளங்கள் இன்று வரையிலும் வலிமைமிக்க அடையாள நிலையுடனேயே இருக்கின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி அடையாளங்களைப் பற்றிய சில முக்கியமான விடயங்களை நோக்குவது பொருத்தமானதாகும். அவற்றைப் பின்வரும் உபதலைப்புகளினூடாக நோக்குவோம்.

1. சமயமும் சமயச்சடங்குகளும்
2. தொழில்களும் தொழில் செய்யும் முறைகளும்
3. சாதிப் புவியியலும் உறவுமுறை பற்றிய விசாரிப்பும்
4. மொழியும் சாதி வெளிப்பாடும்

சமயமும் சமயச்சடங்குகளும்

யாழ்ப்பாணச் சமூகத்தினால் பின்பற்றப்படும் சமயங்களை மூன்று பிரதான வகைமைக்குள் உட்படுத்த முடியும்.

1. இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவசமய வழிபாடு. இங்கு இந்து சமயக்கடவுளர்களை சைவ சமயம் என்ற வரைமுறைக்குள் வைத்து வழிபாடாற்றுவர்.
2. காவியங்கள், புராணங்கள், நாட்டார் கதைகள் முதலியவற்றில் வரும் சில பாத்திரங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் சிறுதெய்வ வழிபாடு.
3. காலனித்துவ ஆட்சி முறையினைத் தொடர்ந்து வந்த கிறிஸ்தவ சமய வழிபாடு.

இம்மூன்று சமய வகைமைகளையும் அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணச் சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் வழிபாட்டு முறைகளையும் பின்வரும் மூன்று வகைமைகளுக்குள் உட்படுத்த முடியும்.

1. ஆகமப் பிரமாணங்களுக்கேற்ப மேற்கொள்ளப்படும் சமயச் சடங்குகள். உதாரணமாக கும்பாபிஷேகம், கொடியேற்றத் திருவிழா, தேர்த் திருவிழா என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.
2. நாட்டார் மரபுகளினூடாக வந்த சடங்கு முறைகள். மடைபரவுதல், வேள்வி முதலியவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

3. கிறிஸ்தவ மத வழிபாட்டுமுறைகள். தவக்காலச் சடங்கு, சிலுவைப்பாதைச் சடங்கு முதலியவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்ட முதலிரு சடங்கு முறைகளிலும், முதலாவதாகக் கூறப்பட்ட சடங்கு முறையை ஆகமம் சார்ந்த வழிபாடாகவும், இரண்டாவதாகக் கூறப்பட்ட சடங்கு முறையை ஆகமம் சாராத வழிபாடாகவும் கொள்ளும் மரபுண்டு. இவ்விரு வழிபாட்டு முறைகளையும் யாழ்ப்பாணத்து சைவசமயத்தவர் தமது தேவைக்கும், விருப்புக்கும் ஏற்ப பின்பற்றுகின்றனர். இருப்பினும் ஆகமம் சார்ந்த வழிபாட்டினை அதிகம் பின்பற்றுவோர், ஆகமம் சாராத வழிபாட்டினை அதிகம் பின்பற்றுவோர் என இருவேறு குழுநிலைகளை யாழ்ப் பாணச் சமூகத்தில் காணமுடியும். இவ்வாறு இருவேறு வழிபாட்டு முறைகள் காணப்படினும், சைவக்காரர் என்ற பொதுப் பெயர்களைக் கொண்டே அனைவரும் அழைக்கப் படுவர். இவ்விரு வழிபாட்டு முறைகளிலிருந்தும் வேறுபட்டதாக கிறிஸ்தவ மதவழிபாட்டு முறைகள் உள்ளன. கிறிஸ்தவ மதத்தினைப் பின்பற்றுவோர் பொதுவாக வேதக்காரர் என அழைக்கப்படுவர்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் சமயம், சமய வழிபாட்டு முறைகள் பற்றிய மிகச்சுருக்கமான இவ்வறிமுகத்தோடு, இவை சாதி அடையாளங்களாக எவ்வாறு உருநிலை கொள்கின்றன என்பதைத் தொடர்ந்து நோக்குவோம். யாழ்ப்பாணச் சமூகத்தவர் இந்து சமயக் கடவுளர்களைப் பொதுவாக வழிபட்டு வரினும், ஒவ்வொரு சாதியினரும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குலதெய்வங்களையோ கொண்டுள்ளனர். இவ்வாறுள்ள சாதித் தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு சாதிகள் ஒவ்வொன்றும் அடையாளம் காணப்படும் நிலையுண்டு. இதனால் சாதித் தெய்வங்களும் சாதி அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

இவ்வாறு ஒவ்வொரு சாதிகளையும் அச்சாதிக்குரிய தெய்வங்களையும் குறிப்பிட்டுக் கூறும்நிலை காணப்படினும், இம்முறையில் சில விதிவிலக்குகளும் உண்டு. பொதுவாக ஒரு குறிப்பிட்ட சாதிக்குரிய கடவுள் அச்சாதிக்குரிய தெய்வமாகக் கருதப்பட்டாலும் அச்சாதியினைச் சேர்ந்தோர் அக்கடவுளை மட்டும்தான் வழிபடுகின்றனர் என்பது பொருள் அல்ல. இவ்வழிபடு கடவுளரில் இரண்டுவகை அம்சங்களைக் காணமுடியும்.

அட்டவணை–01

சாதியும் குலதெய்வங்களும்

சாதிகள்		தெய்வங்கள்
பள்ளர்	—	அண்ணமார்
பறையர்	—	வல்லியக்கன்
நளவர்	—	வைரவர், கூட்டத்தார்
வண்ணார்	—	பெரியதம்பிரான்
அம்பட்டர்	—	வைரவர், சாமுண்டி அம்பாள்
குயவர்	—	பிள்ளையார்
பண்டாரம்	—	பிள்ளையார்
கோவியர்	—	ஐயனார், பிள்ளையார், அம்பாள்
தட்டார்	—	நாச்சிமார், பிள்ளையார்
கொல்லர்	—	காளி
நட்டுவர்	—	காளி
தச்சர்	—	காளி
சைவக்குருக்கள்	—	சிவன், முருகன், விஷ்ணு, துர்க்கை அம்மன் முதலான தெய்வங்கள்
வெள்ளாளர்	—	சிவன், முருகன், விஷ்ணு, துர்க்கை அம்மன் முதலான தெய்வங்கள்
பிராமணர்	—	சிவன், முருகன், விஷ்ணு, துர்க்கை அம்மன் முதலான தெய்வங்கள்

முதலாவதாக, ஒரு கடவுள் பல சாதிகளாலும் முதன்மைப் படுத்தி வழிபடல். இதனால் சாதிப் பெயர்களை அடையாள மாகக் கொண்டு கடவுள் அழைக்கப்படுவர். இந்நிலைக்கு எடுத்துக்காட்டாக பிள்ளையார் வழிபாட்டினைக் குறிப்பிட முடியும். பிள்ளையார் என்ற கடவுள் குயவர், பண்டாரம் ஆகிய சாதிகளின் குலதெய்வமாக அச்சாதிகளின் அடையாளமாக விளங்கி இருப்பினும், பிற சாதிகளும் பிள்ளையார் என்ற கடவுளை வழிபடுகின்றனர். இப்பிற சாதிகளும் தமக்கு

உடமையாக பல பிள்ளையார் கோயில்களையும் வைத் துள்ளனர். அதனால் அச்சாதிகளின் பெயர்கள் பிள்ளையார் என்ற கடவுளுக்கு அடையாகின்றது. குயவப் பிள்ளையார், கோவியப் பிள்ளையார், வெள்ளாளப் பிள்ளையார், பண்டாரப் பிள்ளையார், தச்சப் பிள்ளையார் முதலிய சொல் வழக்குகள் இதனைத் தெளிவாக்குகின்றது. இவ்விடயத்தில் சாதிமட்டும் தொழிற்படவில்லை. ஒருவரின் விருப்பு, தேவை, வசதி, சமூக அந்தஸ்து எனப் பல விடயங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இரண்டாவதாக, குறிப்பிட்ட ஒவ்வொரு சாதியினரது முதன்மையான கடவுளர். உதாரணமாக பள்ளருக்கு அண்ணமார், பறையருக்கு வல்லியக்கன், வண்ணாருக்கு பெரிய தம்பிரான் போன்றவற்றைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி அடையாளங்களில் ஒன்றாக கடவுளர்கள் கட்டமைக்கப்படும் அதேநேரம், ஆலய நிர்வாகங்களும் சாதிப் பின்புலத்தினைக் கொண்டுள்ளமையைக் காணமுடியும். பொதுவாக யாழ்ப்பாணத்தின் ஆலய நிர்வாகத்தினை பின்வரும் நான்கு வகைமைக்குள் உட்படுத்தலாம்.

1) தனிக் குடும்ப நிர்வாகம்.

2) பரம்பரைத் தர்மகர்த்தாக்களது நிர்வாகமும் பொது நிர்வாகமும்.

3) பொதுவான நிர்வாகம்.

4) ஒரு சாதிக் குழுவின் நிர்வாகம்.

கோவிலின் தோற்றம் தொடக்கம் இற்றைவரையிலும் ஒரு குடும்பத்தின் வழிவந்தோரால் ஆளுகைக்குள்ளாக்கப்படும் கோவில்கள் தனிக்குடும்ப நிர்வாகத்திற்குள் அடங்கும். நல்லூர்க் கந்தசுவாமி கோவில், செல்வச்சந்நிதி கோவில் ஆகியவற்றை இந்நிர்வாகத்திற்கான எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். பரம்பரைத் தர்மகர்த்தாக்களது நிர்வாகமும் பொதுமக்களது நிர்வாகமும் இணைந்து செயற்படுவது இரண்டாவது நிர்வாக அமைப்பாகும். நயினாதீவு நாகபூசணி அம்மன், தெல்லிப்பளைத் துர்க்கை அம்மன் ஆகிய கோவில்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். பொது மக்களினை பெரியளவில் உள்வாங்கி நிர்வாகம் நடத்தும் கோவில்கள் மூன்றாவது வகைக்குள் அடங்கும். மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலை இதற்கான எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இங்கு இரண்டு வகையானசபைகள் காணப்படுகின்றன. அவை வழிபடுவோர் சபை, தர்மகர்த்தாக்கள் சபை என்பனவாகும். இத்தகைய பொதுநிர்வாகம் நடைபெறும் கோவில்களில் (பொதுநிர்வாகம்

மற்றும் தர்மகர்த்தாக்களுடன் இணைந்த பொதுநிர்வாகம்), ஒரு சில சாதிகளை முதன்மைப்படுத்திய நிர்வாகமுறையே உள்ளது. குறிப்பாக வெள்ளாளர், பிராமணர், கோவியர் ஆகிய சாதிகளின் ஆதிக்கம் நிர்வாகத்தில் அதிகம் இருக்கும். நிர்வாகத்தின் கீழ்மட்டத்தில் ஏனைய சாதிகளின் உள்வாங்கல் சிறிய அளவில் இடம்பெறும்.

அதிகமாக கிராமமட்டத்திலுள்ள ஆலயங்கள் ஒரு சாதியினை மட்டும் மையப்படுத்தியதாகவும் குறிப்பிட்ட சாதியினைச் சேர்ந்தோரின் குழுநிர்வாக அமைப்பைக் கொண்டதாகவும் இருக்கும். இவ்வாறான ஆலயங்கள் குறிப்பிட்ட சாதிகளின் உடமையாகவே அச்சாதியினைச் சேர்ந்தோராலும் ஏனைய சாதிகளாலும் கணிக்கப்படும். ஆலயப்பிரவேசம் மற்றும் வழிபாட்டாற்றுகை பெரும்பாலும் குறிப்பிட்ட சில சாதிகளை மையப்படுத்தியதாக அமையும். மல்லாகம் கோட்டைக்காடு சனம்பை முருகன் கோவில், மல்லாகம் ஞானவைரவர் கோவில், மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோவில், மல்லாகம் காளி கோவில் முதலியவற்றை ஒரு சாதிக்குழுவினைச் சார்ந்து இயங்கும் ஆலயங்களுக்கான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும்.

ஒவ்வொரு சாதியினரும் தமக்குரிய குலதெய்வங்களையும், கோவில்களையும் அமைத்து வழிபாட்டாற்றுவது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து சமயத்தவரிடம் தனியே உள்ளதொரு விடயம் அல்ல. கிறிஸ்தவ மதத்தவரிடத்தே வெவ்வேறு சாதிகளுக்கேற்ப குலதெய்வங்கள் காணப்படுவதில்லை. ஆனால் ஒவ்வொரு சாதியினரும் தமக்கேயான தேவாலயத்தினை நிர்வகிக்கின்றனர். தேவாலயத்தின் நிர்வாகம் குறிப்பிட்ட சாதிகளைச் சார்ந்ததாகவே இருக்கும். இது யாழ்ப்பாணத்து இந்துக்களிடையே காணப்படும் சாதியின் செல்வாக்கு கிறிஸ்தவ மதத்தவரிடத்தேயும் வியாபித்துள்ளமையைக் காட்டுவதுடன், இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்துக்கு மாறிக்கொள்ளும் போது, மதத்தினை மட்டும் மாற்றுவதுடன் கலாசார மூலங்களை அவ்வாறே கொண்டு செல்லப்படுவதையும் காட்டி நிற்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக, மல்லாகத்தில் உள்ள அற்புத மாதா தேவாலயம் நளவர் சாதியினாலும், மல்லாகம் குளமங்கால் தேவாலயம் பள்ளர் சாதியினாலும், சுன்னாகம் அத்தோனியார் தேவாலயம் பறையர் சமூகத்தினாலும் அதிகம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றமையைக் குறிப்பிடலாம். இங்கும் கூட தேவாலயங்களின் நிர்வாகம் குறிப்பிட்ட சாதிக்குழுக்களின் ஆதிக்கத்திற்குட்பட்டதாகவே இருக்கின்றது.

வாழ்வாதாரம் வேண்டி ஒவ்வொரு சாதியினராலும் பரம்பரையாகச் செய்யப்பட்டு வந்த தொழில்கள், பின் சாதி அடையாளங்களாக உருநிலை கொள்கின்றன (சாதிகளும் அவற்றின் மரபுத் தொழில்களும் அட்டவணை — 02 இல் கொடுக்கப்பட்டுள்ளது). இவ்வாறு உருநிலை கொண்ட சாதித் தொழில்கள் இன்றுவரையும் சாதி அடையாளத்தின் குறியீடுகளாக உள்ளன. எனினும் இவற்றில் பல மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன. பரம்பரையாக மேற்கொள்ளப் பட்டுவந்த சாதித்தொழில்களை செய்யாது விடுவதற்கும் அல்லது செய்யும் தொழில்களில் மாற்றங்கள் வேண்டி நிற்பதற்குமான காரணங்களாக சமூக, பொருளாதார, கல்வி, தொழில், மனப்பாங்கு முதலிய பல்வேறு விடயங்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூறமுடியும். இவ்வாறு மரபுவழிச் சாதித் தொழில்களில் இடம்பெற்றுவரும் மாற்றங்களை பின்வருமாறு அடையாளம் காணலாம்.

01) குடிமை, கடமைசார் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மரபுச் சாதித் தொழில்கள் நிறுவனம்சார் தொழில் நிலைக்கு மாற்றப்படல்:

சாதி அடிப்படையில் உருவாக்கம்பெற்ற அதிகமான தொழில்கள் குடிமை, கடமைசார் அடிப்படையில் பரம் பரையாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இத்தகையதொரு தொழில்செய்யும் முறை யாழ்ப்பாணத்தில் உள்ள பஞ்சமர் (அம்பட்டர், பறையர், நளவர், வண்ணான், பள்ளர்) குழுவிடத்தேயே அதிகம் காணப்பட்டது. இதனால் பஞ்சமர் குழுவில் அடங்கும் சாதித்தொழில்களின் மாற்றங்களே இங்கு முக்கியமானதொரு பேசுபொருளாக அமைகின்றது. பொதுவாக பஞ்சமர் குழுவினைச் சேர்ந்தவர்கள் (குறிப்பாக அம்பட்டர், வண்ணார், பள்ளர்) ஏனைய சாதிகளின் வீடுகளுக்குச் சென்று தொழில் செய்வதாகவும் அல்லது குறிப்பிட்ட சாதியினரை மையமாகக் கொண்டு தொழில் செய்வதாகவுமே அவர்களது சாதித்தொழில்கள் அமைந்திருந்தன. இதில் குறிப்பிடத்தக்க விடயம் தொழில் செய்பவருக்கு தொழிலுக்குரிய பெறுமானமாக எவை கொடுக்கப்படுகின்றதோ அவையே ஊதியமாகக் கருதப்பட்டன.

பொதுவாக அரிசி, நெல், காய்கறிகள் முதலியனவாக இவ்வூதியம் அமைந்திருந்தது. இவ்வாறு குடிமை, கடமைசார் அடிப்படையில் பஞ்சமரால் மேற்கொள்ளப்பட்டு வந்த தொழில்களில் ஏன் மாற்றங்கள் ஏற்பட்டன? என்ன வழியில் மாற்றங்கள் ஏற்பட்டன? எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டன?

அட்டவணை – 02

சாதியும் சாதித் தொழில்களும்

சாதிகள்		சாதித்தொழில்கள்
அம்பட்டர்	—	முடி வெட்டுதல், குடிமைத்தொழில் செய்தல்
கரையார்	—	மீன் பிடித்தல்
குயவர்	—	மண்ணினால் பானை, சட்டி முதலிய பொருட்கள் செய்தல்
கைக்குழார்	—	நெய்தல் வேலை செய்தல்
கொல்லர்	—	இரும்பு வேலை செய்தல்
கோவியர்	—	வெள்ளாளர் வீடுகளில் வேலை செய்தல்
சாண்டார்	—	எண்ணை உற்பத்தி செய்தல்
சிற்பாச்சாரி	—	கோவில் சிலைகள், சிற்பங்கள் செதுக்குதல்
சைவக் குருக்கள்	—	பிராமணர் அல்லாத கோவில்களில் பூசை செய்தல்
தச்சர்	—	தச்சு அல்லது மரவேலை செய்தல்
தட்டார்	—	நகை வேலை செய்தல்
நட்டுவர்	—	கோவில்களிலும், மங்கள நிகழ்வுகளிலும் தவில் வாத்தியங்கள் வாசித்தல்
நளவர்	—	சீவல் தொழில்
பண்டாரம்	—	கோவில் உதவியாளராகப் பணிபுரிதல் (பூமாலை கட்டுதல்)
பறையர்	—	நகரைச் சுத்தம் செய்தல், இறந்த வீடுகளிலும், கோவில்களிலும் பறைமேளம் அடித்தல்
பள்ளர்	—	விவசாயக் கூலிகள், சீவல் தொழில்
பிராமணர்	—	கோவிலில் பூசை செய்தல்
முக்குவார்	—	கரையோரக் கடற்பரப்பில் மீன்பிடித்தல்
வண்ணார்	—	ஆடை சுத்தம் செய்தல், குடிமைத் தொழில் செய்தல், வெள்ளை கட்டுதல்
வெள்ளாளர்	—	கமத்தொழில் செய்தல், நில உரிமையாளர்

என்பதனைச் சுருக்கமாக நோக்குவோம்.

யார் இந்தப் பஞ்சமர்? இப்பஞ்சமர் என்ற குழுவுக்குள் என்ன சாதிகள் அடங்கும்? இவர்கள் தம் சாதித் தொழில்களாக எவற்றைச் செய்தனர்? ஆகியவை எம் முன்னால் இருக்கின்ற முக்கியமான கேள்விகள். யாழ்ப்பாணச் சாதியமைப்பில் தாழ்ந்த சமூகநிலைகளைக் கொண்டோராகக் கணிக்கப்பட்ட ஐந்து சாதிகள் பஞ்சமர் என அழைக்கப்பட்டனர். பஞ்சமர் என்ற குழுவில் நளவர், பள்ளர், பறையர், அம்பட்டர், வண்ணார் ஆகிய சாதிகள் அடங்கும். மரபுரீதியான சாதித்தொழில்களாக நளவர் சீவல் தொழிலாளராகவும் பள்ளர் விவசாயக் கூலிகளாகவும், சீவல் தொழிலாளராகவும் பறையர் நகரத்தைச் சுத்திகரித்தல், இறந்த வீடுகளுக்கும், சில கிராமத்துக் கோவில்களுக்கும் பறை மேளம் வாசிப்போராகவும் அம்பட்டர் தலைமயிர் வெட்டுதல், பிறந்த பிள்ளைகளுக்கு முடி இறக்கல், மற்றும் மரணக்கிரியை, அந்தியேட்டி போன்றவற்றில் புரோகிதம் செய்வோராகவும், வண்ணார் ஆடைகளைச் சுத்தம் செய்தல், கோவில்களுக்கு வெள்ளை கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்வதுடன், பிள்ளைப் பிறப்பு, வயதுக்கு வருதல், திருமணம், இறப்பு போன்ற நிகழ்வுகளில் புரோகிதம் செய்வோராகவும் உள்ளனர். இவர்களது சாதித் தொழில்கள் குடிமைத் தொழிலாகவும், அடிமைத் தொழிலாகவுமே மரபு ரீதியாக பார்க்கப்பட்டது. இவர்களது தொழிலுக்கு நிலையானதொரு கூலி இருக்கவில்லை. ஏனைய சாதிகளின் வீடு தேடிச்சென்று வேலைசெய்பவர்களுக்கு சிரட்டைகளிலும், போத்தல்களிலுமே தேநீர் கொடுக்கப்பட்டது. சில சமயங்களில் இவர்கள் சாதிப் பெயர்களைக் கொண்டு கீழ்த்தரமாக அழைக்கப்பட்டனர். பஞ்சமர் சமூகத்தினர் மரபுரீதியாக தாம் செய்து வந்த சாதித் தொழில்களில் சில மாற்றங்களை உருவாக்குவதால் இந்த சாதிய ஒடுக்குமுறைகளில் மாற்றங்களைக் காணலாம் என்பதில் பஞ்சமர் சமூகத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக தீவிரம் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டு மாற்றம் என்பது பண்பாட்டுக் கூறுகளில் ஏற்படும் மாற்றமாகும். இத்தகையதொரு நிலையிலேயே சாதிகளின் அடையாளங்களில் ஒன்றான சாதித் தொழில்கள் செய்யும் முறையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. பஞ்சமர் குழுதமது சாதித் தொழில்களைச் செய்துவந்த முறைகளில் மாற்றம் வேண்டி நின்றமைக்கு ஏனைய சாதிகளினால் அச்சாதித் தொழில்களுக்குக் கொடுக்கப்பட்ட குறைவான அந்தஸ்தினைப் பிரதான காரணமாகக் கூறமுடியும். பின்னர் நவீன பண்பாட்டு வளர்ச்சிப் போக்குகளும் இந்த மாற்றங்களை ஊக்குவித்தன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பஞ்சமர் சமூகத்தின் சாதித் தொழில்களில் மாற்றங்கள் ஏற்பட்டமைக்கும், அம்மாற்றங்கள் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதற்கும் மூன்று முக்கிய விடயங்களின் தோற்ற நிலைகளை இங்கு குறிப்பிட முடியும்.

i) சாதிச் சங்கங்களின் உருவாக்கமும் அதனூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த சீர்திருத்தங்களும்: இச்சாதிச் சங்கங்களுக்கு உதாரணமாக சிகை அலங்கரிப்பாளர் சங்கம், சலவைத் தொழிலாளர் வெண்ணிற ஆடைச் சங்கம், சீவல் தொழிலாளர் சங்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இச்சங்கங்கள் குறிப்பிட்டதொரு சாதித் தொழிலில் உயர்நிலை காணவேண்டி குழுநிலை சார்ந்து செயலாற்றுகின்றன. வீடுகளுக்குச் சென்று தொழில் அல்லது புரோகிதம் செய்வதனைத் தடுத்தல், நிலையான விலைப்பட்டியலுடன் கடை அமைத்து சாதித் தொழில்களை மேற்கொள்ளல், தொழில் தொடர்பாக வரும் பிரச்சினைகளை சங்க அங்கத்தவர்கள், தொழிலாளர்கள் இணைந்து கலந்துரையாடல், தீர்வு காணல் என்பன இச்சங்கங்களூடாக இடம் பெற்று வரும் சீர்திருத்தம் வேண்டிய செயற்பாடுகளாகும். இத்தகைய தொழில்சார் நிறுவனப்படுத்தலைத் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட சாதியை அல்லது சாதிகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வந்த சாதித் தொழில்கள் அனைத்துச் சாதிகளுக்குமான தொழில்களாக விரிவுபடுத்தப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் எண்பதுகளிலும் அதனைத் தொடர்ந்துவந்த காலகட்டங்களிலும் இடம்பெற்ற சாதித் தொழில்சார் சீர்திருத்தம் எனலாம். இவ்வாறான சீர்திருத்த நடவடிக்கையின் விரிவாக்கம் இன்று வரையிலும் யாழ்ப்பாணச் சமூகத்தில் இடம்பெற்றுவருவது கவனிக்கத்தக்கது.

ii) அரச நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிறுவனப்படுத்தப்பட்ட தொழில்சார் நடவடிக்கை: இதற்கு உதாரணமாக தவறணையின் அறிமுகத்தினைக் குறிப்பிடலாம். சீவற் தொழிலை மேற்கொள்வோர் பாரம்பரியமாகக் கள்ளியாபாரத்தினைத் தமது வீடுகளில் வைத்தும், ஏனைய சாதிகளின் வீடுகளுக்குச் சென்று கொடுத்தும் மேற்கொண்டு வந்தனர். ஆனால் தவறணை முறையின் அறிமுகத்தினைத் தொடர்ந்து இந்நிலையில் பெரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. யாழ்ப்பாணத்தில் தவறணை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சீவற் தொழிலானது நிறுவனமயப்பட்டதுடன் கிழமைதோறும் அல்லது மாதந்தோறும் சம்பளம் எடுக்கும் நிலையும் சீவற் தொழிலாளர்களிடத்தே ஏற்படுகின்றது.

iii) பஞ்சமர்கள் தாம் மேற்கொண்டு வந்த சாதித் தொழில்கள் தொடர்பான மனநிலையில் தாமாகவே மாற்றங்களை உள்வாங்கி நிற்றல்: இத்தகைய மாற்றத்தின் அடிப்படையாகச் சாதித்தொழில்களில் ஈடுபடுவோரின் மனப்பாங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கொள்ளமுடியும். மனப்பாங்குகளில் ஏற்பட்ட மாற்றம் காலவோட்டத்தில் செயற்பாங்கில் மாற்றத்தினை வேண்டி நிற்கின்றது. ஆரம்பத்தில் இம்மாற்றத்தினை ஒரு குழு சார்ந்து இடம்பெற்ற மாற்றம் என்பதைவிட சாதி அங்கத்தவரின் தனிமனித மாற்றமாகவே கருதமுடிகின்றது. எனினும் சாதித் தொழில்களைச் செய்யும் முறையில் ஏற்பட்ட தனிப்பட்ட மாற்றம் காலவோட்டத்தில் சாதிக்குழுக்கள் சார்ந்ததாக வளர்ச்சியடைகின்றது. சாதித்தொழிலைச் செய்துவரும் இளைஞர்கள் தமது முன்னோர் செய்த சாதித்தொழில் முறையில் மாற்றத்தினை வேண்டி நிற்பது இவ்விடத்தில் முக்கியமானதாகின்றது. இவ்விடயத்தினை மேலும் விளங்கிக்கொள்ள அம்பட்டர், வண்ணார், பள்ளர் சாதியினை எடுத்துக் கொள்வோம். அம்பட்டர், வண்ணார் ஆகிய சாதியினர் ஏனைய சாதிகளின் வீடுகளுக்குச் சென்று தொழிலில் ஈடுபடும் நிலைமை மரபுரீதியாக இருந்து வந்ததொன்று. ஆனால் சாதித் தொழில்களைச் செய்யும் இளைஞர்கள் ஏனைய சாதிகளின் வீடுகளுக்குச் சென்று தொழிலில் ஈடுபடுவது மிகவும் அரிதாகவே யாழ்ப்பாணச் சமூகத்தில் காணப்படுகின்றது. பள்ளர் சமூகத்தினைச் சேர்ந்தோரின் சாதித் தொழிலாக விவசாய நிலங்களில் கூலி வேலை செய்வது இருந்துவந்தது. இவ்வாறு கூலிவேலை செய்யும் பள்ளருக்கு தீர்மானிக்கப்பட்டதொரு கூலி இருக்கவில்லை. ஆனால், இன்று, வேலைக்கு அமர்த்துபவரிடம் முன்கூட்டியே கூலியைப் பேசி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கூலியுடன் வேலைக்குச் செல்லும் நிலைமையே உள்ளது. மேலும் விவசாயக் கூலிகளாக இருந்துவந்த பள்ளர் சமூகத்தினர் தமது சாதித் தொழிலினைக் கைவிட்டு வேறு பல தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமையையும் இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் அதிகம் காணமுடிகின்றது.

02) ஏனைய சாதிகளுக்குரியது எனக் கருதப்படும் தொழிலைச் செய்தல்:

பஞ்சம சமூகத்தினைச் சேர்ந்த சிலர் தமது சாதித் தொழில்களைக் கைவிட்டு ஏனைய சாதிகளின் தொழிலாகக் கருதப்படுபனவற்றை மேற்கொண்டு வருகின்றபோக்கு தற்பொழுது யாழ்ப்பாணச் சமூகத்தில் அதிகளவு இடம்பெறு கின்றது. குறிப்பிட்ட சில சாதிகளைச் சேர்ந்தோர் தமது சாதித் தொழில்களைக் கைவிட்டு ஏனைய சாதித் தொழில்களில் ஈடுபடுவதற்கான காரணங்கள் என்ன? பிற சாதியினரின் தொழில்கள் எனக்கருதப்பட்ட தொழில்களில் ஈடுபடுவது குறித்து வேறுபட்ட சாதிக்குழுக்களிடத்தே காணப்படும் மனப்பாங்கு என்ன? முதலிய கேள்விகள் இவ்விடத்தில் முக்கியமானவை.

உண்மையில், சில சாதித் தொழில்கள் கடினமானதாகவும், ஊதியம் குறைந்ததாகவும் காணப்படும் அதேநேரம் சில சாதித் தொழில்கள் இலகுவானதாகவும் ஊதியம் நிறைந்ததாகவும் வளர்ச்சியடைந்தன. மேலும், சில சாதித் தொழில்களுக்குரிய சமூக அந்தஸ்து குறைவாக இருப்பதாக இளந்தலைமுறையினைச் சேர்ந்தோர் உணர்கின்றனர். குறிப்பாக பரம்பரை பரம்பரையாக சீவல் தொழிலினை தமது சாதித் தொழிலாக செய்துவந்த சாதியில் பிறந்த இளந்தலைமுறையினர் அத்தொழிலைச் செய்வதை பெரும்பாலும் விரும்புவதில்லை. இவைபோன்ற இன்னோரன்ன காரணங்களினால் பஞ்சம சமூகத்தினைச் சேர்ந்தோரில் குறிப்பாக நளவர், பள்ளர், பறையர் முதலானோர் தச்சுத்தொழில், நகை வேலை போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். பல்வேறு சாதிகளும் இத்தொழில்களைச் (தச்சுவேலை, நகைவேலை) செய்வதனால் மரபுரீதியான இச்சாதித் தொழில்கள் சாதி என்ற வரையறையைக் கடந்து பொதுவான தொழில்களாக மாற்றமடைகின்றன.

இவ்வாறு இருப்பினும் பிராமணர், நட்டுவர் ஆகியோரின் தொழில்கள் அச்சாதிகளுக்குரிய தொழில்களாக இன்றுவரையும் பின்பற்றப்படுகின்றன. பண்டாரம், சைவக் குருக்கள் போன்றோர் சமஸ்கிருதம் கற்று குருக்கள் ஆனாலும் கூட, யாழ்ப்பாணத்தில் உள்ள ஆகமமுறை சார்ந்தது எனக் கருதப் படும் கோவில்களில் சமஸ்கிருதம் கற்ற பிராமணர்களின் செல்வாக்கே அதிகம் உள்ளது. அதேபோல் கோவில்களிலும் நல்ல காரியங்களிலும் தவில், நாதஸ்வரம் வாசிப்பது நட்டுவர் சாதியினைச் சேர்ந்தவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. ஏன் இத்தொழில்கள் குறிப்பிட்ட சாதியினரிடத்தே மட்டும்

காணப்படுகின்றது? என்ன காரணங்களால் இவ்விரு தொழில்களும் ஏனைய சாதிகளினால் செய்யப்படுவதில்லை? என்ற தேடலுக்கு பின்வருவனவற்றை விடையாகக் குறிப்பிடலாம்.

i. இத்தொழில்கள் ஆசாரம், கட்டுப்பாடு மிக்கதாகக் காணப்படுவதால், ஏனைய சாதியினைச் சேர்ந்தோர் இத்தொழில்களைக் கற்பதற்கான முயற்சியில் இறங்குவதில்லை.

ii. இத்தொழிலைப் பரம்பரை பரம்பரையாக சாதித் தொழில்களாகச் செய்து வருவோர் ஏனைய சாதியினைச் சேர்ந்தோர்க்கு கற்பித்துக் கொடுப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

iii. குறிப்பிட்ட சாதியினைச் சேர்ந்தவரே இத்தகைய தொழிலைச் செய்யவேண்டுமென சமூகம் எதிர்பார்த்தல்.

எவ்வாறாயினும் ஒரு சாதியினரின் தொழிலினை இன்னொரு சாதிக்காரர் செய்தாலும் அவர் செய்யும் தொழிலுக்குரிய சாதியினருடன் வைத்து அவர் சமூகத்தினால் அடையாளம் காணப்படுவதில்லை. தொழில்ரீதியில் ஒருவர் இன்னொரு சாதியின் தொழிலைச் செய்யினும், சமூகச் செயல்பாங்கு ஒவ்வொன்றிலும் பிறப்படிப்படையிலான சாதியுடன் வைத்து ஒருவர் அடையாளம் காணப்படும் நிலைமையே இன்னமும் காணப்படுகின்றது.

03) மரபுரீதியான சாதித் தொழில்களை விடுத்து புதிய தொழில் முயற்சியில் ஈடுபடல்:

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துச் சாதி அங்கத்தவர்களும் தமது சாதித் தொழில்களில் தங்கியிருப்பவர்கள் அல்லர். அனைத்துச் சாதிகளிலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எண்ணிக்கையிலான மக்கள் அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சுய தொழில்கள் எனப் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய தொழில் ரீதியான மாற்றங்களுக்கான காரணங்களாக பின்வரும் மூன்று பிரதான விடயங்களைக் குறிப்பிட முடியும்.

i) இலவசக் கல்வியும் உயர்தரக் கல்வியும்.

ii) மத்திய கிழக்கு நாடுகளையும் மேற்கத்தேய நாடுகளையும் நோக்கிய புலப்பெயர்வு.

iii) நவீன தொழில் இயந்திரங்களின் வருகை.

இவ்விடயங்களை மேலும் விரிவாக தனித்தனியே ஆராய்வோம்.

i. இலவசக் கல்வியும் உயர்தரக் கல்வியும்:

இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் அதிகமாக வெள்ளாளச் சாதியினைச் சேர்ந்த ஒரு பகுதியினரும், பணவசதி படைத்தோருமே கல்வியினைப் பெறக்கூடியவர்களாக இருந்தனர். எனினும் கிறிஸ்தவ மிஷனரிமாரின் வருகையைத் தொடர்ந்து சமூகத்தில் ஒதுக்கப்பட்ட சாதிகளாகக் கருதப்பட்ட பள்ளர், நளவர், பறையர் போன்றோரில் சிலருக்கும் கல்வி அறிவினைப் பெறும் வாய்ப்புக்கிட்டியது. கிறிஸ்தவ மதத்தினைச் சேர்ந்தவர்களுக்கே கிறிஸ்தவ மிஷனரியில் கல்வி பெறுவதற்கு அதிகம் வாய்ப்புக்கிடைத்தது. இலவசக் கல்வியின் அமுலாக்கம் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கும், வறுமையில் உள்ளோருக்கும் ஆகக் குறைந்தது அடிப்படைக் கல்வியினைப் பெறுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்தது. இலவசக் கல்வி காலநீட்சியில் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்க நிறுவனங்களில் வேலைசெய்வதற்குரிய வாய்ப்பினை வழங்கியது. தாழ்த்தப்பட்ட மக்களின் மேல்நோக்கிய அசைவியக்கத்தில் (Upward Mobility) இந்த இலவசக் கல்வியின் பங்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியது எனலாம்.

இலவசக் கல்வியின் அறிமுகம் மரபுரீதியான சாதிப் பேணுகையில் சில மாற்றங்களைக் கொணர்ந்த போதிலும், சாதிக் கட்டமைப்புக்குள் உயர்வு தாழ்வு பேணிவந்த யாழ்ப் பாணச் சமூகத்தின் சாதிப் பாரபட்சங்கள் இலவசக் கல்விக் குள்ளும் ஊடுருவி இருக்கின்றமையை இன்று வரையிலும் ஆங்காங்கே அவதானிக்க முடிகின்றது. இதன் தாக்கங்களை 1960களிலும் அதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதிகளிலும் வெளிப்படையாகவே காணமுடிந்தது. பஞ்சமர் சமூகத்தினைச் சேர்ந்த மாணவர்கள் வெள்ளாள சாதியினைச் சேர்ந்த மாணவர்களுக்கு அருகே வகுப்பறையில் இருக்க முடியா திருந்தமை, பாடசாலைக் கிணற்றில் பஞ்சம சமூகத்தினைச் சேர்ந்த மாணவர்கள் தண்ணீர் அள்ளமுடியாது இருந்தமை முதலிய விடயங்களை இலவசக்கல்வி பயிற்றுவிக்கப்படும் பாட சாலையில் இடம்பெற்ற சாதிப் பாரபட்சங்களுக்கான உதாரணங்களாகக் குறிப்பிடமுடியும். தற்கால யாழ்ப்பாணத்தில் அத்தகைய வெளிப்படையான சாதிப் பாரபட்சம் கல்வி நிறுவனங்களில் இடம்பெறுவது மிகவும் அரிதெனினும் கல்வி நிறுவனங்களில் சாதிப்பாரபட்சம் இல்லை என்ற முடிவுக்கு

வந்துவிடமுடியாது. சில சாதியை மட்டும் முதன்மைப்படுத்துகிற பாடசாலைகளும், சாதிப்பாரபட்சத்தினை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்தும் கல்வி நிறுவனங்களும் இன்று வரையிலும் இருக்கவே செய்கின்றன. யாழ்ப்பாணத்தில் சில சாதியினரை மையமாகக் கொண்டு பாடசாலைகள் அதிகம் இல்லாவிடினும் அவற்றின் நிலைபேறு இருப்பதனை அவதானிக்க முடியும். வடமராட்சியில் உள்ள இமையாணன் பாடசாலை, தேவரையாளி இந்துக் கல்லூரி, கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் என்பன பள்ளர் சாதியினரை மையப்படுத்தி உருவாக்கம் பெற்றமையையும், பள்ளவேட்டை (இந்துக் கலவன் பாடசாலை) நளவர் சமூகத்தினை மையப்படுத்தி உருவாக்கம் பெற்றமையையும் குறிப்பிடலாம். அதேபோன்று பொலிகண்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வெள்ளாளர், கரையார் சமூகத்தினை மையப்படுத்தியும், மூத்தனார் கோவிலடியில் உள்ள வேதாரணியேஸ்வரர் வித்தியாலயம் (ஐயர் பாடசாலை) சைவக்குருக்கள்மாரினை மையப்படுத்தியதாகவும் உருவாக்கம் பெற்றமையையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இவ்வாறு சில சாதியினரை மையப்படுத்தி உருவாக்கம் பெற்ற பாடசாலைகள் அச்சாதி மாணவர்களையே அதிகளவு உள்ளடக்கி இருக்கும். ஒரு முக்கிய விடயம் என்னவெனில் எந்தச் சாதியினரை மையப்படுத்தி பாடசாலை உருவாக்கம் பெற்றதோ, அந்தச் சாதியினரின் ஆதிக்கத்திற்குட்பட்டதாகவே பாடசாலையின் நிர்வாக அமைப்பு இருக்கும். இவ்விடயம் சாதிகளை மையப்படுத்தி கோவில்கள் உருவாக்கம்பெறும் நிலை போன்றதான தோற்றப்பாட்டினைத் தருகின்றது. இருப்பினும் பாடசாலைகளின் உருவாக்கம் கோவில்களின் உருவாக்கம் போல் சாதி நிலைகளைக் கூர்மைப்படுத்தவில்லை.

ii. மத்திய கிழக்கு நாடுகளையும் மேற்கத்தேய நாடுகளையும் நோக்கிய புலப்பெயர்வு:

யாழ்ப்பாணத்தில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளையும், மேற்கத்தேய நாடுகளையும் நோக்கிய புலப்பெயர்வு பெரியளவில் இடம்பெற்று வருகின்றது. இப்புலப்பெயர்விற்கான நோக்கங்களை இரண்டு பிரதான வகைக்குள் உட்படுத்த முடியும்.

அ வேலை தேடி புலம்பெயர்ந்து செல்லல்.

ஆ அரசியல் புகலிடம் அல்லது சமூகப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, திருமணம், உயர்கல்வி முதலிய

விடயங்களை அல்லது இவற்றில் சிலவற்றினைக் கருத்திற் கொண்டு புலம்பெயர்ந்து செல்லல்.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வோரில் அதிகமானோர் வேலைவாய்ப்பினைக் கருத்திற் கொண்டே செல்கின்றனர். இவர்களில் பலர் வசதிவாய்ப்புக்கள் குறைந்தவர்களாக உள்ளனர். தச்சு வேலை, மின்சார வேலை, சலூன் வேலை, மேசன் வேலை, வாகனம் ஓட்டுதல், பூச்சுப் பூசுதல் முதலிய வேலைகளை மையப்படுத்தியே இவர்களது புலப்பெயர்வு பெரும்பாலும் அமையும். இவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிச் செல்வோரில் சலூன் வேலையில் ஈடுபடும் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தில் உள்ள அம்பட்டர் சாதியினைச் சேர்ந்தோர்களாக உள்ளனர். இவர்கள் தமது சாதித் தொழில்களையே மத்திய கிழக்கு நாடுகளிலும் செய்து வருகின்றனர். ஆனால் ஏனைய தொழில்களில் ஈடுபடுவோர் பொதுவாக யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துச் சாதிகளையும் சேர்ந்தவராவர்.

இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, நோர்வே, அவுஸ்திரேலியா போன்ற மேற்கத்தேய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்வோரில் அதிகமானோர் சமூகப் பாதுகாப்பு அல்லது வேலைவாய்ப்பு என்ற ஒருசில குறிப்பிட்ட விடயத்தினை மட்டும் நோக்கமாகக் கொண்டு செல்வதில்லை. இவர்களிடத்தே ஒன்றுக்கு மேற்பட்ட நோக்கங்கள் இருக்கும். யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துச் சாதியினைச் சேர்ந்தோரும் மேற்கத்தேய நாடுகளை நோக்கிய இடப்பெயர்வினை வேண்டிநிற்கின்றனர். இவ்வாறு புலம்பெயர்ந்து செல்வோரிடம் சாதி வேறுபாடுகள் இருப்பினும், அவர்கள் செய்யும் தொழில்கள் சாதியினைப் பிரதி பலிப்பதில்லை. சாதி வேறுபாடின்றி அனைத்துச் சாதியினைச் சேர்ந்தோரும் தமது இயலுமைக்கு ஏற்றாற் போல் குறிப்பிட்ட சில வேலைகளைச் செய்யும் சூழ்நிலைக்குள் தள்ளப் படுகின்றனர். பொதுவாக வீட்டு வேலைசெய்தல், பொருட்கள் விற்றல், பத்திரிகை வியாபாரம் செய்தல், கடைநடத்துதல், முகாமையாளராகப் பணிபுரிதல், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வேலை செய்தல், கம்பெனியில் தொழிலாளராக வேலை செய்தல் முதலிய வேலைகள் அனைத்துச் சாதியினரைச் சேர்ந்தோராலும் மேற்கொள்ளப்படுகின்றன. தனது பொருளாதார நலன் வேண்டி இவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச் செய்தும் வாழ்க்கை நடத்துகின்றனர். மேற்கத்தேய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்பவர்கள்

மேற்கொள்ளும் தொழிலைச் சாதி வேறுபாடுகளைக் கொண்டு அறியமுடியாது இருப்பினும், சமூக வாழ்வியல்சார் நடவடிக்கைகளில் சாதியின் தாக்கங்கள் அதிகமானோரிடத்தில் இருப்பதனையும் காணமுடிகின்றது. இந்நிலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக பேச்சுத் திருமணத்தின் போது, சாதி உறவு தொடர்பான பேச்சுக்கள் முனைப்புப் பெறுவதனைக் கூறமுடியும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து கணிசமான யாழ்ப்பாணத்து மக்கள் செல்வதால் யாழ்ப்பாணத்து சாதியமைப்பில் எத்தகைய மாற்றம் இடம்பெறுகின்றது என்பது இப்புத்தகத்தில் இடம்பெறும் இரண்டாவது கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகின்றது.

iii. நவீன தொழில் இயந்திரங்களின் வருகை:

நவீன தொழில் இயந்திரங்களின் வருகை இருவேறு விடயங்களில் முக்கியம் பெறுகின்றது. முதலாவது, புதிய இயந்திரங்களைக் கொண்டு சாதித் தொழிலைச் செய்தல். சாதித் தொழில்கள் நவீன போக்கில் வளர்ச்சியடையும் நிலையாக இதனைக் கொள்ளமுடியும். விவசாய உற்பத்தி, சலூன்வேலை, தச்சுவேலை, நகைவேலை, லோன்றிவேலை முதலிய தொழில்கள் இயந்திரங்களின் துணைசார் தொழிலாக மாற்றம் பெறுகின்றமையை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இரண்டாவது, நவீன இயந்திரங்களைக் கொண்டு புதிய தொழில்களில் ஈடுபடல். சாதித்தொழிலைச் செய்துவந்தோர் அத்தொழில்களைக் கைவிட்டு, இயந்திரங்களின் உதவியுடன் புதிய தொழில்களில் ஈடுபடுவதாக இதனைக் கொள்ளமுடியும். லொறி, ராக்ரர், லான்ட்மாஸ்ரர், மின்சாரப் பொருட்கள், மற்றும் இயந்திரப் பொருட்கள் முதலியவற்றின் வருகையைத் தொடர்ந்து புதிய பல தொழில்கள் யாழ்ப்பாணச் சமூகத்தில் தோற்றம் பெறுகின்றது. வாகனம் திருத்தும் கடைகள், இயந்திரங்கள், அவற்றின் உதிரிப்பாகங்கள் விற்கும் கடைகள், கணினிக் கடைகள், தொலைபேசிக் கடைகள், புடவைக்கடைகள் முதலியன தோற்றம் பெற்றமையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இது குறிப்பிட்ட கால எல்லையில் உடனடியாக நிகழ்ந்ததொரு விடயம் அல்ல. தொழிலில் ஏற்பட்ட நீண்டகால மாற்றமாகவே இதனைக் கொள்ளமுடியும். இத்தொழில்களின் வளர்ச்சி சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு வளர்ச்சி அடைகின்றது. இருப்பினும் பொருளாதாரத்தின் முக்கியப்பங்கு இத்தொழில்களை மேற்கொள்வதற்கான தீர்மான கருவியாக

எப்பொழுதுமே இருந்து வருகின்றது. இப்புதிய தொழில் நடவடிக்கைகளின் செயற்பாங்கு பொதுவாக யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துச் சாதிகளிடத்தேயும் காணப்படுகின்றது.

நவீனமயமாதலின் போக்கு சாதித் தொழில்களைக் கைவிட்டு புதிய தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான தூண்டு சக்தியாக அமைந்த அதேவேளை, சாதித் தொழில்களையும் நவீன போக்கில் வளர்ச்சியடையச் செய்துள்ளது. தச்சுவேலை, சலூன்வேலை, லோன்றிவேலை முதலிய சாதித் தொழில்கள் இயந்திரத்தின் துணைசார் வேலையாக மாறிவருவதற்கு இந்நவீனமயமாதல் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருவது கவனிக்கத்தக்கது.

04. அனைத்துச் சாதியினைச் சேர்ந்தோரும் பொதுவான சில தொழில்களில் ஈடுபடல்:

சில தொழில்கள் பொதுவாக அனைத்துச் சாதிகளாலுமே மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய தொழில்களுக்கு சாதிக் கட்டுப்பாடு ஒரு வரையறையாக இருப்பதில்லை. சந்தையில் வியாபாரம் செய்தல், பலசரக்குக் கடைகள் நடத்தல், புடவைக்கடை நடத்தல் முதலியவற்றினை உதாரணமாக குறிப்பிடமுடியும். இவற்றினைவிட புதிய இயந்திரங்களினதும், கருவிகளினதும் வருகையினால் உருவாக்கம் பெற்ற புதிய தொழில்களையும் இங்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

சாதிப் புவியியலும் உறவுமுறை பற்றிய விசாரிப்பும்

சாதிக் குழுக்கள் ஒவ்வொன்றினதும் வேறுபட்ட புவியியல் அமைவிடங்களே சாதிப்புவியியலென இங்கு கொள்ளப் படுகின்றது. சாதி அமைவிடங்களைக் கொண்டும் அல்லது குறிப்பிட்ட சாதியினைச் சேர்ந்த அங்கத்தவர்கள் செறிந்து வாழும் நிலைகளைக் கொண்டும் இவர்கள் இன்ன சாதியினரைச் சேர்ந்தோரென அடையாளம் காணப்படும் போக்கு யாழ்ப்பாணச் சமூகத்தில் காணப்படுகின்றது. இங்கு சாதி அமைவிடங்கள் அடையாள நிலைகளைத் தனதாக்கு கின்றன. காலத்துக்குக்காலம் தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் யாழ்ப்பாணத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் புவியியல் இடங்களை வைத்து குறிப்பிட்ட சாதிக்குழுக்களை அடையாளம் காண்பதில் சில சிக்கல்கள் இருப்பினும், பொருத்தப்பாடுகள் பல இன்று வரையிலும் இருக்கவே செய்கின்றன. சாதி அமைவிடங்களை

மையமாகக் கொண்டு யாழ்ப்பாணத்துக் கிராமங்களை பல்வேறு வகைமைக்குள் கொண்டுவரமுடியும். இம்முயற்சியில் யாழ்ப்பாணத்துக் கிராமங்களை மூன்று வகைக்குள் உட்படுத்துகின்றார் மைக்கல் பாங்ஸ் (Banks 1960:69). முதலாவது, ஒரு சாதியினை மட்டும் கொண்டுள்ள கிராமங்கள். ஒரு சாதிக் குழுவே கிராமத்தின் முழுப்பகுதியையும் ஆக்கிரமித்துக் கொள்ளும். ஆனையிறவின் தெற்குப் பகுதியில் இத்தகைய கிராமங்களைக் காணமுடிவதாக மைக்கல் பாங்ஸ் குறிப்பிடுகின்றார். இரண்டாவது, பல சாதிகளைக் கொண்ட கிராமங்கள். ஆனால் ஒவ்வொரு சாதியினருக்கும் குறிப்பிட்ட ஒரு பகுதி மட்டுமே உள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தெற்குப் பகுதியிலும், ஆனையிறவின் தெற்குப் பகுதியிலும் இத்தகைய கிராமங்கள் காணப்படுவதாக பாங்ஸ் குறிப்பிடுகின்றார். மூன்றாவது, பல சாதிகளை உள்ளடக்கிய கிராமங்கள் இங்கு ஒவ்வொரு சாதியினருக்கும் அதிக பகுதிகள் காணப்படும்.

இவ்வகைமைகளில் இரண்டாம், மூன்றாம் வகைமைகளிலேயே தற்கால யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் அதிகமானவை அடங்கும். இங்கு சாதிக் குறியீடாக குடியிருப்பின் அமைவிடங்கள் இருப்பது கவனிக்கத்தக்கது. யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகள் அல்லது குறிச்சிகள் சாதிப்பெயரினை பிரதிபலித்து நிற்பது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். மல்லாகத்தில் உள்ள அம்பனாக்கடவை, தச்சக்கடவை போன்ற தெருக்களின் பெயர்களை இதற்குரிய சில உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

சாதாரணமாக நாளாந்தம் இடம்பெறும் உரையாடலில் ஒருவரின் சாதியினை அறியும் முகமாக, அந்நபரின் கிராமத்து அமைவிடத்தினையும், கிராமத்தில் அவர் குடியிருப்பின் அமைவிடத்தினையும் அறிந்துகொள்ள விழைவது சாதிப் புவியியல் சாதிகளைப் பிரதிபலித்து நிற்பதில் உள்ள செயல் பாங்கினை வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம். பொதுவாக ஒருவரின் இருப்பிடத்தினை அடையாளம் காணுவதற்கான பேச்சு இவ்வாறு அமையும். உங்கள் இடம் எங்கே? பதில் அளிப்பவர் மல்லாகம் என்று கூறுவாராயின், மல்லாகத்தில் எங்கே? மல்லாகத்தில் குறிப்பிட்ட நபரைச் சொல்லி அவரைத் தெரியுமா? என்றும் அந்நபருக்கு நீர் சொந்தக்காரரா? என்றும் கேள்விகள் பல அப்பதிலைத் தொடர்ந்து வரும். இங்கு கேள்வி கேட்பவருக்கு மல்லாகத்தினைப் பற்றியதொரு குறுக்கு வெட்டுமுகம் மனதில் இருப்பின், அல்லது மல்லாகத்தில் உள்ள குறிப்பிட்ட நபரின் சாதி எதுவெனத் தெரிந்திருப்பின், அவர்

பதில் அளிப்பவரின் சாதியை சரியாகவோ அல்லது அண்ணள வாகவோ கண்டுபிடித்துவிடுவார். யாழ்ப்பாணச் சமூகத்தில் ஒருவரின் சாதி பற்றித் தெரிந்து கொள்வதில் வெளிப்படையான ஒரு உரையாடல் இல்லாது போவதனால் அல்லது அத்தகையதொரு உரையாடல் பிரச்சினைக்குரியதாக இருப்பதனால், இவ்வாறானதொரு மறைமுகமான உரை யாடலுக்கு இப்புரிதல் இடங்கொடுக்கின்றது.

இன்று அதிகமானோர் சாதிப் பெயர்களைக் குறிக்கும் வீதிகளின் அல்லது குறிச்சிகளின் பெயர்களை பயன்படுத்து வதில்லை. அப்பெயர்களுக்குப் பதிலாக சாதிப்பெயரினைச் சுட்டாத புதிய பெயர்களைப் பயன்படுத்தும் போக்கு அதிகரித் துள்ளது. மல்லாகத்தில் உள்ள அம்பனாக்கடவை வீதி இன்று கோயில் வீதி, சேச் லேன், ஏழாம்கட்டை வீதி எனவும், தச்சகடவை வீதி இன்று மில் லேன், டிப்போ லேன் எனவும் சாதி நாமம் அற்ற பெயர்களைக் கொண்டு அழைக்கப் படுகின்றது. சாதாரண உரையாடலின் போது இம்மாற்றுப் பெயர்களே வழக்கத்தில் உள்ளமையையும் அதிகமாக அவதானிக்க முடியும்.

பொதுவாக ஒரு கிராமத்தில் குறிப்பிட்ட சாதியினைச் சேர்ந்தோர் குழுக்களாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் வாழ்வதனாலும் தொடர்ச்சியான இடப்பெயர்வு இடம்பெறும் போது, ஒவ்வொரு சாதியினைச் சேர்ந்தோரும் தத்தம் குழுக்களை அண்டி வாழ்வதனாலும் சாதிப் புவியியல் என்பது இன்றுவரையிலும் சாதி அடையாளத்தில் முக்கியமானதொரு இடத்தினைப் பெறுகின்றது.

மொழியும் சாதி வெளிப்பாடும்

பெயர்கள், நாளாந்தம் பயன்படுத்தும் சொற்கள் போன்றன சாதி அடையாளத்தினை வெளிப்படுத்தும் குறிகாட்டிகளாக அமைகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக பெயர்கள், உறவுமுறைச் சொற்கள், செய்யும் தொழில் தொடர்பாகப் பயன்படுத்தும் சொற்கள் முதலியவற்றை மையமாகக் கொண்டு விவரணப்படுத்துவதே இவ்வுபதலைப்பின் நோக்கமாகும். இருப்பினும் இக்குறியீடுகளை சாதி அடையாளத்தின் கூறுகளாகக் கொள்வதில் வரையறைகள் இருப்பதும் கவனிக்கத் தக்கது.

ஒருவரின் பெயரைக் கொண்டு அவரின் சாதியினை அடையாளம் காணமுடியுமா? என்ற கேள்விக்கு இலகுவில் இல்லை என்றோ அல்லது ஆம் என்றோ விடை கூறிவிட

முடியாது. தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் பெரும்பாலான விடயங்களில் ஒருவரின் பெயரினைக் கொண்டு சாதியினை இலகுவாகக் கூறிவிட முடியாத நிலைமையே காணப்படுகின்றது. ஆனால் முன்னைய யாழ்ப்பாணச் சமூகத்தில் சில பெயர்களின் ஒத்த இயல்பினைக் கொண்டு அப்பெயர்களுக்குரிய சாதிகளை இலகுவில் அடையாளம் காணமுடிந்தது. பொதுவாக பின்னை எனமுடியும் பெயர்கள் அல்லது நீண்ட ஓலிவடிவினைக் கொண்ட பெயர்கள் வெள்ளாள சாதிக்குரியதாகவும், குறுகிய ஓலியில் முடியும் பெயர்கள் ஏனைய சாதிகளுக்கு அதிலும் குறிப்பாக பஞ்சமர் சாதிகளுக்குரியதாக கணிப்பிடும் போக்கு யாழ்ப்பாணச் சமூகத்தில் இருந்ததொன்று. உதாரணமாக தாமோதரம்பிள்ளை, கதிரவேற்பிள்ளை, இராமநாதன், செல்வநாயகம், அருணாச்சலம், மாணிக்கவாசகர், தெய்வானைப் பிள்ளை முதலியன வெள்ளாள சாதியினைக் குறிக்கும் பெயர்களாகவும் கந்தன், வள்ளி, கதிரன், பொன்னன், பூதன் முதலிய பெயர்கள் பஞ்சமர் சமூகத்தினைக் குறிக்கும் பெயர்களாகவும் இருந்தன. இவ்வாறு குறுகிய ஓலியுடன் குறிப்பிட்ட சாதியினருக்கு பெயர் வருவதற்கான காரணமாக வாய்மொழியாக இருந்துவரும் கதை ஒன்றினைக் குறிப்பிடுவர். பஞ்சம சமூகத்தினைச் சேர்ந்த ஐந்து சாதிகளும் சமூகத்தில் ஏனைய சாதியினரால் மிகவும் ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்தனர். இந்நிலையில் உள்ள பஞ்சம சமூகத்தினைச் சேர்ந்தோர் தமக்குப் பிறக்கும் பின்னைகளுக்குப் பெயர் வைக்கவென வெள்ளாளர் சாதிகளைச் சேர்ந்த பதிவாளர்களை நாடுவர். தமது பின்னைகளின் பெயரினை நீண்ட ஓலி வடிவில் பொன்னம்பலம் அல்லது கதிரவேற்பிள்ளை எனக் கொடுக்கும் போது, வெள்ளாளர் சாதிகளைச் சேர்ந்த பதிவாளர் அந்நீண்ட பெயரின் பின்னால் அல்லது முன்னால் வரும் பெயரை அல்லது பெயர்களை வெட்டிவிட்டு பொன்னன், கதிரன் என்று வைத்துவிடுகின்றனர். இதனாலேயே பஞ்சமர் சமூகத்தினைச் சேர்ந்த மூதாதைகள் குறுகிய ஓலிப் பெயர்களைக் கொண்டிருந்தனர் என ஒருசாரார் நம்புகின்றனர்.

தற்கால யாழ்ப்பாணத்தில் அனைத்து சாதிகளிடத்தேயும் குறுகிய, நீண்ட ஓலியுடனான பெயர்கள் அதிகமாக வழக்கில் உள்ளதனால் ஒருவரின் பெயரைக்கொண்டு அவர் இன்ன சாதியினைச் சேர்ந்தவர் என அடையாளம் காண முடிவதில்லை. இருப்பினும் பிராமணச் சாதியினைச் சேர்ந்தவர்களின் பெயர்களைக் கொண்டு அவர்களது சாதியினை இலகுவில் அடையாளம் கண்டுவிட முடியும். பிராமணச் சாதியின் பெயர்கள் சர்மா என முடிவடைவது

அச்சாதிக்குரிய அடையாளப் பெயராகக் காணப்படுகின்றது. நரேந்திரசர்மா, புவனேந்திரசர்மா முதலிய பெயர்களை பிராமணச் சாதியினரின் பெயர் அடையாளத்திற்கான உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

உறவுமுறைச் சொற்களுக்கும் சாதிகளுக்குமிடையே பெரியளவில் தொடர்புகள் இல்லாவிட்டாலும் ஒரு சில தொடர்புகள் இருக்கின்றன. குறிப்பாக பஞ்சமர் சமூகத்தினைச் சேர்ந்தோரிடையே அம்மாவை ஆத்தான் அல்லது ஆத்தா எனவும், சின்னம்மாவை சின்னாத்தாள் அல்லது சின்னாத்தை எனவும், மாமாவை அம்மான் எனவும் அழைக்கும் போக்கு உண்டு. எனினும் பஞ்சம சாதியினைச் சேர்ந்த அனைவரும் இத்தகைய உறவுமுறைச் சொற்களைத்தான் உபயோகிக்கின்றார்கள் என்று கூறிவிடமுடியாது. (இத்தகைய உறவுமுறைச் சொற்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள வெவ்வேறு பிரதேசத்துக்கேற்ப வேறுபடலாம்.)

சாதித் தெய்வங்களின் பெயர்களைச் சுட்டி ஒருவரின் பெயரினை உச்சரிக்கும் முறை யாழ்ப்பாணத்தில் உள்ள சில சாதியைச் சேர்ந்தவர்களிடையே அதிகம் காணமுடியும். இவ்விடத்தில் இருவேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கது.

i) ஒருவருக்கு வைக்கப்பட்ட பெயர் சாதித் தெய்வத்தின் பெயரைப் பிரதிபலிப்பதாக உள்ளமை. உதாரணமாக அம்பட்டர் சாதிக்குரிய தெய்வங்களில் ஒன்று வைரவர். இதனால் இச்சாதியினைச் சேர்ந்த முன்னோர்கள் பலருக்கு வைரவி என்ற பெயர் இருந்தமையை அவதானிக்க முடிகின்றது. அதேபோல் வண்ணார் சாதியினைச் சேர்ந்தோரிடையே பெரியாம்பி என்ற பெயர் புழக்கத்தில் உள்ளமையும் கவனிக்கத்தக்கது.

ii) ஒருவருக்கு வைக்கப்பட்ட பெயர் பொதுவானதாக இருக்கும். உதாரணமாக ஜெயசீலன், பகீரதன் முதலிய பெயர்களைக் குறிப்பிடலாம். ஆனால் அவரது உறவினர்களால் அல்லது அவர் சார்ந்த சமூகத்தினால் அவர் அழைக்கப்படும் போது, சாதித் தெய்வத்தின் பெயர்கள் பிரதிபலிக்கப்படும். வண்ணார் சாதியினைச் சேர்ந்த பலர் தமது மூத்த மற்றும் இளைய சகோதரனை அழைக்கும்போது முறையே பெரியாம்பி, சின்னாம்பி ஆகிய பெயர்களையும், அம்பட்டர் சாதியினைச் சேர்ந்தவர்கள் பெரிய வைரவி/வைரவர், சின்ன வைரவி/வைரவர் ஆகிய பெயர்களையும் பயன்படுத்துவதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

சாதித் தொழில்களுக்கும் மொழிக்கும் இடையேயும் தொடர்புகள் உண்டு. தொழிலினை மையப்படுத்தி தச்சர் ஆச்சாரியார் எனவும், அம்பட்டர் பரியாரியார் எனவும், வண்ணார் கட்டாடியார் எனவும் அழைக்கப்படுவதனை இதற்கான எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிட முடியும். இத்தகைய தொழில்சார் சாதிமொழிகளில் ஆங்கில மொழிச் செல்வாக்குடன் மாற்றங்கள் இடம்பெறுகின்றன. ஆச்சாரியார் காப்பென்ரராகவும் (Carpenter), பரியாரியார் பாபராகவும் (Barber), கட்டாடியார் டோபியாகவும் (Dhoby) அழைக்கப்படும் போக்கே இன்று அதிகம் காணப்படுகின்றது.

சமூக மாற்றமும் வரையறையும்

யாழ்ப்பாணச் சாதியமைப்பில் மாற்றங்கள் இடம்பெறுகின்றது என்பது புதிய விடயம் அல்ல. மரபுரீதியாக இருந்து வரும் சாதி அமைப்பில் மாற்றங்கள் எப்போதும் நிகழ்ந்தே வருகின்றன. ஆனால் சமூகச் சூழ்நிலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப அம்மாற்றங்களின் போக்கு குறைந்தும், அதிகரித்தும் காணப்படும். இக்கட்டுரையில் மேலே ஆராயப்பட்ட விடயங்கள் பலவற்றிலும் சாதி அசைவியக்கம் தொடர்பாக பேசப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் சாதி அடையாளங்களில் ஏற்படும் மாற்றங்களின் வரையறை பின்வரும் மூன்று தலைப்புகளின் கீழ் ஆராயப்படுகின்றது.

1. சாதிக்குள் சாதி பாராட்டும் முறையில் ஏற்பட்டுவரும் மாற்றம்
2. சமஸ்கிருதமயமாதலும் வேறுபாடும்
3. உள்ளூர் இடப்பெயர்வும் சாதி அடையாளமும்

1. சாதிக்குள் சாதி பாராட்டும் முறையில் ஏற்பட்டுவரும் மாற்றம்

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் சாதி அசைவியக்கத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய செயல் பாங்காக சாதி உட்பிரிவுகளில் ஏற்படும் உடைவுகளைக் கூற முடியும். இவ்விடயத்தினையே கார்த்திகேசு சிவத்தம்பி அகப்பிரிவுகள் குறைந்த சாதிப் பெருங்குழுமத் தோற்றம் எனக் கூறுகின்றார். சிறிய சாதிக்குழுமங்கள் ஒழிந்து, சுலபமாக இனங்கண்டறியத்தக்கதாக, பெருங்குழுமங்களாக தோற்றம் பெறும் நிலையாக சாதிப் பெருங்குழுமத் தோற்றத்தினைக் கொள்ளமுடியும் எனக் கார்த்திகேசு சிவத்தம்பி வரையறுக்

கின்றார் (சிவத்தம்பி 2000: 46). இன்னொரு வகையில் இதனைக் கூறுவதாயின், ஒரு சாதிக்குள் அடையாளம் காணப்பட்ட பல சிறு சாதிக்குழுக்களின் பெயர்கள் இல்லாதுபோய், அவை யாவும் ஒரு சாதியாக அடையாளம் காணப்படும் நிலையெனக் கூறலாம். யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிக்குள் சாதி பாராட்டப்படும் முறையில் மாற்றம் ஏற்படினும், ஒரே சாதிக்குள்ளேயே ஏற்றத்தாழ்வு பார்க்கும் போக்கும் காணப்படுகின்றது. சாதிக்குழுக்களின் சமூக, பொருளாதார, தொழில், கல்வி, புவியியல் அமைவிடம் முதலிய நிலைகளின் பாற்பட்டதாகவே இவ்வேற்றத் தாழ்வுகளைப் புரிந்து கொள்ளமுடிகின்றது. ஒரு சாதிக்குள் பாரபட்சம், ஏற்றத்தாழ்வு ஆகியவற்றின் அடிப்படையில் எத்தகைய சாதிகள் அடையாளம் காணப்பட்டது என்ற விடயம் அட்டவணை — 03 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

சாதிக்குள் பல சாதிகள் தோற்றம் பெற்றதற்கான காரணங்களாகப் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடமுடியும்.

i) செய்யும் தொழிலை மையமாக வைத்து உருவாகும் பெயர்களால் பல சிறு சாதிக்குழுக்கள் தோற்றம் பெற்றன.

ii) செய்யும் தொழில் எச்சாதியினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது, என்பதனைப் பொறுத்து சாதிக் குழுக்கள் பல தோற்றம் பெற்றன.

iii) சமூகத்தில் ஒரு சாதிக்குழு தம்மைத் தாம் எவ்வாறு அடையாளம் காண்கின்றது அல்லது சமூகம் ஒரு சாதிக் குழுவினை எவ்வாறு அடையாளம் காண்கின்றது, என்பதன் பாற்பட்டதாக சிறு சாதிக்குழுக்கள் தோற்றம் பெற்றன.

iv) சாதிக் குழுக்களின் புவியியல் அமைவிடத்தின் அடிப்படையில் சிறு சாதிக்குழுக்கள் தோற்றம் பெற்றன.

இக் காரணங்களை மேலும் சில உதாரணங்களுடன் ஆராய்வோம்.

முதலாவது, செய்யும் தொழிலை மையமாக வைத்து உருவாகும் சாதிகள். இதற்கு உதாரணமாக பள்ளர் சாதியினை எடுத்துக் கொள்வோம். மரமேறிகள், வேர்க்குத்திப் பள்ளர், செருப்புக்கட்டிகள் என மூன்று உட்சாதிக் குழுக்கள் பள்ளர் சமூகத்தில் காணப்பட்டது. மரமேறிகள் பனை, தென்னை மரங்களில் ஏறி சீவல் தொழில் செய்பவர்கள். வேர்க்குத்திப் பள்ளர் துணிகளுக்குச் சாயம் போடுவதற்கான கலவைகளை சாய வேர்களில் இருந்து தயாரிப்பவர்கள் (அக்காலத்தில் பறையர் சமூகத்தவர்கள் துணி நெசவில் ஈடுபட்டிருந்தனர்).

செருப்புக் கட்டிகள் பதனிட்ட ஆடு, மாட்டுத் தோலைச் செருப்புக் கட்டுதலுக்காகப் பயன்படுத்தியவர்கள் (கார்த்திகேசு சிவத்தம்பி 2004.16—17). இங்கு தொழில்களைப் பிரதிபலிப்பதாக சாதிப் பெயர்கள் அமைந்திருக்கின்றமை தெரிகின்றது.

செய்யப்படும் தொழில் எச்சாதியினரை மையமாகக் கொண்டது என்ற அடிப்படையில் உருவாகிய சாதிகள் இரண்டாவது வகைமைக்குள் அடங்கும். இதற்கு எடுத்துக் காட்டாக அம்பட்டர் என்ற சாதியினை நோக்குவோம். அம்பட்டரில் வெள்ளாம் அம்பட்டர் வெள்ளாளர், கோவியர், தச்சர், நட்டுவர் முதலிய சாதிகளுக்கு தொழில் புரிபவர் களாகவும், கரையாம் அம்பட்டர் கரையார் சாதியினருக்கு தொழில் புரிபவர்களாகவும், சீயாம் அம்பட்டர் பஞ்சமர் என அழைக்கப்படும் சாதிக் குழுவிற்கு தொழில் புரிபவர்களாகவும் இருந்தனர். இதனாலேயே தொழில் புரியும் சாதிகளுடன் இணைந்த பெயர்களும், தொழில் புரியும் சாதியினைப் பிரதிபலிக்கும் பொதுப் பெயர்களும் அம்பட்டர் சாதிக்குள் தோன்றியதைக் காணமுடிகின்றது. அம்பட்டர் சாதியின் தொழில்சார் நடவடிக்கைகள் முன்னர் போல் சில சாதிக் குழுக்களை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்படுவதில்லை. சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினால் சலூன் தொழில் நிறுவன மயப்படுத்தப்பட்டதுடன், அம்பட்டர் சாதியினால் செய்யப்பட்டுவந்த குடிமைத் தொழில்கள் (ஏனைய சாதிகளின் வீடுகளுக்கு சென்று முடியிறக்குதல், இறந்த வீடுகளில் புரோகிதம் செய்தல்) இவ்வமைப்பினால் தடைசெய்யப்பட்டும் உள்ளது. இக்காரணங்களினால், முன்னர் போல் குறிப்பிட்ட சாதிகளை மட்டும் மையப்படுத்தி தொழில்களை மேற்கொண்ட அம்பட்டர் சமூகம் இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் பெரும்பாலும் இல்லாது போனது.

மூன்றாவதாகக் கூறப்பட்ட விடயம் சமூகத்தில் ஒரு குழு தம் நிலையினை எவ்வாறு அடையாளம் காண்கின்றது அல்லது அக்குழுவின் நிலை எவ்வாறு அடையாளம் காணப்படுகின்றது என்பதன் பாற்பட்டதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக கோவியர் சாதியினரைக் குறிப்பிட முடியும். கோவியரில் இவ்விடம் போன கோவியர், கோவியர் என இரு குழுக்கள் இருந்தன. கோவியரின் மரபுச் சாதித் தொழில் வெள்ளாள சாதியினரின் வீட்டு வேலைக்காரராக பணிபுரிவதாகும். இவ்வாறு பணிபுரிவதை விடுத்து தாமாகவே வெளியேறி வேறுபல தொழிலில் ஈடுபட்ட கோவியர் தம்மை இவ்விடம்போன கோவியர் எனவும், தாம் பணிபுரிந்த வெள்ளாளரிடம் பொருளுதவி பெற்று அத்தொழிலை விட்டுச் சென்றவர்கள் சாதாரணமாக கோவியர்

அட்டவணை – 3
சாதிக்குள் சாதி[1]

சாதிக்குள் சாதி	சாதிகள்	சாதிக்குழுக்களின் பொதுப்பெயர்கள்
மரமேறிகள் செருப்புக்கட்டிகள் வேர்க்குத்திப் பள்ளர்	பள்ளர்	பஞ்சமர்
சியாம் பறையர் வெள்ளாம் பறையர்	பறையர்	
அஞ்சனன் தாழ்வு நளவர் தேவரிக்குள நளவர் மறவைக்குள நளவர் கற்குள நளவர் வண்ணாங்குள நளவர் வாடை நளவர் சோளம் நளவர் மரமேறிகள்	நளவர்	
வண்ணார் துரும்பர்	வண்ணார்	
சியாம் அம்பட்டர் கரையாம் அம்பட்டர் வெள்ளாம்அம்பட்டர்	அம்பட்டர்	
கொல்லர் தட்டார் தச்சர் கன்னார் சிற்பாச்சாரி		பஞ்சவிஸ்வ குலம்/ பஞ்சவிஸ்வ கம்மாளர்
கரையார் முக்குவார் திமிலர்	கரையார்	
இஷ்டம்போன கோவியர் கோவியர்	கோவியர்	
அகம்படியார் மடப்பள்ளி வெள்ளாளர் செம்பு எடா வெள்ளாளர் தனங்காரர் உள்ளூர் செட்டிமார் சிறிய விவசாயிகள்	வெள்ளாளர்	
சைவக் குருக்கள் பிராமணர் சுன்னங் கூட்டத்தார் சிமார்த்தப்பிராமணர்	பிராமணர்	

எனவும் கருதப்பட்டனர். இங்கு இவ்விடம் போன கோவியர் ஏனைய கோவியரில் இருந்து தம்மை உயர்வாகக் கருதிக்கொண்டனர். இது ஒரு குழு தம் நிலைதொடர்பாகத் தாம் ஏற்படுத்திக் கொண்ட அந்தஸ்தாகக் கருதமுடியும்.

நான்காவதாக கூறப்பட்ட விடயம் ஒரு சாதியின் புவியியல் அமைவிடம் சார்ந்து உருவாக்கம் பெறுவது. இதற்கு உதாரணமாக நளவர் சாதியிலுள்ள அஞ்சனன் தாழ்வு நளவர், தேவரிக்குள நளவர் முதலானோரைக் குறிப்பிடமுடியும்.

சாதிக்குள்சாதி பாராட்டும் முறையில் ஏற்படும் மாற்றம் யாழ்ப்பாணச் சமூகத்தில் திடீரென இடம்பெற்றதொரு நிகழ்வு அல்ல. வரலாற்று நீட்சியில் இத்தகைய மாற்றம் காலத்துக்குக் காலம் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது. இத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழில் ஒரு பழமொழி உள்ளது.

> கள்ளர், மறவர், கனத்த அகம்படியார்
> மெள்ள மெள்ள வந்து வெள்ளாளர் ஆனார்கள்

இத்தகைய மாற்றம் வெள்ளாளர் சாதியினரைக் குறித்ததாக இப்பழமொழியில் குறிப்பிடப்பட்டு இருப்பினும், இவ்விடயம் பெரும்பாலும் அனைத்து சாதிகளிடத்தேயும் ஏற்பட்டதொரு அசைவியக்கமாகவே கொள்ளமுடியும். சாதிக்குள் சாதி பாராட்டும் முறையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு பொருளாதார வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, திருமணத் தேவைகள் ஆகிய விடயங்களைப் பிரதான காரணங்களாகக் கூறமுடியும்.

சாதிக்குள் சாதி பாராட்டப்படும் முறையில் ஏற்படும் மாற்றம் எத்தகையதொரு மாற்றத்தினை சமூக வாழ்வில் ஏற்படுத்தி நிற்கின்றது? இம்மாற்றத்தின் வரையறைகள் எவை? முதலிய விடயங்களும் அவதானிக்கப்பட வேண்டியவை. ஒருவரின் சாதியை வெளிப்படையாகவே பார்க்கப்படும் சந்தர்ப்பங்களில் முக்கியமான ஒன்றாக பேச்சுத் திருமணத்தினைக் (Arranged Marriage) கொள்ளமுடியும். முன்னைய காலத்தில் ஒரு சாதிக்குள் இருக்கும் பகுதிச் சாதிகளிடையே பேச்சுத் திருமணம் நடப்பதில்லை. அவ்வாறு இடம்பெறினும், அத்திருமணத்துக்கு ஒரு சாதிக்குள்ளேயே உயர்வாகத் தம்மைக் கருதும் சாதியினரால் உயர்ந்த சமூக

1.சாதிக்குள் சாதி பற்றிய இப்பட்டியல் களஆய்வில் இருந்தும் இரண்டாம்தரத் தரவுகளில் இருந்தும் தொகுக்கப்பட்டுள்ளது. சாதிக்குள் சாதிகள் இங்கு கொடுக்கப்பட்ட எண்ணிக் கையைவிட அதிகமாகக் காணப்படலாம். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச வேறுபாடு களுக்கேற்ப சாதிக்குள்ளிருக்கும் சாதிகளின் பெயர்கள் வித்தியாசப்பட்டும் காணப்படலாம். எவ்வாறாயினும் சாதிக்குள் சாதி பாராட்டும் முறையில் பாரிய மாற்றங்கள் யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பிரதேசத்திலுமுள்ள சாதிகளிலும் ஏற்பட்டுவருவது கவனிக்கத்தக்கது.

அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை. உதாரணமாக வெள்ளாளச் சாதியின் உட்பிரிவுகளான செம்பு எடா வெள்ளாளருக்கும் சிறிய விவசாயிகளுக்கும் இடையே பேச்சுத்திருமணம் இடம்பெற்றதில்லை. அதேபோல் வண்ணாரச் சாதியின் உட்பிரிவான துரும்பருக்கும் வண்ணாருக்கும் இடையில் பேச்சுத் திருமணம் இடம்பெற்றதில்லை. ஆனால் இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிக்குள் சாதி பார்க்கப்படும் நிலையில் பெரிய மாற்றங்கள் ஏற்படுகின்றது. சாதியின் உட்பிரிவுகள் பல இன்று ஒருசாதியாகவே அடையாளம் காணப்படுவதால் பேச்சுத் திருமணங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. இந்நிலை சாதியின் உட்பிரிவில் ஏற்படும் மாற்றத்துடன் இணைந்துவளரும் உறவுமுறை ஒன்றிணைவின் (Kinship Unification) வளர்ச்சிப் போக்கினையும் காட்டுகின்றது.

பஞ்சமர், பஞ்சவிஸ்வ குலம் ஆகியன பல சாதிக் குழுக்களை இணைத்து உருவாகிய பொதுப் பெயர்களாகும். இப்பொதுப் பெயரைக் கொண்ட உட்சாதிக் குழுக்களிடையே பேச்சுத் திருமணங்கள் பொதுவாக நடைபெறுவதில்லை. அத்தகைய திருமணங்கள் பெரும்பாலும் சமூகத்தில் தடைசெய்யப் பட்டதொரு வழக்கமாகவே தற்கால யாழ்ப்பாணச் சமூகத்திலும் இருந்து வருகின்றது. உதாரணமாக வண்ணார், அம்பட்டர் ஆகிய சாதிகளுக்கிடையிலோ தச்சர், தட்டார் ஆகிய சாதிகளுக்கிடையிலோ பேச்சுத் திருமணம் இடம்பெறும் வழக்கம் பொதுவாக இல்லை. இதனால் பஞ்சமர் என அழைக்கப்படும் சாதிகளுக்கிடையிலோ பஞ்சவிஸ்வ குலம் என அழைக்கப்படும் சாதிகளுக்கிடையிலோ உறவுமுறை ஒன்றிணைவு காணப்படு வதில்லை. இப்போக்கு பல சாதிகள் இணைந்து உருவாகிய குழு அடையாளத்தின் (Common Group Identity) வலிமையைக் காட்டிலும் தனிப்பட்ட சாதி அடையாளங்களின் (Individual Caste Identity) வலிமை முக்கியம் பெறுவதனை உணர்த்துகின்றது. இது ஒரு பொதுக்குழுவில் காணப்படும் உள்வாரியான சாதி அடுக்கமைவினை வெளிப்படுத்தி நிற்கின்றது. எனவே சாதிக்குள் சாதி பார்க்கப்படும் நிலையில் பெரிய மாற்றங்கள் யாழ்ப்பாணச் சமூகத்தில் இடம்பெறினும், தனிச்சாதி (அம்பட்டர், வண்ணார்) அடையாளங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டதொரு குழு (பஞ்சமர்) அடையாளமாக அதனைக் கொள்வதில் பாரிய வரையறைகள் உள்ளமை தெரிகின்றது.

சமஸ்கிருதமயமாதலும் வேறுபாடும்

ஒரு சாதியினைச் சேர்ந்தோர் இன்னொரு சாதியினைச் சேர்ந்தோரின் (குறிப்பாக உயர்சாதி எனக் கருதப்படுவோரின்) சமயவழிபாடு, வாழ்வியல் முதலிய பல விடயங்களைக் கடைப்

பிடிக்கும் போக்கில் உருவாகுவதே சமஸ்கிருதமயமாதல்சார் மாற்றமாகும். மாறாக ஒரு சாதி தனது சாதி அடையாளங்களின் தனித்துவத்தினைப் பேணுதல், சாதியின் உயர்வு அல்லது மாற்றம் தொடர்பாக புதிய கருத்தியலை வளர்த்தல் முதலான விடயங்களில் வேறுபட்ட நிலையினைக் கொண்ட சாதி அசைவியக்கங்கள் இடம்பெறுவதை வேறுபாடுசார் அசைவியக்கமாகக் கொள்ளமுடியும்.

சமஸ்கிருதமயமாதல் அல்லது சமஸ்கிருதநெறிப்பாடு (Sanskritazation) என்ற சொல் இந்தியச் சமூகவியலாளரான எம்.என். ஸ்ரீனிவாஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. சமஸ்கிருதமயமாதல் என்பது குறைந்த சாதி அல்லது ஒரு குடி அல்லது சமூகக் குழு தமது வழக்கங்கள், சடங்குகள், கருத்தியல்கள், வாழ்க்கை முறைகள் என்பனவற்றினை உயர்ந்த சாதியெனக் கருதப்படுவோரின் செயல்பாங்கு நோக்கி மாற்றுதலாகும் (Srinivas, 1962). சமஸ்கிருதமயமாதல் தனியே சமய அசைவியக்கத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஏற்படும் மாற்றத்தினை உள்ளடக்கியுள்ளது. ஆனால் அவை அனைத்தும் சமூகத்தில் "உயர்சாதி" எனக் கருதப்படுவோரின் அல்லது ஒரு சாதிக்கு அடுத்தகட்ட உயர்மட்டத்தில் இருப்பவர் எனக் கருதப்படுவோரின் வாழ்வியல் நோக்கிய அல்லது அவர்களது அடையாளங்களை உள்வாங்கிய மாற்றமாகவே கொள்ள முடியும். இச்சமூக மாற்றத்தில் ஒரு சாதி தனது அடையாளங்களையும், தனித்துவங்களையும் கடைப்பிடிப்பதைக் குறைத்து அல்லது கடைப்பிடிக்காது விடுத்து சமூகத்தில் உள்ள இன்னொரு சாதியினருடையதெனக் (உயர்) கருதப்படும் அல்லது அவர்கள் கடைப்பிடிக்கும் அடையாளங்களை உள்வாங்குதல் அல்லது பின்பற்றுதல். அதாவது ஒன்று இன்னொன்றாக மாறுதல் அல்லது ஒன்று இன்னொன்றின் பண்புகளைப் பெற்றுக் கொள்ளுதல் என்றவாறு இதற்குப் பொருள் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் சமய அசைவியக்கத்தினை சமஸ்கிருதமயமாதலின் வழிவைத்து அதிகம் நோக்கமுடியும். ஆகம வழிபாட்டினை நீண்டகாலமாகக் கடைப்பிடிக்காத, பொருளாதாரத்தில் வசதி படைத்த, கல்வியில் உயர்வடைந்த பலர் தமது சொந்தக் கோவில்களை ஆகம மரபின் அடிப்படையில் மாற்றுகின்றனர். இதன் பெறுபேறாக வழிபடப்படும் தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், கோவில் அந்தஸ்து முதலிய பல விடயங்களில் மாற்றங்கள் இடம்பெறுகின்றது. யாழ்ப்பாணச் சமூகத்தில் இந்து சமய நடைமுறையில் சமஸ்கிருதமயமாதல்

பின்வரும் மூன்று வேறு நிலைகளில் இடம்பெறுவதாக கா. சிவத்தம்பி (2000: 47—48) குறிப்பிடுகின்றார்.

1. வழிபாட்டிடங்களில் வழிபடப்படும் தெய்வங்கள் மாற்றப்படுகை

(உதாரணம்)

அண்ணமார்	—	பிள்ளையார்
விருமர்	—	பிள்ளையார்
நாச்சிமார்	—	காமாட்சி அம்மன்
கண்ணகியம்மன்	—	ராஜராஜேஸ்வரி
முனி	—	முனீஸ்வரர் (சிவன்)
வைரவர்	—	ஞானவைரவர்

2. வழிபாட்டு முறைகள் மாற்றப்படுகை

மடை	—	பொங்கல்
குளிர்த்தி	—	பொங்கல்
பொங்கல்	—	சங்காபிஷேகம்

3. கோயில்களின் அந்தஸ்து மாற்றப்படுகை

i. விளக்கு வைத்தல் நடந்த இடத்தில் பிராமணர் சைவக்குருக்கள் பூசை செய்தல்.

ii. சங்காபிஷேகம் நடந்த இடத்தில் மகோற்சவம் நடத்தல்.

iii. பெயர் மாற்றம்: காரைநகர் சிவன் கோவில், சமுத்துச் சிதம்பரம் எனப்பட்டமை.

iv. தேர்த்திருவிழா அன்று (நல்லூரில் நடப்பது போன்று) பச்சை சார்த்தல்.

v. பெருங்கோயில்களோடு சம்பந்தப்படல் (அக்கோவில் களுக்கான விரதம் பிடித்தல் முதலியன).

vi. பஞ்சாங்கத்தில் கோயிலின் பெயர் இடம்பெறல்.

இவ்வாறு சமய அசைவியக்கம் பொதுவாக இடம்பெற்ற போதிலும், சில வரையறைகளும் இருக்கவே செய்கின்றன. ஆகம முறைகளைப் பின்பற்றும் பள்ளர், நளவர், பறையர், வண்ணார், அம்பட்டர் முதலிய சாதிகளின் ஆளுகைக்குட்படும் கோவில்களில் தகுதிபெற்ற பிராமணர்களையோ தேர்ச்சி யடைந்த நாதஸ்வர தவில் வித்துவான்களையோ உள்வாங்கு வதில் சாதிரீதியான சிக்கல்கள் இன்றும் இருக்கின்றன. வெள்ளாள சாதிக்கென பரம்பரை பரம்பரையாக பூசைகள் செய்து வரும் பிராமணர்கள், வாத்தியங்கள் இசைத்துவரும் நட்டுவர்கள், பஞ்சமர் குழுவினரின் கோவில்களுக்குச் சென்று தமது தொழில்களைச் செய்வது மிகவும் அரிதாகவே உள்ளது.

அதேபோல் பஞ்சமர் குழுவினரின் கோவில்களில் பிரசங்கம் செய்த ஒரு பேச்சாளர் வெள்ளாள சாதியின் கோவில்களில் பிரசங்கம் செய்வதற்கு அழைக்கப்படாமல் போகும் நிலைமைகளும் காணப்படுகின்றன.

பஞ்சமர் குழுவினர் ஆகம முறைசார் வழிபாட்டினை கடைப்பிடிக்கும் அதேநேரம் தமது சாதிக்குரிய குலதெய்வங்களை காலம் காலமாக வழிபாடாற்றுவதில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர். எனவே சமஸ்கிருதமயமாதலின் பிரதான ஒரு கூறான சமய அசைவியக்கம் (Religious Mobility) யாழ்ப்பாணச் சமூகத்தில் அதிகம் காணப்படும் போதிலும், அவ்வசைவியக்கத்தில் பல வரையறைகள் இருக்கவே செய்கின்றன. பொதுவாக சமய அசைவியக்கத்தினை ஒவ்வொரு சாதியினரும் வேண்டி நிற்கும் அதேநேரம் தமக்கேயான தனித்துவ தெய்வ வழிபாடுகளிலும் ஈடுபடுகின்றனர். அத்துடன் தமது தனித்துவங்களுடன், ஆகம நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இதன் போதும் சில வரையறைகளை எதிர்நோக்குகின்றனர். மேலும், யாழ்ப் பாணத்தில் வெள்ளாளர் சாதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் ஆகம வழிபாட்டினை மட்டுமே தமதாக்கிக் கொள்கின்றனர் என்றும் கூற முடியாது. வெள்ளாளர் சாதியினைச் சேர்ந்த பலர் ஆகமம் சாரா சடங்குகளைப் பின்பற்றுவதுடன் சிறு தெய்வ வழிபாடுகளில் ஈடுபடவும் செய்கின்றனர்.

ஸ்ரீனிவாசால் அறிமுகப்படுத்தப்பட்ட சமஸ்கிருதமயமாதலினை மட்டும் அளவுகருவியாகக் கொண்டு யாழ்ப்பாணச் சமூகத்தின் தற்கால சாதி அசைவியக்கத்தினை விளங்கிக் கொள்வதில் வரையறைகள் இருக்கின்றன. ஏனெனில் சமஸ்கிருதமயமாதலினை சில வரையறைகளுடனேயே யாழ்ப்பாணச் சமூகம் பின்பற்ற விளைகின்றது. இந்நிலையில் ஒவ்வொரு சாதியினரின் தனித்துவத்தினையும், அதன் வழி ஏற்படும் வேறுபாடுகளையும் அறிந்துகொள்வது யாழ்ப்பாணச் சாதி அசைவியக்கத்தினை புரிந்து கொள்வதற்கான இன்னோர் வழி எனலாம். இங்கு சாதிகள் சமூக அடுக்கமைவின் வெவ்வேறு அதிகாரங்களையும், அந்தஸ்தினையும் கொண்ட ஒரு முறைமை எனக் கொள்வதைவிட, அவை தமது தனித்துவங்களுடன் கூடிய வெவ்வேறுபட்ட சமூகக் குழுக்கள் என்றாகின்றது (Dipankar Gupata, 2000). இங்கு சாதி உயர்வுதாழ்வு என்பது பொருள் இழந்து, ஒருசாதி இன்னொரு சாதியில் இருந்து வேறுபடுகின்றது அல்லது வளர்ச்சிநிலை பெறுகின்றது என்பது யாழ்ப்பாண நடைமுறையுடன் கூடிய இன்னொரு அவதானமாகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளர், நளவர், பறையர், அம்பட்டர்,

வண்ணார், தச்சர், கொல்லர், தட்டார் முதலிய சாதிகளின் அசைவியக்கம் வெள்ளாள சாதியின் வழக்கங்கள், வழிபாட்டு முறைகள், கருத்தியல், வாழ்வியல்கள் என்பவற்றினைக் கடைப் பிடிப்பதனால் ஏற்படும் விடயமல்ல. அவர்கள் தமது பொருளாதார, கல்விசார் வளர்ச்சிகள், வாழ்க்கை தொடர்பான கருத்தியல் முதலிய விடயங்களைத் தமது விருப்பு வெறுப்புக் கேற்பவும், சமூக அந்தஸ்துக்கேற்பவும் வடிவமைத்துக் கொள் கின்றனர். இச்சாதிக்குழுக்களின் வளர்ச்சிக்கு வெள்ளாள சாதி ஒரு இலட்சியக் குழுவாக இருப்பதில்லை. சமூகத்தினால் பின்தள்ளப்படும் சாதி ஒடுக்குமுறையின் பாற்பட்டு அவ்வாறே இருந்துவிடாததொரு புதிய சமுதாயத்தின் வளர்ச்சியாகவே இதனைக் கொள்ளமுடியும். இங்கு பல சாதிகளைச் சேர்ந்தவர்களும் புதிய கருத்தியல் நோக்கி நகர்கின்றனர். தமது சாதி ஒடுக்கப்பட்ட சாதி என்ற நிலையில் இருந்து விலகிச் செல்கின்றனர். இவ்வளர்ச்சிக்கு பொருளாதாரம், கல்வி, கருத்தியல் முதலிய விடயங்களில் ஏற்பட்ட வளர்ச்சியே பிரதான காரணங்களாகின்றன. இப்போக்கு சாதிக் கற்கைகளை உயர்வு தாழ்வு என்ற அடிப்படையில் அமைவதை அநாவசியமாக்குவதுடன், ஒவ்வொரு சாதிக் குழுக்களிடையே காணப்படும் வேறுபாடுகள், வளர்ச்சி நிலைகள், தனித்துவங்கள், முதலியவற்றினை அவற்றின் செயல் நிலைகளுடன் வைத்து ஆராய்வதன் அவசியத்தினையும் முனைப்புப்பெறச்செய்கின்றது.

உள்ளூர் இடப்பெயர்வும் சாதி அடையாளமும்

இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து வரும் ஆய்வுக் கட்டுரை களில் சாதி அடையாளங்கள் எவ்வாறு யுத்தம், இடப்பெயர்வு போன்ற தற்கால சமூகச் செயற்பாடுகளுக்குட்பட்டு இயங்குநிலை கொள்கின்றது என்பது விரிவாக ஆராயப் படுவதால் இவ்விடயம் தொடர்பாக இக்கட்டுரையில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

முடிவுரை

முடிவாக யாழ்ப்பாணச் சாதியமைப்புத் தொடர்பாக சில முக்கிய குறிப்புக்களைத் தற்கால சமூக நிலைமையுடன் இணைத்துக் கூறலாமென எண்ணுகின்றேன். இவ்விடயம் சாதி அடையாளம், அடையாள வெளிப்படுத்தல், சாதி அதிகாரம் என்பவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றது.

பாரம்பரியமாக இருந்துவரும் சாதி அடையாளங்களான சாதித் தொழில்கள், சமயக் கடவுளர்கள், வழிபாட்டுமுறைகள்,

பெயர்கள், அமைவிடம் முதலியன ஒருவரின் சாதியை அடையாளம் காண்பதற்கான சில குறிப்புகளை உணர்த்தி நிற்பினும், இவ்வடையாளங்களின் உறுதித்தன்மை பெரியளவில் வலுவிழந்த நிலையில் இருப்பது குறிப்பிடக்கூடிய ஒரு முக்கிய அம்சமாகும். கல்வி, தொழில்ரீதியான மாற்றங்கள், பொருளாதார வளர்ச்சி, உள்ளூர் மற்றும் மேற்கத்தேய நாடுகளை நோக்கிய இடப்பெயர்வு, நவீனமயமாதல் முதலிய காரணிகளால் சாதி அடையாளங்கள் சில விடயங்களில் மாற்றம்கொள்ளும் நிலை யாழ்ப்பாணத்தில் உள்ளது. அதேபோல் சாதி தொடர்பாக வரும் பிரச்சினைகளும், பாரபட்சங்களும் முற்றிலும் மாறிவிட்டது என்று கூறி விடமுடியாது. இவை சமயம், நாளாந்த வாழ்க்கை எனப் பல விடயங்களிலும் வியாபித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி தொடர்பான உரை யாடல்கள் வெளிப்படையாக இடம்பெறுவதில்லை. அதாவது எந்தச் சாதியைச் சேர்ந்தவராயினும், சாதி என்ற விடயத்தினை வெளிப்படையான கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதனை அதிகம் விரும்புவதில்லை. அது பேசத்தகாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. இருப்பினும் பேச்சுத் திருமணம் என்று வரும்போது, சாதி வெளிப்படையாகவே பார்க்கப்படுகின்றது. பேசப்படுகின்றது. இந்தவகையில் நோக்கும் போது, சாதியினைச் சொல்லித் தன்னை ஒருவர் அறிமுகப்படுத்தும் போக்கு யாழ்ப்பாணச் சமூகத்தில் அறவே இல்லை என்ற முடிவுக்கு வரமுடியாதுள்ளது. இருப்பினும் நாளாந்த வாழ்க்கையில் ஒருவர் தன்னைச் சாதி சொல்லி அறிமுகப்படுத்தும் போக்கோ, ஒருவரின் சாதி தொடர்பான எழுத்துப்பதிவுகளோ யாழ்ப் பாணச் சமூகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஒருவரின் சாதியை அறியும் வேட்கையின் பாற்பட்டதான உரையாடல்கள் மறைமுகமாக இடம்பெறுவதனை அறியமுடியும்.

பொதுவாக சாதி ஆதிக்கம் (Caste Domination) சமூகத்தில் உயர்வாகக் கணிக்கப்படும் சாதியிடத்தில் இருக்கும். இவ்வாறு உயர்வாகக் கணிக்கப்படுவோர் ஆதிக்கத்தினை தமது விருப்பு வெறுப்புக்கேற்ப வெவ்வேறு நிலைகளின் ஊடாக ஏனைய சாதிகள் மீது பயன்படுத்திக் கொள்வர். இத்தகையதொரு நிலையினை யாழ்ப்பாணச் சமூகத்தில் அறுபது மற்றும் எழுபதுகளுக்கு முன்னர் வெளிப்படையாகக் காணமுடிந்தது. தற்பொழுதுள்ள சாதி ஆதிக்க நிலையின் போக்கில் சில வித்தியாசங்கள் உண்டு. யாழ்ப்பாணத்தின் சாதி ஆதிக்கம் "உயர்சாதியாகக்" கருதப்படும் வெள்ளாள சாதியினரிடத்தே

மட்டும் மையம் கொண்டுள்ளது என்று கூறிவிடமுடியாது. அவை சாதிப் படிமுறைக்கேற்பவும், சமூக அந்தஸ்து நிலைக் கேற்பவும் ஒவ்வொரு சாதியினரிடமும் வியாபித்துள்ளமை கவனிக்கத்தக்கதொரு விடயமாகும். இங்கு சாதி ஆதிக்க நிலைகள் மேலிருந்து கீழ் நோக்கியதாக மட்டுமே உள்ளது எனக் கூறிவிட முடியாது. மாறாக அவை கீழ் இருந்து மேலாகவும், கிடையாகவும் பல்வேறு செயல் நிலைகளைக் கொள்கின்றது. இவ்விடத்தில் சாதியுடன் ஏனைய சமூக விடயங்களும் (அந்தஸ்து, கல்வி, பொருளாதாரம், தேவை முதலிய) செயற்படுவது கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் புலப்பெயர்வு, பணவருவாய் மற்றும் சாதி, வகுப்பு, மத அடையாளங்களின் இயங்குநிலைகள்[2]

பரம்சோதி தங்கேஸ்

சுருக்கம்

இந்த ஆய்வுக் கட்டுரை யாழ்ப்பாணத் தமிழரிடத்தே குறிப்பாக 1983க்குப் பின்னர் ஏற்பட்ட வெளிநாடு நோக்கிய புலப்பெயர்வில் சாதி, உறவுமுறை, வகுப்பு போன்ற சமூக நிறுவனங்களின் வகிபங்கினை பகுப்பாய்வு செய்கின்றது. அத்துடன் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்து வரும் பணவருவாய் காரணமாக வேறுபட்ட சாதிக்குழுக்களிடையே ஏற்பட்டுவரும் சமூக, பொருளாதார மற்றும் மத அடையாளங்களின் இயங்குநிலைகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றது. புலம்பெயர்வாழ் மக்களால் அனுப்பப்படும் பணம் வாழ்க்கைத் தர உயர்ச்சி, குடும்ப மூலதன விரிவாக்கம், பாடசாலைகள், பொது நிறுவனங்களின் மற்றும் சாதி அடிப்படையிலான இந்துக் கோயில்கள் போன்றவற்றின் கட்டுமான வளர்ச்சி

---

2. இக்கட்டுரை ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மூலப்பிரதின் மொழிபெயர்ப்பாகும். இக்கற்கைக்கான கள ஆய்வினை மேற்கொள்வதற்கான நிதியுதவியை கனடாவிலுள்ள சர்வதேச அபிவிருத்தி ஆய்வு மையம், கொழும்பு இனக் கற்கைகளுக்கான சர்வதேச (ICES) அமைப்பினூடாக வழங்கியது. இவ்வேற்பாடுகளை பெரியதொரு ஆய்வுத்திட்டத்தின் பிரதான ஆய்வாளரான பேராசிரியர் ரு. சேரன் ஒழுங்குபடுத்தியிருந்தார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மூலப்பிரதியை விரிவாகப் படித்து விமர்சனக் கருத்துக்கள் தந்த கலாநிதி. சுல்பிகா இஸ்மாயில் மற்றும் கலாநிதி. இரேசா கருணாரட்ண ஆகியோருக்கு எனது நன்றிகள்.

முதலிய விடயங்களுக்காக உள்நாட்டில் பெரியளவு பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், இத்தகைய புதிய அடையாளங்களால் சலுகையளிக்கப்பட்ட சாதிக் குழுக்களோடு தொடர்புபடுத்தி "உயர்வாக" மதிக்கப்பட்ட சமயக் குறியீடுகளையும் சடங்குகளையும் சலுகை மறுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் உள்வாங்கி நிற்பதோடு அவர்களது சமூக அந்தஸ்தினையும் மூலதனத்தினையும் மேம்படுத்துதற்கு இத்தகைய செயற்பாடுகள் குறிப்பிடத் தக்களவு துணைபோகின்றன. இவ்வகையில் நோக்கும் போது, 83க்குப் பின்னர் ஏற்பட்ட வெளிநாட்டு புலப் பெயர்வு யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள்மீது எதிர்மறையற்ற, சாதக மான தாக்கத்தினை செலுத்தி நிற்கின்றது எனலாம். யாழ்ப்பாணத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மல்லாகம் என்ற கிராமம் இக்கற்கைக்காகத் தெரிவு செய்யப்பட்டது. ஆழமான நேர்காணல், உற்று நோக்கல் மற்றும் வினாக்கொத்து முதலிய ஆய்வு நுட்பங்களை உள்ளடக்கிய அளவு, பண்புசார் ஆய்வு முறைகள் இக்கற்கைக்கான தரவுகளைச் சேகரிப்பதற்கென பயன்படுத்தப்பட்டன.

அறிமுகம்

இலங்கைத் தமிழர்களின் தற்கால வெளியூர் புலப்பெயர்வு தொடர்பான கற்கைகள் பல்வேறு விடயங்களை ஆய்வுக்குட் படுத்துகின்றன. இக்கற்கைகள் புலம்பெயர்ந்த தமிழர்களின் சமூக வாழ்கை, புலப்பெயர்வின் போக்கு, புலப்பெயர்வுக்கான காரணங்கள், புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்களுக்கு ஏற்படும் அனுபவங்கள், தேசிய மற்றும் சர்வதேச அரசியலில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் செலுத்திநிற்கும் வகிபங்கு மற்றும் செல்வாக்கு, தாய்நாட்டுக்கான பொருளாதார பங்களிப்பு, இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் தாய்நாட்டுத் தமிழர்களும் ஏற்படுத்திநிற்கும் நாடுகடந்த சமூக வலைப்பின்னல் போன்ற விவகாரங்களைப் புரிந்துகொள்வதற்கு முயற்சிக்கின்றன (Fuglerud 1999, McDowell 1996, Danial and Thangaraj 1994, Cheran 2001, 2003; Cheran and Shrryn, 2005; Srikandarajah 2004; Van Hear 2002, Sidharthan 2009). எவ்வாறாயினும், சமூக வாழ்க்கையின் முக்கிய பல நிலைகளில் பெரிய செல்வாக்கினைச் செலுத்திநிற்கும் சமூக நிறுவனங்களான சாதி, உறவுமுறை மற்றும் வகுப்பு போன்ற வற்றின் வகிபங்கினை புலப்பெயர்வு வாழ்க்கையில் பகுப்பாய்வு செய்து வெளிவந்த கற்கைகளின் போதாமை சமூக அறிவியலில்

நிலவுகின்றது. வெளியூர் புலப்பெயர்வு, பணவருவாய் காரணமாக குறிப்பாக பாரம்பரியமாக சலுகை மறுக்கப்பட்டு வந்த சாதிக் குழுக்களிடத்தே ஏற்பட்ட மேல்நோக்கிய சமூக அசைவியக்கத் தினைக் கற்பதிலுள்ள போதாமையை இக்கற்கை பூர்த்திசெய்ய வினைகின்றது.

வெளியூர் புலப்பெயர்வு, நாடுகடந்த வலைப்பின்னல், பணவருவாய் போன்றன யாழ்ப்பாணச் சமூகத்தின் உட்சமூகக் கட்டமைப்பிலும், பாரம்பரியமாக தொடர்ந்து வந்த சமூக வாழ்க்கையிலும் மாற்றங்கள் பலவற்றினை ஏற்படுத்திநிற்கின்றன. யாழ்ப்பாணச் சமூகத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மக்களிடத்தே இத்தகைய மாற்றங்களை அவதானிக்கமுடிகின்றது. யாழ்மாவட்டத்திலுள்ள மல்லாகம் என்ற கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வினவரைவியல் கற்கை கடந்த மூன்று தசாப்தங்களாக சமூக இயங்கியலில் ஏற்பட்டுவரும் மாற்றங் களையும் புலப்பெயர்வுச் செயல்முறையில் சாதி, உறவுமுறை மற்றும் வகுப்பு முதலியவற்றின் வகிபங்கினையும் அடையாளம் காண முயற்சிக்கின்றது. மேலும், புதிதாக ஏற்பட்ட பொருளாதார விருத்தியின் பலனாக ஏற்படும் புதிய செல்வந்தர்களின் உருவாக்கம், வேறுபட்ட சமூகக் குழுக்களிடையே இடம்பெறும் சாதி அடிப்படையிலான மத அடையாளங்களின் (மீள்) கட்டுமானம், (மீள்) வலிமையாக்கம் என்பன இக்கட்டுரையின் முக்கிய ஆய்வுப் பரப்புகளாக உள்ளன.

இக்கட்டுரை நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில், வரலாற்றுரீதியான யாழ்ப்பாணப் புலப்பெயர்வின் இயங்குநிலையை புரிந்துகொள்ளும் முகமாக, காலனித்துவ காலங்களிலும் அதற்குப் பின்னரும் ஏற்பட்ட கடல்கடந்த இடப்பெயர்வின் போக்கு, பணவருவாய் பற்றி ஆராயப்படுகின்றது. மேலும், இத்தகைய அபிவிருத்தியில் சாதி, வகுப்பு என்பனவற்றின் வகிபங்கு தொடர்பாக கருத்துரைக்கப் படுகின்றது. இருப்பிலுள்ள இரண்டாம் தர தகவல்களின் அடிப்படையில் இப்பகுதி மிகச் சுருக்கமாக விளக்கப்படுகின்றது. இரண்டாம் பகுதியில், தகவல் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்ட ஆய்வு நுட்பங்களும், அவ்வாறு தகவல் சேகரிக்கும் போது நான் எதிர்கொண்ட சவால்களும் குறிப்பிடப்படுகின்றன. மூன்றாவது பகுதி யாழ்ப்பாணத்தின் சாதி தொடர்பான மிகச் சுருக்கமானதும் பொதுவானதுமான புரிதலைப் பெறும் நோக்கில் ஒதுக்கப்பட்டுள்ளது. இறுதிப் பகுதி இந்த ஆய்வின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஏற்பட்ட பிரதான கண்டுபிடிப்புக்களை பகுப்பாய்வு செய்கின்றது. இவை ஆய்வு செய்யப்பட்ட கிராமத்தின் அடிப்படைத் தகவல்கள், உள்ளூர்

மற்றும் சர்வதேச இடப்பெயர்வில் சாதி, வகுப்பு, உறவுமுறையின் வகிபங்குகள், பணவருவாயின் மூலங்கள், அவை உள்ளூரில் பயன்படுத்தப்படும் முறைகள், புதிய செல்வந்தர்களின் உருவாக்கம், ஒரு வகுப்புச் சமூகத்தில் சாதி அடிப்படையிலான மத அடையாளங்களின் இயங்குநிலைகள் முதலிய விடயங்களை உள்ளடக்கியுள்ளன.

இடப்பெயர்வு, பணவருவாய், சாதி: மிகச் சுருக்கமான வரலாற்று அறிமுகம்

இலங்கையில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் மேற் கொள்ளப்பட்ட சமூக, பொருளாதார அபிவிருத்திகளும் அடைவுகளும் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் ஒரேமாதிரியான தாக்கத்தினைச் செலுத்தவில்லை. இவ்வபிவிருத்திகள் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத் திற்கு வேறுபட்டுக் காணப்படுகின்றன. பிரித்தானிய ஆட்சி யாளர்கள் குறிப்பிட்ட சமூக, பொருளாதார, சமய கருத்தியலை வளர்த்தெடுப்பதற்கும், அபிவிருத்தி தொடர்பான தமது சொந்த எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்வதற்கும் இலங்கையில் காணப்பட்ட புவியியல் அம்சங்களையும், சமூகப் பண்புகளையும் தேவையடிப்படையில் பயன்படுத்திக் கொண்டனர். பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை குறிப்பாக யாழ். குடாநாட்டினைக் கைப்பற்றிய பின்னர், யாழ்ப்பாணத் தமிழர்களிடையே கிறிஸ்த்தவ சமயத்தினை அவர்களால் நிறுவப்பட்ட மிஷனரி மூலமாக பரப்ப முனைந்தனர். கிறிஸ்த்தவ மதத்திற்கு மக்களை மாற்றும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஆங்கிலக் கல்வி, நவீன கல்வி முறைகள் இவ்வாட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன. இருப்பினும், சலுகையளிக்கப்பட்ட சாதிக்குழுவினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தொகையான மக்கள் ஏற்கெனவே தாம் வைத்திருந்த வளங்களைப் பயன்படுத்தி ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் உள்ளூர் "உயர்" குழாத்தவர் உருவாகுவதற்கு இந்த ஆங்கில மொழிக் கல்வி துணைபோனது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், மத மாற்றத்தினை ஏற்றுக்கொண்ட சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கும் இலவசமாக கல்வி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறு ஆங்கிலக் கல்வியை கற்ற கணிசமான சலுகையளிக்கப்பட்ட "உயர் சாதி" மக்களுக்கும், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கல்விகற்ற சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குடும்பங்களுக்கும்,

பண்டைய யாழ்ப்பாணத் தமிழர்களின் வெளிநாடு நோக்கிய புலப்பெயர்வுக்கும் இடையில் மிக நெருங்கியதொரு தொடர்பு காணப்பட்டது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட நடுத்தர அரச தொழில்களைச் செய்வதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடு நோக்கிய புலப்பெயர்வு பெரியளவில் இடம்பெற்றது. இருப்பிலுள்ள தகவல்களின்படி, அத்தகையதொரு யாழ்ப்பாணத்தவரின் புலப்பெயர்வு 1870களிலிருந்தே ஆரம்பிக்கின்றது (சத்தியசீலன் 2006:5). இவ்வாறு தொழில் வாய்ப்புத்தேடிப் புலம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமது பிள்ளைகளுக்கு இலங்கைக்குள்ளேயும், வெளியேயும் நல்ல கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருளாதாரரீதியான தகைமையைப் பெற்றிருந்தனர்.

மலாய யாழ்ப்பாணத்தவர் (Malayan Jaffnese/Cylonese)[3] தமது இளந்தலைமுறையினருக்கு மேற்கத்தேய நாடுகளுக்கு கல்வி, வேலைவாய்ப்புத் தேடிச் செல்வதற்கு சந்தர்ப்பத்தையும், ஆர்வத்தையும் வழங்கக்கூடிய வசதிபடைத்திருந்தனர். இத்தகைய புலப்பெயர்வும் கூட ஏற்கெனவே மலேசியா, பர்மா முதலிய நாடுகளில் வசிக்கும் நெருங்கிய உறவினர்களுடன் கடல்கடந்த வலைப்பின்னலை வைத்திருந்த சலுகையளிக்கப்பட்ட சில சாதி, வகுப்பினைச் சேர்ந்த மக்களிடையே அதிகம் மையங்கொண்டு காணப்பட்டது.

"1911 இல், மலேசியாவில் 7000 தமிழர்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை 1957 இல் 25,000 ஆக அதிகரித்தது. 1903இல் ஐக்கிய மலாய அரசின் புகையிரத சேவையில் 84 சிங்களவர்களோடு ஒப்பிடும் போது 2021 யாழ்ப்பாணத் தமிழர்கள் வேலை செய்தனர். இவ்வாறு புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்களை பொருளாதார மற்றும் புவியியல் காரணிகளின் அடிப்படையிலேயே விளங்கிக்கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தவரின் இப்புலப்பெயர்வு யாழ்ப்பாணச் சமூகத்தின் பொருளாதாரத்தை ஒரு "காசுக் கட்டளை பொருளாதாரம்" (Money Order Economy) என்று கூறும் அளவுக்கு செல்வாக்குச் செலுத்தி நின்றது (Cheran

3. யாழ்ப்பாணத்திலிருந்து மலாயவுக்குப் புலம்பெயர்ந்து தொழில்புரிந்த மற்றும் குடியேறிய யாழ்ப்பாணத் தமிழர் ஆங்கிலத்தில் "Malayan Jaffnese" என அழைக்கப்பட்டனர் (பார்க்கவும் சத்தியசீலன் 2006). இவர்கள் "Malayan Ceylonese" எனவும் அழைக்கப்பட்டனர். மலேசிய அரசாங்கத்திடமிருந்து காலப்போக்கில் ஓய்வூதியம் பெற்ற யாழ்ப்பாணத் தமிழர்கள் "Malayan Pensioners" என அழைக்கப்பட்டனர்.

2001:11)." மலாய யாழ்ப்பாணத்தவர் தாய்நாட்டுக்கு அனுப்பிய பணம் யாழ்ப்பாணத்தின் குடும்ப பொருளாதாரம், கல்வி மற்றும் விவசாய அபிவிருத்தியில் முக்கிய தாக்கத்தினைச் செலுத்தி நின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களால் அனுப்பப்படும் பணம் 1930களிலிருந்து அதிகரித்துச் சென்றதை சில குறிப்புகள் சுட்டிக்காட்டுகினறன.

> கிட்டத்தட்ட 1400 மலாயன் ஓய்வூதியம் எடுப்பவர்களும், 800 விதவை ஓய்வூதியம் பெறுபவர்களும், ஏனைய 800 பேரும் திடமான பணவருவாய்ச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளும் இலங்கையிலுள்ள மலாயன் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கையாகும். 1929இல் மலாயன் இலங்கையர் அமைப்பு (Malayan Celonese Association) உருவானதிலிருந்து இன்றுவரை (1961), பெற்றுக்கொள்ளப்பட்ட ஓய்வூதியப் பணத்தின் பெறுமதி 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். தற்பொழுது, 5 மில்லியனுக்கும் மேலான வருட ஓய்வூதிய வருமானமுள்ளது. இது யாழ்ப்பாணத்தின் புகையிலை பயிர்ச்செய்கை மூலம் பெறப்படும் வருமானத்திலும் இரண்டரை மடங்கு அதிகமாகும் (M.C.A Silver Jubilee Number 1965-1966: 4).

மலாயன் யாழ்ப்பாணக்குடிகளால் அனுப்பப்பட்ட பணம் பெரும்பாலும் சலுகையளிக்கப்பட்ட சாதிக் குழுக்களிடத்தே பொருளாதார, கல்விரீதியில் மட்டும் மேல்நோக்கி அசைவதற்கு துணைபோகவில்லை. இப்பணவருவாய் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் நிலச் சந்தை, விவசாய அபிவிருத்தி, பாடசாலை மற்றும் கோயில்களின் உட்கட்டமைப்பு விருத்திகள் எனப் பலவிடயங்களிலும் கூட முக்கிய மாற்றங்களை ஏற்படுத்திநின்றது. 1911இல் வெளிவந்த இலங்கைச் சனத்தொகைக் கணக்கீட்டு அறிக்கையை (1911:67) மேற்கோள்காட்டி இம்மாற்றத்தினை ஆவணப்படுத்துகின்றார் சத்தியசீலன்.

> கடந்த தசாப்தங்களாக யாழ்ப்பாண நிலத்தின் பெறுமதி இரண்டு மடங்காகியுள்ளது. இவ்விடயமும், மக்களிடையே ஏற்பட்ட ஏனைய பொதுவான செல்வங்களும், உள்ளூரில் உருவாகிய கைத்தொழில்கள், வியாபாரம் போன்றவற்றால் ஏற்பட்ட வளர்ச்சியல்ல. மாறாக, இலங்கையின் வேறு பிரதேசங்கள், இந்தியா, பர்மா, குறிப்பாக மலாய சிங்கப்பூர் முதலிய பகுதிகளை உள்ளடக்கிய தொடுவாய் குடியேற்றங்கள் (Straits settlements) ஐக்கிய மலாய அரசுகளின் (Federated Malay States) வேறுபட்ட பணியில் தொழில் புரிந்த அதிக எண்ணிக்கையான யாழ்ப்பாணத்து புதல்வர்களால் அனுப்பப்பட்ட பணத்தினாலேயே சாத்தியப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியிலும், ஆங்கிலப் பாடசாலைகளிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது

புதல்வர்கள் கல்வி கற்றனர். அவர்கள் கல்விகற்று வெளியேறியதும், ஆங்கிலக் கல்வி கற்றுத் தேர்ந்த அதிக எண்ணிக்கையானோர் இந்நாடுகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொண்டனர். அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான விவசாயிகள், வறிய வகுப்பினைச் சேர்ந்தோர் மலாய, சிங்கப்பூர் முதலிய பகுதிகளை உள்ளடக்கிய தொடுவாய் குடியேற்றங்கள் மற்றும் ஐக்கிய மலாய அரசியல் சமுதாயங்களுக்கும் குடிபெயர்ந்து சென்றனர். இவர்கள் பணவருவாயினை ஈட்டிக்கொண்டு போதியளவு செல்வத்துடன் தாய்நாடு திரும்பினர். யாழ். மாவட்டத்தின் ஒரு கிராமமேனும் வெளியூரில் தொழில் புரிந்த உள்ளூர்வாசிகளால் நன்மையடையவில்லை என்று கூறமுடியாது. யாழ்ப்பாணத்தின் புதல்வர்களால் பல இலட்ச ரூபாய்கள் வருடாவருடம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. இந்நாட்டின் வளர்ச்சியடைந்த செல்வச் செழிப்பினையே இவ்விடயம் சுட்டி நிற்கின்றது. (சத்தியசீலன் 2006: 223 – 224)

மலாயன் யாழ்ப்பாணத்தவரால் அனுப்பப்பட்ட பணம், யாழ்ப்பாணத்தில் வீடுகள் கட்டுதல், விவசாயம் செய்வதற்கு நிலங்கள் வாங்குதல், புதிய சிறு வியாபாரங்களுக்கு முதலிடல், பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வசதியைப் பெற்றுக்கொடுத்தல், பிள்ளைகளுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு நன்கு கல்விகற்ற துணையினை சீதனம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்களினூடாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தப் பயன்படுத்தப்பட்டது. உண்மையில், சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுவினர் வெளியூர்களுக்கு புலம்பெயரும் எண்ணிக்கை மிகக் குறைவாகவும் அத்தகையதொரு குடிப்பெயர்வில் அக்கறையற்றும் இருந்தனர். எனினும் அம்பட்டர், வண்ணார், பொற்கொல்லர் போன்ற சாதிகளைச் சேர்ந்த மக்கள் மிகச் சிறிய எண்ணிக்கையில் மலேசியாவுக்கு வேலை வாய்ப்புக்காக புலம்பெயர்ந்து சென்றமைக்கான சாட்சியங்களும் உண்டு (மலேசியாவில் சலூன் வேலை செய்து பின்னர் யாழ்ப்பாணம் திரும்பிய வேலாயுதம் என்பவருடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல், 2008). இவர்களது சாதித் தொழில்கள் திறன் அடிப்படையில் அமைந்த தொழில்களாக இருந்தமையால், இச்சாதிக் குழுவிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற மூத்த பரம்பரையினர் அதிகமாக தமது சாதித் தொழிலையே மலாயாவிலும் மேற்கொண்டனர். இவ்வாறு சென்றவர்களும் ஏனைய சலுகை யளிக்கப்பட்ட சாதிகள் போன்று பொருளாதாரரீதியில் வசதி படைத்தவர்களாக யாழ்ப்பாணத்தில் வாழ முடிந்தது. இருப்பினும், புலம்பெயர்ந்து பணம் சம்பாதிக்கும் சலுகை அளிக்கப்பட்ட சாதியினர் யாழ்ப்பாணத்தின் சமூக, அரசியல், கல்வி போன்ற துறைகளில் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கினைப்

போல், புலம்பெயர்ந்து பணம்சம்பாதிக்கும் சலுகைகுறைக்கப் பட்ட சாதியினரால் ஏற்படுத்த முடியாது போனது.

மேற்கத்தேய நாடுகளை நோக்கி யாழ்ப்பாணத் தமிழர்களிடத்தே ஏற்பட்ட இடப்பெயர்வினை வேறுபட்ட கால சூழ்நிலையில் இடம்பெற்ற சமூக, அரசியல், பொருளாதார காரணிகளின் அடிப்படையில் புரிந்துகொள்ள முடியுமென வாதிட முடியும் (மேலதிக தகவல்களுக்கு பார்க்க McDowell 1996). இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தொடர்ச்சியாக ஏற்பட்ட இனத்துவ முரண்நிலைகளான தமிழ் அடையாளங்களுக்கு எதிராக சிங்கள ஆதிக்க அரசினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் சட்டங்கள், தமிழ் சிறுபான்மைச் சமூகத்திற்கு எதிரான வன்முறைகள், பின்னர் தமிழ் அரசியல் கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கை, தமிழீழத்தினை பெற்றுக்கொள்ள முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம், இந்திய அமைதி காக்கும் இராணுவத்தின் (IPKF) வருகை, தமிழ் ஆயுதக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கருத்தியல் முரண்பாடு மற்றும் வலுப்போட்டி முதலிய பல்வேறு விடயங்கள் மேற்கத்தேய நாடுகளை நோக்கி மக்கள் புலம்பெயர்வதற்கும் அங்கு அரசியல் தஞ்சம் கோருவதற்கும் அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. 1983இல் ஏற்பட்ட தமிழருக்கு எதிரான இனக்கலவரம் மற்றும் உள்நாட்டு யுத்தத்தின் தீவிரம் முதலிய வரலாற்று நிகழ்வுகளைத் தொடர்ந்து இவ்வாறு மேற்கத்தேய நாடுகளுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரும் மக்களின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்தது. எண்பதுகளில் சர்வதேசரீதியில், குறிப்பாக மேற்கத்தேய நாடுகளில் அகதிகள், அரசியல் தஞ்சம் கோருபவர்கள் தொடர்பாக ஏற்பட்ட கொள்கை மாற்றங்கள் இத்தகைய இடப்பெயர்வினை இலகுவாக்கியது (Cheran, 2011; McDowell, 1996; Sithamparapillai, 1989). 2010ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களது எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கும் அதிகமாகவுள்ளது என கணிப்பிடப்பட்டுள்ளது (ICG. 2010:2).

83 இனக்கலவரத்திற்கு முன்னர் இடம்பெற்ற மரபுரீதியான வெளிநாட்டுப் புலப்பெயர்வுகள் பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர் போன்ற தொழில்களைச் சார்ந்தவர்களாலேயே பெரிதும் அனுபவிக்கப்பட்டது. இந்நிலைமை கடந்த சில தசாப்தங்களாக பெரியளவில் அதிகரித்ததோடு, இவ்வெளியூர்ப் புலப்பெயர்வு புதியதொரு சமூகப் போக்கினையும், மரபுரீதியாகப் புலம்பெயர்ந்து வரும் நபர்களின் வகைப்பாட்டில் பெரியதொரு திருப்பத்தினையும் ஏற்படுத்திநிற்கின்றது. தற்கால வெளியூர் நோக்கிய புலப்பெயர்வு நீண்டகால யுத்தத்தினாலும்,

வன்முறையினாலும் உருவாக்கப்பட்ட பாதுகாப்பின்மை மற்றும் பொருளாதார இறுக்கத்திலிருந்து தப்பவிரும்பும் சலுகை மறுக்கப்பட்ட சாதிக்குழுக்களைச் சேர்ந்த கணிசமான எண்ணிக்கையான இளைஞர்களிடையே பெரிதும் நடை முறையில் வருகின்றது. சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுக்கள் சட்டரீதியாகவும் சட்டரீதியற்ற முறைகளிலும் வெளிநாடுகளில் புகலிடம், வேலை தேடி இலங்கையை விட்டு பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆட்பட்டு வெளியேறினர். ஆரம்பகாலங்களில் தமது சொத்துக்களை விற்றும், நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கடனாகப் பணம்பெற்றும் வெளி நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். இம்முயற்சிக்குப் பெரிதும் துணைபோனவர்கள் உள்ளூரிலிருந்த சட்டரீதியற்ற முகவர்களாவர். தற்பொழுதும் யாழ்ப்பாணத்து மக்களிடையே வெளிநாடு செல்வதற்காக சொத்துக்களை விற்றல், கடனாகப் பணம்பெறுதல், சட்டரீதியற்ற முகவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல் என்பன இடம்பெற்றே வருகின்றன.

உண்மையில், யாழ்ப்பாணத்தில் வாழும் அதிகமான இளைஞர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிவதன் மூலமே தமது குடும்பத்தை பொருளாதாரரீதியில் முன்னேற்ற முடியும் என நம்புகின்றனர். மேற்கத்தேய நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்வதென்பது எந்த நாட்டுக்கு ஒருவரது அனுமதி கோரப்படுகின்றதோ அதற்கேற்றாற் போல் உறவினர்கள், நண்பர்கள், சட்டரீதியற்ற முகவர்கள் என ஒரு நீண்ட தொடர்பாடல் வலைப்பின்னலையும் அதிக பணத்தினையும் வேண்டிநிற்கின்றது (Khosravi, 2011). மேற்கத்தேய நாடு நோக்கிய இடப்பெயர்வில் ஏற்படும் பணப் பரிமாற்றத்தினை அழுத்திக் கூறும் முகமாக நிக்கொலஸ் வான் கியர் (2002) இலங்கைத் தமிழர்களின் அரசியல் புகலிடந்தேடிய புலப்பெயர்வினை மத்திய தர வர்க்கத்தின் உத்தியென (Middle Class Strategy) விபரிக்கின்றார். இருப்பினும், 1980களில் இருந்து மேற்கத்தேய நாடுகளுக்கு அதிக எண்ணிக்கையில் "கீழ்" வகுப்பினரும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர் (McDowell, 1996). எனவே, மேற்கத்தேய நாடுகள் நோக்கிய அரசியல் புகலிடம் தேடிய தமிழர்களின் புலப்பெயர்வை நெருக்கமான உறவினர்கள், நண்பர்களுடன் கொண்டிருந்த சமூகப் பிணைப்பு, சட்டரீதியற்ற முகவர்களிடம் ஏற்படுத்திய பயண ஒழுங்கு பற்றிய தொடர்பாடல் மற்றும் பொருளாதார மூலதனம் ஆகியன இணைந்து முன்னெடுத்தன எனலாம். பல சந்தர்ப்பங்களில், இடம்பெயரும் நபர் தனது குடும்பம், உறவினர், நண்பர்களிடம் வைத்திருந்த நாடுகடந்த வலைப்பின்னல் ஒரு வகையான சமூக

மூலதனமாக (Social Capital) இயங்கியதுடன், காலவோட்டத்தில் இச்சமூக மூலதனம் மேற்கத்தேய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்வதற்கான பொருளாதார மூலதனத்தினைப் (Financial Capital) பெற்றுக்கொள்வதற்குப் பெரிதும் துணை போனதையும் அவதானிக்க முடிகின்றது (Boyd, 1989; Gurak and Caces, 1992).

ஆய்வு முறைகள்

இக்கற்கையை மேற்கொள்வதற்கு அளவு, பண்புசார் தரவு சேகரிக்கும் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன. வினாக்கொத்து, இலக்கிய மீளாய்வு, விரிவான நேர்காணல், உற்றுநோக்கல் முதலிய ஆய்வு முறைகள் இவற்றுள் அடங்கும். இவ்வினவரைவியல் ஆய்வு மல்லாகக் கிராமத்தின் தெரிவுசெய்யப்பட்ட சலுகையளிக்கப்பட்ட மற்றும் சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களிடத்தே மேற்கொள்ளப்பட்டது. விரிவான நேர்காணல் நான்கு வேறுபட்ட சாதிக் குழுக்களைச் சேர்ந்த வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டுள்ள குடும்பங்களிடையே மேற்கொள்ளப்பட்டது. இவ்விடயக் கற்கை வெளிநாட்டவரிடமிருந்து வரும் பணவருவாயால் உள்ளூரில் சமூக பொருளாதார அந்தஸ்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளைப் பகுப்பாய்வு செய்கின்றது. கிராமத் தலைவர்கள் (விதானை), ஆசிரியர்கள், கோயில் பூசாரிகள், கோயில் உரிமையாளர்கள், கோயில் நிர்வாகிகள், பொது நபர்கள் எனப் பலரும் வெளிநாட்டுத் தொடர்புகளால் மல்லாகக் கிராமத்தில் ஏற்பட்டுவரும் சமூக, பொருளாதார, மத அடையாள மாற்றங்களை அறிவதற்கான இந்த ஆய்வின் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும் தகவல்களை அளவு மதிப்பீட்டுடன் பகுப்பாய்வு செய்வதற்கு 217 வினாக்கொத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. மல்லாகத்திலுள்ள அனைத்துச் சாதிக் குழுக்களிடத்தேயும் சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையில் இவ்வினாக் கொத்துக்கள் பங்கிடப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. மல்லாகக் கிராமவாசிகளும் "உயர் பாதுகாப்பு வலையத்திலிருந்து"[4] இடம்பெயர்ந்து தற்பொழுது மல்லாகத்தில் வசிக்கும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களும், சாதி மற்றும் புலப்பெயர்வு தொடர்பான புள்ளிவிபர தரவுகளைப் பெற்றுக்கொள்ளும்

4. இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள, யாழ்ப்பாணத்தின் வடக்கு நோக்கி காணப்படும் நீண்ட கரையோரத்தினை அண்மித்த பிரதேசங்கள் "உயர் பாதுகாப்பு வலயம்" என்று அறிவிக்கப்பட்டுள்ளன. அப்பிரதேசங்களில் வாழ்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது சொத்துக்களை அனுபவிக்க முடியாது உள்ளூர் அகதி முகாங்களிலும், நண்பர்கள், உறவினர்களுடனும் யாழ்ப்பாணத்தில் மூன்று தசாப்தங்களாக வாழ்கின்றனர். சிலர் கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

நோக்கத்திற்காகக் கணக்கிடப்பட்டனர்.

1830இல் "இராஜகாரியத்தின்"[5] நீக்கத்தினைத் தொடர்ந்து இலங்கையில் அலுவலக நோக்கத்திற்கோ அல்லது சனத் தொகைக் கணக்கெடுப்பிற்கோ சாதி அடையாளம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. எனவே சாதி அடிப்படையிலான சனத்தொகை புள்ளிவிபரத் தரவுகள் நம்பகத் தன்மை வாய்ந்ததென்றோ, மிகச்சரியானதென்றோ கூறிவிடமுடியாது. 1871இல் இடம்பெற்ற முதலாவது சனத்தொகைக் கணக்கெடுப்பில் இனம் மற்றும் தேசியத்தின் அடிப்படையில் சனத்தொகை வகைப்படுத்தப்பட்டது. ஒருவரின் சாதி, சனத்தொகைப் புள்ளி விபரக் கணக்கீட்டில் பயன்படுத்தப்படவில்லை (Silva *et al*, 2009). இலங்கையின் ஏதேனும் சட்டரீதியிலான அல்லது அலுவலகரீதியிலான ஆவணப்படுத்தலில் ஒரு நபரின் சாதிபற்றிய தகவல் பதிவுக்குள்ளாக்கப்படுவதில்லை. அதனால், இருப் பிலுள்ள சாதி அடிப்படையிலான சனத்தொகை புள்ளிவிபரத் தரவுகள் எவையும் நம்பகத்தன்மையானதோ அல்லது முற்றிலும் சரியானதோ அல்ல என்ற வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இருப்பினும், மல்லாகக் கிராமத்தின் சாதியடிப்படையிலான முதற்தர சனத்தொகைத் தரவுகள் கிராமத் தலைவர்கள், உள்ளூர் வாசிகள், ஆய்வு உதவியாளர்கள் ஊடாக சேகரிக்கப்பட்டன.

தரவுசேகரிக்கும் காலங்களில், கற்கை மேற்கொள்ளப்பட்ட மல்லாகக் கிராமத்திலிருந்து வேறுபட்ட சாதிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஆய்வு உதவியாட்களாகத் தெரிவுசெய்யப் பட்டனர். பின்னர் அவர்களுக்கு எவ்வாறு தரவு சேகரிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. குறிப்பாக ஒவ்வொரு ஆய்வு உதவியாளர்களிடமும் தமது சொந்தக்காரர்களிடமிருந்தும் (ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள்), தமக்குத் தெரிந்த சாதிக்குழுக்களிடமிருந்தும் எழுமாற்று மாதிரி முறையினைப் பயன்படுத்தி தரவுசேகரித்தனர். தரவு சேகரிப் பதற்குப் பயன்படுத்தப்பட்ட இம்முறை தரவு தருபவரிடம் அவர்களுடைய சாதிப் பின்னணியை நேரடியாகக் கேட்டு அறியாமல், வேறுபட்ட சாதிப் பின்னணியின் அடிப்படையில் ஒவ்வொரு சாதிக் குழுக்களிடமும் இருந்து தரவுகளைச் சேகரிப்

5. இராஜகாரிய என்ற சிங்களச் சொல்லின் நேரடிப்பொருள் அரசனுக்குச் சேவை செய்வதாகும். இவ்விடயம் குறிப்பாக கண்டியச் சாதி முறையில் காணப்பட்ட தொன்றாகும். அரச குடும்பங்களுக்கு சேவை செய்வதற்கு அப்பால், அரசினால் பொது வேலைகளுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கோவிய வேலைகளையும் அதேபோன்று பௌத்த கோயில்கள், இந்துக் கோயில்கள் மற்றும் ஆட்சிசெய்யும் நிலவுடமைக் குடும்பங்களுக்குச் செய்யும் வழக்கத்திலுள்ள சேவைகளையும் உள்ளடக்கும்.

பதற்கு மிகவும் துணைபோயிற்று. பிரதான ஆய்வாளராகிய நான் பேராதனைப் பல்கலைக்கழகம் போகும்வரை மல்லாகத்தில் தொடர்ச்சியாக வாழ்ந்தமையால் இத்தகையதொரு ஆய்வு முறையினைப் பயன்படுத்துவதில் அதிக சிரமத்தினை எதிர் நோக்கவில்லை. ஒருவகையில் உள்ளூர்வாசியாகவும் (Insider), இன்னொருவகையில் ஆய்வு நுணுக்கங்களைக் கற்று வெளி யிலிருந்து வந்த ஆய்வாளராகவும் (Outsider) ஒன்றுடனொன்று தொடர்புபட்ட அனுபவங்களைக் கொண்டு இவ்வாய்வினை மேற்கொள்ள முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் சாதி

யாழ்ப்பாணத்துச் சாதிகள் பற்றியும் அவற்றின் இயங்குநிலை பற்றியும் பொதுவானதொரு விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக மிகச்சுருக்கமானதொரு அறிமுகத்தினைக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என உணர்கின்றேன். இருபது பிரதான சாதிக் குழுக்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பதாக அறியப்பட்டது. அவை வெள்ளாளர் (நில உரிமையாளர், விவசாயிகள்), பிராமணர் (கோயில் பூசகர்), சைவக் குருக்கள் (பிராமணர் அல்லாத கோயில்களில் பூசகர்), பண்டாரி (பூமாலை கட்டுபவர், கோயில் உதவியாளர்), சிற்பாச்சாரி (கோயில் சிற்பாச்சாரி), கோவியர் (வீட்டு வேலைக்காரர்), தட்டார் (பொற்கொல்லர்), கரையார் (ஆழ்கடலில் மீனவர்), தச்சர் (மரவேலை செய்பவர்), கொல்லர் (இரும்பு வேலை செய்பவர்), நட்டுவர் (மங்கள நிகழ்வில் வாத்தியம் வாசிப்பவர்), கைக்குழார் (துணி நெசவு செய்பவர்), சாண்டார் (நல்லெண்ணெய் உற்பத்தியாளர்), குயவர் (மட்பாண்டம் செய்பவர்), முக்குவர் (ஆழமற்ற கடல் பிரதேசத்து மீனவர்), வண்ணார் (சலவைத் தொழிலாளர்), அம்பட்டர் (சிகை அலங்கரிப்பாளர்), நளவர் (கள்ளுச் சீவுபவர்), பள்ளர் (விவசாயக் கூலிகள், கள்ளுச் சீவுபவர்), பறையர் (பறை மேளம் அடிப்பவர்) முதலியனவாகும் (David, 1974a, 1974b; Pfaffenberger, 1982). இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் "உயர்" சாதிக்காரரான வெள்ளாளர் யாழ்ப் பாணச் சனத்தொகையில் 50% ஆக இருந்தனர் எனக் கணிப்பிடப் பட்டுள்ளது. ஏனைய சாதிகளான கரையார், கோவியர், நளவர் முறையே 10%, 7%, 9% எனக் கணிக்கப்பட்டனர். இங்கு குறிப்பிடப் பட்ட ஏனைய சாதிக் குழுக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்த சனத்தொகையில் 3% தினைக் கொண்டிருந்தனர் (Banks, 1960; David, 1974a, 1974b; Silva *et al.*, 2009).

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி ஒரு அடிப்படை சமூக நிறுவனமாகவும், ஒழுங்கமைக்கும் தத்துவமாகவும் இருந்தது,

இருந்து வருகின்றது. சமயச் சடங்குகளின் "தூய்மை" என்ற இந்து மத கருத்தியலில் இருந்து உருவாகிய படிநிலை ஒழுங்கு முறையின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்து சாதி முறைமையினை அடையாளம் காணமுடிகின்றது. எனினும் இந்திய சாதி முறைமையின் சமூகப் படிநிலையில் பிராமணர் "உயர்" சாதியினராகக் கருதப்பட்டது போல் யாழ்ப்பாணத்தில் கருதப்படவில்லை. மாறாக விவசாய நில உரிமைகளை அதிகளவில் கொண்டுள்ள வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தில் "உயர்" சாதி எனக் கருதப்பட்டனர். இவர்கள் மரபுரீதியாக யாழ்ப்பாணத்து விவசாயப் பொருளாதாரம், இந்து மதச் சடங்குகள், அரசியல், கல்வி முதலிய விடயங்களில் மேலாதிக்க வலுவினைக் கொண்டிருந்தனர். இவ்விடயங்கள் ஏனைய குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதிக் குழுவினரை சமூகத்தின் பொதுநீரோட்டத்திலிருந்து விலக்கின, பாகுபாட்டிற்கு உட்படுத்தின. (வெகுஜனன் மற்றும் இராவணா, 2007; இரகுநாதன், 2002, Silva *et al*, 2009) எவ்வாறாயினும், சாதி, சமூக அந்தஸ்து முதலிய யாழ்ப்பாணத்து சமூகத்தின் உட்கட்டமைப்பு கோட்பாடுரீதியாகவும், கட்டமைப்புரீதியாகவும் நிலைத்து நிற்கின்ற அதேவேளை, அவை காலநீட்சியில் பல்வேறு சமூக, பொருளாதார, கல்வி, வரலாற்றுக் காரணிகளால் சமூகரீதியாக பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. (Thiruchandran, 1997). உண்மையில், சாதி என்ற யாழ்ப்பாணத்து சமூக நிறுவனம் காலமாற்றத்திற்கேற்ப பலவீனப்பட்டும், வன்மைபெற்றும், (மீள்)கட்டமைக்கப்பட்டும் தொடர்ந்து நிலைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வரலாற்றுரீதியாக, யாழ்ப்பாணச் சமூகத்தின் நுண்ணிய பொருளாதாரம் சாதியை அடிப்படையாகக் கொண்டு கட்டமைப்புரீதியாக வரையறுக்கப்பட்ட வேலைப் பிரிப்பிலேயே பெரிதும் தொடர்புபட்டு இருந்தது. பண்ணையமைப்பைச் சுற்றி உருவாகிய சமூக இயங்குநிலை, விவசாய சந்தை, குடிமைசார்ந்த தொழில்கள் சாதியுடன் தொடர்புபட்ட தொழில்களாகவே வளர்ச்சியடைந்தன. மேலும் முன்னைய மிஷனரிக் கல்வி நாடுகடந்து மேற்கொள்ளும் வருமான நடவடிக்கையும் அதனோடு தொடர்புபட்ட வேலைச் சந்தையினையும் சாத்தியப் படுத்தியிருந்தது. பிரித்தானிய ஆட்சிக் காலங்களில் யாழ்ப்பாணத் தமிழர்களில் பெரும் தொகையானோர் மலேசியா, பர்மா போன்ற நாடுகளுக்குச் சென்றமைக்கு இத்தகைய கல்வி அடைவுகளே பிரதான காரணமாக இருந்தது. யாழ்ப்பாணச் சமூகத்தின் பணவருவாயின் பெரியதொரு பங்கினை இவ்வாறு புலம்பெயர்ந்து பணம் சம்பாதிக்கும் யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்தனர் என்பதை முன்னர் பார்த்தோம். தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தின் பொருளாதார அபிவிருத்தியில்

மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களினாலும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைசெய்யும் தொழிலாளர் களினாலும் அனுப்பப்படும் பணம் குறிப்பிடத்தக்களவு தாக்கத் தினைச் செலுத்திநிற்கின்றது. சாதி மற்றும் வெளிநாட்டுப் புலப்பெயர்வுடன் தொடர்புபட்ட இத்தகைய தொழில் வடிவங்களைத் தவிர, குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான உள்ளூர் மக்கள் புடவைத் தொழில், பலசரக்கு வியாபாரம், அரச தொழில்கள் போன்ற இன்னோரன்ன தொழில்களில் ஈடுபடுவதன் மூலமாகவும் தமது பொருளாதாரச் செயற் பாட்டினை முன்னெடுக்கின்றனர். நுண்ணிய பொருளாதாரம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அபிவிருத்திகளில் ஏற்படும் மாற்றங்கள் காலத்துக்குக் காலம் சாதி, வேறுபட்ட சமயக் குழுக்கள், பால்நிலை முதலியவற்றின் அந்தஸ்திலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இதற்கிடையில், யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி, வகுப்பு, இனத்துவம் முதலிய அடையாளங்களின் இயங்குதிலைக்கும் நெகிழ்ச்சித் தன்மைக்கும் சாதிக்கு எதிரான போராட்டங்கள் (குறிப்பாக ஐம்பது மற்றும் அறுபதுகளில்), தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், தமிழ்த் தேசியத்தின் உருவாக்கம், விடுதலைப் போராட்டங்கள் முதலிய வரலாற்று நிகழ்வுகள் ஒன்றுடன் ஒன்று சார்ந்து இடைவினைவுகள் புரிந்தும், தனித்துவமாகவும் பெரியதொரு வகிபங்கினை ஆற்றியுள்ளமை கவனிக்கத்தக்கது (Silva *et al*, 2009).

மல்லாகம்: சாதி, சனத்தொகை மற்றும் பௌதீகக் கட்டமைப்பு

மல்லாகம், யாழ். நகரிலிருந்து வடக்குத்திசையில் பத்தரை கிலோமீட்டர் தொலைவிலும் காங்கேசந்துறையிலிருந்து தெற்கு நோக்கி அண்ணளவாக நாலரைக் கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள ஒரு கிராமமாகும். வலிகாமம் வடக்குத் தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவின் நிர்வாகத்தின் கீழ் இக்கிராமம் உள்ளது. இக்கிராமம் மல்லாகம் தெற்கு (J/212), மல்லாகம் மத்தி (J/213), மல்லாகம் வடக்கு (J/214) ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் ஏனைய கிராமங்கள் போன்றே இக்கிராமத்திலும் சனத்தொகைக் குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள், குளங்கள், பாடசாலைகள், கடைகள், பொது மற்றும் சாதியடிப்படையிலான கோயில்கள், தேவாலயங்கள், பொது சமூக அமைப்புக்கள், நூல் நிலையங்கள், இலங்கை இராணுவத்தின் பாசறைகள் என்பன அமைந்திருக் கின்றன. கிராமவாசிகளையும், "உயர் பாதுகாப்பு வலையங்களி லிருந்து" இடம்பெயர்ந்து மல்லாகத்தில் அகதி முகாம்கள்,

உறவினர்கள் மற்றும் வாடகை வீடுகளில் வசிக்கும் இடம் பெயர்ந்த மக்களையும் உள்ளடக்கி இக்கிராமத்தின் சனத்தொகை காணப்படுகின்றது. 2007ஆம் ஆண்டில், உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களுட்பட மல்லாகக் கிராமத்தின் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 1532 ஆகவும், மொத்தச் சனத் தொகை 8189 ஆகவும் இருந்தது. தும்புத் தொழிற்சாலை முகாம், நீதிவான் முகாம், ஊறணி முகாம், கோணப்புலம் முகாம் ஆகிய நான்கு உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் வசிக்கும் முகாம்களை இக்கிராமம் உள்ளடக்கியுள்ளது. "உயர் பாதுகாப்பு வலையங் களிலுள்ள" வேறுபட்ட இடங்களிலிருந்து வந்த குறிப்பிடத்தக் களவு எண்ணிக்கையிலான மக்கள் இம்முகாம்களில் வாழ்கின்ற னர் (DS/AGA பிரிவு: வலி வடக்கு, தெல்லிப்பளை, 2007).

மல்லாகத்தில் மொத்தம் 11 சாதிக் குழுக்கள் அடையாளம் காணப்பட்டன. அவை அம்பட்டர், கோவியர், நளவர், நட்டுவர், பள்ளர், பண்டாரிகள், பறையர், பிராமணர், தச்சர், வண்ணார், வெள்ளாளர் என்பனவாகும் (பார்க்க: அட்டவணை 1).

டேவிட் (1974a, 1974b), பாங்ஸ் (1960), அருமைநாயகம் (1979) மற்றும் சிவத்தம்பி (2002) முதலிய புலமையாளர்கள் யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி முறைமையினைக் கற்றதோடு வேறுபட்ட வழிகளில் யாழ்ப்பாணச் சாதிகளை வகைப்படுத்தியுள்ளனர் (பார்க்கவும் தங்கேஸ் 2007, 2009). மல்லாகத்தில் 31%மான சனத் தொகையினை வெள்ளாள சாதியினர் கொண்டுள்ளனர். அம்பட்டர், நளவர், பள்ளர், பறையர், வண்ணார் ஆகிய சாதிகளின் மொத்த சனத்தொகை 58.35% ஆகும். நளவரும் (26.6%) பள்ளரும் (28.5%) சலுகைமறுக்கப்பட்ட குழுக்களிலும் மல்லாகத்தின் மொத்த சனத்தொகையிலும் பெரிய எண்ணிக்கை யினைக் கொண்டவராகவுள்ளனர். சாதியடிப்படையிலான சனத்தொகையைத் தனித்தனியே பார்ப்போமாயின், மொத்தச் சனத்தொகையில் மல்லாகத்தில் வெள்ளாள சாதியினர் எண்ணிக்கையில் (31%) அதிகமாக உள்ளனர். முன்னர் குறிப்பிட்டது போல், 1950களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் வெள்ளாளர் 50% மாக இருந்தனர் என்பது அறியப்பட்டதொரு விடயமாகும் (Banks,1960: 67; David, 1982:47).

யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களிலும் காணப்படும் பொது மற்றும் சாதியடிப்படையிலான இந்துக் கோயில்களுக்கு அனைத்துச் சாதியைச் சேர்ந்த பக்தர்களும் சென்று வழிபடுவர். மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் அத்தகைய பொது இந்துக் கோயிலுக்கான ஒரு உதாரணமாகும். இவ்வாலயத்தின் பூசை

அட்டவணை – 1 : மல்லாகத்தில் சாதி, 2005

சாதிப் பெயர்கள்	சாதித் தொழில்கள்	சனத் தொகை (%)
1. வெள்ளாளர்	நில உரிமையாளர், கமக்காரர்	31.00
2. பள்ளர்*	விவசாயக் கூலிகள், கள் சீவுபவர்	28.50
3. நளவர்*	கள் சீவுபவர்	26.60
4. தச்சர்	தச்சு வேலை அல்லது மர வேலை செய்பவர்	5.3
5. கோவியர்	வீட்டு வேலைக்காரர்	4.00
6. வண்ணார்	ஆடைகள் சுத்தம் செய்பவர், குடிமைத்தொழில் செய்பவர், கோவில்கள், இறந்த வீடுகள் என்பவற்றுக்கு வெள்ளை கட்டுபவர்	2.00
7. பண்டாரிகள்	கோவில் உதவியாளர் (பூமாலை கட்டுதல்)	1.23
8. அம்பட்டர்	மயிர் வெட்டுபவர், குடிமைத்தொழில் செய்பவர்	1.00
9. பிராமணர்	கோயில் பூசகர்	0.26
10. பறையர்	நகரைச் சுத்திகரிப்பவர், இறந்த வீடுகளிலும், கோயில்களிலும் பறை மேளம் அடிப்பவர்	0.19
11. நட்டுவர்	கோயில்களிலும், வீடுகளின் மங்கள நிகழ்வுகளிலும் தவில், நாதஸ்வரம் முதலிய வாத்தியங்கள் இசைப்பவர்	0.19
	மொத்தம்	100.00

* மயிலிட்டி, ஊறணி, வசாவிளான், காங்கேசன்துறை, கட்டுவன் வேறும் பல கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது மல்லாகத்திலுள்ள நான்கு முகாம்களில் தங்கியுள்ளோர் நளவர் மற்றும் பள்ளர் ஆகிய சாதிக் குழுக்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்களும் இக்கணக்கெடுப்பில் உள்ளடக்கப்பட்டனர்.

மற்றும் விழாக்களில் அனைத்துச் சாதியைச் சேர்ந்த மக்களும் வெளிப்படையாகவே பங்குபற்றுவார்கள்.

இருப்பினும், கோயில் நிர்வாகம் சலுகையளிக்கப்பட்ட சாதிகளின் கட்டுப்பாட்டின் கீழே உள்ளது. மறுபக்கத்தில், குறிப்பிட்ட சாதிக்குழுக்களைச் சேர்ந்த மக்கள் மட்டுமே சாதியடிப்படையிலான கோயில்களுக்கு பொதுவாகச் செல்வதும் வழிபடுவதும் வழமை. இச்சாதியடிப்படையிலான கோயில்கள் குறிப்பிட்ட சாதிக் குழுவாலும் அல்லது அச்சாதியைச் சேர்ந்த குடும்பத்தாலுமே நிர்வகிக்கப்படுகின்றன. அத்துடன் இக்கோயில்கள் முழுக்கிராமத்தினது உடமையாக அல்லாது குறிப்பிட்ட சாதிக் குழுக்களின் அல்லது ஒரு குடும்பத்தின் உடமையாகவே கணிக்கப்படுகின்றன.

மல்லாகத்தில் வெள்ளாளர், தச்சர், வண்ணார், அம்பட்டர், நளவர், பள்ளர் முதலிய சாதிகளைச் சேர்ந்தோர் முறையே நீலியம்பனை பிள்ளையார் கோயில், காளிகா தேவி கோயில், பெரியதம்பிரான் கோயில், சாளம்பை அம்பாள் கோயில், ஞான வைரவர் கோயில், கோட்டைக்காடு மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி கோயில் ஆகியவற்றினை சொந்தமாகக் கொண்டுள்ளனர். ஒரு சாதிக் குழுவினர் ஒன்றுக்கு மேற்பட்ட சாதியடிப்படையிலான கோயில்களுக்கு உடமையாளராகவும் உள்ளனர். உதாரணமாக, மல்லாகத்தில் வெள்ளாளர் சாதியைச் சேர்ந்தோர் நீலியம்பனை பிள்ளையார் கோயில், வீரபத்திரர் கோயில் மற்றும் குளமங்கால் வைரவர் கோயில் ஆகிய மூன்று கோயில்களைச் சொந்தமாகக் கொண்டுள்ளனர். சாதியடிப் படையில் கோயில்களைச் சொந்தம் பேணும் மரபு யாழ்ப் பாணத்தின் கத்தோலிக்க மதத்தவரிடத்தேயும் அவதானிக்க முடிகின்றது. அற்புத மாதா தேவாலயம், குளமங்கால் புனித பிரான்ஸிஸ் சவேரியர் தேவாலயம் முறையே நளவர், பள்ளர் சாதியினரின் பரிபாலனத்தின் கீழ் இருக்கின்றன. குறித்த இந்துக் கோயில்கள் மற்றும் கத்தோலிக்கத் தேவாலயங்களின் நிர்வாகச் செலவுகளுக்காக பெருமளவு நிதி இக்கிராமங்களிலிருந்து வெளிநாடுகளில்ப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்து கிடைக்கின்றது. ஆலயங்களின் வளர்ச்சிக்காக அனுப்பப்படும் பணமாற்றீட்டுச் செயல்முறையிலும் சாதியின் வகிபங்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்தி நிற்கின்றது.

சாதி, உறவுமுறை, வகுப்பு மற்றும் இடப்பெயர்வு

யாழ்ப்பாணத் தமிழர்களின் புலப்பெயர்வினை வேறுபட்ட பல காரணிகள் தூண்டிநிற்கின்றன. தொழில், கல்வி, பாதுகாப்பு,

திருமணம் முதலிய பல்வேறு காரணங்களுக்காக உள்ளூர், சர்வதேச புலப்பெயர்வுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான புலப்பெயர்வுகளில் ஏதேனும் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முதன்மைக் காரணங்கள், அல்லது சில உடனடிக் காரணங்கள் அல்லது நீண்டகால அடிப்படையிலான காரணங்கள் காணப்படலாம். எனவே, புலப்பெயர்வுக்கான காரணங்களை ஒரு பரந்த பார்வைக்கு உட்படுத்தியே பரிசீலிக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், இவ்விடத்தில் எனது முக்கிய நோக்கம் புலப்பெயர்வு, சாதி, உறவுமுறை, சமூக வலைப்பின்னல், பணப்பரிமாற்றம் ஆகியவற்றுக்கிடையே காணப்படும் நெருக்கமானதும் மிகமுக்கியமானதுமான தொடர்புகளை புரிந்துகொள்வதும், வியாக்கியானம் கொடுப்பதுமாகவே உள்ளது. இக்கருப்பொருளை ஒரு பரந்த கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதற்கு பின்வரும் கேள்விகள் வழிகாட்டிகளாக அமையும் என நம்புகின்றேன். சாதி மற்றும் உறவுமுறைப்பிணைப்பு புலப்பெயர்வில் எவ்வளவு தூரம் முக்கியமானதாகவுள்ளது? சாதியும் உறவுமுறையும் புலப்பெயர்வுச் செயல்நிலையின் எந்த நிலைகளில் தொடர்புபடுகின்றன? சர்வதேச வலைப்பின்னல், பொருளாதார அபிவிருத்தி, மற்றும் கிராம மட்டத்திலான வழிபாட்டுத்தலங்கள் மற்றும் சடங்குகளின் வளர்ச்சியில் சாதி, உறவுமுறை போன்ற சமூக நிறுவனங்களின் வகிபாகம் எத்தகையது?

யுத்தத்தின் நேரடியான தாக்கத்தினாலும், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட உள்ளூர் இடப்பெயர்வுகள் சாதி, வகுப்பு, பால்நிலை என்ற பாகுபாடின்றி அனைவரையும் பொதுவாகவே பாதித்துள்ளது. ஆயினும், மக்கள் மீது ஏற்படும் யுத்தத்தின் நீண்டகாலத் தாக்கங்கள் அவர்களுக்குள்ள சமூக, பொருளாதார, அரசியல் பின்னணிகள் மற்றும் சமூக வலைப்பின்னல் என்பவற்றுக்கேற்ப வேறுபட்டனவாயிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள அதிகமான அகதிமுகாம்களில் வசிக்கும் உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்கள் பெரும்பாலும் சலுகைமறுக்கப்பட்ட சாதிப் பின்னணிகளைக் கொண்டவர்களாவர், நீண்டகால அடிப் படையில் உருவாகும் உள்ளூர் அகதிகள் முகாம்கள் வேறுபட்ட சாதிக் குழுக்களின் அடிப்படையில் குறிப்பாக சலுகைமறுக்கப் பட்ட சாதிக்குழுக்களின் பின்னணிகளைக் கொண்டு உருவாகும் போக்கினைக் காணமுடிகின்றது. வெள்ளாளரும், ஏனைய நடுத்தர சலுகையளிக்கப்பட்ட சாதியினரும் தமது சொந்த இடங்களை விட்டுப் புலம்பெயர்ந்த போதிலும், அவர்களில் பெரும்பாலானோர் தமது சாதிக் குழுக்கள், உறவினர்கள்,

நண்பர்களுடன் வைத்துள்ள வலைப் பின்னலையும் அவர்களிடையே காணப்பட்ட கல்வி, தொழில் மற்றும் சமூக மூலதனங்களையும் பயன்படுத்தி கொழும்பு முதலிய பிரதேசங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர் (Sidharthan, 2003). யாழ்ப்பாணத்தில் வசிக்கும் உள்ளூரில் இடம்பெயர்ந்த சலுகையளிக்கப்பட்ட சாதிக்காரர்களில் பெரும்பாலானோர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்கின்றனர். அத்துடன் இவர்கள் குறைந்த வசதிகளுடனும், மட்டுப்படுத்தப்பட்ட அந்தரங்கத்துடனும், குறைந்த வாழ்க்கைத் தரத்தினையும் கொண்ட அகதிகள் முகாம்களில் பெரும்பாலும் வாழாது, தனியாக வதிவிடங்களை அமைத்தும் குடியமர்ந்துள்ளனர் (Thanges, 2006; 2008).

பெரும்பாலான யாழ்ப்பாணத் தமிழர்களின் கொழும்பு போன்ற பிரதேசங்களை நோக்கி இடம்பெறும் உள்ளூர் இடப்பெயர்வு, மேற்கத்தேய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய சர்வதேசப் புலப்பெயர்வு முதலியவற்றுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புள்ளது. இவ்வலைப்பின்னல் சாதி, உறவுமுறை மற்றும் நட்புறவு முதலியவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட சமூக மூலதனத்தினாலேயே சாத்தியப்பட்டுள்ளது. கொழும்பில் நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் வசிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களில் பலர் வெளிநாட்டு உறவினர்களுடன் விஸ்தரிக்கப் பட்ட சமூக, பொருளாதார வலைப்பின்னலைக் கொண்டிருக் கின்றனர். வெளிநாடுகளில் யாழ்ப்பாணத் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நகரும் தமிழர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு வெளிநாட்டு உறவினர் களுடன் விஸ்தரிக்கப்பட்ட தொடர்பினைக் கொண்டுள்ள யாழ்ப்பாண மக்களில் பலர், தனியாகவோ அல்லது குடும்பமாகவோ காலக்கிரமத்தில் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லும் நோக்கத்திற்காக கொழும்பில் பல மாதங்களாகவும், வருடங்களாகவும் வசித்துவருகின்றனர். உதாரணமாக, 2007ஆம் ஆண்டில் மட்டும் மல்லாகக் கிராமத்தின் J/213 பிரிவிலுள்ள 734 குடும்பங்களில் 17 குடும்பங்கள் வெளிநாட்டிலுள்ள நெருங்கிய உறவினர்களுடன் வைத்திருந்த தொடர்புகளைக் கொண்டு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர் (தனிப்பட்ட நேர்காணல், கிராம சேவகர், பூபாலசிங்கம், 2007). இவ்வாறு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்குச் சென்றவர்களில் பலர் வெளிநாட்டு உறவினர்களால் அனுப்பப்

படும் பணத்தினைக் கொண்டே தமது சீவியத்தை நடத்து கின்றனர். இருப்பினும் உள்ளூரில் மூன்று தசாப்தங்களாக ஏற்பட்ட ஆயுத யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின் கொழும்பை நோக்கி யாழ்ப்பாணமக்கள் புலம்பெயர்ந்து சென்று, அங்கே வாழ்க்கை நடத்தும் போக்கு குறிப்பிடத்தக்களவில் குறைந்து வருகின்றமை கவனிக்கத்தக்கது. அட்டவணை–2 மல்லாகக் கிராமத்து மக்களின் உள்ளூர் மற்றும் சர்வதேச புலப்பெயர்வினை சாதியடிப்படையில் விபரிக்கின்றது.

வெள்ளாளரில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மக்கள் (31.8%) வெளிநாடுகளில் வசிக்கும் பொழுது, ஒப்பீட்டுரீதியில் அதே சாதியைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான மக்கள் (31.9%) இலங்கையின் வேறு பிரதேசங்களுக்கு, குறிப்பாக கொழும்பை அண்டிய பிரதேசங்களுக்கு புலம்பெயர்ந்து செல்வதை அட்டவணை 2லிருந்து அறியமுடிகின்றது. நளவர், பள்ளர் முதலிய சலுகை மறுக்கப்பட்ட சாதிகளிடத்தேயும் இதனை யொத்ததொரு புலப்பெயர்வு வடிவத்தினை இவ்வட்டவணை மூலம் அவதானிக்க முடிகின்றது. பள்ளர், நளவர் சாதிக் குழுவினரது சர்வதேசப் புலப்பெயர்வு முறையே 23.6%, 8.2% ஆகவிருக்கின்ற அதேவேளை, அவர்களது உள்ளூர் இடப்பெயர்வு முறையே 29.0%, 18.8% ஆகவிருக்கின்றது. அதாவது சர்வதேச நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்களில் 50%மான பெறுமானத் தினை மரபுரீதியாக ஒடுக்கப்பட்டுவந்த சாதிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் (பள்ளர், நளவர், வண்ணார், அம்பட்டர்) கொண்டுள்ளனர்.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் ஒருவரது புலம்பெயர்வுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்கலாம் என்பதால் புலம்பெயர்வுக்கான முதன்மையான காரணத்தை அறிந்து கொள்வது என்பது கடினமானது. இதனால் தகவல் திரட்டப் படும்போது கூறப்பட்ட காரணங்கள், வெளிப்படையான சில காரணங்கள் மற்றும் திரட்டப்பட்ட இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை என்பனவற்றின் அடிப்படையில் அட்டவணை—3இல் தொகுக்கப்பட்டுள்ளது. மல்லாகக் கிராமத்தில் தொழில் தேடி இடம்பெறும் உள்ளூர் மற்றும் சர்வதேச புலப்பெயர்வுகள் முறையே 43.1%, 60.6% ஆகவிருக்கின்றது.

புலப் பெயர்வுக்கான இரண்டாவது பிரதான காரணமாக திருமணமுள்ளது. திருமணத்திற்கான உள்ளூர் இடப்பெயர்வு 20.0% ஆக இருக்கின்ற அதேவேளை, திருமணத்திற்கான சர்வதேச புலப் பெயர்வு 30.3% ஆகவுள்ளது. திருமணத்திற்கான யாழ்ப்பாணத் தமிழர்களின் சர்வதேசப் புலப்பெயர்வு, வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் வசிக்கின்ற பெற்றோர், உறவினர்

மற்றும் திருமணத் தரகர்கள் மூலமாக ஒழுங்குசெய்யப்படும் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களிலேயே அதிகம் இடம் பெறுகின்றது.

வெளிநாடுகளிலும், யாழ்ப்பாணத்திலும் வசிக்கும் வேறுபட்ட சாதிப்பின்னணிகளைச் சேர்ந்தோர்களிடையே ஏற்பட்ட காதல் திருமணம் காரணமாகவும் யாழ்ப்பாணத் தமிழர்கள் சிலரின் சர்வதேச புலப்பெயர்வுகள் இடம்பெறுகின்றன[6].

இவ்வாறு திருமணம் முடித்து வெளிநாடுகளுக்குச் செல்வோர் நீண்டகால அடிப்படையிலும், குறுகியகால அடிப்படையிலும் கொழும்பு போன்ற பிரதேசங்களில் கடவுச்சீட்டு கிடைக்கும் வரை தங்கியிருப்பதனையும் அவதானிக்க முடியும். இதனால் இவர்களது புலப்பெயர்வு ஆரம்பத்தில் உள்ளூர் இடப் பெயர்வாகவும், காலக்கிரமத்தில் சர்வதேசப் புலப்பெயர்வாகவும் மாற்றமடைகின்றது. சில சந்தர்ப்பங்களில் உள்ளூரில் இடம் பெயர்ந்திருப்போர் திருமணத்திற்காக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வது கட்டாயத் தேவையாகவும் நடைமுறையில் இருக்கின்றது. இவ்வாறு திருமணம் செய்து வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக விஸாவினைப் பெற்றுக்கொள்ளும் தமிழர்கள் விஸாவினைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு அடையாளம் சார்ந்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இவ் விடயத்தில் தமிழர்களின் பாரம்பரிய திருமண நடைமுறைகள் பின்பற்றியமைக்கான ஆதாரங்கள் (சீதனம் கொடுத்தமைக்கான சான்று), வெளிநாட்டிலுள்ள மணமகன் அல்லது மணமகள் உள்ளூரிலுள்ள மணமகள் அல்லது மணமகன் ஆகியோருக் கிடையிலான கடிதப்பரிமாற்றங்கள், தொலைபேசி உரையாடல் களுக்கான ஆதாரங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை ஆவணப்படுத்துவது விஸாவினைப் பெற்றுக் கொள்ளத் தேவையானதொன்றாக இருக்கின்றது. திருமணத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு குடிவரவு அலுவலர்கள் கேட்கின்ற ஆதாரங்கள் தமிழர்களின் திருமணநடைமுறைகளைத் தீர்மானிப்பதில் முக்கியமானதொரு புறவயக் காரணியாக அண்மைக்காலத்தில் உருவாகியுள்ளது. (மேலதிகத் தகவல்களுக்கு பார்க்க Sidharthan, 2009).

இக்கற்கைக்கான தகவல்களைத் தருபவர்களில் அதிக

6. வேறுபட்ட சாதிப்பின்னணிகளைக் கொண்ட புலம்பெயர்ந்து வசிக்கும் ஒருவரும் தாய்நாட்டில் வசிக்கும் ஒருவருக்குமிடையே காதல் திருமணங்கள் சில நிறைவேறுகின்றன. காதலர்களில் ஒருவர் புலம்பெயர்து மேற்கத்தேய நாடொன்றில் தஞ்சமடைந்து, தன்னை அந்நாட்டில் ஓரளவு நிலைநிறுத்திய பின்னர் காதலித்த துணையை தான் வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்டிற்கு அழைப்பதும் அதிகம் இடம்பெறுகின்றது.

அட்டவணை – 2 : மல்லாகத்தின் சாதியும், உள்ளூர் மற்றும் சர்வதேசப் புலப்பெயர்வும், 2007

சாதி	உள்ளூர் இடப்பெயர்வு	சர்வதேசப் புலப்பெயர்வு
அம்பட்டர்	1.5%	5.5%
பிராமணர்	4.3%	.0%
பள்ளர்	29.0%	23.6%
பண்டாரி	2.9%	5.5%
கோவியர்	1.5%	0.9%
நளவர்	18.8%	8.2%
நட்டுவர்	.0%	1.8%
தச்சர்	10.1%	10.0%
வண்ணார்	.0%	12.7%
வெள்ளாளர்	31.9%	31.8%
மொத்தம்	100.0%	100.0%

அட்டவணை – 3 : மல்லாகக் கிராமத்தின் உள்ளூர் மற்றும் சர்வதேச புலப்பெயர்வுக்கான காரணங்கள், 2007

காரணங்கள்	உள்ளூர் இடப்பெயர்வு குடும்பங்களின் எண்ணிக்கை	(%)	சர்வதேசப் புலப்பெயர்வு குடும்பங்களின் எண்ணிக்கை	(%)
தொழில்	28	43.1	66	60.6
திருமணம்	13	20.0	33	30.3
பாதுகாப்பு	11	16.9	5	4.6
மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு	8	12.3	0	0
கல்வி	3	4.6	4	3.7
வேறு	2	3.1	1	0.9
மொத்தம்	65	100.0	109	100.0

மானோர் தொழில், திருமணம், பாதுகாப்பு மற்றும் கல்வி முதலிய புலப்பெயர்வுடன் வெளிப்படையாக தொடர்புபட்ட காரணங்களைக் கூறியிருக்கின்றனர். எனினும், ஒவ்வொருவரும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட கூட்டுக் காரணங்களை தமது புலப்பெயர்வில் கொண்டுள்ளனர் என்பதைத் தெளிவாகவே புரிந்துகொள்ள வேண்டும். மேலும், யாழ்ப்பாணத்தில் தொழில்வாய்ப்பின் போதாமை, பாதுகாப்பு பிரச்சினை, உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதியின்மை, பொருளாதாரரீதியாக பலமிக்க திருமணத் துணைகளின் பற்றாக்குறை முதலிய காரணங்கள் நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தம் மற்றும் வன்முறையின் பாரதூரமான விளைவுகள் என்பதும் இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணத் தமிழர்களிடையே இடம்பெறும் நிச்சயிக்கப் பட்ட திருமணத்தில் திருமணம் முடிப்பவர்களது சாதிப் பின்னணிகள் மிகவும் கரிசனையுடன் பார்க்கப்படுகின்றன. திருமணத் துணைகளின் சாதிப் பின்னணியை அறிந்து கொள்வதும், அவர்களது பொருளாதார அந்தஸ்தினை புரிந்துகொள்வதும் நிச்சயிக்கப்படும் திருமணத்தின் முக்கிய விடயங்களாகும். வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத் தமிழர்களில் குறிப்பாக முதலாம், இரண்டாம் தலைமுறையினர் செய்துகொள்ளும் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் சாதி முக்கியதொரு விடயமாகின்றது. யாழ்ப் பாணத்தில் வாழும் உறவினர்கள், இலங்கையின் வேறு பகுதிகளில் வாழும் உறவினர்கள் (குறிப்பாகக் கொழும்பு) ஆகியோர் சர்வதேச நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் உறவினர்களின் திருமணத்தை நிச்சயிப்பதிலும், அவ்வாறு நிச்சயிப்பதில் தொடர்ச்சியாக ஏற்படும் பேச்சுக்களிலும் பெரிய பங்காற்றுகின்றனர். இத்தகைய திருமணங்களினூடாக ஏற்படும் யாழ்ப்பாணத் தமிழர்களின் புலப்பெயர்வில் சாதி மற்றும் உறவுமுறை போன்ற சமூக நிறுவனங்கள் பாரிய செல்வாக்கினை ஏற்படுத்தி நிற்கின்றன.

யாழ்ப்பாணத் தமிழர்களில் பலர் தம் ஊரில் தொடர்ச்சியாக செய்து வந்த தொழில்களுக்கும், அவர்கள் அத்தொழிலூடாக பணமீட்டுவதை நோக்கமாகக்கொண்டு புலம்பெயரத் தீர்மானிக்கும் வெளிநாடுகளுக்குமிடையேயும் முக்கிய தொடர்பிருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் மரவேலை, சிமேந்துவேலை, சலவைத் தொழில், ஒட்டுவேலை, பட்டறை வேலை அல்லது இரும்புவேலை, சிகையலங்காரம் முதலிய சாதித் தொழில்களைச் செய்யும் பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகமாக புலம்பெயர்ந்து செல்கின்றனர். அந்நாடுகளில்

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட அதே தொழிலைச் செய்வதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது. எனவே, யாழ்ப்பாணத்திலுள்ள அம்பட்டர், கொல்லர், தச்சர், நளவர், பள்ளர் மற்றும் வண்ணார் போன்ற நடுத்தர, சலுகைமறுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களே மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவில் புலம்பெயர்ந்து செல்வதையும் அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இன்னொருவகையில் கூறுவதாயின், யாழ்ப்பாணத்தவர் தாம் உள்ளூரில் செய்யும் சாதித் தொழில்களை நல்ல வருவாயுடன் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை மத்திய கிழக்கு நாடுகள் வழங்கிநிற்பதால், குறிப்பிட்ட சாதிக் குழுவினர் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி அதிகம் புலம்பெயர்கின்றனர். இருப்பினும், மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று தொழில்புரியும் அனைத்து யாழ்ப்பாணத் தமிழர்களின் புலப்பெயர்வு வடிவங்களுக்கும் இவ்விளக்கம் பொருத்தமாக இருக்குமென்று கூறிவிடமுடியாது. அதேசமயம் மேற்கத்தேய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லும் யாழ்ப்பாணத் தமிழர்களின் புலப்பெயர்வு வடிவம் இவ்விளக்கத்திலிருந்து முற்றுமுழுதாக மாறுபட்டிருப்பதும் புரிந்துகொள்ளத்தக்கதே.

பணவருவாயின் மூலங்களும் அதன் உபயோகங்களும்

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் இடையேயான சமூக வலைப்பின்னல்கள் தனிப்பட்ட, குடும்ப, உறவுமுறை, சாதி மற்றும் சமுதாய மட்டங்களில் இடம்பெறுகின்றன. அத்துடன் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழர்களுடன் பொருளாதார, அரசியல், சடங்கு மற்றும் உணர்வுரீதியான பிணைப்பினூடாக ஒருவகையான வலைப்பின்னலை விருத்திசெய்துள்ளனர். எனினும் இக்கட்டுரையில் பொருளாதாரரீதியில் ஏற்படும் வலைப்பின்னலே அதிகம் விவக்கத்திற்குள்ளாகின்றது. முறைசார்ந்த வங்கிகள், பொதுநல மற்றும் சடங்குசார் நிறுவனங்களான பல்வேறு தனியார், பொது நிறுவனங்களும், முறைசாரா பணமாற்றீட்டு முகவர்கள்[7] (Informal Money Transfer Agencies), உறவினர்கள், மற்றும் வணிகர்களும்,

---

7. புலம்பெயர்ந்த நாடுகளிலும் தாய்நாடுகளிலும் பணத்தினை மாற்றீட்டு செய்யும் அமைப்புகள் சர்வதேச மற்றும் உள்ளூர் வலைப்பின்னலூடாக இயங்கிவருகின்றன. சேரனும் சார்ய்ன் அய்கெனும் (2005:7) இவ்வலைப்பின்னலை "முறைசார்ந்த வங்கி முறைமைகளுக்கு வெளியே சர்வதேசரீதியில் செயற்பட்டுவரும் சமூக, பண்பாட்டு, பொருளாதார வலைப்பின்னல்கள்" என வரைவிலக்கணப்படுத்துவதோடு, "முறைசாரா பண மாற்றீட்டு முறைமை" என இதனை அழைக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் சர்வதேச பணமாற்றீட்டு வலைப்பின்னலில் பங்குகொள்கின்றனர். முறைசார்ந்த வங்கிகளைத் தவிர, பணப்பரிமாற்றத்தில் பங்குகொள்ளும் ஏனைய முகவர்கள் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுடனும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழர்களுடனும் தனிப்பட்டரீதியில் தொடர்புகளைக் கொண்டுள்ளனர்.

அனைத்து சமூக மட்டங்களிலுள்ள மக்களாலும் பெறப்படும் பணவருவாயின் மிகச் சரியான எண்ணிக்கையைப் பெறுவ தென்பது பெரும்பாலும் சாத்தியமற்றது. சமூக, அரசியல், சட்ட, தனிப்பட்ட (பாதுகாப்பு) காரணங்களுக்காக மக்கள் புலம் பெயர்ந்து வாழும் தமது உறவினர்களிடமிருந்து பெறும் நிதியுதவி தொடர்பான முழுமையான விபரங்களைக் கூறுவதைத் தவிர்ப்பதுடன் சிலசமயங்களில் இது தொடர்பாக பேசுவதற்கு முற்றுமுழுதாகத் தயக்கம் காட்டுகின்றனர். பல சந்தர்ப்பங்களில், வெளிநாடுகளில் இருந்துவரும் பணத்தினைப்பற்றிய ஆவணப் படுத்தல் எதனையும் குடும்பங்களோ அல்லது சமூக அமைப்புக்களோ வைத்திருக்காமையால், பணவருவாய் பற்றிய சரியான தகவல்கள் இல்லாது போகின்றது. இவ்வாறான காரணங்களினால், பணவருவாய் மற்றும் அவற்றின் உபயோகம் தொடர்பான இருப்பிலுள்ள, அடையாளம் கண்ட தகவல்களைக் கொண்டே விளக்கங்களும், வியாக்கியானங்களும் கொடுக்கப் படுகின்றன.

புலம்பெயர்ந்து மேற்கத்தேய நாடுகளில் வாழும் மக்களிடமிருந்தும், மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்பவர்களிடமிருந்தும் அதிகளவு பணவருவாயீட்டும் முதல் இருபது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும் (World Bank, 2003). புலம்பெயர்ந்து வாழுந் தமிழர்களின் பெருந்தொகையான பணம் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் பயன்படுத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. வருடாவருடம் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களிடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கிட்டத்தட்ட 80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி கிடைப்பதாக இலங்கை அரசாங்கம் கணித்துள்ளது. (Cheran, 2002) குறிப்பாக இலங்கையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யுத்தம், சுனாமி போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான மனிதாபிமான உதவிப்பணிகளை புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் செய்துள்ளனர். எவ்வாறாயினும், வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தினை உள்ளூரில் உபயோகிக்கும் முறையினை பகுப்பாய்வு செய்வதில் ஏற்பட்ட எனது ஆர்வம் தமிழீழ விடுதலைப் போராட்டங்களுக்காக

அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளால் அல்லது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் விடயங்களில் கவனத்தைக் குவிக்கவில்லை. மாறாக, வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தினைப் பயன் படுத்துவதனூடாக மல்லாகக் கிராமத்தில் குறிப்பாக சலுகை மறுக்கப்பட்ட குழுக்களில் ஏற்பட்டுவரும் சமூக, பொருளாதார, பௌதிக மூலதனங்கள், சமூக அந்தஸ்து தொடர்பான வளர்ச்சிகளை பகுப்பாய்வு செய்வதாகவே அமைகின்றது.

யாழ்ப்பாணச் சமூகத்திற்கு வெளிநாட்டுப் பணம் இரண்டு மட்டங்களில் அனுப்பப்படும் போக்கும், உபயோகிக்கப்படும் போக்குமுள்ளது. பணவருவாயின் முதலாவதும், அடிப் படையானதுமான அம்சமாக குடும்பம் உள்ளது. இங்கு குடும்பம், உறவுமுறையாகிய நிறுவனங்கள் மிகப் பிரதான வகிபங்கினை ஆற்றுகின்றன. பணவருவாயினைப் பெற்றுக்கொள்ளும் இரண்டாவது மட்டம் சமூக அமைப்புக்களாகும். இவ்விரண்டாவது மட்டத்தில் இந்துக் கோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், ஏனைய சமூக நல அமைப்புக்கள் தமது வகிபங்கினை ஆற்றுகின்றன. இரண்டாவ தாகக் குறிப்பிடப்பட்ட விடயத்தில் சாதிப்பின்னணி அல்லது பிணைப்பு, குறிப்பிட்ட நிறுவனத்தோடு புலம்பெயர்ந்து சென்றவர்கள் கொண்டிருந்த சிறுபராய பிணைப்பு, கடமையுணர்வு முதலியன முக்கிய வகிபங்கினை ஆற்றி நிற்கின்றன.

மல்லாகத்திலுள்ள பல்வேறு சாதிக் குழுக்களிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மக்கள் வெளிநாடுகளிலுள்ள தமது உறவினர்களுடன் நெருக்கமான வலைப்பின்னலைக் கொண்டுள்ளதோடு, அவர்களிடமிருந்து பண உதவிகளையும் பெற்றுக்கொள்கின்றனர். யாழ்ப்பாணச் சமூகத்தின் வெளிநாட்டுப் புலப்பெயர்வு வரலாற்றினை நோக்கும்போது, குடும்பம் மற்றும் உறவினர்களின் வழி தாய்நாட்டை வந்தடையும் பணத்தின் பெறுமதி அதிகமாகும். இருப்பினும் இவ்வாறு வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து பணத்தினைப் பெறும் பலர் ஒரே சீரான கால இடைவெளியடிப்படையில் அப்பணத்தினைப் பெறுவதில்லை.

அட்டவணை 4இல் கொடுக்கப்பட்ட தரவின்படி, மல்லாகக் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் 43.3% ஆனவர்கள் மேற்கத்தேய நாடுகளில் வசிக்கும் தமது உறவினர்களிடமிருந்தும், 7.4% ஆனவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரியும் உறவினர்களிடமிருந்தும் வருமானத்தினைப் பெற்றுக்

அட்டவணை – 4 : மல்லாகக் கிராமத்தின் பணவருவாய் மூலங்கள்[8] 2007

பணவருவாய் மூலங்கள்	குடும்பங்களின் எண்ணிக்கை	வீதம் (%)
மேற்கத்தேய நாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களிட மிருந்து (உறவினர்கள்) வரும் வருமானம்	94	43.3
சுயதொழில்	60	27.6
அரசாங்க உத்தியோகம்	47	21.7
மரவேலை / சீமெந்து வேலை	41	18.9
நாளாந்தக் கூலித் தொழில்	41	18.9
வணிகம்	30	13.8
விவசாயம்	30	13.8
மத்திய கிழக்கு நாடுகளில் வேலைபுரியும் உறவினர்களிட மிருந்து வரும் வருமானம்	16	7.4
கள் சீவுதல்	7	3.2
சலவைத் தொழில்	5	2.3
நகர சபையில் சுத்திகரிப்புத் தொழிலாளராகப் பணிபுரிதல்	5	2.3
முடி திருத்தும் தொழில்	4	1.8
மாலைகட்டி விற்றல்	3	1.4
கோயில் பூசகர்	2	0.9
(பறை)மேளம் அடித்தல்	1	0.5
தவில், நாதஸ்வரம் வாசித்தல்	1	0.5
மொத்தம்	387	100.0

8. மல்லாகத்திலுள்ள அதிகமான குடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வருமான மூலங்களைக் கொண்டுள்ளன. ஆகையால் தரவுசேகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்தின் மொத்த எண்ணிக்கையுடன் (217) ஒப்பிடும் போது குடும்பங்களின் எண்ணிக்கை (387) அதிகமாகவுள்ளது.

கொள்கின்றனர். ஒட்டுமொத்தமாக, மல்லாகத்தில் வசிப்பவர் களில் 50.7% ஆனவர்கள் வெளிநாட்டவரிடமிருந்து பண உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வெண்ணிக்கை மல்லாகத்தில் வசிக்கும் மக்கள் வெளிநாட்டுப் பணத்தில் முற்று முழுதாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ தங்கியிருப்பதைக் காட்டுகின்றது.

மேலும், வெளிநாட்டுப் பணவருவாயைக் கொண்டுள்ள உள்ளூரில் வசிக்கும் குடும்பங்களை மூன்று வகைக்குள் பிரித்துப்பார்க்க முடிகின்றது,

i. வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணத்தில் முற்றுமுழுதாகத் தங்கி வாழ்பவர்கள்.

ii. நாளாந்த செலவில் சிலவிடயங்களுக்காக மட்டும் வெளிநாட்டவரின் பணத்தில் தங்கிவாழ்பவர்கள் அல்லது வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணத்தில் ஒரு பகுதியை நாளாந்த தேவைக்காகச் செலவு செய்பவர்கள்.

iii. வெளிநாட்டுப் பணத்தினைப் பெற்றுக்கொள்பவர்கள் ஆனால் நாளாந்தச் செலவில் அப்பணத்தில் தங்கியிருப்ப தில்லை.

முதலாவது வகைக்குள் உள்ளடங்குபவர்கள் வெளிநாட்ட வர்களின் பணத்தினை தவணையடிப்படையில் எதிர்பார்த்து இருப்பவர்களாவர். இவர்கள் அப்பணத்தினை தமது நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்காகப் பயன்படுத்து கின்றனர். இரண்டாவது வகைக்குள் வரும் நபர்கள் யாழ்ப் பாணத்தில் சொந்தமாக வருமானத்தினை ஈட்டுபவர்களாவர். இருப்பினும், அவர்கள் உள்ளூரில் சம்பாதிக்கும் பண வருவாயைக் கொண்டு குடும்பவாழ்க்கையை ஓட்டுவதற்கு சிரமப்படுகின்றனர். இதனால் அச்சிரமத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணத்திலும் தங்கி வாழ்கின்றனர். வெளிநாட்டவர்களிடமிருந்து பணம்பெறும் மூன்றாவது வகைக்குள் உள்ளடக்கப்பட்ட மக்கள், உள்ளூர் வருமானத்தினைக் கொண்டு தமது நாளாந்த குடும்பத் தேவையினைப் பூர்த்திசெய்கின்றனர். இவர்கள் வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து பெறும் பணத்தினை உள்ளூரில் செய்யும் தொழிலை மேலும் விருத்திசெய்தல், வீடுகளைத் திருத்திய மைத்தல், வாகனம் வாங்குதல், பெண்ணுக்கு (மகளுக்கு) சீதனம் கொடுத்தல் முதலிய விசேட தேவைகளுக்காகப் பயன்படுத்து கின்றனர். வெளிநாட்டு உறவினரிடமிருந்து பணம்பெறு பவர்களை இவ்வாறு மூன்று வகைக்குள் பிரித்து விளக்கம் கொடுக்க முடிகின்ற போதிலும், இவ்வகைகள் முற்றுமுழுதும்

ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு இயங்குகின்றது எனக் கூறிவிடமுடியாது. வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணம் அனைத்து குடும்பங்களாலும், தனிநபர்களாலும் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

புதிய செல்வந்தர்களின் வளர்ச்சி

வரலாற்றுரீதியாக, யாழ்ப்பாணத் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி இலங்கையிலுள்ள ஏனைய இனக்குழுக்களின் பொருளாதார வளர்ச்சியிலிருந்து பெரியளவு வேறுபட்டுள்ளது. மிகச் சிறிய எண்ணிக்கையான இலங்கைக் கொழும்புத் தமிழர்கள் தெங்கு, கோப்பி மற்றும் தேயிலை போன்ற பெருந் தோட்டப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தொகையினை முதலிட்டிருந்தனர் (பார்க்கவும் Jayawardena *2007*). யாழ்ப்பாணத்தில் கணிசமான எண்ணிக்கையான "உயர்" சாதிக் குழுக்கள் சேவைசெய்யும் சாதிக் குழுக்களின் (பள்ளர், நளவர்) உதவிகளோடு நெல், புகையிலை, வெங்காயம் மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளை பெரும்பாலும் தமது சொந்த நிலங்களில் செய்துவந்தனர். மரபுரீதியான யாழ்ப்பாணச் சமூகத்தில், குறிப்பாக சலுகை மறுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் சாதியடிப் படையிலான தொழில்களின் மூலமாகவே தமது பிரதான வருமானத்தினை ஈட்டிக்கொண்டனர். காலனித்துவ ஆட்சிக் காலங்களில் திறந்து விடப்பட்ட ஆங்கிலக் கல்வி, அரச தொழில்வாய்ப்பு முதலியன "உயர்" சாதி வெள்ளாளர்களாலேயே பெரிதும் அனுபவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிஷனரிகளின் வருகைக்குப் பின்னர், மதமாற்றம் வேண்டி மேற்கொள்ளப்பட்ட பெரியதொரு திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்ட சாதியினர் கல்விசார் நன்மைகள் சிலவற்றைப் பெற்றனர். மதமாற்றத் தினூடாக சமூகத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடாகவும் இவ்விடயம் பார்க்கப்பட்டது. ஆங்கிலக் கல்வியைப்பெற்ற யாழ்ப்பாணத் தமிழர்கள் ஊதியம் பெறும் தொழில்களையும் அரசாங்கத் தொழில்களையும் பெற்றுக்கொண்டனர். இவர்கள் இலங்கையில் மாத்திரமல்லாமல் மலேசியா, பர்மா, இந்தியா போன்ற நாடு களிலும் அரசாங்க சேவையில் தொழில் புரிந்ததுடன் இலங்கை யில் மருத்துவம், சட்டம், பொறியியல் முதலிய துறைகளிலும், வங்கிகளிலும் தொழில்புரிந்தனர் (Jayawardena *2007:203—204*). இலங்கை, காலனித்துவ மலேசியா போன்ற நாடுகளில்

காணப்பட்ட ஆங்கிலக் கல்வி, தொழில் முதலியவற்றின் மேம்பாடுகளை "உயர்" சாதி மக்களே பெரிதும் அனுபவித்தனர். இத்தகைய சந்தர்ப்பங்களை சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களில் ஒருசில அங்கத்தவர்கள் மட்டுமே பெறக்கூடியதாக இருந்தது என்பதை முன்னர் பார்த்தோம். இலவச கல்விக் கொள்கை, தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களின் வெளிநாடுகளை நோக்கிய புலப்பெயர்வு முதலிய விடயங்கள் இச்சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களை வழங்கிநிற்கின்றன.

மரபுரீதியாக யாழ்ப்பாணச் சமூகத்தில் வளம்மிக்க நிலபுலங்களுக்குச் சொந்தக்காரர்களாக வெள்ளாளர் அடையாளம் காணப்பட்டனர். இன்றுங்கூட, தொடர்ச்சியான இடப்பெயர்வு, தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களின் மேல்நோக்கிய அசைவியக்கம் என்பவற்றுக்கு அப்பாலும், "உயர்" சாதியினர் பெரும்பாலும் தமது நிலங்களை வேறு சாதிகளுக்கு (குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு) விற்க விரும்புவதில்லை. "உயர்" சாதிகளுக்கு சொந்தமான நிலங்களை அல்லது "உயர்" சாதியினர் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்ததெனக் கருதுகின்ற நிலங்களை தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு விற்பதற்கு ஒருவகையான சமூகத் தடையினை ஏற்படுத்திநிற்கின்றனர் (Thanges and Silva, *2009;* CPA *2005).* மல்லாகத்தில், கணிசமான எண்ணிக்கையான குடும்பங்கள் வெளிநாட்டில் வசிக்கும் உறவினர்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதை முன்னர் பார்த்தோம். இவ்வாறு இவர்கள் பெறும் பணத்தில் பெரும்பகுதியை வீடுகளைப் புனரமைக்கவும், குடும்ப சொத்துக்களை விஸ்தரிக்கவும் பயன்படுத்துகின்றனர். பரம்பரை பரம்பரையாக சலுகைமறுக்கப்பட்டு வந்த சாதிகளில் பலர் இவ்வாறு பெறும் பணத்தினைக் கொண்டு புதிய நிலங்களை வாங்குகின்றனர். புதிய வீடுகளைக் கட்டுகின்றனர். தமது வீடுகளை திருத்தியமைக்கின்றனர். சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுக்களிடையே ஏற்பட்டிருக்கும் இப்புதிய வளர்ச்சியினால், தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் மரபுரீதியாகக் காணப்பட்ட "சாதிப் புவியியல்"[9] அல்லது சாதியை மையப்படுத்திய குறிச்சிகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

9. சாதிக் குழுக்கள் ஒவ்வொன்றினதும் வேறுபட்ட புவியியல் அமைவிடங்களே சாதிப் புவியியல் என்ற பதத்தால் இங்கு கருதப்படுகின்றது. வேறுபட்ட சாதிக் குழுக்கள் யாழ்ப்பாணக் கிராமங்களில் வெவ்வேறு பகுதிகளில் செறிந்து வாழும் நிலைமை பொதுவாக காணப்பட்டது. யாழ்ப்பாணச் சமூகத்தின் வழக்கத்திலுள்ள ஒருவரது புவியில் வாழ்விடத்தையும் அவரது சாதியையும் அடையாளப்படுத்திப் பார்க்கும் போக்கை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நிலவுடைமை மாற்றீடு என்பது சாதி, உறவுமுறை, வகுப்பு ஆகிய சமூகக் கட்டமைப்புக்களினூடாகவே பெரும்பாலும் இடம்பெறுகின்றது. இருப்பினும், மரபுரீதியாக வழக்கத்திலுள்ள இத்திலைச் சந்தை தொடர்ந்தும் நடைமுறையிலுள்ள அதேநேரம், தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களின் வெளிநாடுகளுக்கான புலப்பெயர்வு, அப்புலப்பெயர்வினூடாக வரும் பணம், கல்வி அடைவுகள், சார்புரீதியில் அதிக எண்ணிக்கையான வெள்ளாள சாதிகளின் உள்ளூர் (கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு) மற்றும் வெளிநாட்டுப் புலப்பெயர்வு முதலிய இன்னோரன்ன காரணங்களால் இந்திலைச் சந்தையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து வருகின்றது. மல்லாகத்திலுள்ள வெளியூர்த் தொடர்புகளைக் கொண்ட தாழ்த்தப்பட்ட சாதிகளில் சிலர் பரம்பரை பரம்பரையாக "உயர்'' சாதிகளின் உடமையாக இருந்த நிலங்களை வாங்கியுள்ளனர்.

> நான் ஒரு சலவைத் தொழிலாளி (வண்ணார்). எனது இரண்டு மகன்கள் லண்டனுக்கு புலம்பெயர்ந்து செல்வதற்கு முன்னர், நான் பொருளாதாரரீதியில் வறியவனாகவே இருந்தேன். மகன்களிடம் இருந்துவரும் தொடர்ச்சியான பணவருவாயினால் நான் ஓரளவு செல்வந்தனாக தற்பொழுது இருக்கின்றேன். மல்லாகத்தில் வேறுபட்ட இடங்களில் நிலங்களை கடந்த சில வருடங்களில் வாங்கியிருக்கின்றேன். அவற்றில் ஒரு நிலம் கே.கே.எஸ் றோட்டோரத்தில் அமைந்துள்ளது. இந்த நிலத்தை வாங்குவதற்கு 4 மில்லியன் ரூபாய் கொடுத்தேன். இந்நிலத்தை நான் வாங்கும் போது, பெரும் போட்டி இருந்தபோதும் குறிப்பிடத்தக்க பணத்தினை எனது மகன்கள் லண்டனில் இருந்து அனுப்பியதனால் என்னால் இந்த நிலத்தை வாங்க முடிந்தது (சிவகுரு, மார்கழி, 2007).

சலுகையளிக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த இக்கற்கைக்கான தகவல் தருவோர்கள், காலாகாலமாக நடைமுறையிலிருந்த நிலச் சந்தையில் இத்தகையதொரு மாற்றம் உள்ளூரிலுள்ள மக்கள் வெளிநாட்டிலுள்ள தமது நெருங்கிய (இரத்த) உறவினர்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தினைப் பெறுவதனாலேயே சாத்தியமானது என்கின்றனர். எனவே, வெளிநாட்டுப் புலப்பெயர்வுகளினால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான உள்ளூரில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினர் தம்மை பொருளாதார ரீதியாக வளப்படுத்துதல் என்ற விடயமும், சார்புரீதியில் அதிக எண்ணிக்கையான வெள்ளாள சாதியைச் சேர்ந்த மக்கள் கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்தல் என்ற விடயமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் வரலாற்றுரீதியாக

தொடர்ந்தும் நடைமுறையிலிருந்த நிலச் சந்தையில் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. நிலச்சந்தையில் போட்டி போட்டு நன்மையடையக் கூடிய உள்ளூரில் வசதிபடைத்தவர் களுக்கு வெளிநாடுகளில் வசிக்கும் வெள்ளாள நிலவுடமை யாளர்கள் (Absentee Vellalar Landlords) தமது நிலங்களைச் சாதிவரையறைகள் கடந்து விற்றமைக்கான பல உதாரணங்கள் யாழ்ப்பாணத்திலுள்ளன. இருப்பினும், ஊரிலில்லா வெள்ளாள நிலஉடமையாளர்கள் தமது நிலங்களை விற்கும்போது, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமது சாதியைச் சேர்ந்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் வழக்கமும் பொதுவாக நடைமுறையிலுள்ளது.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, 1980களில் இருந்து குறிப் பிடத்தக்க எண்ணிக்கையிலான தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் தாம் செய்யும் சாதித் தொழில்களின் மரபார்ந்த முறைமைகளை மாற்றியமைத்ததோடு வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். சாதித் தொழில்களை நிறுவனப்படுத்துதல், தொழிலுக்குரிய நவீன பண்புகளை உள்வாங்கிக் கொள்ளுதல், சொந்தத் தொழில் நிலையங்களை அமைத்துக்கொள்ளுதல், இளந்தலைமுறையினர் சாதி அடிப்படையிலான தொழில்களைக் கைவிட்டு புதிய தொழில்களை நாடுதல் போன்றவற்றை இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் அதிகம் அவதானிக்க முடிகின்றது. இத்தகைய மாற்றத்தில் வெளிநாட்டுப் பணத்தின் வகிபங்கு மிக மிக முக்கியமானதாகின்றது.

> புதிதாக வாங்கிய எனது காணியில் சலவைத் தொழிலை செய்வதற்கென ஒரு கடையை நான் கட்டினேன். முன்னரெல்லாம் "உயர்" சாதிக்காரர்களிடமிருந்து அழுக்குத் துணிகளை பெற்றுக் கொள்வதற்கு அவர்களின் வீடுகளுக்குச் செல்வேன். அவ்வாறு போவதை நான் தற்பொழுது முற்றாக நிறுத்தி விட்டேன். தற்பொழுதெல்லாம் "உயர்" சாதிக்காரர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எனது கடைக்கு வருகின்றனர். எனது மூன்றாவது மகன் அவ்வப்போது என் தொழிலுக்கு உதவுவான். மேலதிக வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்காக ஒரு வாகனமும் வைத்திருக்கின்றான். இவ்வாகனம் வாங்குவதற்கும் லண்டனிலுள்ள எனது பிள்ளைகளே பணவுதவி செய்தனர். எனது கடைசி மகன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதொரு பட்டதாரி. அவர் இப்பொழுது அரசாங்க உத்தியோகம் தேடிக்கொண்டிருக்கின்றார் (சிவகுரு, மார்கழி 2007).

மேற்குறிப்பிடப்பட்ட பொருளாதார மாற்றங்கள் தாழ்த்தப் பட்ட சாதியினரிடையே ஏற்பட்ட வளர்ச்சியினை அதிகம்

அழுத்திக் கூறுகின்றபோதிலும், இத்தகைய மாற்றங்கள் யாழ்ப் பாணத்தின் அனைத்து சாதியினரிடத்தேயும் மேற்கத்தேய நாடுகளை நோக்கிய புலப்பெயர்வு, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் உறவினர்களுக்கு அனுப்பப்படும் பணம் என்பவற்றின் தாக்கத்தால் உருவாகும் மாற்றங்கள் எனலாம். மரபுரீதியான சாதி அடையாளங்களில் இம்மாற்றங்கள் ஏற்படுத்திநிற்கும் செல்வாக்கு, தாழ்த்தப்பட்ட சாதியினரிடத்தே முற்போக்கான பல மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது என்பது முக்கியமான தொரு விடயமாகும்.

யாழ்ப்பாண வரலாற்றின் அறியப்பட்ட காலம் முதலே சீதன முறைமை இருந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. மணமகனுக்கு அல்லது அவரது குடும்பத்திற்கு எவ்வளவு சொத்து கொடுக்கப்படவேண்டும் என்ற பேச்சு வார்த்தை ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணத்தின் முக்கிய விடயமாக இருந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தின் ஆண் வழிவந்த சமூக முறைமையின் கீழ் மணமகனுக்கு மணமகளால் அல்லது அவளது குடும்ப உறவினரால் பொதுவாக நிலம், வீடு, நகை, பணம் முதலியன சீதனமாகக் கொடுக்கப்படுவது வழமை. வெளிநாட்டு பணவருவாயினால் உருவாகிய புதிய செல்வந்தர் களினால் யாழ்ப்பாணத்து சீதன முறைமையில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் இடம்பெறுகின்றன. கடந்த இரு தசாப்தங்களாக சீதனமாகக் கொடுக்கப்படும் சொத்துக்களின் தொகை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. குறிப்பாக மேற்கத்தேய நாடுகளில் தமது நெருங்கிய உறவினர்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்கள் தமது மகளுக்கோ அல்லது சகோதரிக்கோ சீதனமாக அதிக சொத்துக் களை கொடுக்கும் போக்கு அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

> லண்டனில் உள்ள எனது அண்ணா ஒரு புதிய வீடு கட்டு வதற்குப் பணம் அனுப்பினார். இந்த வீட்டினைக் கட்டி முடிப்பதற்கு கிட்டத்தட்ட 4 மில்லியன் ரூபாய் செலவானது. நான் திருமணம் செய்தபோது எனக்கு சீதனமாக அந்த புதிய வீடு, ஒரு தொகை பணம் மற்றும் நகை என்பன கொடுக்கப் பட்டன. எனது கணவர் சுய தொழிலைச் செய்வதற்கென எனது அண்ணா ஒரு வாகனம் வாங்குவதற்கும் பணம் கொடுத்தார் (செல்வி, கார்த்திகை 2007).

இப்போக்கு சீதனமாக அதிக சொத்தினை கோரிநிற்கும் போக்குக்கு வித்திட்டதுடன், வெளிநாட்டுத் தொடர்புகளை வைத்திராத உள்நாட்டில் வாழும் பல வறியவர்கள் தமது மகளுக்கோ அல்லது சகோதரிக்கோ குறைந்த சீதனத்தில் ஒரு

மணமகனைப் பார்ப்பதில் பல கடினங்களை எதிர் கொள்வதற்கும் காரணமாக அமைகின்றது.

ஒரு வகுப்புச் சமூகத்தில் சாதி அடிப்படையிலான மத அடையாளங்களில் இயங்குநிலைகள்

யாழ்ப்பாணத்திலுள்ள சமூக அமைப்புக்களான கோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், வாசக சாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் முதலியன புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்து நிதியுதவியினைப் பெற்றுக்கொள்கின்றன. இவ்வமைப்புக்கள் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் சமயச் சடங்குகளை நிகழ்த்துவதற்கும் விழாக்களைக் கொண்டாடுவதற்கும் இந்நிதிகளைப் பயன்படுத்துகின்றன. புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தாம் பிறந்து வளர்ந்த இடம் அல்லது தமது கிராமம், சமய மற்றும் கல்விசார் அமைப்புக்களுடன் வைத்துள்ள சாதிய, சிறுபிராய பிணைப்புகள் போன்ற காரணிகள் இவ்வாறு நிதியுதவிகளைச் செய்வதை ஊக்குவிக்கின்றன. இந்த நிதியுதவிகள் கோயிற் கட்டடம் கட்டுதல், தேர் கட்டுதல், சமயச் சடங்குளைக் கொண்டாடுதல், பாடசாலை அபிவிருத்திக் காக நிலத்தினை வாங்குதல், வருடாந்த கொண்டாட்டங்களை மேற்கொள்ளுதல் போன்றவற்றுக்கான நிதிப்பங்களிப்புகளை வழங்கும் நோக்குடன் காலத்துக் காலம் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக கிராம மட்டத்திலான இந்துக் கோயில்களுக்கு பெறப்படும் பணம் சாதிப்பிணைப்பு என்ற ஐக்கியத்தின் அடிப்படையிலேயே பெரிதும் இடம்பெறுகின்றது. அதாவது புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமது சாதிக்காரர்களால் நிர்வகிக்கப்படும் கோயில்களுக்கே பெரும்பாலும் பணத்தினை அனுப்பிவைக்கின்றனர். குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர் தாம் நிர்வகிக்கும் இந்துக் கோயில்களை வெளிநாட்டில் வசிக்கும் தமது சாதிக்காரர்களிடமிருந்து பெற்ற பணத்தின் மூலம் அபிவிருத்தி செய்து வருகின்றனர். இப்போக்கு எண்பதுகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் பலவற்றிலும் ஏற்பட்டுவருகின்றது. இம்மாற்றம் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர் தமது மத வழிபாட்டுக்காக சுதந்திரமாகச் செயற்படும் போக்கை ஊக்குவித்து நிற்பதோடு "உயர்" சாதியினரின் கோயில்களில் மதச் செயற்பாடுகளில் தங்கியிருக்க வேண்டிய தேவையினை குறைத்தும் நிற்கின்றது எனலாம். "மத ஆதிக்கத்திலுள்ள சாதிப் பகைமை ஏனைய ஆலயங்களைப் பயன்படுத்துவதில் வெற்றி கொள்வதைவிட,

அடக்கப்பட்ட சாதிக்குழுக்களை தமது சொந்த ஆலயங்களைக் கட்டுவதற்கு ஊக்குவித்தது என்கிற பஸ்ரினின் (1997:426) கருத்து இங்கே கவனிக்கத்தக்கது.

மேற்குலகு சென்று வசிக்கும் தமிழர்களின் பணவருவாய், அடக்கப்படும், அடக்குமுறைக்குட்படுத்தும் இரு சாதிக் குழுக்களும் சொந்தமாக ஆலயங்களைக் கட்டுவதையும், ஏற்கெனவே உள்ள ஆலயங்களை திருத்தியமைப்பதையும் ஊக்குவித்து நிற்பதை அவதானிக்கமுடிகின்றது. அதேநேரம் சலுகையளிக்கப்பட்ட சாதிக்குழுக்களின் நிர்வாக ஆளுகை காணப்படுகின்றபோதிலும், யாழ்ப்பாணத்தின் பெரும் இந்துக் கோயில்களான நல்லூர்க் கந்தசாமி கோவில், தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் கோவில் போன்றன அவைதோன்றிய சாதி மூலங்களுக்கு அப்பால்சென்று, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் அனைத்து சமூக மட்டங்களிலிருந்தும் பணவருவாயைப் பெற்றுக்கொள்கின்றன.

மரபுரீதியாக வெள்ளாளர் யாழ்ப்பாணச் சமூகத்தில் சமூக, பொருளாதார, கல்வி, அரசியல் முதலிய துறைகளில் ஆதிக்கத் தினைக் கொண்டிருந்ததோடு, சமயச் சடங்குகள், சமூக நடை முறைகள் மீதும் ஆதிக்கத்தினையும் கட்டுப்பாட்டையும் வைத்திருந்தனர். சமயச் சடங்குகளை ஆற்றுவதில் பொருளா தாரத்தின் பங்கு முக்கியமானதாக இருந்ததால் சமயச் சடங்கு கவிஞராக சாதி அந்தஸ்தினைப் பேணுவதில் வெள்ளாளரின் பொருளாதார அடைவுகள் அவர்களுக்குப் பெரிதும் துணை புரிந்தன. வெள்ளாளர் யாழ்ப்பாணத்தின் ஆகம முறைக்குட் பட்ட பெரிய கோயில்களில் தமது ஆதிக்கத்தினைச் செலுத்தி வந்த அதேநேரம், சலுகைமறுக்கப்பட்ட சாதிகள் ஆகமம் சாராத சடங்குகளை மேற்கொள்ளும் (வேள்வி, குளிர்த்தி, தீ மிதிப்பு முதலிய) சிறிய கோயில்கள் பலவற்றினை கிராமமட்டங்களில் நிர்வகித்தனர். இந்நிலைமை தற்பொழுதும் யாழ்ப்பாணச் சமூகத்தில் நடைமுறையில் உள்ளது.

எவ்வாறாயினும், யாழ்ப்பாண வரலாற்றில் கடந்த மூன்று தசாப்தங்களாக கிராம மட்டத்திலுள்ள சாதி அடிப்படையிலான கோயில்கள் பல துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. முக்கியமாக போதுமான வசதிகளுடன் கோயில்களைப் பராமரித்தல், "உயர்வாக மதிக்கப்படும் சடங்குகளை" ஆற்றுதல் முதலியன ஒரு சமூகத்தின் அல்லது குழுவின் வளம், அந்தஸ்து, கௌரவத்தை வெளிப்படுத்தி நிற்கும் குறியீடுகள் என அனைத்துச் சாதியினரும் நம்புகின்றனர். இதனாலேயே, வெள்ளாளர் சாதியைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தின் பெரிய கோயில்களில் தமது ஆதிக்கத்தினைப் பேணிவருகின்றனர்.

ஏனைய சாதிகளைச் சேர்ந்தவர்களும் தமக்கான கோயில்களை அபிவிருத்திசெய்தபோதிலும், அவை அளவில் சிறியனவாகவே இருந்தன. வரலாற்றுரீதியாக ஒவ்வொரு சாதியினரும் தமக்கான கோயில்களைக் கட்டியெழுப்பும் பண்பு சாதியடையாளங்களை வெளிப்படுத்தி நிற்பதோடு, இத்தகைய வரலாற்றுரீதியான அடையாளக் கட்டுமானம் வெளிநாட்டு புலப்பெயர்வு, பணவருவாய் என்பனவற்றினால் மேலும் முனைப்புப் பெறுவதையும் யாழ்ப்பாணத்திலுள்ள பல கிராமப்புறங்களில் காணமுடிகின்றது. மரபுரீதியாக சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுக்களில் பலர் செயலூக்கத்துடன் தமது சாதிக் கோயில்களை ஆகமரீதியான ஆசாரங்களுடன் அபிவிருத்தி செய்கின்றனர். இவ்விடயத்தினை சிவத்தம்பி பின்வருமாறு ஆவணப்படுத்துகின்றார்.

> புதிய செல்வந்தர்கள் கிராம மட்டத்திலுள்ள வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்துவரும் போக்கு மிகுந்த முனைப்பான சமூக, கலாசார அம்சத்தின் ஒருமுக்கிய விடயமாகியுள்ளது. இவர்கள் ஏற்கெனவே நிறுவிய ஆலயங்களுடன் தமது உறவினைத் தொடர்ந்தும் பேணுவதோடு (இந்த உறவு சில எல்லைக்குட்பட்டிருக்கும்), சொந்தக் கோயில்களையும் அபிவிருத்தி செய்கின்றனர். என்ன இடம்பெறுகின்றதெனில், செயற்பாட்டிலிருந்த வழிபாட்டுத் தலங்கள் முறைசார்ந்த ஆகமரீதியான கோயில்களாக மாற்றப்படுகின்றன. ஆகமம்சாரா முறையிலிருந்து ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைக்கு ஏற்படும் தவிர்க்கமுடியாத மாற்றத்தினை, ஆலயங்களின் கட்டுமானங்களிலும், அங்கு ஆற்றப்படும் சடங்குகளிலும் அவதானிக்க முடிகின்றது. விதிமுறைகளுடன் அதிக தெய்வங்களை வழிபாட்டிற்காக அமர்த்துதல், விஸ்தரிக்கப்பட்ட சடங்குகள் பலவற்றை ஆற்றுவதற்காக தனிச் சிறப்பான உட்கட்டுமானங்களை நிறுவுதல் முதலியவையே இவ்விடயங்களாகும்; யாழ்ப்பாணத்தில் இத்தகைய புதிய ஆலயங்கள் பல வழக்கத்தில் வந்துள்ளன. சிறினிவாஸ் விளக்குவது போல், இது உண்மையில் சமஸ்கிருதமயமாதலின் ஒரு செயற்பாடாகும். (சிவத்தம்பி 1995:51)

ஒரு பகுதி சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுக்கள் தமது வழிபாட்டுத் தலத்தின் தரத்தினை உயர்த்துவதனூடாக கிராமத்தில் இருக்கும் தமது சமூக அந்தஸ்தினையும் வளர்ச்சியடையச் செய்கின்றனர். இது ஒருவிதத்தில், ஆகமம் சாராத ஆலயங்களை ஆகமம் சார்ந்த வழிபாட்டுமுறை நோக்கி உயர்த்தும் வெளிப்படையான செயற்பாடாகும் (Manifest Function). அதேசமயம், இன்னொரு விதத்தில், கிராமப்புறங்களில் சமயத் தலங்களின் சாதியடிப்படையிலான விருத்தி, சாதிரீதியான சமய

அடையாளங்களை (மீள்) உற்பத்திசெய்தும், (மீள்)கட்டமைத்தும் அல்லது (மீள்)வலிமைப்படுத்தியுமுள்ளது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டியிருக்கின்றது. இவ்விடயம் சாதியின் இயங்குநிலையில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் மறைமுக அல்லது உடனடியாக வெளித்தெரியாத செயற்பாடாகும் (Latent Function). சாதியடிப்படையிலான சில சமயத் தலங்கள் (குறிப்பாக சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுக்களின்) சடங்கு ரீதியாகவும், கட்டுமானரீதியாகவும் குறிப்பிட்ட வளர்ச்சியினை அடைகின்ற போதிலும், வெவ்வேறு சாதிக் குழுக்களின் சமயத் தலங்களை அந்தந்த சாதிகளுடன் இணைத்துப் பார்க்கும் போக்கில் மாற்றங்கள் ஏற்படாதிருப்பதே இதற்கான முக்கிய காரணமாகும்.

வெளிநாட்டுப் பணவருவாயால் மல்லாகத்திலுள்ள சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழு (பள்ளர்) ஒன்றின் சாதியடிப் படையிலான ஆலயத்தின் வளர்ச்சியினை மிகச் சுருக்கமாக இவ்விடத்தில் கூறுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

விடயக் கற்கை: கோட்டைக்காடு சாளம்பை முருகன் கோயில்

கோட்டைக்காடு சாளம்பை முருகன் கோயில் மல்லாகக் கிராமத்தின் கிழக்கே அமைந்துள்ளது. இக்கோயில் பள்ளர் சாதி சமூகத்திற்குச் சொந்தமானது. இருப்பிலுள்ள தகவல்களின்படி, திரு. ஐ. அழகர் சுவாமிகள் என்பவரால் இக்கோயில் 1925ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ், சிங்களச் சமூகங்களால் வழிபடப்படும் கதிர்காமம் முருகன் கோயிலுக்கு வழிபடச்சென்ற அழகர் சுவாமிகளுக்கு முன்பின் அறிந்திராத ஒருவர் முன்தோன்றி முருகனின் வேலைக் கொடுத்து இதனை உனது கிராமத்தில் கொண்டு சென்று வழிபடு என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். பின்னர் அழகர் அவரை அங்குள்ள இடங்களில் எல்லாம் தேடிப்பார்த்தும் வேல் கொடுத்தவரை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனைக் கந்தனின் அருளாக எண்ணிய அழகர் சுவாமிகள் அந்த வேலை மூலமூர்த்தியாகக் கொண்டு உருவாக்கிய ஆலயமே இந்த முருகமூர்த்தி கோயிலாகும். இவ்வாலயத்தின் தோற்ற வரலாறு இவ்வாறே பதிவுசெய்யப் பட்டுள்ளது. அத்துடன் அழகர் இக்கோயிலைப் பரிபாலிப் பதற்கென ஏழாலையில் சைவ அபிவிருத்தி சபை என்ற அமைப்பினை நிறுவியதாகவும் இவ்வாலய வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

1964ஆம் ஆண்டுவரை குறிப்பிடத்தக்க உட்கட்டுமான அபிவிருத்திகள் எதுவும் இடம்பெறாத இக்கோயிலில் நிறுவப் பட்டு கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளின் பின்னர் அதன் கட்டமைப்பிலும், சடங்கு முறைகளிலும் பெரிய மாற்றங்களும், முன்னேற்றங்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வாலயத்தோடு தொடர்புபட்ட பெரும்பாலும் ஒரே சாதியைச் சேர்ந்த வணிகர்கள், ஆலய பரிபாலன சபை, வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசிப்பவர்கள், இக்கிராமத்தில் வசிக்கும் புலம்பெயர்ந்தவர்களின் உறவினர்கள் முதலிய பலரது பங்களிப்புக்களும், உதவிகளும் இவ்வாலயத்தின் அண்மைக்கால அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றி நிற்கின்றன. சாளம்பை முருகமூர்த்தி கோயில் தற்பொழுது ஆகமம் சார்ந்த கோயிலுக்கு வேண்டிய கொடித்தம்பம், மூல தெய்வம், உப தெய்வங்கள், தேர், தீர்த்தக் கேணி முதலிய வசதிகளை உள்ளடக்கி யாழ்ப் பாணத்தின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இந்துக் கோயில்களில் ஒன்றாகக் காட்சியளிக்கின்றது.

புலம்பெயர்ந்து வாழும் ஒரே சாதியைச் சேர்ந்த மக்களிடம் திரட்டப்பட்ட பணமே இத்தகைய அபிவிருத்தியை சாத்திய மாக்கியது என்று கோயில் நிர்வாகிகள் கூறுகின்றனர். கிட்டத் தட்ட ஆறு மில்லியனுக்கும் மேல் பணமாக புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ளோரிடமிருந்தும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அவர்களது உறவினர்களிடமிருந்தும் கோயில் அபிவிருத்திக்காகப் பெறப்பட்டுள்ளது. இவை தவிர புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் பல குடும்பங்கள் ஆலயத்தின் சில பகுதிகளைத் தாமே பொறுப்பேற்று உள்ளூரிலுள்ள உறவினர்களின் மேற்பார்வையில் கட்டியும் கொடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் இத்தகைய அபிவிருத்திகள் தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களிடத்தோ அல்லது ஆதிக்க சாதிக் குழுக் களிடத்தோ சாதி அடையாளங்களை இல்லாது செய்து அல்லது அதனைத் தவிர்த்து கிராமத்திலுள்ள அனைத்துக் கோயில் களுக்கும் சென்று வழிபடவேண்டும் என்ற மனமாற்றத்தினை உருவாக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

> "நாம் எமது கோயில்களை ஆகமம் சார்ந்த கோயில்களாக வடிவமைத்தபோதிலும், உயர் சாதிப் பிராமணரைக் கொண்டு சடங்குகள் ஆற்றுவதற்கு தற்பொழுதும் சிக்கல்களை எதிர்கொள்கின்றோம். வெள்ளாளர் பொதுவாக எமது கோயில்களுக்கு வருவதைத் தவிர்க்கின்றனர். மல்லாகத்தில் எமது கோயில் எமது சாதி சமூகத்தின் ஒரு வலுவான அடையாளமாக உள்ளது (சாளம்பை முருகமூர்த்தி கோயிலின் நிர்வாகிகள், கார்த்திகை 2007).

இப்போக்கு ஒருவகையில் சாதியடிப்படையில் தனித்து இயங்கும் கிராமப்புறக் கோயில்களில் இன்றும் சாதிப் பாகுபாடுகள் இடம்பெறுவதைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், நாளாந்த வாழ்க்கையிலும், சமயச் செயற்பாடுகளிலும் சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுக்களால் மேற்கொள்ளப் பட்டுவரும் முயற்சிகளும், அடைவுகளும் அவர்களது (தாழ்த்தப் பட்ட சாதியினரின்) அடையாளங்களை முற்றிலும் வெள்ளாள சாதிகளின் அடையாளங்களாக மாற்றும் முயற்சியாகத் தெரிய வில்லை. மாறாக, இம்முயற்சி அவர்களது சமூக, பெருளாதார, சமயத் தரங்களை உயர்த்துவதாகவும், சமூகத்தில் தாம் ஒழுக்க ரீதியான மேலாண்மை கொண்டவர்களென்ற உணர்வினைப் பெற்றுக்கொள்வதற்காகவுமே இடம்பெறுகின்றது எனலாம்.

முடிவுரை

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலப்பகுதியிலிருந்து வேலைவாய்ப்பு, கல்வி நோக்கங்களுக்காக யாழ்ப்பாணத் தமிழர்கள் வெளிநாடுகள் நோக்கிப் புலம்பெயர்ந்தனர். மிகச் சிறிய எண்ணிக்கையான சலுகைமறுக்கப்பட்ட நடுத்தர சாதிக் குழுக்களைத் தவிர, சலுகையளிக்கப்பட்ட வெள்ளாள சாதியைச் சேர்ந்தவர்களே இப்புலப்பெயர்வில் பெரிதும் பங்கு கொண்டதோடு, அதன் நன்மைகளை அனுபவித்தும் வந்தனர். குறிப்பாக எண்பதுகளின் பின்னர் தீவிரமடைந்த உள்நாட்டு யுத்தம், வன்முறைகளால் தூண்டப்பட்ட சமூக, பொருளாதார நிலைமைகள் போன்றவை வேறுபட்ட சாதி, வகுப்புப் பின்னணி களைக் கொண்ட யாழ்ப்பாணத்தவர்களையும் வெளிநாடுகளுக்கு புலம்பெயரும் போக்கினைத் தூண்டிநின்றன. மலேசியா, பர்மா, இந்தியா போன்ற நாடுகளை நோக்கி வரலாற்று ரீதியில் இடம்பெற்ற தொழில் தகைமைசார் புலப்பெயர்வு போலல்லாது, தற்காலப் புலப்பெயர்வில் யாழ்ப்பாணத்தின் அனைத்து சமூக மட்டங்களிலும் உள்ளோரும் புலம்பெயர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. வெளிநாட்டுத் தொடர்புகள் பொருளாதார மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புக்கான தவிர்க்கமுடியாத தேவையாக அமைந்ததுடன், சமூக, பொருளாதார, கலாசார வாழ்க்கையிலும், அபிவிருத்தியிலும் தாக்கத்தினைச் செலுத்தி நிற்கின்றது.

யாழ்ப்பாண வரலாற்றின் கடந்த மூன்று தசாப்தங்களாக, அனைத்து சாதிக் குழுக்களிடையேயும் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான மக்களின் பிரதான அல்லது உப—பணவருவாய் மூலமாக வெளிநாட்டுப் பணவருவாய் உள்ளது. இக்கற்கை இடம்பெற்ற இடமான மல்லாகத்தில் 50 வீதத்திற்கு

மேலானவர்கள் வெளிநாட்டு பணவருவாயைக் கொண்டு ள்ளனர். "உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து" இடம்பெயர்ந்து உள்ளூர் அகதி முகாம்களில் வசிப்பவர்களில் அனேகமானோர் சலுகைமறுக்கப்பட்ட சாதிக் குழுக்களைச் சேர்ந்தவர்களாய் இருக்கின்ற அதேநேரம் மரபுரீதியாக உரிமை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களில் கணிசமான எண்ணிக்கையானோர் வெளி நாட்டுப் பணவாய்ப்புக்களால் உள்ளூரில் சமூக, பொருளாதார, கலாசார அந்தஸ்தில் மேல்நோக்கிய வளர்ச்சியைக் கண்டு வருவதையும் குறிப்பிடவேண்டியுள்ளது. வெளிநாட்டுத் தமிழர் களிடமிருந்து பெறும் பணம் பெரும்பாலும் நெருங்கிய உறவினர், சாதி முதலிய நிறுவனங்களின் வழியே பரிமாற்றத்திற் குள்ளாகின்றது. இவ்வாறு பெற்ற பணம் நிலம் வாங்குதல், வீடுகளைத் திருத்தியமைத்தல் அல்லது புதிதாகக் கட்டுதல், கல்வி, வேலை, சமயத் தலங்கள் முதலிய விடயங்களில் தமது அந்தஸ்தினை உயர்த்துதல் முதலிய நோக்கங்களிலேயே அதிகம் முதலிடப்படுகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்களால் மேற்கொள்ளப்படும் இத்தகைய செல்வ, வளமாற்றீடு மரபு ரீதியாக அடக்கப்பட்ட சாதிக் குழுக்களின் கணிசமான எண்ணிக்கையான மக்கள் சமூகத்தில் புதிய சமூக, பொருளாதார அந்தஸ்தினை பெற்றுக்கொள்வதற்குத் துணைபோகின்றது. அதே நேரம் இந்த அபிவிருத்திகளின் விளைவாக யாழ்ப்பாணக் கிராமங்களில் அனைத்துச் சாதிக் குழுக்களிடையேயும் ஏற்கனவேயுள்ள சாதியடிப்படையிலான அடையாளங்களை மேலும் (மீள்)உற்பத்திசெய்கின்றது, (மீள்)வலிமைப்படுத்துகின்றது, (மீள்)கட்டமைக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது. சாதியடிப் படையிலான கோயிலின் அபிவிருத்தியும், அக்கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளங்களும் (சாதி ஒழுங்கின் அடிப் படையில்) ஆலய விருத்திக்குப் பணம் சேர்ப்பது முதல் மக்களின் மனப்பாங்கு வரை பல்வேறு விடயங்களிலும் செயற்பட்டு வருவதனால், இத்தகையதொரு புரிதல் யாழ்ப்பாணத்தின் கிராம மட்டங்களில் இடம்பெறும் உள்ளூர் சமய அடையாளம் தொடர்பாக மேற்கொள்வது மிகவும் எளிமையானது என்பதோடு, மிக முக்கியமானது.

ஏற்கெனவே கூறப்பட்டது போல், புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்களிடமிருந்து வரும் பணம் குடும்பம், உறவுமுறை, சாதி மற்றும் சமூகம் ஆகியவற்றின் வழியே பரிமாற்றம் பெறுகின்றது. கோயில், தேவாலயம், பாடசாலை மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களின் உட்கட்டுமான வசதிகளின் அபிவிருத்திகள் அல்லது யுத்தம், திடீர் அனர்த்தங் களால் ஏற்படும் அழிவுக்காக மேற்கொள்ளப்படும்

மனிதாபிமான அடிப்படையிலான நிதி உதவிகள் என்பன சாதி மற்றும் உறவுமுறைப் பிணைப்பு, உணர்வுசார்ந்த அல்லது சிறுபிராயப் பிணைப்பு, சமூகக் கடமைகள் முதலியவற்றின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்படும் பண உதவிகள் புலம்பெயர்ந்து வாழும் நபர்களால் அல்லது குடும்பங்களால் நேரடியாகவும், உள்ளூரில் வசிக்கும் உறவினர்களினூடாகவும் இடம்பெறுகின்றன. உண்மையில், வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணத்தில் பெருமளவு உள்நாட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களது அல்லது நெருங்கிய உறவினர்களது சமூக, பொருளாதார மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்காகவே பயன்படுத்தப்படுகின்றதே அன்றி பாரியதொரு தொழில்சார் மூலதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை யாழ்ப்பாணச் சமூகத்தின் புலப்பெயர்வு வரலாறுபூராகவும் அவதானிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது. புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்களின் முதலீட்டு முறையில் காணப்படும் சமூக, வரலாற்றுரீதியான இப்போக்கு யாழ்ப்பாணச் சமூகத்தை ஒரு பொதுவான அபிவிருத்திக்கு இட்டுச்செல்வதற்கு புலம் பெயர்ந்தவர்களின் பணத்தில் மட்டும் தங்கியிருப்பதில் ஏற்படும் சாத்தியப்பாட்டினை கேள்விக்குள்ளாக்குகின்றது. எனினும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான யாழ்ப்பாண மக்கள் வெளி நாட்டவரது பணங்களில் முற்றுமுழுதாகவோ அல்லது பகுதியாகவோ தங்கியுள்ளனர் என்பதையும் மறுக்கமுடியாது. அத்தகையதொரு யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய பார்வை இவ்வாய்வுகளிலிருந்து மேலும் வெளிப்படையாகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதியும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களும்

பரம்சோதி தங்கேஸ், காலிங்க டியூடர் சில்வா

சுருக்கம்

இக்கட்டுரை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி மற்றும் சமூகவிலக்குப் பற்றியதொரு ஆய்வுக் கற்கையாகும். இக்கற்கையின் முன்னைய பகுதி வரலாற்றுரீதியாக இடம்பெற்ற இரண்டாந்தரத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. ஏனைய பகுதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களின் ஒரு பகுதியினரை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தரவுகளினைப் பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றன. உள்ளூரில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களில் பஞ்சமர் என அழைக்கப்படும் மரபுரீதியாக ஒடுக்கப்பட்ட சாதிகளின் பிரதிநிதித்துவம் அதிகமாகக் காணப்படுவது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட மிக முக்கிய விடயமாகும். யுத்தம் சாதி, வகுப்பு வேறுபாடுகளின்றி அனைவரையும் பாதித்த போதிலும், நீண்டகால அடிப்படையில் உருவாகிய உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் வசிக்கும் அகதி முகாம்கள் யாழ்ப்பாணத்தில் எண்ணிக்கையில் அதிகமான வெள்ளாளர் சாதியினரை தவிர்த்து, மரபுரீதியாக சலுகை மறுக்கப்பட்ட சாதிக்குழுக்களின் பின்னணியில் உருவாகியதை அவதானிக்க முடிகின்றது. இக்கற்கைக்காக தெரிவு செய்யப்பட்ட மல்லாகம் என்ற கிராமத்திலுள்ள

அனைத்து இடம் பெயர்ந்தோர் முகாம்களும் நளவர், பள்ளர் சாதிகளின் பின்னணியில் உருவாகியமை குறிப்பிடத்தக்கது. உயர்ந்த சாதிகளின் ஆதிக்கத்திற்குள் இருக்கும் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடாற்று வதிலுள்ள பாரபட்சம், உயர்ந்த சாதிக்காரர்களுக்கு சொந்தமாகவுள்ள கிணற்றுத் தண்ணீரை பெற்றுக் கொள்வதிலுள்ள சிரமங்கள், நிலச் சந்தையில் பஞ்சமர் சமூகத்தினைச் சேர்ந்தோர் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் என்பன யாழ்ப்பாணச் சமூகத்தில் இன்றுவரையுள்ள சாதிப் பாகுபாட்டுக்கான எடுத்துக்காட்டுகளாகும். சாதி பலவிடயங்களில் வெளிப்படையாக அங்கீகரிக்கப் படுவதில்லை. சாதியின் முக்கியத்துவம் பற்றி பொதுவானதொரு மறுப்புநிலை காணப்படுகின்றது. எனினும், சாதிதொடர்பான உண்மையான சமூக நடைமுறைகள் மிகவும் சிக்கல் நிறைந்தவையாகவும் பல்வேறு விவாதங்களுக்கு இடம்கொடுப்பனவாகவும் காணப்படும் அதேநேரம் பயங்கரவாதம், தேசியவாதம், விடுதலைப் போராட்டம் முதலிய பெருங்கதையாடல் களில் (Meta-narratives) ஆர்வம் காட்டிவரும் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகள் அதிகாரபூர்வமாக தெரிவிக்கும் மேலெழுந்த வாரியான தரவுகளுக்கு அப்பால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய தொன்று என்பதை வலியுறுத்துகின்றன.

பின்னணி

இலங்கையில் அறுபதுகளிலும், எழுபதுகளிலும் சமூகவியல் மற்றும் மானிடவியல் கற்கைகளில் சாதி ஒரு முக்கிய ஆய்வுப் பொருளாக இருந்தது. பெரும்பாலான இக்கற்கைகள் சாதியினை சமூகத்தை ஒழுங்குபடுத்தும் சமூக முறைமையாக பகுப்பாய்வு செய்ததோடு, சமூக ஊடாட்டம், சமூக ஒழுங்கு என்பவற்றை முறைமைப்படுத்துமொரு சமூக நிறுவனமாக ஆராய்ந்தன (Banks 1957, 1960; Leach 1960, 1961; Yaman 1967, Ryan 1993; Silva 1982; David 1973, 1974a, 1974b; Arumainayagam, 1979; Pfaffenerger 1982). சாதி என்ற சமூக நிறுவனத்திற்குள் இடம்பெறும் சமூக விலக்குகளையோ சமூகப் பாகுபாடுகளையோ ஆராய்வதற்கு இக்கற்கைகள் அதிக ஆர்வம் காட்டவில்லை. இவ்வாறு சமூகத்தினை செயற்பாட்டுவாதக் கண்ணோட்டத்தில் பார்க்கும் ஆய்வுக் கற்கைகள், ஒரு சமூகத்தின் மக்களிடையே காணப்படும் பிரிவினைகள், பாகுபாடுகள் என்பவற்றை சமூக, பொருளாதார, கலாசார செயற்பாங்கில் தவிர்க்கமுடியாததொரு விடயமாகவே புரிந்துகொள்கின்றன.

இத்தகைய சமூக, பொருளாதார, கலாசார நடைமுறைகளால் ஒரு குழு சமூகத்தின் இன்னொரு குழுவிடமிருந்து வேறுபடுவதென்பது தவிர்க்க முடியாதது. யாழ்ப்பாணச் சமூகம் முழுவதுமே யுத்தம், வன்முறை என்பவற்றை எதிர்கொள்ளும் அதேநேரம் சாதி மற்றும் சமூக வேறுபாடுகளான பால்நிலை, மதம், பிரதேசம் என்பவற்றின் அடிப்படையில் உள்வாரியாக வேறுபாடுகளை வெளிப்படுத்தி நிற்கின்றது. உண்மையில் பாரம்பரிய நடைமுறைகளால் தோன்றிய சில சமூக விலக்குகள் அல்லது பாகுபாடுகள் தற்கால போர்க்காலச் சமூகத்தில் தேவையற்றதொன்றாக மாறிவரும் அதேநேரம், மீள் உற்பத்திசெய்யப்பட்டு வருவதையும் கவனிக்கக்கூடியதாக இருக்கின்றது. இக்கற்கை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களிடையே காணப்படும் சாதி அடிப்படையிலான சமூக வேறுபாட்டினை ஆராய்வதில் ஆர்வம் காட்டுவதுடன் யாழ்ப்பாணச் சமூகத்தில் கடந்த காலங்களிலும் தற்காலத்திலும் இருந்த, இருக்கின்ற சாதிவிலக்கு, சாதிப்பாகுபாடு போன்றவற்றின் வடிவங்களை அடையாளங் காணவும் முயற்சிக்கின்றது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் அறியப்பட்ட வரலாறு முழுவதும் சாதி பிரதானமான ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைக் கூறுகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. யாழ்ப்பாணச் சாதி முறைமையானது சிங்களச் சாதி முறைமையின் பல இயல்பு களுடன் ஒத்த நிலைகளைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பெரிய நிலத்திற்குச் சொந்தக்காரராகவுள்ள ஆதிக்க சாதியான வெள்ளாளர், சிங்களச் சமூகத்தில் கொய்கம சாதிக்குப் பல வழிகளில் இணையான இயல்புகளைக் கொண்டுள்ளனர். சாதி அடுக்கமைவில் இடைப்பட்ட நிலையிலுள்ளோராகக் கருதப்படும் கரையார் சிங்களச் சமூகத்தில் கராவ சாதியினை ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளனர். பிறப்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதாகக் கருதப்படும் கடமைகளைச் செய்யும் குறிப்பிட்ட சில சாதிக் குழுக்கள் ஆதிக்க சாதிக்கு சேவகம் செய்பவர்கள் என எதிர்பார்க்கப்பட்டனர். யாழ்ப்பாணச் சாதி முறைமையில் முக்கியமானதாகக் கருதப்பட்ட சடங்குசார் தூய்மை என்ற கருத்துநிலை சடங்குரீதியாகத் தூய்மையற்றதாகக் கருதப்படும் ஊழியஞ்செய்யும் சாதிக்குழுக்களைச் சமூக, பொருளாதாரப் படிநிலைகளில் நிலபுலன்களை ஆளும் வெள்ளாளர் தமது தலைமையின் கீழ் கட்டுப்படுத்திக்கொள்ள துணைபுரிந்தது. மரபுரீதியாக விவசாயம், பொருளாதாரம் மற்றும் சடங்கு ஒழுங்கு போன்ற சமூக, பொருளாதார,

பண்பாட்டுக் காரணிகளால் வெள்ளாளச் சாதியினர் சமூகத்தில் ஒரு வலுமிக்க இடத்தினைப் பெற்றிருந்தனர். ஏலவே சலுகை யளிக்கப்பட்ட வெள்ளாளக் குடும்பங்கள் காலனித்துவ காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வாய்ப்புக்களையும் (கல்வி, வியாபாரம், வர்த்தக விவசாயம் மற்றும் அரச உத்தியோகம் முதலானவை) தமதாக்கிக் கொண்டனர். இவை சாதி அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளை மேலும் அதிகரிக்கவும் சாதி முறைமையினை இறுக்கப்படுத்தவும் துணைபோயின (Pfaffenberger *1982, 1990*). வெள்ளாள அல்லது ஐரோப்பிய எழுத்தாளர்களால் யாழ்ப்பாணச் சமூகம் பற்றி எழுதப்பட்ட காலனித்துவ கால இலக்கியங்கள் வெள்ளாளரது கருத்துக்களை அதிகம் உள்ளடக்கியிருப்பதோடு இவ்வெழுத் துக்கள் பெரும்பாலும் தீண்டத்தகாதவர் எனக்கருதப்பட்ட சாதிக் குழுக்களின் நிலை தொடர்பாக மௌனத்தினையே கடைப்பிடித்தன.

யாழ்ப்பாணத்தில் சாதிமுறைமைக்கு எதிரான முதலாவது கிளர்ச்சி 1920களில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் ஆதிக்க சாதியினாலும் அதன் முகவர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டுப்பாடுகளுக்கு எதிராக உரிமை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்கள் பல கிளர்ச்சி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டன. இக்கட்டுரையின் பிற்பகுதியில் விபரிக்கப் படுவது போல, இக்கிளர்ச்சி நடவடிக்கைகள் பல்வேறு வடிவங்களை எடுத்ததுடன் நீண்டகாலமாகப் பல அமைப்புக் களாலும் (அரசியல் மற்றும் பொதுவான சமூக அமைப்புகள்) தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. ஒடுக்கப்பட்ட சாதிக் குழுக்களின் இக்கிளர்ச்சி நடவடிக்கைகளை அடக்குவதற்காக வன்முறை உட்பட பல்வேறு திட்டங்களை வெள்ளாளர் சாதியைச் சேர்ந்த தலைவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டனர். "கீழ்ச்சாதி" எனக்கருதப்பட்ட மக்களின் வேண்டுகோளுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டன. ஆனால் இறுதியாக எழுச்சிபெற்ற தமிழ்த் தேசியவாதம்(Tamil Nationalism) தமிழ்ச் சமூகத்திலிருந்த வேறுபாடுகளை சீர் செய்ய முனைந்தது. அறுபதுகள்வரை அதிகரித்துவந்த சாதி தொடர்பான போராட்டங்களும் நடவடிக்கைகளும் ஒப்பீட்டு ரீதியில் அலட்சியத்திற்குள்ளாகின. இந்நிலைக்கு சிங்கள ஆதிக்க அரசியலில் தமிழர்கள் தமது பொது மனக்குறைகளை மையப் படுத்தி இயங்கத் தொடங்கியமை முக்கிய காரணமாகும். ஃபாபன்பேகர் *(1990)* இதனை "தற்பாதுகாப்புத் தமிழ்த் தேசியவாதம்" (Defensive Tamil Nationalism) என அடையாளப் படுத்துகின்றார். இந்தச் சூழல் தாழ்த்தப்பட்ட சாதியினரின் சாதி

எதிர்ப்புப் போராட்டங்களைப் படிப்படியாக நிலைகுலையச் செய்ததோடு சிங்கள ஆதிக்க அரசுக்கு எதிரான ஒட்டுமொத்த தமிழர்களின் போராட்டமாகவும் நகர்த்தப்பட்டது. ஆரம்பத்தில் தற்பாதுகாப்புத் தமிழ்த் தேசியவாதம் பாராளுமன்ற அரசியல் வரையறைக்குள் இயங்கும் வெள்ளாள அரசியற் தலைவர் களாலேயே முன்னெடுக்கப்பட்டும் இயங்குநிலைக்கு உட்படுத்தப் பட்டும் வந்தது. இக்காலத்தில் யாழ்ப்பாணச் சமூகத்தில் செயல்நிலையிலிருந்த சாதிக்கெதிரான போராட்டம் பல வழிகளிலும் மாற்றத்திற்குள்ளாகி வந்தது. எனினும் தமிழ்த் தேசியவாதத்தினை முன்னிலைப்படுத்தித் தோற்றம் பெற்ற தமிழ் ஆயுதக்குழுக்களில் வலிமை பெற்ற LTTEயினது வளர்ச்சியோடு இந்நிலைமை மாற்றத்திற்குள்ளாகின்றது. இப்போக்கு பல்வேறு நிலைகளிலும் யாழ்ப்பாணச் சமூகத்தில் வெள்ளாளரது ஆதிக்கத்தினைக் குறைவடையச் செய்தது. ஆயினும் தமிழ்ச் சமூகத்திலுள்ள உரிமைகள் மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களின் மனக்குறைகளுக்குப் பதிலளிக்கப்பட்டதா என்பது இன்னமும் கேள்விக்குரிய ஒரு விடயமாகவே உள்ளது. LTTE அனைத்து தமிழர்களையும் சாதியற்ற ஒரு நிலையிலேயே அடையாளம் காணவிளைந்தது. அத்துடன் சாதி அடிப்படையில் பிரிவு காணப்படும் ஒரு சமூகத்தில் சாதி தொடர்பான மனக் குறைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வெள்ளாளர் அல்லாத தலைமைத்துவத்தால் வெளிப்படையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. பதிலாக பல்வேறு சாதி உணர்வு நிலைகளையும் இணைத்து அதனை பொதுத் தேசிய இயக்கத்தினை நோக்கி நகர்த்துவதே அவர்களது வெளிப் படையான முயற்சியாக இருந்தது. இந்த நிலைப்பாடு சாதி பற்றிய உண்மையானதொரு நிலைமையினையும் தொடர்ச்சியாக வெளித்தெரியும் சாதிச் சமத்துவமின்மையையும் மறைத்துள்ளது. யாழ்ப்பாணச் சமூகத்தில் என்றாவது சமாதானம் உருவாகி ஆட்சி யார் கையில் இருப்பினும் அரசியல், சமூகச் செயற் பாடுகளில் சாதி மீள் உருவாக்கம் பெறும்நிலையே காணப்படு கின்றது.

இத்தகையதொரு சிக்கலான சூழ்நிலையில் யாழ்ப்பாண சமூகத்தில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டின் போக்கு மற்றும் பண்பு என்பவற்றை அடையாளம் காண்பதாகவும் மதிப்பீடு செய்வதாகவும் இக்கற்கையுள்ளது. இக்கட்டுரை யாழ்ப் பாணத்தின் சாதி தொடர்பான தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதுடன் ஆரம்பமாகி, இடப்பெயர்வு மற்றும் யுத்த சூழ்நிலை களில் அடக்கப்பட்ட சாதிக் குழுக்களின் நிலைமைகளைப் பரீட்சிக்கின்றது. தற்போது நிலவும் சூழ்நிலையில் யாழ்ப்

பாணத்தில் பாதிக்கப்பட்ட சனத்தொகை தொடர்பாக எத்தகையதொரு காத்திரமான இனவரைவியல் ஆய்வினையும் மேற்கொள்ள முடியாதிருப்பதால் யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி அடிப்படையிலான பாகுபாடு தொடர்பான விவகாரங்களை எடுத்துரைப்பதற்கு எம்மிடையே போதிய தகவல்களற்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது. துரிதமாக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்விலிருந்து பெறப்பட்ட முதற்தரத் தகவல்களைக் கொண்டு சாதி அடிப்படையிலான பாகுபாடு பற்றியதொரு விளக்கத்தினைக் கொடுப்பதற்கான முயற்சியே இங்கு மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி

யாழ்ப்பாணச் சாதியமைப்பில் தனித்துவமான பல விடயங்கள் உள்ளன. எல்லாவற்றுக்கும் முதன்மையாக, தென்னிந்தியச் சாதி முறைமையுடன் ஒப்பிடும் போது, யாழ்ப் பாணச் சாதி முறைமை அதன் அடுக்கமைவு உள்ளிட்ட முக்கிய அம்சங்களில் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளது என்பது புரிந்து கொள்ளப்படவேண்டிய விடயமாகும். தென்னிந்தியச் சாதி அடுக்கமைவில் பிராமணர் உயர்ந்த அந்தஸ்தினைப் பெறும் அதேவேளை, யாழ்ப்பாணச்சாதி அமைப்பில் வெள்ளாளர் உயர் நிலையில் உள்ளோராகக் கணிப்பிடப்பட்டனர். வெள்ளாளர் தமது இந்துக் கோயில்களில் சடங்கு மற்றும் சம்பிரதாயங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு இந்தியாவிலிருந்து பிரா மணர்களை வரவழைத்ததாலும் பிராமணர்கள் வெள்ளாள நிலச் சுவாந்தர்களுக்கு ஊழியம் செய்தமையாலும் யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் வெள்ளாளரைவிடக் குறைந்த அந்தஸ்தினைக் கொண்டவராகக் கணிப்பிடப்பட்டனர் (Pfaffenberger 1982).

யாழ்ப்பாணச் சமூகத்தில் "சாதிக்குள் சாதி" பார்க்கப்படுவது மரபுரீதியாக இருந்தது. இன்னொரு வகையில் கூறுவதாயின் ஒரு தனிப்பட்ட சாதிக் குழுவில் வேறுபட்ட சமூக அடுக்கமைவைக் கொண்ட சாதிகள் காணப்பட்டன. அதாவது ஒவ்வொரு சாதிக் குழுவும் அடுக்கமைவு அடிப்படையிலான பிரிவுகளைத் தன்னுள் உள்ளடக்கியிருந்தது. உதாரணமாக வெள்ளாளர் சாதியினரிடத்தே காணப்பட்ட சமூக அந்தஸ்தின் அடிப்படையில் அகம்படியார், மடைப்பள்ளி, தனக்காரர், உள்ளூர்ச் செட்டியார், சிறு விவசாயி மற்றும் செம்பு எடா வெள்ளாளர் போன்ற குழுக்கள் அடையாளம் காணப்பட்டனர். அதே போன்று திமிலர், முக்குவர், போன்றோர் கரையார் சாதியிலும் மரமேறிகள், செருப்புக்கட்டிகள் மற்றும் வேர்க்குத்திப் பள்ளர் போன்றோர் பள்ளர் சாதியிலும்

அடையாளம் காணப்பட்டனர். இவ்வாறான உப பிரிவுகளை உள்வாங்கி இலங்கைத் தமிழர் சாதிகளைக் கணிப்பிடுகையில், சாதிகளின் எண்ணிக்கை மிகப் பெரிதாக இருந்தது. சைமன் காசிச்செட்டி (1934) இலங்கைத் தமிழர்களிடையே அறுபத்தைந்திற்கும் மேற்பட்ட சாதிகள் உள்ளதென "சாதிகள், வழக்கங்கள், நடத்தைகள் மற்றும் தமிழ் இலக்கியம்" எனத் தலைப்பிடப்பட்ட தனது நூலில் குறிப்பிடுகின்றார். இத்தகைய சாதிக் குழுக்கள் பெருஞ் சாதிக் குழுமங்களின் தோற்றத்தோடு (Formation of Mega Caste Groups) எண்ணிக்கையில் குறைந்து செல்கின்றன (Sivathamby, 2005). டேவிட் (1974a, 1974b) மற்றும் ஃபாபன்பேகர் (1982) ஆகியோரது கற்கைகள் யாழ்ப்பாணச் சமூகத்தில் இருபது பெரும் சாதிக் குழுக்கள் இருப்பதாக அடையாளம் காண்கின்றன. வெள்ளாளர், பிராமணர், சைவக் குருக்கள், பண்டாரி, சிற்பாச்சாரி, கோவியர், தட்டார், கரையார், தச்சர், கொல்லர், நட்டுவர், கைக்குழார், சாண்டார், குயவர், முக்குவர், வண்ணார், அம்பட்டர், பள்ளர், நளவர் மற்றும் பறையர் ஆகியோரே இவ்விருபது சாதிக்குழுக்களுமாகும். இச்சாதிக் குழுக்களின் மரபுரீதியான தொழில்கள் மற்றும் அவர்களது அடிமை, குடிமை அந்தஸ்து ஆகியன அட்டவணை—1 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் வேறுபல பகுதிகளைப் போன்று யாழ்ப்பாணத்திலும் ஒவ்வொரு சாதியும் கொண்டுள்ள சனத்தொகை தொடர்பான மிகச் சரியான தகவல்கள் இல்லை. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருவேறு மானிடவியலாளர்களால் (கெனத் டேவிட் மற்றும் மைக்கல் பாங்ஸ்) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகையில் 50 வீதமானோர் "உயர் சாதி" வெள்ளாளராய் இருந்தனர் எனக் கணிப்பிடப்பட்டது. அத்தோடு கரையார் 10% மாகவும், கோவியர் 7% மாகவும், பள்ளர் 9% மாகவும், நளவர் 9% மாகவும் கணிப்பிடப்பட்டனர். யாழ். குடாநாட்டின் சனத்தொகையில் மேலே குறிப்பிடப்பட்ட பதின்மூன்று சாதிகளில் எதுவும் 3% க்கும் மேலான இடத்தினைப் பெறவில்லை.

யாழ்ப்பாணச் சமூகத்தைப்பற்றி எழுதிய டேவிட் (1973a, 1973b, 1974a, 1974b), ஃபாபன்பேகர் (1982, 1990), பாங்ஸ் (1960), அருமைநாயகம் (1979, 2000) மற்றும் சிவத்தம்பி (2005) போன்ற புலமையாளர்கள் சாதிகளை வெவ்வேறு முறைகளில் பாகுபடுத்தினர். உதாரணமாக, டேவிட் (1973:36) யாழ்ப்பாணச் சாதிகளை "உயர் சாதி", "நல்ல சாதி", மற்றும் "குறைந்த சாதி" எனப் பாகுபடுத்துகின்றார். சிவத்தம்பி (2000:10) "உயர் சாதியினர்", "உயர் சாதி அல்லாதோர்" மற்றும் "குடிமக்கள்" என

அட்டவணை: 1

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிகள்

சாதிப்பெயர்கள்	மரபுத்தொழில்	அடிமைகள் குடிமைகள் அந்தஸ்தது
	தீண்டத்தக்கவர்கள்	
பிராமணர்	கோயில் பூசகர்	
சைவக் குருக்கள்	பிராமணர் அல்லாத கோயில்களில் பூசகர்	
வெள்ளாளர்	நிலவுடமையாளர், விவசாயி	
பண்டாரம்	பூமாலை கட்டுபவர், கோயில் உதவியாளர்	அடிமை
சிற்பாச்சாரி	கோயில் சிற்பாச்சாரி	குடிமை
கோவியர்	வீட்டு வேலைக்காரர்	குடிமை
தட்டார்	பொற் கொல்லர்	குடிமை
கரையார்	ஆழ்கடல் மீனவர்	
தச்சர்	மரவேலை செய்பவர்	குடிமை
கொல்லர்	இரும்பு வேலை செய்பவர்	
நட்டுவர்	மங்கள நிகழ்வில் வாத்தியம் இசைப்பவர்	குடிமை
கைக்குழார்	துணிநெசவு செய்பவர்	
சாண்டார்	நல்லெண்ணெய் உற்பத்தியாளர்	
குயவர்	மட்பாண்டம் செய்வோர்	
முக்குவர்	ஆழமற்ற பிரதேச மீனவர்	
வண்ணார்	சலவைத் தொழிலாளர்	
	தீண்டத்தகாதவர்கள்	
அம்பட்டர்	சிகை அலங்கரிப்பாளர்	குடிமை
பள்ளர்	ஒப்பந்தத் தொழிலாளர்	அடிமை
நளவர்	ஒப்பந்தத் தொழிலாளர்	அடிமை
பறையர்	பறை மேளம் அடிப்பவர்	குடிமை

வேறுபடுத்துகின்றார்

வெள்ளாளர், பிராமணர், சைவக் குருக்கள், கோவியர் மற்றும் சைவச் செட்டி ஆகிய சாதிக் குழுக்களை டேவிட் உயர் சாதியாகக் கருத, சிவத்தம்பி வெள்ளாளர் மற்றும் பிராமணர்களை உயர் சாதி எனக் கருதுகின்றார். யாழ்ப்பாணச் சாதி அடுக்கமைவிலிருந்த குடிமக்கள் மற்றும் அடிமைகள் என்ற பாகுபாடுகளும் முக்கிய விடயங்களாகும். வேறுபட்ட அளவீடுகளைப் பயன்படுத்தி பல்வேறு புலமையாளர்களும் சில சாதிக் குழுக்களை அடிமைகள் என்ற வகைக்குள்ளும் உட்படுத்துகின்றனர். உதாரணமாக, ஒல்லாந்தரின் கணிப்பீட்டின்படி கோவியர், நளவர், பள்ளர், சாண்டார் மற்றும் சிவியார் ஆகியோர் "குடிமைகள்" என்ற குழுவினுள் உள்ளடங்குவர் எனச் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். இன்னொரு பக்கத்தில், டேவிட் (1974) மற்றும் ஃபாபன்பேகர் (1982) ஆகியோர் கோவியர், பள்ளர் மற்றும் நளவர் ஆகிய சாதிக் குழுக்களை "அடிமைகள்" என்ற வகுப்பினுள்ளும் தட்டார், தச்சர், கொல்லர், குயவர், வண்ணார், அம்பட்டர் மற்றும் பறையர் ஆகிய சாதிக் குழுக்களை குடிமைகள் என்ற வகுப்பினுள்ளும் உள்ளடக்குகின்றனர்.

அதேபோன்று "தீண்டத்தக்கவர்" (Touchables), தீண்டத்த காதோர் (Untouchables) ஆகிய சாதிக்குழுக்களும் யாழ்ப்பாணச் சாதியமைப்பில் முக்கியமானதொன்றாக இருந்தன. அட்டவணை— Iஇன் அடிப்படையில், அம்பட்டர், பள்ளர், நளவர் மற்றும் பறையர் "தீண்டத்தகாதவர்கள்" எனக் கருதப்பட்டனர். வண்ணார் சாதியினைச் சேர்ந்தோர் மரபுரீதியாக கோயிலுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டமையால் (வெள்ளை கட்டும் நோக்கத்திற்காக) அச்சாதியினைச் சேர்ந்தோர் "தீண்டத்தக்கவராகக்" கருதப்பட்டனர். இவ்விடயத்தினை பாங்ஸ் (1960:65) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; "வண்ணார் கோயில்களுக்குள் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டமையால், அவர்கள் தீண்டத்தக்கவராயும் அம்பட்டருக்கு கோயில்களின் உட்புறம் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதனால், அவர்கள் தீண்டத்தகாதவராயும் கணிக்கப்பட்டனர்". இவ்விடயம் தென்னிந்திய சாதி அமைப்புமுறையின் சில பண்புகள் யாழ்ப்பாணச் சாதியிலும் காணப்படுவதை தெளிவுபடுத்துகின்றது. தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் "தீண்டாமை" என்ற விடயம் வழக்கத்திலில்லை என்பது பொதுவாக விவாதிக்கப்படும் விடயமாகும். தற்காலச் சமூகத்தில் வெளிப்படையானதாகவோ அல்லது வலிமை மிக்கதாகவோ "தீண்டாமை" என்ற விடயம் இல்லை என்ற கருத்துடன் நாமும் உடன்படுகின்றோம். சாதி நடைமுறைகள், சாதி தொடர்பான திறந்த கலந்துரையாடல்

என்பவற்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப் பட்ட தடைகள், பெரியளவிலான சனத் தொகை இடப்பெயர்வு மற்றும் யுத்தம் போன்ற காரணங்களால் கடந்த சில தசாப்தங் களாக யாழ்ப்பாணத்தில் சாதி பல்வேறு மாற்றங்களுக்குள்ளாகி வருகின்ற அதேநேரம், மக்களின் சமூக, கலாசார மற்றும் பொருளாதார வாழ்க்கையின் சில அம்சங்களில் சாதி தொடர்ச்சியான புழக்கத்திலிருந்து வருகின்றது.

தீண்டாமைக் கொள்கைகளும் வழக்கங்களும்

இலங்கைத் தமிழர்களிடையே சமயரீதியாக விதிக்கப்பட்ட தீண்டாமைக் கொள்கை வழக்கத்திலிருந்தது. வண்ணார், அம்பட்டர், பள்ளர், நளவர் மற்றும் பறையர் ஆகிய சாதிக் குழுக்கள் யாழ்ப்பாணச் சாதியமைப்பில் தாழ்நிலை அந்தஸ்தினைக் கொண்டவர்களாகக் கருதப்பட்டனர். இந்த ஐந்து சாதிக் குழுக்களும் கூட்டாகப் "பஞ்சமர்" என அழைக்கப் பட்டனர். இந்த ஐந்து சாதிக் குழுக்களும் யாழ்ப்பாணச் சமூகத்தில் "தீண்டத்தகாதோர்" என்ற அந்தஸ்தினைப் பெற்றிருந்தனர் (Raghavan 1953, 1957). பாங்ஸ் (1957) மற்றும் டேவிட் (1974) ஆகியோரது கணிப்பின்படி யாழ்ப்பாணத்தின் சனத்தொகையில் இப்பஞ்சமர் சாதியைச் சேர்ந்தவர்கள் 18 வீதமாக இருந்தனர். ஐம்பதுகளில் ஆதிக்க சாதிக் குழுவினரால் பஞ்சமர் குழுவுக்கு எதிராக சில தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இரகுநாதன் (2004: 22—23) பஞ்சமருக்கு எதிராக வழக்கிலிருந்த பின்வரும் 24 தடைகளைப் பல்வேறு ஆதாரங்களுடன் பட்டியல்படுத்துகின்றார்:

1. ஆண்கள் மேலங்கி அணியக் கூடாது.
2. ஆண்கள் கணுக்கால் வரைக்கும் வேட்டி கட்டக் கூடாது.
3. ஆண்கள் தோளில் சால்வை போடக் கூடாது.
4. பெண்கள் மேற்சட்டை போடக் கூடாது.
5. பெண்கள் தாவணி போடக் கூடாது.
6. சாலைகளிலும் பொது இடங்களிலும் கண்டபடி நடமாடக்கூடாது. அனுமதிக்கப்பட்ட பாதைகளில் நடமாடும் போது தமது வருகையை உணர்த்தும் வகையில் காவோலையை இழுத்துச் செல்லுதல் வேண்டும்.
7. நகை அணியக் கூடாது.
8. திருமணத்தில் தாலி கட்டக் கூடாது.
9. உயர் சடங்குகளின் போது வெள்ளை கட்டக் கூடாது.
10. விசேட சடங்குகளின் போது வெள்ளை கட்டக் கூடாது.
11. பிரேதங்களைத் தகனம் செய்யாது புதைக்க வேண்டும்.

12. உயர் சாதியின் கூடலையினைப் பயன்படுத்தக் கூடாது.
13. நன்மை, தீமைகளின்போது வாத்தியங்கள் பயன்படுத்தக் கூடாது.
14. உயர் சாதியின் குளங்களைப் பயன்படுத்தக் கூடாது.
15. குடைபிடிக்கக் கூடாது.
16. பாதணிகள் அணியக் கூடாது.
17. கல்வி கற்க முடியாது.
18. உயர் சாதியின் தெய்வங்களைத் தமது கோயில்களில் பிரதிஷ்டை செய்யக் கூடாது.
19. உயர் சாதியினரின் கோயில்களுக்குள் செல்லக் கூடாது.
20. தேநீர்ச் சாலைகளுக்குள் போகக் கூடாது.
21. பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளக் கூடாது.
22. சைக்கிள், கார் போன்ற வாகனங்களில் பிரயாணம் செய்யவோ அவற்றைச் செலுத்தவோ கூடாது.
23. பஸ் வண்டியின் ஆசனங்களில் உட்காரக்கூடாது.
24. பிற்காலத்தில் பாடசாலை அனுமதி கிடைத்த போதிலும் ஆசனங்களில் உட்காரக்கூடாது.

மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் பஞ்சமர் குழுக்கள் மீது திணிக்கப்பட்ட தடைகள் மிகவும் பரந்து பட்டவையாக இருந்தது தெரிகின்றது. பொது இடங்கள், சேவைகள், மற்றும் பொதுக் குடிநீர் போன்ற வற்றினை உபயோகிப்பதற்கு பஞ்சமருக்குத் தடை இருந்ததுடன், அவர்களால் அணியப்படும் ஆடைகளிலிருந்தும் அவர்கள் இனங் காணப்பட்டனர். தவிர மரணச்சடங்குகளில் பெண்கள் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து அழும் மரபு காணப்பட்ட போதிலும், "தாழ்ந்த சாதியைச்' சேர்ந்ததாகக் கருதப்பட்ட பெண்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் "உயர்ந்த சாதிப்''' பெண்களுடன் இணைந்து அழுவது தவிர்க்கப்பட்டிருந்தது. "உயர் சாதிக்காரரின்" மரணச் சடங்குகளில் தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் கூடி அழுவதற்கென தனியான இடம் ஒதுக்கப் பட்டிருந்தது. தீண்டாமைக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக மேற்கூறப்பட்ட பஞ்சமருக் கெதிரான தடைகளில் பெரும்பாலானவை ஒழிக்கப்பட்டுள்ள போதும் சில தடைகள் சில மாற்றங்களுக்குட்பட்டு இன்றும் வழக்கத்திலுள்ளன.

யாழ்ப்பாணச் சமூகத்தில் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள்

1920களைத் தொடர்ந்து பஞ்சமர் மீதிருந்த சமூகத் தடைகளுக்கு எதிராகப் போராட்டங்கள் வெளிக்கிளம்பின. 1927இல் முதன் முறையாக ஒதுக்கப்பட்ட வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ் ஊழியர் சங்கம் பஞ்சமர் மீது திணிக்கப்பட்ட தடைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென நிறுவப்பட்டது. 1928இல் இம்மன்றம் பஞ்சமர்களின் பிள்ளை களுக்குப் பாடசாலைகளில் சம ஆசனம் மற்றும் சமபோசனம் வழங்கப்பட வேண்டுமென்று ஒரு போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தது. இரண்டு வருடத்திற்கு மேலான தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக, அரசாங்க உதவியினால் செயற்படும் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாணவர்கள் நிலத்திலே உட்காருவதற்குப் பதிலாக, அவர்களுக்கு ஏனைய சாதி மாணவர்க்குள்ள நடைமுறைபோல் ஆசனங்கள் கொடுக்கப்பட வேண்டுமென அரச நிர்வாகம் உத்தரவு பிறப் பித்தது. இப்புதிய நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவந்த 15 பாடசாலைகளை "உயர் சாதி" இந்துக்கள் எரித்ததன் மூலமாக இந்நடைமுறைக்கான தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர். 1930களில் "உயர் சாதி" அரசியல் குழாத்தினர் சம ஆசன ஏற்பாடு களுக்கான உத்தரவினை விலக்குமாறு பாடசாலை அதிகாரி களுக்கு வேண்டுகோள் விடுத்தபோதும் அவர்களின் இம்முயற்சி வெற்றிபெறவில்லை. (மேலதிக தகவல்களுக்கு பார்க்க வெகுஜனன், இராவணா 2007).

1931ஆம் ஆண்டில் வெளிவந்த டொனமூர் சட்டவாக்கத்தின் கீழ் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை அறிமுகப்படுத்தப் பட்ட போது "உயர் சாதியினரின்" எண்ணவோட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி நிற்கும் எஸ். நடேசன் போன்ற பிரதான அரசியற் தலைவர்கள் சலுகைகள் மறுக்கப்பட்ட சாதியினருக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கக்கூடாதென்ற நிலைப்பாட்டி லிருந்ததுடன் சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட வாக்களிக்கும் உரிமை தடைசெய்யப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் தமது வாக்களிக்கும் உரிமையைக் கைவிடும் அளவிற்கும் சென்றனர். மேலும் இந்நடைமுறை தப்பான கைகளுக்கு அதிகாரத்தினை மாற்றுவதற்கு வழிகோலும் என்றும் எச்சரித்தனர். வெள்ளாளத் தலைவர்களின் இவ்வேண்டு கோளை மறுத்து அனைவருக்கும் வாக்குரிமை என்பது அமுல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்துவந்த காலப் பகுதிகளில் பஞ்சமருக்கு எதிராக ஆதிக்க சாதியினரால் மேற் கொள்ளப்பட்ட தடைகள் மென்மேலும் காத்திரமடைந்தன.

பஞ்சமருக்கு எதிரான இப்போக்குகளை எதிர்கொள்ளும் நோக்குடன் 1943ல் வட இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட சாதிகளின் வேண்டுகோளிற்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் உட்பட தாழ்த்தப்பட்ட சாதிகளின் உரிமைகளை முன்நிலைப்படுத்தி பல எதிர்ப்பு நடவடிக் கைகளை இவ்வமைப்பு ஆரம்பித்து வைத்தது. யாழ்ப்பாணச் சமூகத்தில் வெள்ளாளருக்கு இருந்த உறுதியான பிடி, அவர்களது பொருளாதார, அரசியல், சடங்கு மற்றும் கருத்தியல்சார் ஆதிக்கம் போன்ற விடயங்களால், பஞ்சமர் தம்மை உறுதிப்படுத்துவது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை.

1950களில் "உயர் சாதிப்" பழைமைவாதிகளினை அதிகளவில் கொண்டிருந்த தமிழ்க் காங்கிரசை (Tamil Congress) எதிர்த்து நின்ற தமிழரசுக் கட்சியில் (Tamilarasu Party) பஞ்சமர் குழுவைச் சேர்ந்த பலரும் இணைந்தனர். 1957களில் உருவாக்கப்பட்ட சமூகக் குறைபாடுகள் சட்டத்தினை (Social Disabilities Act) உருவாக்கு வதற்கு தமிழரசுக் கட்சி துணையாக இருந்தது. இச்சட்டம் பொது இடங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடு பாராட்டப்படுமாயின் அது தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்று உணர்த்தி நிற்கின்றது. ஒக்டோபர் 1958இல் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேநீர்க்கடைப் பிரவேச இயக்கத்தினை (Teashop Entry Movement) ஆரம்பித்து வைக்கின்றது. நவம்பர் 1958 இனைத் தொடர்ந்து சில முஸ்லிம் தேநீர்க்கடைச் சொந்தக்காரர் பஞ்சமர்களுக்கு அனுமதி வழங்கி நின்றனர். இதனைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஏனைய பல தேநீர்க் கடைகள் பஞ்சமர் குழுக்களுக்கான அனுமதியை வழங்கியிருந்தன.

பஞ்சமர்களின் ஆலயப் பிரவேச இயக்கம் (Temple Entry Movement) 1968ல் இலங்கைச் சமவுடமைக் கட்சியின் (Communist Party) உதவியுடன் வலிமை பெற்றது (வெகுஜனன், இராவணா 2007) ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்கு தமிழரசுக் கட்சியிலிருந்த "உயர் சாதித்" தலைவர்கள் பலர் ஆதரவு அளிக்காது இருந்தமையால், பஞ்சமர்களுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே முறிவு ஏற்பட்டது. இப்போராட்டத்தை எதிர்த்த ஆதிக்க சாதியினரின் செயற்பாடுகள் வன்முறை மற்றும் படுகொலை களுக்கு இட்டுச் சென்றன. இவ்விடயத்தினை ஃபாபன்பேகர் (1990) பின்வருமாறு விவாதிக்கின்றார், "இக்கட்டத்தில் தமிழ்த் தேசியவாதம் தமிழ்ச் சமூகத்தினுள் சாதியினால் ஏற்பட்ட பிளவுகளை ஆற்றுவதற்கான தற்காப்பு தேசியவாதமாக வடிவம் கொள்கின்ற அதேநேரம் சிங்கள ஆதிக்க அரசிடமிருந்து வரும்

பெரிய சவால்களுக்கான எடுத்துரைப்பாகவுமுள்ளது. ஆலயப் பிரவேசப் போராட்டம் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உட்பட வேறும் பல பிரதான யாழ்ப்பாண இந்துக் கோயில்களுக்குள் பஞ்சமர்கள் சென்று வழிபாடாற்றுவதற்கான அனுமதியை வழங்கியது என்ற அளவுடன் வெற்றி கண்டது"

இலவசக் கல்வி, அரசு மற்றும் சிவில் சமூகத்தின் தலையீடு, பஞ்சமர்களின் ஒரு பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் போன்ற காரணங்களால் மரபுரீதியாக பஞ்சமர்கள் மீது திணிக்கப்பட்ட தடைகளில் பல இல்லாமல் போயின. 1980 களைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் சாதியின் அடிப்படையில் இடம்பெறும் பாகுபாட்டுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் பஞ்சமர்கள் மீதான தடைகளை மேலும் இல்லாதொழித்தன.

1980களைத் தொடர்ந்து இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தினால் சாதி அடிப்படையிலான பாகுபாட்டிலும், சாதி முறைமையிலும் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டன. முதலாவதாக, தமிழ் ஆயுதப் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம், அரச தரப்பில் செய்யப்படும் நெருக்கீடு மற்றும் முழுத் தமிழரையும் குறிவைத்து மேற்கொள்ளப்படும் அரச இராணுவ நடவடிக்கைகள் என்பனவற்றினால் சாதியைக் கருத்தில் கொள்ளாத ஒருமைப்பட்ட இன ஐக்கியம் தமிழ் இனத்துவக் குழுக்களிடையேயும் வளர்ச்சியடைந்தது (Daniel & Thangaraj 1994). இரண்டாவதாக, 1995இல் இடம்பெற்ற யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கான மக்களின் நீண்டதூர இடப்பெயர்வினால் வேறுபட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் அவசரகால நிலைமைகளில் ஒருவருடன் ஒருவர் இணைந்து செயற்படவேண்டி இருந்தது. இத்தகைய விடயங்கள் சாதி அடிப்படையிலான சமூக வேறுபாடு மற்றும் தீண்டாமை ஆகிய விடயங்களின் நிலையான தன்மைகளைக் கடினத்திற் குள்ளாக்கியது (Hoole முதலானோர் 1990). மூன்றாவதாக, தீவிரமான போரியல் போக்கு மரபுரீதியாக இருந்த வெள்ளாள அரசியல் அதிகாரத் தலைமைத்துவத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியது. தொடர்ந்து கொண்டிருக்கும் பாதுகாப்பின்மை காரணமாக, யாழ்ப்பாணச் சமூகத்தின் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளிலிருந்த "உயர் சாதி", "உயர் வகுப்பு" வெள்ளாளக் குடும்பங்களின் வெளிநாடு நோக்கிய பெரியளவிலான புலப் பெயர்வு மற்றும் முன்னெப்போதும் இல்லாதவாறு "தாழ்த்தப்பட்ட சாதிகள்" தாமாகவே தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பமை போன்றவற்றால் சாதி நிலைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டன.

இறுதியாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சி, பெரும்பாலும் சமூகத்தின் நடுத்தர மற்றும் தாழ்ந்த சாதிகளிலிருந்து வந்த புலிகளின் தலைவர்கள், போராளிகளின் சாதிச்சார்பற்ற பயிற்சி மற்றும் அசைவியக்கம், சாதி பற்றிய வெளிப்படையான தடை என்பன சமூகத்தில் சாதிப்படி நிலையை வலிமைமிக்க சக்தியாக இல்லாதொழித்தன. எனினும் இத்தகைய முன்னேற்றங்கள் மக்களின் மனங்களிலே பதிந்துள்ள சாதி வேறுபாடுகளை உண்மையில் இல்லாது செய்துள்ளதா என்பதற்குப் போதிய சாட்சிகள் இல்லாதுள்ளது. இன்றும் திருமணம், சடங்குகள் மற்றும் நிரந்தர சமூக ஐக்கியம் என்பவற்றில் சாதியின் பங்கினை நடைமுறையில் அவதானிக்க முடிகின்றது. சமூக, அரசியல் அழுத்தங்கள் காரணமாக ஏற்பட்ட சாதி பற்றியதொரு பாராமுகப் போக்கு, சாதி தொடர்பாக அரசியல் ரீதியாகத் திணிக்கப்பட்ட மௌனநிலை போன்ற விடயங்களால் தற்கால யாழ்ப்பாணத்தில் சாதி பற்றிய எத்தகையதொரு அனுபவம்சார் ஆய்வுகளைச் செய்வதிலும் கடினம் உள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொதுவாக யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி பற்றி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்காததொரு கொள்கையினைக் கடைப்பிடிக்கின்றது. இது ஒருவகையில் தமிழ்த் தேசிய வாதத்தினைக் கடைப்பிடிக்கும் ஆர்வத்தில், சாதியின் மறுதலிப்பு நோக்கியதொரு போக்கினைப் பிரதிபலித்து நிற்கின்றது எனலாம்.

யுத்தம், இடப்பெயர்வு, சாதி

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி முறைமை அண்மைக்கால சமூக மாற்றங்கள் யுத்தம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட காரணிகளால் அதிகளவு தாக்கத்திற்குள்ளாகி வருகின்றது. யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்திற்குள்ளேயும் யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையின் வேறு பல பிரதேசங்களுக்கும் பெரியளவிலான இடப்பெயர்வு இடம்பெறுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து கடல்கடந்த நாடுகளை நோக்கி சட்டரீதியான முறையிலோ அல்லது சட்டத்துக்குப் புறம்பான முறையிலோ பெரும் எண்ணிக்கையில் மக்கள் புலம்பெயர்ந்து செல்கின்றனர் (Daniel & Thangaraj 1994, Fuglerud 1999). ஈழப்போர் ஒன்று (1983–1987), ஈழப்போர் இரண்டு (1989–1993), ஈழப்போர் மூன்று (1995 – 2002) மற்றும் ஈழப்போர் நான்கு (2006–2009) ஆகிய காலகட்டங்களில் அதிகரித்துச் சென்ற முரண்பாடுகள் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளை ஏற்படுத்தியதோடு வடமாகாணத்தின் சனத்தொகைப் பரம்பலில் கணிசமான தாக்கத்தினையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இடப்பெயர்வானது

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் தற்காலிக இருப்பிடங்களில் வேறுபட்ட சாதிப் பின்னணியினைச் சேர்ந்தவர்களையும் ஒன்றிணைய வைத்தது. 1980களிலிருந்து தொடர்ந்த யுத்தத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்தும் வட மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களிலிருந்தும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளனர் (Sidharthan 2003). அனைத்துச் சாதிப்பின்னணிகளைச் சேர்ந்தவர்களும் யாழ்ப்பாணத்தினை விட்டு வெளியேறுகின்றபோதும் வெள்ளாள சாதிப் பின்னணியிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான மக்கள் கொழும்பு மற்றும் கடல்கடந்த நாடுகளை நோக்கி வெற்றிகரமாகச் செல்கின்றனர். இதற்கு குடாநாட்டுக்கு அப்பால் விரிவுபட்டுள்ள அவர்களது சமூக வலைப் பின்னல் ஒரு முக்கிய காரணமாகின்றது (Sidharthan 2003). அதிகமான வெள்ளாள நிலச்சுவாந்தர்களின் துரித இடப்பெயர்வு, அவர்களது நிலங்களில் ஏனைய சில சாதிகளைச் சேர்ந்தவர்க்கு விலைபோகும் நிலைமை, தமிழீழ விடுதலைப் புலிகளால் அமுல்படுத்தப்பட்ட சாதிக்கெதிரான தடை முதலான விடயங்கள் யாழ்ப்பாணச் சாதி முறைமையின் அடக்குமுறைப் பண்பினை பலவீனப்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும், இத்தகைய அண்மைக்காலப் போக்குகளினால் முன்னைய சாதி அடிப்படையிலான பாகுபாட்டு நடைமுறைகள் மற்றும் வெள்ளாள சாதிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் இடையேயிருந்த சமூக இடைவெளிகள் முதலானவை இல்லாது போயுள்ளது அல்லது பெரியளவில் குறைந்துள்ளது என்பதற்கு ஆதாரம் இல்லை. இலங்கையிலுள்ள சிங்கள மற்றும் இந்தியத் தமிழ்ச் சமூகங்களிடையே காணப்படுவது போல், யாழ்ப்பாணச் சமூகத்திலும் சாதி என்ற விடயம் வெளிப்படையாகத் தெரியாததொரு விடயமாகக் காணப்படுகின்றது. இதுவே அண்மைக்கால மாற்றங்களில் குறிப்பிட்டுப் பேசக்கூடியதொரு பண்பாகவுள்ளது.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களும் சாதி அடிப்படையிலான பாகுபாடும்

யுத்தத்தினாலும் 2004 டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியினாலும் இடம்பெற்ற அழிவுகள் யாழ். குடாநாட்டில் அதிகமான மக்களை சாதி, வர்க்கம் மற்றும் பால்நிலை என்ற வேறுபாடில்லாது பாதித்துள்ளது (Silva 2003). எனினும் இத்தாக்கங்களின் விளைவுகள் வேறுபட்ட மக்கள் குழுக்களிடையே வெவ்வேறான வடிவங்களைப் பெற்றுள்ளது. 1981இனைத் தொடர்ந்து சனத்தொகைக் கணிப்பீடு மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதனால் யாழ். குடாநாட்டின்

தற்கால சனத்தொகையின் எண்ணிக்கை பற்றி மிகச் சரியான தகவல் இல்லை. 2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக் கெடுப்பின்படி யாழ். குடாநாட்டின் மொத்தச் சனத்தொகை 300,000 தொடக்கம் 500,000 என்ற வீச்சினைப் பெறுகின்றது. இச்சனத் தொகையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் (1/3 தொடக்கம் 1/5 கணிக்கப்பட்ட மொத்தச் சனத்தொகையில் தங்கியுள்ளது) உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்களில் பெரும்பான்மையானோர் (100,756) தமது உறவினர் களுடனும் நண்பர்களுடனும் வசித்து வருகின்றனர். ஏனையோர் (11,169) அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் உதவியளிக்கப்பட்டுவரும் முகாம்களில் வசிக்கின்றனர். அரச படைகளால் அமுல்படுத்தப்பட்ட "உயர் பாதுகாப்பு வலையம்" மற்றும் தொடர்ந்து வரும் பாதுகாப்பற்ற சூழ்நிலை போன்ற வற்றால் முகாம்களில் வசிக்கும் உள்ளூரில் இடம் பெயர்ந்த வர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திருப்பிச் செல்லமுடியாத நிலையிலுள்ளனர். பொதுவாக இவர்கள் வரையறுக்கப்பட்ட வளங்களுடனும் பொருளாதார வசதிகளற்றும் இருப்பதனால் வேறு இடங்களுக்குச் செல்லவோ அல்லது புதிதாகத் தமது வாழ்க்கையைக் கட்டியெழுப்பவோ முடியாத நிலையிலுள்ளனர். குறிப்பாக உள்ளூரில் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் வரையறுக்கப்பட்ட வளங்கள், வரையறுக்கப்பட்ட சமூகத் தொடர்புகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளுவதற்குப் போதிய வசதியின்மை எனப் பல்வேறு பிரச்சினைகளுடன் வறுமை நிலைக்குள் வாழ்கின்றனர். 31.10.2007 இல் வெளிவந்த கணிப்பீட்டின்படி, யாழ். மாவட்டத்தில் உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களுக்காக 81 முகாம்கள் இருந்தன. உள்ளூரில் இடம் பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் அனைத்து மக்களின் சாதிப் பின்னணி பற்றி மிகச்சரியான தகவல் இல்லாதபோதும் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வசிப்போரில் பெரும்பான்மையானோர் பஞ்சமர்களாக உள்ளனர் என்பதை இருப்பிலுள்ள தகவல்கள் உறுதி செய்கின்றன. இக்கற்கையில் இவ்விடயம் ஒரு முக்கியம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது. அத்துடன் சாதி அடிப்படையிலில்லாது யுத்தம் மற்றும் சுனாமி முதலிய அனர்த்தங்கள் அனைத்து மக்களையும் பாதித்தாலும் பஞ்சமர் சாதிக்குழுவினைச் சேர்ந்தோர் பொதுவாக அதிகமான பாதிப்புக்குள்ளாவதனையும் இவ்விடயம் சுட்டி நிற்கின்றது. உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள சனத் தொகையில் 75 வீதத்திற்கும் மேலானவர்களாகப் பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் காணப்படுகின்றனர் (Gill 2007).

மல்லாகத்தில் சாதி

இலங்கையில் சாதி அடிப்படையிலான சனத்தொகைக் கணக்கெடுப்பு உத்தியோகபூர்வ நடைமுறையாக இல்லாததால் கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக மாற்றத்திற்குள்ளாகி வரும் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஒவ்வொரு சாதி அடிப்படையிலும் சனத்தொகையினைக் கணக்கெடுப்பதென்பது கடினமானதொரு விடயமாகும். எனினும், இவ்வாய்வில், மல்லாகத்தின் தற்போதைய சாதிவாரி சனத்தொகை பற்றிய அடிப்படைத் தகவல்களை உள்ளூர் பிரஜைகள் மற்றும் கிராமத் தலைவர்களின் (விதானை) உதவியுடன் பெற்றோம். உள்ளூரில் இடம்பெயர்ந்து மல்லாகத்திலுள்ள முகாம்களில் வசிக்கும் மக்களும் இக்கணக்கெடுப்பில் அடங்குவர்.

மல்லாகத்தின் சனத்தொகையில் "உயர் சாதி" வெள்ளாளர் 31 வீதத்தினைக் கொண்டிருக்கின்றனர். பஞ்சமர்களான வண்ணார், அம்பட்டர், பள்ளர், நளவர் மற்றும் பறையர் சாதியினைச் சேர்ந்தோர் கூட்டாக சனத்தொகையில் பெரும் பான்மை (58.3%) அந்தஸ்தினைப் பெறுகின்றனர். இப்பஞ்சமர் குழுவில் நளவர் (26.6%) மற்றும் பள்ளர் (28.5%) சாதியினைச் சேர்ந்தோர் மொத்தச் சனத்தொகையில் குறிப்பிடத்தக்கதொரு எண்ணிக்கையைக் கொண்டுள்ளனர். மல்லாகத்திலுள்ள ஒவ்வொரு சாதிகளின் சனத்தொகையினையும் வேறுபடுத்தி நோக்குவோமேயானால், வெள்ளாளர் (31%) பெரும்பான்மையான எண்ணிக்கையில் இருக்கின்றனர். 1950களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகையில் வெள்ளாளர் 50 வீதமாக இருந்தனர் என்பது அறியப்பட்டதொரு விடயமாகும் (Banks 1960: 67).

வெள்ளாளர், பிராமணர், பண்டாரம், கோவியர், தச்சர், நட்டுவர், வண்ணார், அம்பட்டர், பள்ளர், நளவர் மற்றும் பறையர் ஆகிய பதினொரு சாதிகள் மல்லாகத்தில் காணப் படுகின்றன. யாழ் குடாநாட்டின் வடக்குக் கரையோர பிரதேசங்களான காங்கேசன்துறை, மயிலிட்டி, ஊறணி, மற்றும் வசாவிளான் முதலான "உயர் பாதுகாப்பு வலையத்திலிருந்து" இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகையானோர் மல்லாகத்தில் அமைந்துள்ள நான்கு முகாம்களில் வசிக்கின்றனர். தும்புத் தொழிற்சாலை முகாம், நீதிவான் முகாம், கோணப்புலம் முகாம் மற்றும் ஊறணி முகாம் என்பவையே இந்நான்கு முகாம்களுமாகும். தும்புத் தொழிற்சாலை முகாம் மல்லாகம் தெற்கு கிராம சேவகர் பிரிவினுள்ளும் (J/212), நீதிவான் முகாம் மல்லாகம் மத்தி கிராம சேவகர் பிரிவினுள்ளும் (J/213), கோணப்புலம் மற்றும் ஊறணி முகாம்கள் மல்லாகம் வடக்கு

கிராமசேவகர் பிரிவினுள்ளும் (J/214) உள்ளடங்குகின்றன. அட்டவணை–2 இல் கொடுக்கப்பட்டுள்ளதுபோல், மல்லாகத் திலுள்ள நான்கு அகதிகள் முகாம்களிலுள்ள அனைத்து மக்களும் பஞ்சமர் குழுவினுள் உள்ளடங்கும் நளவர் மற்றும் பள்ளர் சாதிகளைச் சேர்ந்தோராகக் காணப்படுகின்றனர்.

அட்டவணை–2

சாதியும் மல்லாகத்தில் அகதி முகாம்களில் வாழும் உள்ளூரில்இடம்பெயர்ந்த மக்களின் பரம்பலும் 31.10.2007

முகாம்களின் பெயர்	சாதி	குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை	மொத்த உறுப்பினர் தொகை
தும்புத் தொழிற்சாலை முகாம்	நளவர் மற்றும் பள்ளர்	16	79
நீதவான் முகாம்	நளவர்	79	274
ஊரணி முகாம்	நளவர்	30	114
கோணப்புலம் முகாம்	நளவர்	122	415
மொத்தம்		247	874

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களும் சாதி அடையாளமும்

இக்கற்கையில் அறியப்பட்ட பிரதான விடயங்களில் ஒன்று, உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களில் அதிக எண்ணிக்கையானோர் "தாழ்ந்த அந்தஸ்தினைக்" கொண்டவர்கள் எனக் கருதப்படும் பஞ்சமர் குழுவினைச் (இக்கற்கையில் நளவர் மற்றும் பள்ளர்) சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் என்பதாகும். யுத்தம் அனைத்து யாழ்ப்பாண மக்களையும் அவர்களது சாதி வேறுபாடுகளின்றி பாதித்திருந்தும், எண்ணிக்கையில் அதிகளவாகக் காணப்பட்ட வெள்ளாள சாதியினரை உள்ளடக்காது, மரபுரீதியாக உரிமை மறுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் நீண்ட கால அடிப்படையில் உருவாகிய உள்ளூர் அகதிகள் முகாம்களில் அதிகமாக வசிப்பது எவ்வாறு சாத்தியமாகின்றது?

2006ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாம்களில் வசித்து வந்த உள்ளூரில் இடம்பெயர்ந்தோரில் பெரும் பான்மையானோர் பஞ்சமர் சமூகப் பின்புலத்தைக்

கொண்டிருந்ததை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. நளவர் (கள்ளுச்சீவுபவர்), பள்ளர் (விவசாயக் கூலிகள்), பறையர் (பறைமேளம் அடிப்பவர்) போன்ற மூன்று தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்த அகதி முகாம்களில் பெருமளவிலான எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு அகதி முகாம்கள் பற்றிய எமது ஆய்வின்போது ஒரு அகதி முகாமில் மாத்திரம் பஞ்சமர் சமூகத்தினைத் தவிர்ந்த ஏனைய சாதியைச் சேர்ந்தவர்களின் கணிசமான தொரு எண்ணிக்கையை அவதானிக்க முடிந்தது. இது வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள கற்கோவளம் அகதி முகாமாகும். இம்முகாமில் வசிப்போர் கரையார் சாதியினைச் சேர்ந்தவராவர். இக்கற்கோவளம் முகாமில் வசிக்கும் உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள மீனவர்கள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோர சமூகங்களைச் சேர்ந்தவர்களாவர். அகதி முகாம்களில் பஞ்சமர் சமூகத்தினைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கையில் அதிகளவில் வாழ்வதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

i. மரபுரீதியாக இவர்கள் தமக்கிருந்த சிறிதளவிலான நிலத்தினைத் தவிர வேறு நிலபுலங்களைச் சொந்தமாக வைத்திருக்கவில்லை. இதன் விளைவாக இடம்பெயரும் நிலை ஏற்படும் போது அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் உதவியளிக்கப்படும் அகதி முகாம்களைத் தவிர வேறு இடங்களுக்குச் சென்று வாழமுடியாத நிலை இருக்கின்றது. இலங்கைப் "பாதுகாப்புப் படையினரின்" கட்டுப்பாட்டிலிருக்கும் "உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து" அதிகளவில் இடம்பெயர்ந்து உள்ளூரில் வாழும் மக்கள் குறிப்பாக நலிவடைந்தவர்களாவர். ஏனெனில், "பாதுகாப்புப் படையினரால்" விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக அவர்கள் தம்முடைய சொந்த கிராமங்களுக்குத் திரும்ப முடியாத நிலையிலுள்ளனர்.

ii. தீண்டத்தகாத சாதிப்பின்புலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பட்ட இம்மக்கள் தமது சமூகத்திற்கு அப்பால் போதியளவு சமூக வலைப்பின்னலைக் கொண்டிராத காரணத்தினால் இவ்வகதி முகாம்களை விட்டு வெளியேற முடியாத நிலையிலுள்ளதுடன் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளில் பெரியளவில் தங்கியுள்ளனர்.

iii. இவர்களில் பலர் சொந்தமாக புதிய நிலங்களை வாங்குவதற்கோ அல்லது வேறாக வதிவிடங்களை அமைப்பதற்கோ போதியளவு வளங்களற்றுக் காணப்படுகின்றனர்.

iv. அவர்கள் போயதிளவு சேமிப்பினைக் கொண்டிருப்பினும், வழக்கத்திலுள்ள தொடர்ச்சியான சாதி அடிப்படையிலான பாகுபாடு காரணமாகவும் பஞ்சமர்களைத் தமது அயலவராக ஏற்றுக் கொள்வதற்கு ஏனைய "உயர் சாதியினரின்" விருப்பின்மை காரணமாகவும் ஏனைய சாதியினருக்கு அருகிலுள்ள நிலத்தினை வாங்குவதில் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்

V. பாதுகாப்பு மற்றும் பரஸ்பர ஆதரவு போன்ற பல்வேறு காரணங்களுக்காக அகதி முகாம்களினுள்ளோ அல்லது அகதி முகாம்களுக்கு வெளியிலோ தமது சொந்த சாதியினைச் சேர்ந்த சமூகத்தோடு கூடி வாழ்வதற்கு மக்கள் பெரும்பாலும் விரும்புகின்றனர்.

எனவே, உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட சாதியென்ற அந்தஸ்த்துடனும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்துடனும் வரையறுக்கப்பட்ட வசதிகளுடனும் உள்ளூர் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வெள்ளாளர் மற்றும் ஏனைய "உயர்ந்த" அந்தஸ்தினையுடைய மக்கள் யுத்தத்தினால் இடம் பெயர்ந்தாலும் அவர்கள் தமது கல்வி மற்றும் தொழிற்தகைமைகளையும் சமூக மூலதனங்களையும் பயன்படுத்தி கொழும்பு அல்லது கடல்கடந்த நாடுகளுக்குச் செல்லக்கூடிய நிலையிலிருந்தனர் (Sidharthan 2003, Fuglerud 1999, Daniel & Thangaraj 1994). யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கியிருந்த ஏனையோர் அகதிகள் முகாம்களில் மிகக் குறைந்த வசதிகளுடனும், மட்டுப்படுத்தப்பட்ட தனித்துவத்துடனும், தாழ்ந்த அந்தஸ்துடனும் இருப்பதைவிட முகாம்களுக்கு வெளியேயுள்ள அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் தங்கி வாழக்கூடிய நிலையிலிருந்தனர்.

அகதி முகாம்களில் வசிக்கும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கெதிரான சாதிப்பாகுபாடு

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் பொதுவாக சமூகரீதியாகத் தாழ்த்திப் பார்க்கப்பட்டனர். அகதிகள் முகாம்களில் வசிக்கும் மக்களின் "தாழ்த்தப்பட்ட சாதி" அந்தஸ்து அவர்களுடைய மேலும் ஓரங்கட்டப்பட்ட நிலைக்கு ஒரு காரணமாக இருக்கின்றது. "முகாம் ஆட்கள் / சனங்கள்" என்று குறைத்து மதிப்பிடும் சொல்லானது உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை அடையாளம் காண்பதற்காக அனேகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இச்சொல்லானது "கீழ்ச் சாதி", "வறியவர்", "தீய நடத்தை களையுடையோர்" மற்றும் "ஆக்ரோஷமானவர்" போன்ற குறைத்து மதிப்பிடும் சமூகக் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது (மொழியியல் ரீதியான கருத்தில் இவ்விடயம் ஆராயப்பட வில்லை).

முன்னைய காலத்திலிருந்த சாதிப்பாகுபாட்டு வடிவங் களுடன் ஒப்பிடும் போது, தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் அதிகம் வெளித் தெரியாது உள்ளன. அதேநேரத்தில் தற்கால சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் ஆரம்ப காலங்களிலிருந்த சாதிப் பிரக்ஞையின் அடிப்படையிலிருந்து வெளிவந்ததுடன், முற்றுமுழுதாக வேறுபட்டதொரு சமூகப்பின்னணியில் புதிய தொரு வடிவத்தினைப் பெறுகின்றன. "முகாம் சனங்கள்" எனக் குறைத்து மதிப்பிடப்படும் அகதி முகாம்களில் நீண்ட காலமாக வாழ்பவர்களில் பலர் போரினால் அல்லது இயற்கை அனர்த்தத் தினால் மட்டும் பாதிக்கப்பட்டவர்களல்லர். தீவிர வறுமையுடன் கூடிய "தீண்டத்தகாத" அந்தஸ்தின் காரணமாக அவர்களது நிலைமை மேலும் பாதிப்புக்குள்ளாகின்றது. "ஆதிக்க சாதியினரின்" கட்டுப்பாட்டிலிருந்த இந்து ஆலயங்களுக்கான பிரவேசம், "உயர் சாதியாகக்" கருதப்பட்ட குடும்பத்தினருக்கு உரிமையான கிணறுகளிலிருந்து குடி தண்ணீரினைப் பெறுதல், நிலக் கொடுக்கல் வாங்கல் போன்றவற்றில் பஞ்சமர் குழுவினைச் சேர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றன தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவும் சாதி தொடர்பான பாகுபாடுகளுக்கான சில உதாரணங்களாகும்.

இந்து ஆலயங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடு

ஏற்கெனவே விவாதிக்கப்பட்டது போல், யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிக்கு எதிரான சமூக செயற்பாடுகளில் ஆலயப்பிரவேசப் போராட்டங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளன. மிகப்பிரசித்தமான ஆலயப் பிரவேசப் போராட்டமானது மாவிட்டபுரம் கோயிலில் இடம்பெற்றது. 1968ஆம் ஆண்டில் இடம்பெற்ற இவ்வாலயப் பிரவேசப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிப்பின்புலங்களைக் கொண்ட பெருமளவு எண்ணிக்கை யிலான மக்களும் பங்கேற்றனர். ஆலயப்பிரவேசிப்பு பெயரள விலானதும் பெரிதும் முறைசார்ந்ததுமானதொரு பிரவேசமாகப் பல சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்றது. இவ்வாலயப் பிரவேச இயக்கமானது ஒரு வரையறைக்குட்பட்ட வெற்றியினையே

கொண்டிருந்தது. ஆலயப் பிரவேச இயக்கம் குறியீட்டுரீதியான வெற்றியினையே (Symbolic Success) கொண்டிருந்தது எனச் சிவத்தம்பி (2005) சுட்டிக்காட்டுகின்றார்.

யாழ்ப்பாணத்தின் கிராமப்புறங்களிலுள்ள ஆலயங்கள் இவ்வாலயப் பிரவேசிப்புப் போராட்டங்களினால் பாதிக்கப் படவில்லை என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இன்றும் கூட "ஆதிக்க சாதியினரால்" உரிமை கொண்டாடப்பட்டு நிர்வகிக்கப்படும் பல கிராமிய ஆலயங்களில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் பல சந்தர்ப்பங்களில் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் இவ்வாலயங்களில் பிரவேசிப்பதனை தாமாகவே தவிர்க்கின்றனர். பணவசதி படைத்த தாழ்த்தப்பட்ட சாதியினர் தமக்குச் சொந்தமாக ஆகமம்சார்ந்த கோயில்கள் பலவற்றைக் கட்டியபோதும் ஆலய உட்பிரவேசத்துக்கு இருந்த தடை முற்றாக நீங்கவில்லை. மேலும் பிராமணர் சாதியிலிருந்து தகுதி வாய்ந்த மதகுருக்களையும் நட்டுவர் சாதியிலிருந்து நாதஸ்வர, தவில் வித்துவான்களையும் உள்வாங்குவதில் தாழ்த்தப்பட்ட சாதியினர் இன்னமும் சிரமத்தினை எதிர்கொள்கின்றனர். பிராமணர் சாதியில் குறைந்த அந்தஸ்தினைக் கொண்டவர்கள் எனக் கருதப்படும் மத குருமார்களின் சேவைகளையே இவர்களால் பெரிதும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

மல்லாகத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்து அகதிகள் முகாம்களில் வசிக்கும் மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதில் சில சிரமங்களை எதிர்நோக்கினர். வெள்ளாளரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்து ஆலயங்களினுள் இவர்கள் மனப்பூர்வமாக வரவேற்கப்படுவதில்லை. மேலும், இவர்கள் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் ("உயர் பாதுகாப்பு வலையங்கள்") தமது சொந்தக் கிராமங்களில் இருக்கின்ற இந்து ஆலயங்களுக்கும் செல்ல முடியாத நிலை யிலுள்ளனர்.

தண்ணீர்ப் பாவனையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலக்கீழ் நீரானது பெரியதொரு இயற்கை வளமாக உள்ளது. பொதுவாக யாழ்ப்பாணத்திலுள்ள எல்லா வீடுகளும் தமக்கான சொந்தக் கிணறுகளைக் கொண்டிருக்கின்றன. இக் கிணறுகளிலிருந்து நாளாந்த பாவனைக்கான நீர் பெறப்படுகின்றது. சுத்தம் (Pure) மற்றும் அசுத்தம் (impure) என்ற கருத்தியல்களின்படி தண்ணீர்

சுத்தமானதென்றாகக் கருதப்படுகின்றது. மரபுரீதியாக தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் தீண்டத்தகாதவர் எனக் கருதப்பட்டமையினால், அவர்கள் ஆதிக்க சாதியினருடைய கிணறுகளிலிருந்து தண்ணீரை அள்ளுவதற்குக் கடுமையாகத் தடைவிதிக்கப்பட்டிருந்தனர். ஆதிக்க சாதியினரின் வீடுகளில் வேலை செய்துகொண்டிருந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கோப்பைகளிலும் தட்டுக்களிலும் உணவு மற்றும் தண்ணீர் வழங்கப்பட்டன. இத்தூய்மையின்மை தொடர்பான எண்ணப்பாடானது சில மாற்றங்களுக்கு உட்பட்ட போதிலும், இப்போக்கானது யாழ்ப்பாணத்திலுள்ள ஆதிக்க சாதிக் குடும்பங்களிடையே இன்றும் அனேகம் காணப்படுகின்றது. அனேகமான சந்தர்ப்பங்களில் தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்தவர்களே ஆதிக்க சாதியினரின் கிணறுகளை வெட்டியவர்களாக இருக்கின்றனர். கிணற்றை வெட்டியும், சுத்தப்படுத்தியும் தமது உழைப்பை நல்கும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் கிணறு வெட்டும் பணி முடிந்ததும் அதே கிணறுகளிலிருந்து தண்ணீர் அள்ளுவதற்கு அனுமதிக்கப்படாமல் இருப்பது ஆதிக்க சாதியினரின் சாதி தொடர்பான பார்வையில் இருக்கின்ற முரண்பாடுகளில் ஒன்றாகும்.

அகதி முகாம்களில் வாழும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் சில விஷேட பிரச்சினைகளைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு அகதி முகாமிலுமுள்ள பெருமளவிலான குடும்பங்களின் நாளாந்த தண்ணீர்த் தேவைக்காக சிறிய கிணறுகளே உள்ளன. உதாரணமாக மல்லாகத்திலுள்ள நீதிவான் அகதி முகாமில் 79 குடும்பங்களின் பாவனைக்காக சிறியதொரு குழாய்க் கிணறே காணப்படுகின்றது. இப்பொதுக்கிணறானது அகதி முகாம்களில் தங்கி வாழும் மக்களின் தண்ணீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இல்லாமல் இருப்பதால் அருகிலுள்ள வீடுகளிலிருந்து தண்ணீரினைப் பெறவேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர். சூழ அமைந்த சமுதாயங்களிலுள்ள ஆதிக்க சாதியினரின் கிணறுகளிலிருந்து தண்ணீர் பெற்றுக்கொள்வதற்குச் சாதியடிப்படையிலான சில பாகுபாடுகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக ஆதிக்க சாதியினரின் கிணறுகளிலிருந்து தண்ணீரினைப் பெற்றுக் கொள்வதற்கு அதன் உரிமையாளர்களால் பெரும்பாலும் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் வீட்டின் உரிமையாளரால் நீர் வழங்கப்படும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இம்முகாம்களில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆதிக்க சாதியினரின் தயவைப் பல சந்தர்ப்பங்களில் எதிர்

பார்க்கின்றனர். உள்ளூரில் இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களில் பலர் இதனைத் தமது இடப்பெயர்வின்போது எதிர்கொண்ட சாதி அடிப்படையிலான பாகுபாடாக உணர்கின்றனர்.

நில விற்பனையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு

சன அடர்த்தி மிக்க யாழ். குடாநாட்டில் நிலம் பெறுமதி மிக்க சொத்துக்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. யாழ். குடாநாட்டு மக்களின் செல்வம் மற்றும் அந்தஸ்து அவர்கள் வைத்திருக்கும் நிலத்தின் அளவிலும் தங்கியுள்ளது. மரபுரீதியாக, வெள்ளாளர் பெருமளவிலான நிலப்பரப்பினைச் சொந்தமாக வைத்திருந்தனர். ஆதிக்க சாதியினரின் வீடுகளின் அருகிலுள்ள அல்லது அவர்களின் உரிமையின் கீழ் உள்ள நிலங்கள் பொதுவாக பஞ்சமர் சமூகத்தினருக்கு விற்கப்படுவதில்லை. ஆதிக்க சாதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது நிலத்தினை விற்பதானால், முதலில் அவர் தனது உறவினருக்கு அல்லது சக சாதியைச் சேர்ந்தவருக்கு தனது நிலத்தினை வாங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவார். அதிகளவிலான நிலங்கள் ஆதிக்க சாதியினரின் உடைமையாக இருப்பதனால் இந்நிலச் சந்தையில் பஞ்சமர் குழுவினைச் சேர்ந்தோர் நிலத்தினைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய தொரு நில விற்பனைமுறை பெரியளவில் காணப்படுவதனால், மக்களின் தொடர்ச்சியான இடப்பெயர்வு, "உயர் பாதுகாப்பு வலையத்திற்கு" வெளியே இடம்பெயர்ந்து வாழும் மக்களின் நில இழப்பு போன்ற விடயங்கள் இடம்பெறுகின்ற போதிலும், நில ஆளுகை முறையில் பெரியளவு மாற்றம் இடம்பெறவில்லை.

எனினும் கடந்த மூன்று தசாப்தங்களாக ஏற்பட்ட வெளியூர் புலப்பெயர்வு காரணமாக மரபுரீதியான நிலச் சந்தை முறையில் சிலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மேலைத்தேய நாடுகளில் குடும்ப உறவினரைக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பஞ்சமர் குழுவைச் சேர்ந்தோர் குறிப்பிடத்தக்களவு பணவருவாயைக் கொண்டுள்ளனர். இப்பணத்தினைக் கொண்டு ஆதிக்க சாதியினர் தமது நிலத்துக்காகக் கோருகின்ற பணத்தினைக் கொடுத்து நிலத்தினைப் பெற்றுக்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. சிலசமயங்களில் ஆதிக்க சாதி நில உரிமையாளரிடமிருந்து நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தாழ்த்தப்பட்ட சாதியினரினால் கொடுக்க வேண்டியுள்ள மேலதிக தொகையானது நிலச்சந்தையில் இடம்பெறும் சாதி அடிப்படையிலான பாகுபாட்டினை எடுத்துக்காட்டுகின்றது. அதேநேரம் சலுகையளிக்கப்படாத மற்றும் வறுமைப்

பின்புலங்களைக் கொண்ட அகதி முகாம்களில் வசிக்கும் கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் இத்தகையதொரு சந்தையில் எத்தவித நன்மையையும் அடைய முடியாதுள்ளனர்.

முடிவுரை

சனத்தொகையில் பெரும்பான்மையினராக உள்ள வெள்ளாளரிடமே பொருளாதார ஆதிக்கம், சடங்கு மேலாண்மை மற்றும் அரசியல் அதிகாரம் போன்றவை குவிந்துள்ளதாலேயே மேற்கூறப்பட்ட சாதியடிப்படையிலான பாகுபாடுகள் பெரிதும் சாத்தியமாகின்றன. 1920ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிய சாதி முறைமைக்கு எதிரான தாழ்த்தப்பட்ட சாதியினரின் எதிர்ப்பு நடவடிக்கைகள், சனத்தொகை இடப்பெயர்வுகள், வெளிநாடுகளை நோக்கி குடிப்பெயர்வு, போரினால் ஏற்பட்ட பொதுவான சமூக முறிவுகள், தமிழீழ விடுதலைப் புலிகளால் சாதிப் பாகுபாட்டிற்கு எதிராக விதிக்கப்பட்ட தடை போன்றவை பல்வேறு மட்டங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடு குறிப்பிடத் தக்களவு குறைவடைவதற்கு மூல காரணங்களாக இருக்கின்றன. ஆனாலும் மேற்குறிப்பிட்ட மாற்றங்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளால் சாதி தொடர்பாக விதிக்கப்பட்ட தடைக்கும் அப்பால் அகதிமுகாம்களைச் சூழவுள்ள ஆதிக்க சாதிச் சமூகத்தவரால் முகாம்களில் நீண்டகாலமாகத் தங்கியிருக்கும் மக்களிற் பெரும்பான்மையினரான பஞ்சமர் குழுக்கள் எதிர்நோக்கும் பாகுபாடானது சாதி தொடர்பான பாகுபாட்டின் நீட்சியைக் காட்டுகின்றது. யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம் உட்பட அனைத்து விதமான அழிவுகளின்போதும் பாதிக்கப்பட்டவர் மீது மேலும் பிரயோகிக்கப்படும் சாதிப்பாகுபாட்டு வடிவங்கள் உரிமை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களின் நலிவடைந்த தன்மையைக் காட்டுகின்றன (Goonesekere 2001, Gill 2007). உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான அரசசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் சாதி பாராமையானவையாகவே இருந்துள்ளன. இந்நிறுவனங்களின் இத்தகைய போக்கு யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தங்களுக்குப் பிற்பட்ட சூழ்நிலைகளில் சாதியடிப்படையிலான பாகுபாடுகளை முழுமையாக கருத்தில்கொள்ளாது விடுவதற்கு காரணமாய் இருந்தது. எவ்வாறாயினும் சாதிப்பாகுபாட்டிற்கு எதிராகப் போராடிய சமூக இயக்கம் யாழ்ப்பாணத்தின் அண்மைக்கால நிலைகளுக்கானதொரு முன் எடுப்புக்களை நடத்தியமை இவ்விடத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவத் திட்டத்தில் சாதி பெரும்பாலும் பேசப்படாததொரு விடயமாகவும் தேவையற்றதொரு பிரிவினையாகவும் கருதப்படுவதுடன் தமிழ்த் தேசியத்தின் அரசியல் மற்றும் சமூக ஐக்கியத்திற்கானதொரு அச்சுறுத்தலாகவும் கருதப்படுகின்றது. எனினும் இந்தப் போக்கு அகதி முகாம்களில் தங்கி வாழும் மக்களுக்கும் அதனைச் சூழ இருக்கும் சமுதாயங்களுக்கும் இடையிலான சாதி அடிப்படையிலான பாகுபாடுகளைத் தடுப்பதற்கு அல்லது அதனை அடையாளம் காண்பதற்குத் தவறியுள்ளது.

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் முற்று முழுதாக ஒழிந்துள்ளது எனக் கற்பிதம் செய்வது தவறானதொன்றாகும். அண்மைய காலங்களில் முனைப்புடன் செயற்படும் அம்பட்டர் மற்றும் வண்ணார் போன்ற சாதிகளது சங்கங்களாக சிகை அலங்கரிப்பாளர் சங்கம் மற்றும் சலவைத் தொழிலாளர் வெண்ணிற ஆடைச் சங்கம் போன்றன தோன்றியுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் மறைமுகமான ஆதரவு மற்றும் அனுமதியுடன் இச்சங்கங்கள் வெள்ளாளரின் வீடுகளுக்குச் சென்று அம்பட்டரும் வண்ணாரும் சேவகம் செய்யும் வழக்கத்தினைப் பெரியளவில் தடுத்துள்ளன. இவ்வாறு வீடுகளுக்குச் சென்று சேவகம் செய்வது தாழ்வான செயலாகவும் அங்கீகரிக்கக்கூடாத ஒன்றாகவும் இவ்வமைப்புக்களால் கருதப்பட்டன. மேலும் இச்சங்கங்கள் நிர்ணயிக்கப்பட்டதொரு விலைப்பட்டியலை வரையறுத்ததன் மூலம் மரபு ரீதியாக வழங்கி வந்த கடமைசார் சேவை என்ற நிலையிலிருந்து குறித்த கட்டணத்தைச் செலுத்தி எந்தச் சாதியினைச் சேர்ந்தவரும் சேவையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறைசார் தொழிலாக மாற்றவும் முயற்சி செய்தனர். இத்தகைய விடயங்களால் சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் எவ்வளவு தூரம் இல்லாதுபோனது என்பது விவாதத்துக்குரியது. எனிலும் யுத்தம், சாதி முறைமைக்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை, வளர்ந்து வரும் தமிழர் என்ற அடையாள உணர்வு போன்றவற்றுக்கு அப்பாலும் யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிக்கெதிரான போராட்டமானது வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதை அறியமுடிகின்றது.

தற்கால யாழ்ப்பாண சமூகத்தில் தீண்டத்தகாதவர் என்ற கருத்துநிலையானது வறுமை மற்றும் பரம்பரை ரீதியாகத் தொடர்ந்து வந்த ஒடுக்குமுறைகள் போன்றவற்றுடன் யுத்தம் மற்றும் ஏனைய அழிவுகளின் தாக்கங்களினாலும் மேலும் வலுப்பெற்று வருகின்றன. யுத்தம் மற்றும் சுனாமியினால்

பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களிடையே வகுப்பு, பால்நிலை, இனத்துவம் போன்ற பல்வேறு காரணிகளுக்கிடையிலும் சாதி வேறுபட்ட பல சூழ்நிலைகளில் முக்கியமானதொன்றாகத் தொடர்ந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் குழுக்களில் இணைவோர், வறுமை மற்றும் சூழவுள்ள சமூகங்களினால் ஏற்படும் பாகுபடுத்தல்களுடன் நீண்டகாலமாக அகதிகள் முகாம்களில் வாழும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள், யுத்தம் மற்றும் அனைத்து வகையான ஆயுதக் குழுக்களிடமிருந்துவரும் வன்முறைகள் போன்றவற்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக வெளிநாடுகளுக்கும் இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் செல்வோர், சமூக மூலதனத்தை அனுபவிப்போர், உதவி செயல் முறைகளை அதிகம் அனுபவிக்காது இருப்போர் என்பவற்றில் கவனம் செலுத்தும் போது, அங்கே சாதிமுறையின் தாக்கத்தை அவதானிக்க முடிகின்றது. சாதி முறையானது வெளிப்படையாக அங்கீகரிக்கப்படாதபோதும் சாதிதொடர்பான உண்மையான சமூக நடைமுறைகள் மிகவும் சிக்கல் நிறைந்தவையாகவும் பல்வேறு விசாரணைகளுக்கு இடம்கொடுப்பதாகவும் காணப்படுகின்றன. பயங்கரவாதம், தேசியவாதம், விடுதலைப் போராட்டம் முதலிய பெருங்கதையாடல்களில் (Meta-narratives) ஆர்வம் காட்டிவரும் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் மேலெழுந்தவாரியான புரிதலுக்கு அப்பால் சாதி இயங்குநிலைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தில் சாதியமும் இனத்துவமும் அடையாளக் கட்டுமானங்கள்

பரம்சோதி தங்கேஸ்

சுருக்கம்

தெற்காசிய சமூகத்தில் இருவேறு முரண்பட்ட அடையாள வெளிப்படுத்தல்களாக சாதியும் இனத்துவமும் இருக்கின்றன. இவ்விருவேறு முரண்பட்ட அடையாளங்கள் யாழ்ப்பாணத்தின் தமிழர் கலாசாரத்தில் எத்தகைய இயங்குதிலைகளுக்கு உட்படுகின்றன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை உள்ளது. அடையாளம் தொடர்பான ஒரு பொதுவானதும் கோட்பாட்டுரீதியானதுமான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக இக்கட்டுரையின் முற்பகுதியுள்ளது. அடையாளம் தொடர்பான இவ்விளக்கம் சமூகவியல், மானிடவியல், உளவியல் மற்றும் கலாசார கற்கைகளின் பின்னணியில் தோற்றம்பெற்ற சிந்தனைகளைப் பகுப்பாய்வு செய்கின்றது. யாழ்ப்பாணத் தமிழர்களின் சாதி, இனத்துவ அடையாளத்தின் இடை விளைவுகள் (interplay) அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் தமிழர் அரசியற்போக்கு, ஆயுதப்போராட்டம் மற்றும் தமிழர் அபிலாசைகளின் பின்னணியில் தோன்றிய சடங்கு முறைகள் முதலியவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராயப்படுகின்றது. யாழ்ப்பாணத் தமிழர்களின் இனத்துவ அடையாளத்தை முன் வைக்கின்ற செயல்நெறி உள்வாரியாக பிரிவுபட்ட சாதிய அடையாளங்களின் முற்போக்கான செயன்முறையாக இருப்பினும், பல்வேறு சமூகச் சூழ்நிலைகளில் சாதி அடையாளங்களுடன் கூடிய இனத்துவ அடையாளங்களின் வெளிப்படுத்தல்

களையும் அவதானிக்க முடிகின்றது. இப்போக்கு இனத்துவ அடையாளங்களுக்கு இணையான சாதி அடையாளங்களின் நீட்சியையே காட்டுகின்றது.

அறிமுகம்

எப்போதும் போலவே தற்கால சமூகத்திலும் கலாசார அடையாள உருவாக்கம் என்பது முக்கியமானதொரு சமூகச் செயற்பாங்காக உள்ளது. ஒரு சமூகம் பல்வேறு சமூக நிலைகளால் ஏற்படும் அழுத்தம் காரணமாக தமது அடையாளத்தினை தாம் இழந்து விடுவோமோ என உணரும்போது, தமது அடையாளம் தொடர்பாக அதற்குள்ள பொதுவான ஆர்வம் காரணமாக அவ்வடையாளங்களைப் பாதுகாக்கவோ, பின்பற்றவோ, அல்லது மீள் கட்டுமானம் செய்யவோ முயல்கின்றது. இவ்வாறு அடையாள உருவாக்கம், தொடர்ச்சி யானதொரு இயங்குதிலை இயல்பினைக் கொண்டிருப்பதனால், அதனை திடமானதும், பொதுமையானதுமான ஒரு வரைவிலக்கணத்திற்கு உட்படுத்துவதென்பது சிரமமான காரியம். இதனால் பல்வேறு கல்விசார் துறைகளும் அடையாளம் தொடர்பாக சில பொதுவான அடிப்படைகளைக் கொண்டு, தமது கற்கைக்கான நோக்கங்களை மையப்படுத்தியே அடையாளம் என்ற எண்ணக்கருவை அறிதலுக்குட்படுத்து கின்றது. அந்தவகையில் இங்கு சமூகவியல் மற்றும் மானிடவியலின் அக்கறையான குழு அடையாளமே (Group Identity) முனைப்புப் பெறுகின்றது.

தெற்காசிய நாடுகளைப் பொறுத்தவரையில், சாதியும், இனத்துவமும் கலாசார வேறுபாடுகளின் இரு பெரிய வெளிப் படுத்தல்கள் ஆகும். சாதி அமைப்பு சமூகத்தின் அடுக்கமைவு ஒழுங்கினை வெளிப்படுத்தும்போதும் இனத்துவம் அவ்வாறான தொரு நிலையின் வெளிப்பாடாக அமையவில்லை. பேற்றெலே (1997) தனது கட்டுரையான, இனம் சாதி, இனத்துவம் (Race, Caste and Ethnicity) என்பதில் சாதி, இனத்துவம் தொடர்பாக பின்வருமாறு விவாதிக்கின்றார். சாதி, இனத்துவம் ஆகிய இரண்டு அடையாளங்களும் மக்களிடையே காணப்படும் இணரீதியான வேறுபாடுகளைப் பார்க்கிலும் கலாசார வெளிப் படுத்தலாக உள்ளன. சாதி அமைப்பு சமூகரீதியாகவும் கலாசாரரீதியாகவும் வடிவமைக்கப்பட்ட படிநிலைச் சட்டவரையறைக்குள்ளாக எப்பொழுதும் புரிந்து கொள்ளப்படும் அதேவேளை, இனத்துவக் குழுக்கள் இம்மாதிரியானதொரு படிநிலை சார் தோற்றத்தின் தேவையை வேண்டிநிற்பதில்லை. தெற்காசிய சமூகத்தில் தனிமங்கள் எப்பொழுதும் தமது அடையாளத்தினை சாதியில் இருந்து

இனத்துவத்திற்கும், இனத்துவத்தில் இருந்து சாதிக்குமான நிலைமாற்றத்திற்கு (Transformation) அல்லது இவ்விரு அடையாளத்தின் வெளிப்படுத்தலுக்கும் முகம் கொடுக்கின்றது.

சாதி அடையாள உருவாக்கமும் இனத்துவ அடையாள உருவாக்கமும் முக்கிய பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. சாதிக் குழுமங்கள் தமக்கே உரியதும், வேறுபட்டதுமான தொழில்கள், சமயச் சடங்குகள், பெயர்கள், புவியியல் அமைவிடங்கள் போன்ற பல்வேறு குறிகாட்டிகளை ஒரு இனத்துவக் குழுமத்தினுள் வெளிப்படுத்துகின்றது. அதேவேளை இனத்துவ அடையாளம் மொழி, சடங்குகள், சமயம், புவியியல் எல்லை, வரலாற்று ஞாபகங்கள் போன்ற பொதுப் பண்புகளையே தனது குறிகாட்டிகளாகக் கொள்கின்றன.

யாழ்ப்பாண சமூகத்தில் சாதி, இனத்துவ அடையாளப் பேணுகை, அவற்றுக்கிடையே இடம்பெறும் தொடர்பாடலும், மாற்றங்களும் தொடர்ந்துவரும் ஒன்று. பல்வேறு சமூக நிகழ்வுகளாலும் (யுத்தம், இடப்பெயர்வு முதலிய) இப்போக்கு தூண்டப்படும் வீச்சு அண்மைக்காலமாக அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் சில முக்கியமான கேள்விகளை இக்கற்கை தொடர்பாக மையப்படுத்துகின்றேன். அவை பின்வருமாறு:

i. சாதி, இனத்துவ அடையாளப் பேணுகையில் இனப் போராட்டம், இடப்பெயர்வுகள், மற்றும் ஏனைய சமூக நிகழ்வுகள் எவ்வாறான செல்வாக்கினைச் செலுத்துகின்றன?

ii. இனத்துவப் போராட்டம், தொடர்ச்சியான இடப்பெயர்வு முதலியவற்றினைத் தொடர்ந்து, சாதி அடையாளத்தினை வலுவிழக்கச் செய்வதற்கும், இனத்துவ அடையாளத்தினை பலப்படுத்துவதற்குமான சாட்சியங்கள் ஏதாவது உள்ளனவா?

iii. பொது இனத்துவ உணர்வு, சாதி அடையாளத்தினை எவ்வளவு தூரம் முக்கியம் குறைந்ததொன்றாக உருவாக்குகின்றது?

இவ்வினாக்களுக்கான விடைதேடும் முகமாகவே இக்கட்டுரையின் விளக்கங்களும் விவாதங்களும் அமைகின்றது.

அடையாளம்

மூன்று பிரதான துறைகள் அடையாளம் தொடர்பான கற்கையில் முக்கியம் பெறுகின்றன. உளவியல், சமூகவியல்/மானிடவியல், கலாசாரக் கற்கைகள் என்பனவே அவையாகும்.

ஆனால் அடையாளத்தினை நோக்கும் விதத்தில் அவை ஒவ்வொன்றும் வேறுபட்டும், ஒன்றுபட்டும் காணப்படுகின்றன. தனிமனிதர்களின் அடையாளங்களை அறிவதும், கற்பதும் உளவியலில் முக்கியம்பெறும் அதேவேளை குழு அடையாள உருவாக்கத்தினை மையப் பொருளாகக் கொள்வது சமூகவியலதும், மானிடவியலதும் ஆர்வமாக உள்ளது. பல்வேறு பட்ட சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளுக்கேற்ப அடையாள உருவாக்கத்தினை அறிந்து கொள்வது கலாசாரக் கற்கையின் தேடலாக உள்ளது. அடையாளம் என்பது இவ்வாறு வேறுபட்டு பிரித்தறியப்படினும், ஒரு கற்கையின் அணுகுமுறை இன்னோர் கற்கையின் அணுகுமுறையுடன் பரஸ்பர தொடர்பு படுகின்றது. இக்கற்கையிலும் அடையாளம் தொடர்பான பல்வேறு துறைசார் அணுகுமுறைகளும் உதவக்கூடியன.

அடையாள உருவாக்கத்தினை கற்பதற்கு இரண்டு வகையான அணுகுமுறைகள் உள்ளன. அவை

i. இயல்புநிலை அடையாளம் / அடையாளம் முன்னதாகவே கொடுக்கப்படுவது (Primordialism/Given Identity),

ii. கருவிசார் அடையாளம் / அடையாளம் சமூக வாழ்வில் கட்டமைக்கப்படுவது (Instrumentalism/Constructed Identity) என்பனவாகும்.

சாதி, இனத்துவ அடையாளங்களின் உருவாக்கமும் ஒரு சமூகத்திற்கென கொடுக்கப்படுகின்றது அல்லது உருவாக்கப் படுகின்றது.

இயல்பு நிலை அடையாளம் / அடையாளம் முன்னதாகவே கொடுக்கப்படுவது

இயல்பு நிலை அடையாளம் என்பது மனிதன் தன் பிறப்பின் மூலம் பெற்றுக்கொள்ளும் அடையாளமாகும். அதாவது ஒருவர் பிறந்த குடும்பம், குலம், சாதி, சமயம், இனம், மொழி, பால் முதலியன ஒருவருக்கு இயல்பாகவே இருக்கின்ற அல்லது இவை போன்றவற்றால் இயல்பாகவே அவன் பெற்றுக்கொள்ளும் நிலை எனலாம். இந்த இயல்புநிலை அடையாளத்தினை ஓர் அணுகுமுறையாக அபிவிருத்தி செய்தோரில் எட்வெட் ஷில்ஸ் (Edward Shils), கீட்ஸ் கிலிபோட் (Geertz Clifford) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கீட்ஸ் கிலிபோட் இயல்புநிலை அடையாளத்தின் அம்சங்களைப் பின்வருமாறு பட்டியல் படுத்துகின்றார்: 1) கற்பனை செய்யப்பட்ட அல்லது நினைக்கப் பட்ட இரத்த இணைப்பு, 2) இனம், 3) மொழி, 4) பிரதேசம், 5) மதம், 6) பழக்கம், (Geertz, Clifford, 1963:110). இதேபோல், அமெரிக்கச்

சமூக உளவியலாளரான எரிக் எரிக்சன் (Erik Erikson) என்பவரது கருத்துப்படி, அடையாளம் தனியனுக்கும், சமூகச் சுற்றுப்புறச் சூழலிற்கும் (Social Milieu) இடையிலான உளக் கட்டமைப்பின் ஆழத்தில் நிர்மாணிக்கப்படுகின்றது. ஆனால் அடையாளம் வெவ்வேறாக மாற்றமடைவதுடன், முரண்நிலைகளையும் ஏற்படுத்தும். அடையாளம் அகநிலை சார்ந்தது எனக் கூறுவதில் இவ்வணுகுமுறையுடன் எரிக் எரிக்சன் ஒத்த விவாதங்களை வெளிப்படுத்தியபோதிலும், தனியன்களின் அடையாள மாற்று நிலைமைகளையும், அதன் நெருக்கடிகளையும் (Identity Crisis) தனது ஆய்வுக்கட்டமைப்புக்குட்படுத்தி அடையாள மாற்றம் என்ற தளத்தினையும் ஆராய்கின்றார்.

எவ்வாறாயினும், இவ்வணுகுமுறையின்படி, அடையாளம் ஓர் இயற்கையான அம்சம். இரத்தத்துடன் உறைந்திருப்பது. அடையாளம் இயல்பு நிலையானது என வாதிடுவோருக்கு, அது மனவெழுச்சி (Emotional) மிக்கதும் உணர்வுநிலை (Sentimental) சார்ந்ததும் ஆகும். இவர்களுக்கு அடையாளம் ஆழமானது, உள்ளார்ந்தது, அத்தியாவசியமானது, நிரந்தரமானது. இவர்கள் கணிப்பின்படி இனத்துவ, சாதி அடையாளங்கள் ஒருவருக்கு கொடுக்கப்பட்டதுடன், அவை சுலபமாக மாற்றப்பட முடியாதவையாகும்.

மேற்கூறப்பட்ட அடையாளங்கள் (இனம், மதம் முதலியன) பிறப்பினால் ஒருவருக்குக் கொடுக்கப்படினும், ஒருவர் தனது விருப்பத்திற்கேற்ப தனது அடையாளத்தினை மாற்றி அமைக்க முடியும். இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க விடயம் என்ன வென்றால், சில அடையாளங்கள் இன்னொன்றாக மாற்றம் பெறுவது மிகவும் சுலபமானது, சிலது கடினமானது, உடனடிச் சாத்தியமற்றது. உதாரணமாக ஓர் இந்து மதத்தவர் கிறிஸ்தவ மதத்தவராக மாறுதல் என்பது சுலபமான விடயம். ஒரு சாதியினைச் சேர்ந்தவர் தனது சாதி அடையாளத்தினை மாற்றுவது மத மாற்றம்போல் உடனடிச் சாத்தியமற்றது. தன்னளவில் ஒருவர் தனது சாதி அடையாளங்களை இல்லாது ஒழிப்பினும், சமூக அளவில் அந்நபர் தொடர்பான குறித்த சாதி அடையாளம் நீண்டகால வரையறையில் இருக்கவே செய்கின்றது. இம்மாற்றத்தில் ஏற்படும் சிரமங்களும் சாத்தியங்களும் ஒருவருக்குள்ள சமூகக் காரணிகளையும் ஊடாட்டத்தினையும் சார்ந்தது.

சாதி, இனத்துவ அடையாளங்கள் இயல்பு நிலையானது என வாதிடுவோர், பல்வேறு சமூக நிலைமைகளுக்கேற்ப அடையாளத்தினைப் புரிந்துகொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். சில சமூக நிலைமைகளில் சாதி,

இனத்துவ அடையாளங்கள் ஏன் அதி முக்கியம் பெறுகின்றன? இன்னொரு சமூக நிலையில் இவ் அடையாளங்கள் ஏன் முக்கியம் பெறுவதில்லை? இத்தகைய கேள்விகளுக்கு விடைகாண்பதற்கும் வித்தியாசமான சமூக நிலைமைகளுக்கேற்ப அடையாள மாற்றத்தினைப் புரிந்துகொள்வதற்கும் இவ்வணுகுமுறையில் சிக்கலும், போதாமையும் இருப்பதால், கருவியல் அடையாளம் அல்லது அடையாளம் கட்டமைக்கப்படுவது என்ற விவாதம் முனைப்புப் பெறுகின்றது.

கருவியல் அடையாளம் / கட்டமைக்கப்பட்ட அடையாளம்

இவ்வணுகுமுறையின்படி, அடையாளம் இயல்பு நிலையானதோ அல்லது ஒருவருக்குக் கொடுக்கப்படுவதோ அல்ல. அது சமூக ஊடாட்டம் மூலம் கட்டமைக்கப்படுவதாகும். இனம், மொழி, சமயம் முதலிய அடையாளங்களின் உறுதித்தன்மையை இவ்வணுகுமுறை கேள்விக்குள்ளாக்குகின்றது, மறுக்கின்றது. இவ்வணுகுமுறையின் எல்லைகள் மிகவும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்தவை. இம்முறை குறியீட்டு ஊடாட்டநிலைவாதிகளால் (Symbolic Interactionists) பெரிதும் பேசப்படுகின்றது. உண்மையில் குறியீட்டு ஊடாட்டவாதிகள் தனியன்களின் சுய பிரக்ஞையின் வடிவமைப்பிலும், சமூக ஊடாட்டம் அல்லது தொடர்பாடலிலுமே அதிக அக்கறை காட்டினர். இவ்வணுகுமுறையின் ஆரம்பகர்த்தாக்களான சார்ல்ஸ் கோற்றன் கூலி (Charles Horton Cooly), ஜோர்ச் ஹெபேற் மீட் (George Herbert Mead) போன்றோர் அடையாளம் என்பதற்குப் பதிலாக சுயம் (Self) என்பதனையே பேசுகின்றமையால், சமூக ஊடாட்ட நிலையினைப் பகுப்பாய்வு செய்வதற்கு அடையாளம் என்ற சொல்லினை ஆரம்பத்தில் பிரயோகிக்கவில்லை. கால நீட்சியில், அடையாளம் ஒரு சேமிக்கப்பட்ட உள்ளார்ந்த சொல்லாக குறியீட்டு ஊடாட்டவாதிகளிடத்தே வெளிப்படுகின்றது (Philip Gleason 1996: 467). ஏவின் கொஃவ்மன் (Erving Goffman), பீற்றர் எல். பேகர் (Peter L. Berger) ஆகியோரும் கட்டமைக்கப்பட்ட அடையாளம் தொடர்பான கருத்தியலைப் பேசியதில் முக்கியம் பெறுகின்றனர். இவர்களுடைய இலக்குகள் முற்றிலும் துறைசார் தேர்ச்சியாளரால் உண்டாக்கப்படுவதிலும் பார்க்க பொதுப் பார்வையாளர்களையே உள்வாங்கி இருப்பதனால், அடையாளம் தொடர்பான சமூகவியல் புரிதலைப் பிரபல்யப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தனர். இவர்கள் கருத்துப்படி, சாதி, இனத்துவ அடையாளங்கள் வரலாற்றுப் போக்கில் நெகிழ்ச்சித்தன்மை கொள்வதுடன் மாற்றங்களுக்குள்ளாகும் எனப் பொருள்கொள்ளமுடியும்.

ரிச்சட் ஜெகின்ஸ் (Richard Jenkins, 1996) என்பவரது கருத்துப்படி சமூக அடையாளம் கருத்துப் (Meanings) பற்றியது. மக்களிடையே இருக்கும் அடிப்படை வித்தியாசங்களைக் காட்டிலும், இக்கருத்துக்கள் சமூகரீதியாகக் கட்டியமைக்கப்படுவது. அடையாளம் சமூக வாழ்க்கையின் ஒரு தொடர்பாடல் பகுதி. ஒரு குழு ஏனைய குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும்போது, வெவ்வேறுபட்ட குழுக்களின் அடையாளம் வேறுபடுகின்றது. வேறுபட்ட அடையாளங்களைப் பற்றி நாம் கொண்டுள்ள புரிதல் மட்டுப்படுத்தப்பட்டதாகவோ அல்லது முற்றிலும் தவறானதாகவோ இருக்கலாம். ஆனால் இது சமூக வாழ்க்கையின் தவிர்க்கமுடியாத ஓர் அம்சம், தொடர்பாடலை சாத்தியப்படுத்தும் ஒரு முக்கிய கருவி.

கருவியலாளர்கள் கருத்துப்படி இனத்துவம் மற்றும் சாதி அடையாளங்கள் உள்ளத்தில் உறுதியாகப் பதிக்கப்பட்ட அழிக்கமுடியாத முத்திரை அல்ல. அது தனிப்பட்ட அல்லது குழு இருப்பின் பரிமாணம். அவை சமூக நிலைமைகளுக்கேற்ப உணர்வு நிலைகளுடாக கட்டியமைக்கவோ அல்லது மீன்கட்டியமைக்கவோ முடிவன. இவ்வணுகுமுறையாளரது கருத்துப்படி அடையாளம் என்பது உறுதியான ஒன்றல்ல. மாறாக அது ஆழமற்றது, வெளிவாரியானது, எளிதில் மாற்றமடையக் கூடியது. அடையாளம் தொடர்பாக இவ்வணுகுமுறையாளர்கள் இனத்துவம், சாதி தொடர்பான உணர்வு மற்றும் மனவெழுச்சி ரீதியான புரிதலைக் குறைத்து மதிப்பிடுவதாகவும், அடையாளம் தொடர்பான இயங்கியல் மற்றும் பொருள்சார் பார்வையில் அதிக கவனம் செலுத்துவதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கோட்பாட்டு ரீதியாக அடையாளத்தினைக் கற்றுக் கொள்வதில் இவ்விரு அணுகுமுறைகளும் வெவ்வேறு நோக்கு நிலைகளை மையப்படுத்தியிருப்பினும், அவை முக்கியம் வாய்ந்தவை.

அடையாளம்: சாதியும் இனத்துவமும்

அடையாளம் ஒரு சமூகத்தில் வெளித்தெரியும் குறியீட்டினை மட்டும் கொண்டதல்ல. அது அகரீதியான உணர்வுசார்ந்ததும் (Internal Feelings), சமூக ஐக்கியம் சார்ந்ததுமாக (Social Solidarity) உள்ளது. இந்த வகையிலேயே சாதி, இனத்துவ அடையாளங்கள் இங்கு நோக்கப்படுகின்றது. அவை ஒன்றில் புறத்தில் இருக்கும் முத்திரையாகவோ, குறியீடாகவோ (Label or Symbol), அல்லது அகத்தில் தோன்றும் உணர்வாகவோ அமையலாம்.

இனத்துவம் ஒரு சிக்கல் நிறைந்த எண்ணக்கருவாக இருப்பதனால், பல துறைசார் வல்லுனர்களும் ஓர் இனத்துவத்தின் அடையாளங்களை ஒரு வரையறைக்குள் கொண்டுவந்து அவ்வெண்ணக்கருவினைப் புரிதலுக்கான முயற்சியில் ஈடுபடுகின்றனர். இவ்வகையில் பதின்நான்கு வகையான இனத்துவ அம்சங்களைக் குறிப்பிட முடியும் என்கின்றார் பிறாங் என். மகில் (Frank N. Magill 2000:473).

1) பொதுவான புவியியல் மூலம், 2) குடியேற்ற அந்தஸ்து, 3) இனம், 4) மொழி அல்லது பேச்சு, 5) சமய நம்பிக்கைகள், 6) உறவுமுறையின் மேம்பட்ட பிணைப்பு, 7) சுற்றுப்புறமும் சமூக எல்லைகளும், 8) பரிமாற்றத்திற்குள்ளாகும் மரபுகள், விழுமியங்கள், குறியீடுகள், 9) இலக்கியம், 10) நாட்டார் வழக்கும் இசையும், 11) உணவுப் பழக்கங்கள், 12) குடியிருப்பும் கலை வடிவங்களும், 13) அரசியல் தொடர்பான விசேட ஆர்வம், இனக் குழுவினை வழிநடத்துவதற்கும், சேவகம் செய்வதற்குமான நிறுவனங்கள், 14) வேறுபாடுகளின் உள்வாரியான அர்த்தமும் வெளிவாரியான பார்வையும் என்பன இப்பதின்நான்கு வகையான இனத்துவ அம்சங்களாகும். இந்த அடையாளங்கள் மாற்றமடையாதன அல்ல. அது மாறிவரும் சமூக நிலைமைகளுக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப நிலைமாற்றம் அடைவதும், தேவைக்கேற்ப தன் அடையாளங்களை வடிவமைத்துக் கொள்வதுமாகும். பெனடிக் அன்டர்சன் (1983) தனது கற்பனைச் சமுதாயங்கள் (Imagined Communities) என்ற நூலில் தேசியம் (Nationalism) சார்ந்த இனத்துவ அடையாளம் பற்றிப் பேசுகின்றார். இவரின் வாதப்படி தேசியம் என்பது சமூகரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் கட்டியமைக்கப்படுவதாகும். ஒரு சமூகத்தின் மரபுநிலைசார் அறிவு என்பது அதன் அங்கத்தவர்களின் நாளாந்த ஊடாட்டத்தில் தங்கியுள்ளது. அதேவேளை, ஒரு இனக் குழுமத்தின் அங்கத்தவர்கள் தமது சமூகத்துடன் நாளாந்த ஊடாட்டம் கொள்ளாத நிலையிலும், சொந்த ஒன்றிணைவின் இருப்பியல் உணர்வுகள் அங்கும் இருப்பதனை அறிய முடிகின்றது. இவ்விடத்தில் பெனடிக் அன்டர்சன் இனத்துவ அடையாளத்தினை உணர்வுநிலை, ஐக்கியம் சார்ந்ததாக புரிந்து கொள்கிறார்.

மாறாக சாதி அடையாளத்தினை நோக்கின், தெற்காசிய சமூகத்தில், அதிலும் குறிப்பாக இந்திய, இலங்கைச் சமூகத்தில் சாதி குறிப்பிடத்தக்கதொரு அடையாளப் பெறுமானத்தினைக் கொள்கின்றது. இது ஓர் இனக் குழுவில் காணப்படும் சிறிய பல கிளைக் குழுக்களின் அடையாளத்தினைச் சுட்டுவதாக உள்ளது. அல்லது ஓர் இனக்குழு உள்ளடக்கியுள்ள சமூக படி

முறைசார் கிளைக் குழுக்களைக் குறிக்கின்றது (Social Hierarchical Sub-Groups). சாதி அடையாளம் கூட சமூகத்தால் உருவாக்கப் படும் அதேநேரம் இயல்புநிலைசார்ந்ததும் கூட. ஒருவரின் சாதி பிறப்பினால் தீர்மானிக்கப்படும் அதேநேரம், ஒருவர் தன் விருப்பு நிலைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ப சாதி மனப்பாங்குகளையும், அடையாளங்களையும் மாற்றி அமைக்க முடியும்.

சாதி, இனத்துவ அடையாளங்களின் இயங்குநிலைகள்

சாதி அடையாளம் வலுவாகப் பேணப்பட்டு வந்த யாழ்ப்பாணச் சமூகத்தில் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அரசியல் கருத்து நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் அம்மாற்றங்களின் தொடர்ச்சி காரணமாகவும் சாதி அடையாளப் பேணுகையில் பல்வேறு மாற்றங்கள் உருவாகின்றன. இதனால் இனத்துவ அடையாளம் முனைப்புப் பெறும் போக்கினை அவதானிக்க முடிகின்றது. சிங்கள இனம், சிங்கள மொழி, சிங்கள நாடு என்பன தொடர்பான கருத்துக்கள் முனைப்புப் பெறும் நிலையில் தமிழர்களும் அதுபோல் மாற்றீடாக தமக்கென இனத்துவ அடையாளங்களைப் பேணவும் கட்டமைக்கவும் முற்படுகின்றனர். இப்போக்கினை எதிர்ப்பு அல்லது பாதுகாப்பு இனத்துவவாதமாக (Reactive or Defensive Nationalism) பல ஆய்வாளர்களும் நோக்குகின்றனர் (Pfaffenberger 1990; Wilson 2001). இருப்பினும சேரன் (2009) தமிழ்த்தேசிய வாதத்தின் வளர்ச்சி தொடர்பான ஆழமானதும், பூரணமானது மான புரிதலுக்கு எதிர்ப்பு இனவாதத்திற்கு அப்பாற் சென்று புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்கின்றார். இவரது கருத்துப்படி, தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றம் காலனித் துவத்துவ காலத்துடனும், யாழ்ப்பாணம் மற்றும் தமிழ்நாடு ஆகியற்றுக்கிடையே இடம்பெற்ற காலாசார, இலக்கிய மற்றும் மதப் போட்டிகளுடனும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியதாகும். சிங்கள சமூகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இலங்கைத் தமிழர்களிடையே சைவ மீளெழுச்சி இயக்கம் (Saiva Revivalist Movement) முன்னதாகவே அதன் உச்சத்தை அடைந்து விட்டது என்கின்றார். சைவத்தின் மீளெழுச்சி வாதியான ஆறுமுகநாவலர் (1822—1879) சிங்கள பௌத்த மீளெழுச்சி வாதியான அனகாரிக தர்மபாலவுக்கு ஒரு பரம்பரை மூத்தவர் என்று கூறுவதன் மூலம் மேலும் தனது வாதத்திற்கு வலுச் சேர்க்கின்றார் (மேலதிக தகவல்களுக்கு பார்க்க Cheran 2009).

யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி அடையாளம் இன்றுவரை வலுவான நிலையைப் பெற்றிருப்பதோடு, அது ஏனைய சமூக

அடையாளங்களுடன் இணைந்தும் செயலூக்கம் பெறுகின்றது. இவ்விடத்தில் சாதி இனத்துவ அடையாளங்களின் ஊடாட்டம் தொடர்பாக பின்வரும் சில முக்கியமான வினாக்களை எழுப்புவது பயனுடையதாக இருக்கும். 1) சாதி அடையாளம் இனத்துவ அடையாளத்தின் முனைப்பினால் வலுவிழந்துள்ளதா? 2) சாதி அடையாளங்கள் இனத்துவ அடையாளத்தைக் கட்டமைப்பதில் ஏதாவது பங்கு வகித்துள்ளனவா? 3) இனத்துவ அடையாளங்கள் முனைப்புப் பெறுகின்ற நிலையில் சாதி அடையாளங்கள் உள்முக மாற்றத்தினை எவ்வாறு எதிர்கொள்கின்றன. 4) இனத்துவ அடையாளத்தினை வேண்டிய தேடலால் சாதி அடையாளம் அழிக்கப்பட்டு விட்டது அல்லது இல்லாது போயுள்ளது என்று கூறுவது ஏற்புடையதா?

இவை போன்ற வினாக்களை யாழ்ப்பாணத்தினை மையப்படுத்தி எழுப்புவதும் அச்சமூகத்தினுடைய இயங்கியலை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கான விடை காணுவதும் இக்கட்டுரையின் தேடலாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் சாதி, இனத்துவ அடையாளம் என்பதனை யாழ்ப்பாணத் தமிழர் அரசியல் போக்கு, விடுதலை இயக்கங்கள் மற்றும் சடங்குகள் முதலிய விடயங்களின் அடிப்படையில் நோக்குவது பொருத்தமானதாகும்.

அரசியலும் அடையாள மாற்றமும்

யாழ்ப்பாணத் தமிழர்களின் அரசியல் ஆரம்பம் அச்சமூகத்தில் உயர் நிலைப்பட்ட சாதியினர் என்று கருதப்பட்டவர்களிடம் இருந்தே மேற்கிளம்புகின்றது. பொதுவாக கல்வி, பொருளாதாரம், நில உடமை, முதலியவற்றால் சமூகத்தில் உயர்நிலை வகித்த சாதிகளே அரசியலை முதலில் கையேற்றனர். சமூகம் குறிப்பிட்ட சாதிக் குழுக்களுக்கு கட்டுப்பட்டு இருந்ததன் பெறுபேறாக அரசியல் கையேற்பு குறிப்பிட்ட சாதிகளைச் சென்றடைகின்றது. யாழ்ப்பாணச் சமூகத்தின் இயங்கு நிலையில் கல்வி தொடக்கம் சமயம் வரையான முழுமையான அதிகாரம் பெரும்பாலும் உயர்சாதியினர் எனக் கருதப்படுவோரிடமே இருந்தது. அரசியல் என்பது அதிகாரம் பற்றியது என்பதால் அதிகார நிலையில் இருக்கும் சாதி அதைக் கையேற்பதில் வியப்பொன்றும் இல்லை. காலப்போக்கில் கல்வி, பொருளாதாரம் என்பவற்றில் ஏற்படும் மாறுதல் மற்றும் சாதி அடக்குமுறைக்கு எதிரான விழிப்புணர்ச்சி முதலியவற்றின் காரணமாக ஏனைய சாதியினரும் அரசியலில் பிரவேசிக்கத் தொடங்கினர். ஆனால் முன்னைய சாதியினரின் அரசியல் பிரவேசமும் பின்னர் நடைபெற்ற தாழ்ந்த சாதியினர்

எனக் கருதப்படுவோரின் அரசியல் பிரவேசமும் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டிருந்தன. தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்படுவோரின் அரசியல் பிரவேசம் தமது சாதி அடையாளங்களை மாற்றுவதற்காகவும், சாதி கூட்டி மறுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்குமாக இருந்தது. அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை (1944), கொமினிஸ்ட் கட்சி (1964) என்பவற்றினை இதற்கான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். மாறாக தாழ்த்தப்பட்ட சாதியினரை அரசியலில் உள்வாங்கிக் கொண்ட உயர்வாகக் கருதப்பட்ட சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினரின் சமூக உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதனையோ அவர்களின் சாதி அடையாளங்களை மாற்றுவதையோ முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. தமிழர் என்ற இனத்துவ அடையாளத்திற்கான அரசியல் குழு ஒன்றில் தாழ்த்தப்பட்ட சாதியினர் தம்மை இணைத்துக் கொள்வதும், ஆதிக்க சாதியினர் அவ்வடையாளப்படுத்தலை செய்வதற்காக தாழ்த்தப்பட்ட சாதியினரை அரசியலில் உள்வாங்கிக் கொள்வதும் நிகழ்கிறது.

பொதுவாக தமிழ் இனத்தினை அடையாளப்படுத்தும் நோக்குடன் தோன்றிய அரசியல் இயக்கங்களின் வளர்ச்சியை நோக்கினால் 1944இல் சமஷ்டிக் கட்சியும், 1972இல் தமிழ் ஐக்கிய முன்னணியும் தமிழருக்குரிய அரசியல் இயக்கங்களாக உருப்பெறுகின்றன. இவ்வரசியல் இயக்கங்கள் இன உரிமை பற்றிப் பேசிவந்த போதிலும், தமிழர் உரிமைகோரியாக அடக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் ஒரு இன விடுதலைக்கான அடையாளத்தினைப் பேணும் அரசியல் அமைப்பாக 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு வருகின்றது. பின்னர் இனத்துவ அடையாளம் தேசியம் நோக்கி நகர்ந்து செல்வதனையும், சென்று கொண்டிருப்பதனையும் 2002ல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற தேசிய அரசியல் கூட்டமைப்பு உணர்த்துகின்றது. தமிழ் அரசியல் அமைப்புகளுக்கிடையிலான இவ்வளர்ச்சி தமிழ் இனத்துவ அடையாளம் பற்றிப் பேசுவதில் முனைப்புப் பெறுகின்றது. இந்த அரசியல் போக்கில் தமிழ் இனத்தின் உள்முகக் குழுக்களாகப் பேசப்படுகின்ற சாதிகளில், அச்சாதி பற்றிய மனப்பாங்குகளில், அவற்றின் அடையாளங்களில் ஏற்படுகின்ற மாற்றமும் வளர்ச்சியும் நுண்ணியதாக நோக்கப்பட வேண்டிய ஒன்று.

தமிழர் அரசியலில் சாதி அடையாளத்தைக் காட்டிலும் இனத்துவ அடையாளம் முதன்மை பெறுவதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடமுடியும்.

i. அரசியலில் சாதி அடையாளத்தின் தேவையைக் காட்டிலும் இனத்துவ அடையாளம் தொடர்பான தேவைகளும் பிரச்சினைகளும் போராட்டங்களும் முனைப்புப்பெற்றமை.

ii. யாழ்ப்பாண அரசியலில் பல்வேறுபட்ட சாதிக் குழுக்களின் இணைவு என்பது சாதி அடையாளப் பேணுகையைவிட இனத்துவ அடையாளப் பேணுகையை அதிகம் முதன்மைப் படுத்தியதாக இருக்கின்றமை. தாழ்த்தப்பட்ட சாதியினரும் ஆதிக்க சாதியினரும் இணைந்த ஒன்றிணைவானது இனத்துவ அடையாளம் வேண்டிய ஒன்றிணைவே தவிர சாதி அடையாளங்கள் இல்லாத பல்வேறு சாதிகளின் அரசியல் ஒன்றிணைவல்ல.

iii. இலங்கையின் இனவாத அரசியலுக்கு ஈடுகொடுப்பதற்கு சாதி அரசியல் தமிழ்ச் சமூகத்திற்கு பொருத்தமற்றதாகத் தெரிந்தது. அதனால் யாழ்ப்பாணத்தின் பல்வேறு சாதியினர் இனத்துவ அடையாளத்தை நோக்கி தத்தமது சாதி அடையாளங்களோடு பயணித்தனர்.

யாழ்ப்பாணத் தமிழ் அரசியலில் இனத்துவ அடையாளத்தின் (மீள்) உருவாக்கமும், பலப்படுத்தலும் உடனடிச் செயற்பாடல்ல. இது சிங்கள தமிழ் அரசியலுக்கிடையே இடம்பெற்றுவரும் வரலாற்று ரீதியான இனத்துவ உரிமை, அடையாளம் முதலிய பிரச்சினையின் பாற்பட்டது. சிங்களத் தனி மொழிச்சட்டம் (1956), தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் (1956, 1977, 1983), தமிழ் மாணவர்களைப் பாதிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக நுழைவுக்கான இனவாரியான தரப்படுத்தல் (1973), யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இலங்கைக் காவல் துறையினதும், இராணுவத்தினரதும் வன்முறைகள் (1981), யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையின் ஆக்கிரமிப்பு (1987) போன்ற வரலாற்று நிகழ்வுகளை இதற்காக எடுத்துக்காட்டலாம். ஆனாலும் தமிழ் இனத்துவ அடையாளம் கேள்விக்குள்ளாக்கப்பட்டதற்கும், தொடர்ச்சியில் அதன் தேடல் வலுப்பெற்றதற்கும் மூன்று முக்கிய விடயங்களை ஆய்வின் நோக்கம் கருதி மிகச்சுருக்கமாக குறிப்பிட முடியும். அவை சிங்களத் தனி மொழிச்சட்டம் (1956), தமிழீழப் பிரகடனம் (1976), யூலை இனக் கலவரம் (1983) என்பனவாகும்.

இனத்துவ அடையாளங்களில் மொழியும் ஒன்றாகும். அடையாள சக்திகளில் மொழி வலுமிக்கதாக இருப்பதனால், இதனை ஒரு பிரதான இனத்துவ அடையாளமாகவும் குறிப்பிட முடியும். ஒரு இனத்தின் மொழியும், அதன் உபயோகத்தன்மையும் கேள்விக்குள்ளாகும் போது, அம்மொழியை உபயோகிக்கும்

சமூகம் மொழியின் உபயோகம், பாதுகாப்பு வேண்டி முயற்சிகள் பலவற்றினை எடுக்கும். இம்முயற்சிகள் ஒவ்வொன்றும் தன் இனத்துவ அடையாளம் தொடர்பாக அச்சமூகத்திற்கு உள்ள வேட்கையின்பாற்பட்டது. பொதுவாக இவ்வேட்கை குறிப்பிட்ட இனத்துவத்தினைச் சேர்ந்த அனைவருக்கும் ஒரேமாதிரி இருப்பதில்லை. ஒருவரின் சமூக, பொருளாதார, அரசியல் முதலிய நிலைமைகளுக்கு ஏற்ப வேட்கையின் வடிவங்களும் முயற்சிகளும் வேறுபடும். இவை போராட்டம், கலவரம், சத்தியாக்கிரகம் என பல வடிவம் பெறும்.

சிங்களத் தனிமொழிச்சட்டத்தின் அமுலாக்கத்தினையும், அதனைத் தொடர்ந்து மொழி அடையாளம் தொடர்பாக ஏற்பட்ட தமிழர் கூட்டுணர்வினையும் சச்சி பொன்னம்பலம் (1983) தனது நூலான இலங்கை: தேசிய பிணக்கும் தமிழர் விடுதலைப் போராட்டமும் (Sri Lanka: National Conflict and the Tamil Liberation Struggle) என்பதில் பின்வருமாறு விளக்குகின்றார்.

> சிங்களத் தனிமொழிச்சட்டமும் அரசியல் சூழ்நிலை மாற்றமும் முன்கூட்டியே இலங்கை அரசியலில் புகுந்துவிட்டது. இப்போக்கு இலங்கை அரசியலின் இனத்துவ அணுகுமுறை வளர்ச்சியினையும் கருத்தியல் அரசியலையும் வடிவமைத்து விட்டதைக் காண முடிகின்றது. சிங்களத் தனிமொழிச்சட்டம் அமுலுக்கு வந்தபோது, அது இலங்கைவாழ் தமிழருக்கு மிகச்சிறிய தாக்கத்தினை ஏற்படுத்தாது, பெருங்கோபமூட்டும் செயலாக அமைந்துவிட்டது. தமிழ் மொழி பேசும் சுயமதிப்புக் கொண்ட சமூகம் அலட்சியத்திற்குள்ளாகி மிதியுண்டது. இந்தச் சட்டம் விறைப்பானது, மழுங்கியது. சிங்களவர்களுக்கு எவ்வளவுக்கு சிங்கள மொழி, மதிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்ததோ அதுபோலவே இலங்கையில் உள்ள இன்னொரு கணிசமான அளவுள்ள மக்களுக்குரிய மொழி, மதிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தது. சிங்கள தனிமொழிச் சட்ட அமுலாக்கத்தோடு முழுத் தமிழ்ச் சமூகமும் விரக்திக்குள்ளாக்கப்படுகின்றது, ஒருமைப்பாடு உடைக்கப்படுகின்றது. உளவியல்ரீதியாக பலத்த தாக்கத்திற்குள்ளாகின்றது. அவர்கள் மனித உதவி பற்றிய நம்பிக்கையை இழந்தனர். தெய்வீக உதவியினைத் தேடினர். யாத்திரைகளும், விரதங்களும் மேற்கொள்ளப்பட்டன. தேசிய ஒருமைப்பாடு என்பதைப்பார்க்கிலும் தமிழ் மக்களின் சுயமரியாதை என்பது மிகமதிப்புள்ள விடயமாகின்றது. எவ்வாறாயினும் தமிழர்களின் மொழி நிரந்தரமாக அலட்சியப்படுத்தப்பட்டதில் இருந்து தேசிய ஒருமைப்பாடு என்பது இயலாத ஒரு விடயமாகி விட்டது.

> இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு தமது தாய்நாட்டில் தாழ்வானதொரு அந்தஸ்தினைக் கொடுத்தமை ஒருபோதும் சமாதான ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தாது (சச்சி பொண்ணம்பலம் 1983: xix)

சிங்களத் தனிமொழிச் சட்டத்தினைத் தொடர்ந்து யாழ்ப் பாணத் தமிழ் அரசியலின் இனத்துவ அடையாளத்திற்கான போராட்டம் கூர்மை அடையத் தொடங்குகின்றது. அடையாள மீள் உருவாக்கம் வேண்டி அரசியல்ரீதியான போராட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. உதாரணமாக, 1956ஆம் ஆண்டு சிங்களத் தனிமொழிச் சட்டத்திற்கு எதிராக சமஸ்டிக் கட்சியின் (FP) தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களால் காலி முகத்திடலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகத்தினை (Passive Resistance) எடுத்துக் காட்டலாம். இச்சத்தியாக் கிரகத்தினை விரும்பாத அரசும், அரச உதவியாளர்களும் அந்நிகழ்வினை குழப்பத் தாக்கினர். இதனைத் தொடர்ந்து இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே வன்முறைகள் இடம்பெற்றன. இவை மேலும் இனத்துவ அடிப்படையிலான அரசியல் போக்கினை வலிமையடையச் செய்தது.

இனத்துவ அடையாளங்களில் மரபுரீதியான தாய் நாடு (Traditional Home Land) அல்லது பொதுவான புவியியல் மூலம் (Common Geographic Origin) குறிப்பிடத்தக்கதொரு பிரதான அடையாளமாகும். இப்புவியியல் பரப்பினை ஒரு இனத்துவக் குழு தனது என உரிமை கோருவதற்கோ அல்லது உணர்வதற் கான காரணங்களாகப் பின்வருவற்றைக் குறிப்பிடலாம்.

i. தனது (ஒரு குறிப்பிட்ட இனத்துவக் குழுவின்) ஆட்சி அதிகார எல்லைக்குள் புவியியல் பிரதேசமும் அதன் எல்லைகளும் உட்பட்டது என்ற புரிதல்.

ii. தாமே வரலாற்றுரீதியாக பெரும்பான்மை இனத்தவராக குறிப்பிட்ட புவியியல் எல்லைக்குள் வாழ்ந்து வருகிறோம் என்ற எண்ணம்.

iii. பெரும்பான்மை என்ற அடிப்படையில் அன்றி பரம்பரை பரம்பரையாகக் குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்ந்து வருகின்றோம் என்ற எண்ணம்.

iv. பிறப்புரிமை, பிரஜா உரிமை என்ற அடிப்படையில் தனது இனக்குழு வாழும் பிரதேசத்துடன் ஒருவர் தன்னையும் அடையாளம் காணுதல் அல்லது பல இனக்குழுக்கள் வாழும் பிரதேசத்தில், தனது இனக்குழுவுடன் ஒருவராக தன்னை அடையாளம் காணல்.

ஒரு இனத்துவக் குழுவின் புவியியல் அடையாளத்தினை இவ்வாறு நான்கு வகைக்குள் உட்படுத்த முடிகின்றபோதிலும், தனது புவியியல் அடையாளம் தொடர்பாக அக்குழுவிற்குள்ள கருத்தியலைப் பொறுத்து இந்நான்கு வகைகளும் பிரிக்கப்பட்டும் இணைக்கப்பட்டும் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை. இந்நான்கு வகைகளும் வெளிவாரியான ஆளுகைகளுக்கும், அகவாரியான உணர்வு நிலைகளுக்கும் உட்பட்டவையாகும்; இந்த வகையிலேயே யாழ்ப்பாணத் தமிழர் அரசியலின் புரிதலின் ஒரு பகுதி, புவியியல் எல்லைகளை வரையறுத்த தனிநாட்டுக் கோரிக்கையாக மேற்கிளம்புகின்றது.

வன்முறையின் தொடர்ச்சிகள், தொடர்ந்து இடம்பெற்ற தமிழர் அரசியல் பின்னடைவுகள், சிங்கள அரசியலின் மீதிருந்த நம்பிக்கையீனங்கள், இனத்துவ அடையாளங்களின் மீது இடம்பெற்று வந்த தொடர்ச்சியான வன்முறைகள் முதலிய பல காரணங்களால் தனிநாட்டுக் கோரிக்கை பிரகடனமாவதை அவதானிக்க முடிகின்றது. 1976ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு வலுவான பிரச்சாரமாக தனிநாட்டுக் கோரிக்கை தமிழர் விடுதலை கூட்டணியால் கொண்டு வரப்படுகின்றது. இக்கோரிக்கை 14 ஆம் திகதி வைகாசி மாதம் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் இடம் பெற்றது. இப்பொதுத் தேர்தல் கோரிக்கையினை சச்சி பொன்னம்பலம் (1983) பின்வருமாறு ஆவணப்படுத்துகின்றார்,

> மொழி உரிமையையும், குடியுரிமையையும், சமய உரிமையையும், நாளுக்குநாள் சிங்கள குடியேற்றத்திற்கு தமது மரபுத் தாய்நாட்டினையும் இழந்து வரும் தேசத்திற்கான மாற்றுவழி என்ன? தரப்படுத்தல் ஊடாகக் கொண்டுவரப்பட்ட உயர்தரக் கல்வி வாய்ப்பினையும் வேலை வாய்ப்பினையும் பெற்றுக் கொள்வதற்கான சமத்துவத்தினையும் இழந்துவிட்ட தேசத்திற் குரிய மாற்று வழி என்ன? அரச பாதுகாப்புப் படைகளாலும், ஆளப்படும் இனத்தாலும், விசமிகளின் தூண்டலாலும் கொல்லப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும், தாக்குதல்களுக்குட் பட்டும் உதவியிழந்து இருக்கும் தேசத்திற்கான மாற்றுவழி என்ன? அடையாளத்தினை இருட்டில் தடவித்திரியும், நாசகரமான செயலுக்கு எல்லைகளைக் கண்டறியும் தமிழ் தேசத்திற்கான மாற்று வழி எங்குள்ளது?
>
> காலாகாலமாக எமது முன்னோர்கள் வாழ்ந்துவந்த எமது நிலத்தினை நாம் ஆள்வதும், அதற்கான மனோபலத்தினை வளர்த்துக்கொள்வதும், இறுதியான அடையாளப்படுத்தலை அதிகாரபூர்வமாக அறிவிப்பதும் மட்டுமே இதற்குரிய மாற்றுவழியாகும். எமது தாய் நாடு சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டுச் செல்லும் இந்நிலையில், தமிழ்த்

> தேசியத்திற்கான தீர்மானத்தினை சிங்கள அரசுக்கு 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலின் போது தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி அதிகாரபூர்வமாக தெரியப்படுத்துகின்றது. ஆகவே பொதுவுடமை, மதச்சார்பின்மை, இறைமை, மற்றும் சுதந்திரத்தினை நிலைநிறுத்தும் தமிழ்த் தேசியத்திற்கான ஆணையே இப்பொதுத் தேர்தலில் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் தேடலாக உள்ளது. இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களின் மரபுத் தாய்நாடு அனைத்துப் புவியியல் பொது எல்லை களையும் உள்ளடக்கிய தமிழீழ அரசாகும். (சச்சி பொன்னம்பலம் 1983:192)

இத்தேர்தல் விஞ்ஞாபனத்தின் விபரிக்கப்பட்ட அறிக்கை தமிழீழ அரசின் அமைப்பியல், அதன் குடியியல், நிறுவனமொழி, சாதியமைப்பின் நீக்கம், பொருளாதாரக் கொள்கை போன்ற வற்றின் விபரணமாகவும் அமைகின்றது. எவ்வாறாயினும் இத்தேர்தல் விஞ்ஞாபனம் சாதி அடையாளத்தினை நீக்குவ தாகவும் இனத்துவ அடையாளத்தின் வலுவான காலூன்றலா கவும் உள்ளமை கவனிக்கத்தக்கது. எனினும், ஆய்வாளர்களில் ஒருசாரார் தமிழ்த் தேசியவாதத்தின் வளர்ச்சியினை சைவ உயர்சாதிக் குழுக்களின் ஆர்வமாகப் பார்க்கின்றனர் (Thangarajah, 2000; Daniel, 2002). இப்பார்வை தமிழ்த்தேசிய வாதத்தின் உள்ளக அரசியலை ஆராய்கின்றது எனலாம்.

இப்பிரசாரக் கூட்டத்தில் மலையகத் தமிழர்களின் பிரதி நிதியாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முன்னைநாள் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் கலந்துகொண்டார். அன்று மலையகத் தமிழர் பிரஜா உரிமைப் பிரச்சினை முக்கியதொரு பிரச்சினையாக இருந்தபோதிலும், அவ்விடயம் தொடர்பாக இப்பிரசாரக் கூட்டத்தில் எக்குறிப்புகளும் இடம்பெறவில்லை. இதனால் சௌமியமூர்த்தி தொண்டமான் அப்பிரசாரத்தில் தொடர்ந்தும் கலந்துகொள்வதைத் தவிர்த்து வெளியேறினார். இது ஒரு வகையில் தமிழர் (யாழ்ப்பாணம்) அரசியலின் இனத்துவ அடையாளம் வேண்டிய போராட்டம் இலங்கைத் தமிழரை மட்டும் சார்ந்துள்ள போக்கினைக் காட்டுகின்றது எனலாம்.

1983ஆம் ஆண்டு யூலை மாதம் இடம்பெற்ற தமிழருக் கெதிரான வன்முறை, இலங்கையில் தமிழர் இருப்பினைக் கேள்விக்குள்ளாக்கியதுடன் தமிழர் இனத்துவ அடையாளம் தொடர்பாக தமிழ் அரசியலையும், இளைஞர்களின் ஆயுதக் குழுக்களையும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியது. இவ் இனக் கலவரத்தினைத் தொடர்ந்து வந்த அதிமுக்கிய அரசியல் விடயமாக இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் என்ற

பாகுபாடற்று இலங்கையில் வசிக்கும் அனைத்துத் தமிழர்களின் உணர்வுரீதியான ஒன்றிணைவினைக் கூறலாம். இதற்கு எடுத்துக்காட்டாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முன்னை நாள் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கூற்றினை எடுத்துக்காட்டலாம்.

> "இது அமிர்தலிங்கமாகவோ இலங்கைத் தொழிலாளர் காங்கிரசாகவோ மகேஸ்வரனாகவோ இருக்கலாம். நான் முன்னரே சொன்னேன். எல்லாத் தமிழர்களும் கடந்த காலத்தில் உபசரிக்கப்பட்டு வந்த நடைமுறையால் ஒருமைப்பாடு உருவாக்கப்பட்டு வந்தது. எங்களுக்கு வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளன. ஆனால் தமிழர்களை அடக்குவதற்கும், துன்புறுத்துவதற்கும், தொந்தரவு செய்வதற்கும், பாரபட்சம் காட்டுவதற்கும் என உறுதியான தீர்மானங்கள் எடுக்கும் போது, தமிழ் நாட்டுத் தமிழர்களோ அல்லது இங்குள்ள தமிழர்களோ அல்லது உலகத்தின் எந்தப் பாகத்தில் உள்ள தமிழர்களோ நீதியின்மை நடப்பதாக உணர்வார்கள்" (சிவத்தம்பி 2002)

இப்போக்கு இலங்கைத் தமிழர் அரசியலுக்கும் மலையகத் தமிழர் அரசியலுக்கும் இடையேயுள்ள இனத்துவக் கூட்டுணர்வினைக் காட்டினாலும், இவ்விரு அரசியலுக்கிடையேயும் எப்பொழுதும் இடைவெளி இருந்துவருவதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

கடந்த பல ஆண்டுகால யாழ்ப்பாணத் தமிழர் அரசியல் போக்கில் இனத்துவ அடையாளத்தின் தேவையினையும், அதனை வலிமையாக்குவதற்கான முயற்சியினையும் சார்ந்த போக்கு இருந்து வருகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டி இடம்பெற்ற கூட்டுமுயற்சியின் பெறுபேறே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) ஆகும். இக்கூட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு பகுதியையும் (TULF) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஸ் அணியினையும் (EPRLF), ஈழ மாணவர் புரட்சிகர முன்னணியையும், தமிழர் காங்கிரசையும் இணைத்ததொரு அமைப்பாகும். இக்கூட்டமைப்பு ஆயுதரீதியில் இனத்துவ விடுதலை வேண்டிப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தம் ஆதரவினைத் தெரிவித்ததன் மூலம் இனத்துவ அடையாளத்தினை மீட்டெடுக்க முனைகின்றது. எவ்வாறாயினும் இப்போக்கானது இனத்துவ அடையாள மீட்டெடுப்பின் பெரும் பங்கு, ஆயுதக் குழுவிடம் இருப்பதை அரசியல் கட்சிகளின் ஒரு பகுதியினர் உணர்ந்ததைக் காட்டுவதாகவும் கொள்ளமுடிகின்றது. தமிழர் கூட்டமைப்புடன் இணையாதுள்ள மாற்று அரசியல் கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் உண்டு. ஆனந்த

சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதர் அணி என்பன இக்கட்சிகளாகும். இவ்வாறு ஒரு கூட்டமைப்புக் கட்சியும், தனியான பல சிறிய கட்சிகளும் யாழ்ப்பாண அரசியலில் காணப்படினும், உயர்சாதி அங்கத்தவர்களைப் பெரும் பான்மையாக இக்கட்சிகள் அங்கத்தவர்களாகக் கொண்டிருப்பினும், அவை தனிப்பட்ட சாதியின் நன்மைவேண்டி செயலாற்றவில்லை என்பது வெளிவாரியாகத் தெரிகின்றது. எவ்வாறாயினும் இனத்துவ அடிப்படையில் விடுதலை வேண்டியும், கொள்கை அடிப்படையில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டு இயங்கிவரும் போக்கினையும் இவ்வரசியல் கட்சிகளின் செயற்பாட்டின் மூலமாகக் காணமுடிகின்றது.

விடுதலை (ஆயுத) இயக்கங்களும் அடையாளப் பேணுகையும்

இலங்கை (சிங்கள) அரசுக்கும் யாழ்ப்பாணத் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இடையே தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த அதிருப்தி, சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே ஏற்பட்ட வன்முறைகள், ஆயுதம் தாங்கிய படைகளின் அடக்குமுறை போன்ற காரணங்கள் தமிழ் ஆயுதக் குழுக்களின் உருவாக்கத்திற்கு அடிப்படையான காரணங்கள் எனலாம். இவ் ஆயுதக் குழுக்களில் LTTE, EROS, EPRLF, TELO, PLOTE போன்ற ஐந்து ஆயுதக் குழுக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வனைத்து தமிழ் ஆயுதக்குழுக்களினதும் அடிப்படைக் குழுக்கள் அவ்வப்போது சாதி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடியமையாலும், சில சாதிகளின் மூலத்தினைக் கொண்டிருந்ததனாலும், இக்குழுக்களின் தோற்றுவாய்களை சாதியத்துடன் இணைத்துப் பார்க்கும் போக்கும் ஒருசாராரிடம் உள்ளது. உண்மையில் இத்தகைய விவாதத்தை ஆயுதக்குழுக்களின் நடைமுறைசார் செயற்பாடுகளின் ஆழத்தினைப் புரிந்துகொள்வதற்குப் போதுமான ஒன்றாகக் கொள்ளமுடியுமா என்பது விவாதத்திற்குரியது.

இலங்கை அரசு, அரசியல்வாதிகள், மற்றும் ஆயுதப்படைகளுக்கெதிரான தமிழ் ஆயுதக் குழுக்களின் போராட்டம் 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறையைத் தொடர்ந்து பூதாகரமாகின்றது. இப்போராட்டம், தனியே சிங்கள அரசு, இலங்கை ஆயுதப்படைகள் என்ற மட்டத்துடன் மட்டும் நின்றுவிடாது, தமது போராட்டத்தையும், தமது அடிப்படை கருத்தியலையும் பாதிக்கும் வகையில் செயல்படும் நபர்களுக்கெதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டது. இவ்விடயத்தில் சிங்களவர், தமிழர், முஸ்லீம் என்ற பாகுபாடற்ற போக்கே காணப்பட்டது.

இனத்துவ அடையாளங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றான மரபுவழித் தாயகத்தினை வேண்டிய ஆரம்பகாலப் போராட்டத்தில் மேற்கூறப்பட்ட ஐந்து தமிழ் ஆயுதக்குழுக்களும் ஒன்றாகவே செயற்பட்டன. தமிழர்களின் விருப்புகளை இலங்கை அரசுக்கு பூட்டானில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் எடுத்துக்காட்டும் முகமாக இந்த ஐந்து தமிழ் ஆயுதக் குழுக்களும் தமிழர் இனத்துவ அடையாளம் வேண்டி நான்கு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தின. அவை பின்வருமாறு:

i. இலங்கைவாழ் தமிழர் வேறுபட்டதொரு தேசிய இனமாக அடையாளம் காணப்படவேண்டும்.

ii. தமிழ்த் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

iii. தமிழ் மக்களின் பாராதீனம் செய்யமுடியாத சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

iv. இலங்கை வாழ் தமிழ் மக்களின் முழுமையான பிரஜா உரிமையும், ஏனைய அடிப்படை ஜனநாயக உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இச்செயற்பாடுகள் தமிழ் ஆயுதக் குழுக்கள் இனத்துவ அடிப்படையிலேயே செயற்பட்டமையை சுட்டிநிற்கின்றது. இங்கு மலைநாட்டில் வசிக்கும் இந்தியத் தமிழர், வடக்கு கிழக்கினைத் தாயகமாகக் கொண்டு வசிக்கும் இலங்கைத் தமிழர் என்ற பாகுபாடில்லாது இலங்கைவாழ் தமிழர் என்ற அடிப்படையிலேயே கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது வெளிப்படையாகத் தெரிகின்றது. எவ்வாறாயினும் அனைத்து ஆயுதக் குழுக்களும் தமிழ் இனத்துவ அடையாளத்தினை முன் நிறுத்திய செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையிலேயே அவற்றின் அடிப்படைக் கருத்தியல் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது மேல்வாரியாகத் தெரியும் ஒரு முக்கிய விடயம்.

மேலும் இரண்டு பெரிய அடையாளப் பிரச்சினைகளுக்கான தீர்வுத் தேவை வேண்டிய நகர்வாக உள்ளமை கவனிக்கத்தக்கது. அவையாவன: 1) உள்வாரியான விவகாரங்கள். அதாவது தமிழ்ச் சமூகத்தின் சாதிப்பிரச்சினை, சிதன ஒழிப்பு முதலிய நடவடிக்கைகளின் பாற்பட்டது. 2) இலங்கை அரசிடம் இருந்து தமிழீழத்தினைப் பெற்றுக் கொள்வதன் பாற்பட்டது. இக்குறிப்புக்களை ஆன் அடேல் (1993) தனது எழுத்துக்களில் குறிப்பிட்டுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகள் சாதி அடையாளம் தாண்டிய இனத்துவ அடையாள வலுப்படுத்தலாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக பின்வரும் சில செயற்பாடுகளைப் பட்டியல் படுத்தலாம்.

1. தமிழீழத்தினை அடைவதற்கு உடலையும் உயிரையும் அர்ப்பணித்தல்.

2. சாதிப் பெயர்கள் சுட்டிக் கதைப்பவரை அல்லது சாதியின் பெயரால் அவதூறு செய்பவரைத் தண்டித்தல்.

3. தமிழீழ விடுதலைப் புலிகளில் அங்கத்தவர்களாக இருப் பவர்களுக்கு தமிழ்த் தேசியத்தை அல்லது தமிழை அல்லது தம் குழு அடையாளத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் புதிய பெயர்களைச் சூட்டுதல். தமிழ்ச்செல்வன், புலித்தேவன், பொட்டுஅம்மான், தமிழ்மாறன், இளம்பருதி, அங்கையற்கண்ணி போன்ற சில எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடலாம்.

4. புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு தனித்தமிழ்ப் பெயர்களை சூட்டுவதற்கு ஊக்கப்படுத்தல். (இச்செயற்பாடு யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் பார்க்க கிளிநொச்சிப் பிரதேசத்தில் அதிகம் நடைமுறைக்கு வந்தது).

5. பெயர்ப் பலகைகளுக்கு (கடைகள், போக்குவரத்துக் கழகங்கள், நிறுவனங்கள் முதலிய) தமிழ் வடிவம் கொடுத்தல், தமிழீழ போக்குவரத்துக் கழகம், தமிழீழ நீதிமன்றம், தமிழீழ வைப்பகம், சேரன் களஞ்சியம் போன்ற சில பெயர்களை எடுத்துக்காட்டாக்கலாம்.

6. பொதுவாக ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் சொற்களுக்கு தமிழ் வடிவம் தேடும் முயற்சியில் ஈடுபடல். குளிர் களி (Ice cream), பார ஊர்தி (Lorry), சொகுசு வண்டி (Car), வெதுப்பகம் (Bakery) முதலியவற்றினை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

7. ஒரு நாட்டுக்குரிய தேசிய அடையாளங்கள்போல், தமிழீழத்துக் கான தேசிய அடையாளத்தினைப் பிரகடனப்படுத்தல்.

தேசியப் பறவை	—	செம்பகம்
தேசிய மரம்	—	வாகைமரம்
தேசியப் பூ	—	கார்த்திகைப் பூ
தேசிய மிருகம்	—	சிறுத்தைப் புலி
தேசியக் கொடி	—	புலிக் கொடி

இந்த அடிப்படையில் நோக்கும்போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம் இனத்துவ அடையாளத்தினை வலிமைப் படுத்துவதிலும், சாதி அடையாளம் தொடர்பில் எழும் பிரச்சினைகளையும், பாகுபாடுகளையும் இல்லாது ஒழிப்பதிலும் ஈடுபடுகின்றது என்று கருதலாம். எவ்வாறாயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் சாதிப் பிரச்சினைகளை ஒழிப்பதில் எவ்வளவு

தூரம் வெற்றி கண்டனர் என்பது கேள்விக்குரிய விடயமாக எப்பொழுதும் இருந்து வருகின்றது. சாதி பற்றிய உணர்வுகளும், அதன் வெளிப்பாடும் வாழ்வின் பல்வேறு முக்கிய புள்ளிகளைத் தொட்டு நிற்பதும், சாதிப் பிரச்சினைகளும் பாரபட்சங்களும் தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் வெவ்வேறு வடிவங்கள் எடுத்தும், சிலசமயம் மாற்றங்களுக்குட்பட்டும் தொடர்ச்சியாகப் போற்றப்பட்டு வருவதும் சாதி மூலங்களை இல்லாது ஒழிப்பதில் உள்ள சிக்கலை உணர்த்துகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் குழு என்ற அடிப்படையில் சாதியத்துக்கு எதிரான கொள்கையை முன்னெடுத்துச் செல்கின்றபோதிலும், அதன் தனிப்பட்ட சில அங்கத்தவர்கள் சாதியத்தில் இருந்து முற்றிலும் விடுபடாதுள்ள நிலைமையினையும் அறியமுடிகின்றது. எவ்வாறாயினும் விதிவிலக்குகளுக்கு அப்பாற்பட்டு நோக்குகையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இனத்துவ அடையாளங்களை வேண்டிய போக்கில் நகர்ந்ததை அவதானிக்க முடிந்தது.

சடங்குகளும் அடையாள உருவாக்கமும்

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சடங்குகளில் அதிகமானவை சாதி, சமயம் மற்றும் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்டவையாகும். தைப்பொங்கல், தேர்த்திருவிழா, வேள்வி, தீமிதிப்பு, திருமணம் போன்றவற்றினை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இச்சடங்குகளை இனத்துவ அடையாளங்களின் வெளிப்படுத்தலாகவும் கொள்ளமுடியும். ஆனால் இவை இந்து மரபுவழி வந்த சடங்குகளாகும். தற்கால இனத்துவ அடையாள வேண்டலாக அல்லது தேடல்களாக இவற்றினைக் கொள்ள முடியாது. தமிழர்களில் பெரும்பாலானோர் தமது கூட்டுப் பிரக்ஞை, கூட்டு உணர்வுகள், கூட்டு விருப்பங்கள் முதலியவற்றை வெளிப்படுத்தும் கருவிகளாக மரபு வழிசார் சடங்குகள், ஆசாரங்களைப் பயன்படுத்துவதில் போதாமை இருக்கின்றது. இதனால் மரபு வழிசார் சடங்கு முறைகளினதும் தற்கால இனத்துவத் தேவையினதும் வெளிப்பாடாக இரண்டு சடங்குமுறைகள் தோற்றம் பெற்றிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

1. பொங்கு தமிழ் (Pongu Thamil)
2. மாவீரர் தினம் (Martyrdom Day)

இந்நிகழ்வுகளினூடாக அதிகமான இலங்கைத் தமிழர்களும், தமது தேவையினையும் இனத்துவக் கூட்டுணர்வினையும் வெளிப்படுத்தி நிற்கின்றனர் எனலாம்.

பொங்கு தமிழ்

தமிழர்கள் தமது இனத்துவக் கூட்டுப் பிரக்ஞை, ஐக்கியம், விருப்பு என்பனவற்றினை உலகத்திற்கு வெளிப்படுத்தவெனக் கடைப்பிடிக்கப்படும் புதிய திறந்த வெளிச் சடங்கு என பொங்கு தமிழுக்குக் கருத்துக் கொடுக்கமுடியும். பொங்கு தமிழ் விழிப்புணர்ச்சி (Awakening), உயிர்ப்பு (Revival), எழுச்சி (Uprising), மறுமலர்ச்சி (Renaissance) எனப் பலவாறு விபரிக்கப் படுகின்றது. ஆயுதப் போருக்கு மாற்றீடான சுய ஆட்சியை நோக்கிய குறியீட்டு நிகழ்வாகவும் பொங்கு தமிழைக் கொள்ள முடியும். பொங்கு தமிழ் எழுச்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினூடாக 2000ஆம் ஆண்டு முதன் முதலில் அறிமுகமாகின்றது. பொங்கு தமிழின் பிறப்பினை ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் மக்கள் இயக்கமாக மாற்றமடைதல் என வருணிப்பர்.

இலங்கைக்குள்ளேயும் வெளியேயும் உள்ள அதிக எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழர் தமது இனத்துவ கூட்டு பிரக்ஞையையும், விருப்புக்களையும் இலங்கை அரசுக்கும், உலகத்திற்கும் வெளிப்படுத்தவென இந்நிகழ்வினை நடத்தினர். இந்நிகழ்வு சாதி அடையாளங்களைக் கடந்து, இனத்துவ அடையாளத்தினை முதன்மைப்படுத்துவதனை அவதானிக்க முடிந்தது. இந்நிகழ்வில் கலந்துகொள்வோர், தமிழ் இனக்குழுவின் அக்கறை வேண்டித் தங்களது சுயவிருப்புக்களை வெளிப் படுத்தினர். எடுத்துக்காட்டாக இந்நிகழ்வில் வெளிப்படுத்தப் பட்ட பின்வரும் பிரகடனத்தினைக் குறிப்பிடலாம். தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, வேறுபட்ட தேசிய அடையாளம், மரபு வழித்தாயகம் என்பனவற்றை ஏற்றுக்கொள்ளும் தீர்வொன்றினை இச்செயற்பாட்டினூடாக வேண்டி நிற்கின்றோம் (TamilNet: 2002 and 2003). தற்பொழுது இந்நிகழ்வு இலங்கை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

மாவீரர் தினம்

தமிழ்மக்களை உள்வாங்கி தமிழீழ யுத்தத்தில் மரித்த வீரர்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் கார்த்திகை மாதம் 27ஆம் திகதி இடம்பெறும் ஒரு சடங்கே மாவீரர் தினமாகும். 1982ஆம் ஆண்டு 27ஆம் திகதி கார்த்திகை மாதம் வல்வெட்டித்துறையில் இலங்கை இராணுவத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டபோது, சங்கர் சத்தியநாதன் என்ற விடு தலைப் புலிகளின் வீரர் மரணிக்கின்றார். இந்நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்குறிப்பில் முக்கிய மானதொரு இடத் தினைப் பெறுகின்றது. மாவீரர்களின் மரணச் சடங்கு எவ்வாறு

இந்துமத மரணச்சடங்கில் இருந்து வேறுபடுகின்றது? தமிழ்மக்களிடையே இந்நிகழ்வு எத்தகைய இனத்துவக் கூட்டுணர்வு அல்லது பிரக்ஞையை ஏற்படுத்துகின்றது? முதலிய வினாக்களின் அடிப்படையில் ஒரு தேடலை மேற்கொள்வதே எனது நோக்கமாகும்.

மாவீரர்தின நாளில் சாப்பாட்டுக்கடை தவிர்ந்த அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டு பெருந்தொகையான தமிழ்மக்கள் பங்கேற்பார்கள். பல நூற்றுக்கணக்கான மக்களும், மாணவர்களும் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒன்றுகூடி இறந்த தமது மகன், மகள், சகோதரன், சகோதரி, தந்தை, உறவினர், அயலவர் முதலியோர்க்கு வணக்கம் செலுத்துவார்கள். தமிழீழ விடுதலை வேண்டி மரணித்துள்ளனர் என்ற உணர்வு, மதிப்பு நிலைசார் வெளிப்பாடு இந்நிகழ்வில் பங்கேற்பவரிடையே பொதுவாகக் காணப்படும் விடயமாகும்.

மாவீரர்களுக்காக உருவாக்கப்பட்ட அதிகமான பாடல்கள் இனத்துவ அடையாளங்களில் ஒன்றான மரபுவழித் தாய் நாட்டினை உருவாக்குவதற்கான வேட்கையின் பாற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இப்பாடல்களில் சிலவற்றின் அடிகளை எடுத்துக் காட்டுக்காகக் குறிப்பிட முடியும்.

சிந்திய இரத்தம் போதுமடா ஒரு ஈழத்தையே கட்டியெழுப்ப...

நெஞ்சில் எரியும் இரத்தம் ஒரு ஈழத்தையே கட்டியெழுப்பும்...

இறந்த மாவீரர்கள் விதைகளாகவே விடுதலைப் புலிகளால் கருதப்படுகின்றனர். அவர்கள் தமது பிரதான இலட்சியத்தினை அடைவதற்கு மீண்டும் மீண்டும் தோன்றுவார்கள் என எண்ணப்படுகின்றது. இவைபோன்ற கருத்தியல்கள், நம்பிக்கைகளால் இறந்த வீரர்களின் உடல்கள் எரிக்கப்படுவதற்குப் பதிலாக புதைக்கப்படுகின்றன. இம்முறைமை இறந்த உடல்களை எரிப்பது தொடர்பான இந்து முறைமையில் இருந்து வேறுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் இறந்த உடலை எரிப்பது தொடர்பான நடைமுறையில், வெவ்வேறு சாதிகளுக்கு என ஒதுக்கப்பட்ட சுடலைகள் இருப்பதனை அல்லது ஒரு சுடலையில் வெவ்வேறு சாதிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் இருப்பதனை இன்றைவரைக்கும் அவதானிக்க முடிகின்றது. இந்நடைமுறைக்கும் சாதிப்பாகுபாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு என்பது தெளிவு. ஆனால் இத்தகைய சாதியை மையப்படுத்திய மரணச்சடங்கு நடைமுறைகள் மாவீரரின் மரணக் கிரியையில் எதுவித தாக்கத்தினையும் ஏற்படுத்தவில்லை. வேறுபட்ட சாதிகளிலிருந்து வந்த மாவீர வீராங்கனைகளுக்கு துயிலும் இல்லத்தில் சாதி வேறுபாடுகள் கடந்த சமத்துவப்

போக்கு கடைப் பிடிப்பது தெரிகின்றது. இது குழு ஐக்கியத்தினை ஏற்படுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் அடையாளம் காணப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்டதொரு புதிய நடைமுறை எனலாம். எவ்வாறாயினும் இந்நடைமுறைகள் தமிழ் மக்களின் மரணச் சடங்குகளில் எதுவித தாக்கத்தினையும் ஏற்படுத்தவில்லை. சாதி என்ற வேறுபாடுகளின் அடிப்படையில் சுடலைகள் பிரிக்கப்பட்டு இறந்த உடல்கள் எரிக்கப்படுவதனை தற்கால யாழ்ப்பாண சமூகத்திலும் அவதானிக்க முடியும்.

பொங்குதமிழ் போலவே மாவீரர் தினமும் இலங்கை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டதொரு நிகழ்வாகவுள்ளது. இருப்பினும் இந்நிகழ்வு இலங்கைக்கு வெளியே புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களால் ஒவ்வொரு வருடமும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

முடிவுரை

சாதியும் இனத்துவமும் கருத்தியல் ரீதியிலும், நடைமுறையிலும் முரண்நிலைகளுக்குட்பட்ட இருவேறு எண்ணக் கருக்களாகும். குறிப்பாக தெற்காசிய நாடுகளின் இனத்துவங்களை சாதிகளின் முற்போக்கு ரீதியானதொரு விஸ்தீரணமாகப் புரிந்துகொள்ள முடியும் (Silva 2000.213). யாழ்ப்பாண இனத்துவத்தினையும் இத்தகையதொரு போக்கில் புரிந்து கொள்ளமுடியும். யாழ்ப்பாணத் தமிழர் தமிழ் இனத்துவ அடையாளங்களைக் கட்டமைத்துக் கொள்கின்றபோதிலும், சாதி, வகுப்பு, அந்தஸ்து, பால் நிலை, பிரதேச வேறுபாடுகள் முதலிய விடயங்களை மையப்படுத்தியும் வேறுபாடுகளை வெளிப்படுத்துகின்றனர். இவ்வடையாளங்கள் (குறிப்பாக சாதியும், இனத்துவமும்) சமூக, பொருளாதார, அரசியல், சமய வாழ்க்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன. சாதி, இனத்துவ அடையாளங்களுக்கிடையேயான பரஸ்பரத் தொடர்புகள் நெருக்கடிகள், தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், குறிப்பிட்ட வாழ்வியல் அமைவிடத்தின் வேண்டுகோள்கள், குறிப்பிட்ட குழுக்களின் அல்லது சமூகத்தின் தேவைகள் மற்றும் ஏனைய சமூக நிலைகளைப் பொறுத்து பல்வேறு மாறுநிலைகளுக்குட்படுகின்றது.

யாழ்ப்பாணத்துச் சாதி, இனத்துவ அடையாள உருவாக்கத்தினை மூன்று வேறு நிலைகளுக்குள் உட்படுத்திப் பார்க்கமுடியும். (1) தமிழ் ஆயுத இயக்கங்களும் அடையாள உருவாக்கமும் (2) தமிழ் அரசியலும் அடையாள உருவாக்கமும் (3) மக்களும் அடையாள உருவாக்கமும் என்பனவே

அவையாகும். இவ்வாறு பிரித்து அடையாள உருவாக்கங்களையும் பேணுகையையும் புரிந்துகொள்ளுகின்றபோதிலும், இம்மூன்று நிலைகளுக்கிடையேயும் பரஸ்பரத் தொடர்புகள் இருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். இங்கு தமிழ் அரசியல் மேல்நிலைக் குழுக்கள், வெள்ளாளர் சாதியினை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கின்ற போதிலும் (சில அரசியல் கட்சிகளில் வேறு சாதியினரின் செல்வாக்கும் வளர்ச்சி அடைகின்றது) தமிழ் அரசியல் கட்சிகள் சாதியிலிருந்து இனத்துவத்தினை வேண்டி நிற்கும் அடையாளத் தேடலினைக் கொண்டுள்ளதை மேல் வாரியாக அறியமுடிகின்றது. தமிழ் ஆயுதக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இனத்துவ அடையாள வேண்டலில் முனைப்புக்கொண்டிருக்கின்ற போதிலும், அவ்வினத்துவ அடையாளங்களின் உருவாக்கம் ஒரு குடையின் கீழ் அடையப்பட வேண்டியதாகவே கருதுகின்றது. மக்களிடையே உள்ள சாதி, இனத்துவ அடையாளப் பேணுகை முரண்பாடுகள் வன்முறைகள், இடப்பெயர்வுகள், நெருக்கடிகள், புவியியல் அமைவு, சமாதானம் முதலிய சமூக நிலைகளின் பாற்பட்டதாக அமைகின்றது. அதாவது சமூக நிலைமைகளுக்கு ஏற்ப அடையாளப் பேணுகையில் ஒரு நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்தி நிற்கின்றது.

மேலும் சாதி அடிப்படையிலான சமூக அந்தஸ்துக்கேற்ப இருவேறுபட்ட அடையாள பரிமாணங்களை மக்கள் வேண்டி நிற்கின்றனர் எனலாம். இவற்றில் ஒன்று சாதியினையும் இனத்துவ விடுதலையையும் வேண்டி நிற்க, மற்றையது சாதி அடையாளங்கள் குறைந்த அல்லது இல்லாது ஒழித்த இனத்துவ விடுதலையை வேண்டி நிற்கின்றது. எவ்வாறாயினும் யாழ்ப்பாணச் சமூகத்தில் உயர்வு, தாழ்வு என்பது ஒவ்வொரு சமூக அடுக்கமைவிலும் (உயர்வு, தாழ்வு எனக் கொள்ளப்படும் அனைத்து நிலைகளிலும்) இருக்கவே செய்கின்றது. இப்போக்கு இனத்துவ அடையாளங்களுக்கு இணையான சாதி அடையாளங்களின் நீட்சியைக் காட்டுகின்றது.

ஆங்கில உசாத்துணை நூல்கள்

Adele, Balasingham. (2001) *The Will to Freedom*. England: Fairmax Publishing Ltd.

Anderson, Benedict. (1983) *Imagined Communities*. London: Verso.

Andre Beteille. (1990) 'Race, Caste, Gender', *The Journal of the Royal Anthropological Institute*. Vol. 25. (3): 489-504.

Arumainayagam, K. (1979) 'Kudi-Makkal-Domestic Servants', in *Tribune*. September 8, Vol.24 (9):30-31. Colombo.

_____(1979) "Kudi-Makkal- Domestic Servants', in *Tribune*. September 15. Vol. 24. (10): 27-28. Colombo.

_____(1979) "Kudi- Makkal - Domestic Servants', in *Tribune*, September 15. Vol. 24. (11): 9-10. Colombo.

_____(2000) 'Caste in Jaffna in the 19th Century', in Duraisingam, T. (ed.) *Politics and Life in Our Times,* Vol. 11. pp. 1699-1709, Colombo: Democratic Socialist Republic of Sri Lanka at Unie Art Pvt.

_____(2000) 'Caste in Jaffna in the 20th Century', in Duraisingam, T. (ed.) *Politics and Life in Our Times,* Val. 11. pp. 1710-1745, Colombo: Democratic Socialist Republic of Sri Lanka at Une Art Pvt.

Banks, Michael. (1957) *The Social Organization of the Jaffna Tamils,* Unpublished PhD Thesis, Cambridge University Press.

_____(1960) 'Caste in Jaffna', in E. R. Leach (ed.) *Aspects of Caste in South India, Ceylon, and North-West Pakistan,* pp. 61-77. Cambridge: Cambridge University Press.

Bastin, R. (1997) 'The Authentic Inner Life: Complicity and Resistance in the Tamil Hindu Revival', in M. Roberts (ed.) *Sri Lanka Collective Identities Revisited,* Vol. 1, pp. 385-438. Marga Institute, Colombo,

Boyd, M. (1989) 'Family, Personal Networks in International Migration: Recent Development and New Agenda', *International Migration Review,* Vol.23 (3): 238-670.

Casie Chetty, Simon. (1934) Castes, *Customs, Manners and Literature of the Tamils*, Mahajan, Colombo.

Ceylon, *Census of Ceylon* 1911, Sri Lanka: Department of Census and Statistics.

Cheran, R. (2001) *The Sixth Genre: Memory, History and the Tamil Diaspora Imagination,* Colombo: Marga Institute.

_____(2003) *Diaspora Circulation and Transnational Network as Agents for Change in the North-East of Sri Lanka,* Canada: York University.

Cheran. R & Shrryn, A. (2005) *The Impact of International Informal Banking on Canada: A Case Study of Tamil Transnational Money Transfer Networks (Undiyal), Canada/Sri Lanka,* Available at: http: www.apgml.org/frameworks/docs/8/Canada_Sri %20Lanka%20%20ARS%20study%20June%202005.pdf

CPA (2005) *Women's Assess to And Ownership of Land and Property in Batticaloa, Jaffna and the Vanni,* Colombo: CPA.

Daniel, E, V. (2002) "Mood Moment and Mind", in Veena Das, Arthur Kleinman, Mamphela Ramphele and Pamela Reynolds (eds) *Violence and Subjectivity,* New Delhi: Oxford University Press.

Daniel, E.V. & Thangaraj, Y. (1994) 'Forms, Formations and Transformation of the Tamil Refugee', in E.V. Daniel & Chr. Knudser, J. (eds) *Mistrusting refugees*, pp.225-255.University of California Press, Los Angeles.

David, Kenneth. (1974a) 'And never the Twain Shall meet? Meditating and Structural Approaches to Caste Ranking', in H. M. Buck and G. Yocum (eds) *Structural Approaches to South Indian Studies,* pp. 43-80, Chambersburg. PA: Wilson College Press.

_____(1974b) 'Hierarchy and Equivalence in Jaffna, North Ceylon Normative Code as Mediators', in K. David, (ed.) *The New Wind: Changing Identities in South Asia,* pp. 179-226. The Hague: Mouton.

_____(1973a) 'Spatial Organization and Normative Schemes in Jaffna, Northern Sri Lanka', *Modern Ceylon Studies.* Vol-4(1 & 2):21-52.

_____(1973b) 'Until Marriage Do Us Part: A cultural Account of Jaffna Tamil Categories for Kinsmen,' *Man,* Vol-8 (4): 521-535.

Dipankar Gupta. (2000) *Interrogating Caste: Understanding Hierarchy and Difference in Indian Society,* India: Penguin Books.

Dirks, Nicholas B. (2001) *Caste of Mind: Colonialism and the Making of Modern India,* Princeton University Press, Princeton.

Erik H. Erikson, (1950) *Childhood and Society.* New York: Norton.

_____(1999) 'Youth and American Identity', in Charies Lemert (ed.) Social Theory: *The Multicultural and Classic Readings,* pp. 326-329, United States of America: Westvew Press.

Frank N. Magill (ed.) (2000). *International Encyclopedia of Sociology.* Vol.1. New Delhi: S. Chand and Company Ltd.

Fuglerud, Oivind. (1999) *Life on the outside: The Tamil Diaspora and long Distance Nationalism,* London: Pluto Press.

Geertz, Clifford, (1963) 'The Integrative Revolution', in Geertz, C. (ed.) *Old Society and New State,* pp. 109-110, New York: Free Press.

Gill, T. (2007) *Making Things Worse: How 'Caste Blindness' in Indian Post tsunami Disaster Recovery has Exacerbated Vulnerability and Exclusion,* Dalit Network, Netherlands.

Goffman, E. (1959) *The Presentation of Self in Everyday Life.* New York: Anctor Press.

Goonesekere, R.K.W. September (2001) *Caste Discrimination: A Global Concern,* (A Report by Human Rights Watch for the United Nations World Conference against Racism, Racial Discrimination, Xenophobia and Related Intolerance), Durban, South Africa.

Gurak, J. and Caces, Fe. (1992) 'Migration Networks and the Shaping of Migration Systems', in Kritz, Mary, Lim, Lin, and Zlotnick, Hania (eds) *International Migration System: A Global Approach,* pp.156-176, Oxford: Claredon Press,

ICG, (2010) 'The Sri Lankan Tamil Diaspora after the LTTE', *Asian Report,* No.186, Available at: http://www.crisisgroup.org/~/media/Files/asia south-asia/sri-lanka/186%20The%20Sri%20Lankan%20Tamil% 20Diaspora%20after%20the%20LTTE.pdf.

Jayaraman, R. (1975) *Caste Continuity in Ceylon: A Study of the Social Structure of Three Tea Plantations,* Bombay: Popular Prakashan.

Jayawardena. K. 2007, *Nobodies to Somebodies: the Rise of Colonial Bourgeiosie in Sri Lanka,* Sri Lanka the Social Scientists, Association and Sanjiva Books.

Jiggins, Janice. (1979) *Caste and family in the Politics of the Sinhalese,* Cambridge: CUP.

Leach, E.R. (1960) 'Introduction: What Should We Mean by Caste?', in E.R. Leach (ed.), *Aspect of Caste in South India, Ceylon, and North West Pakistan,* pp, 1-10, Cambridge, Cambridge University Press.

McDowell, C. (1996) *A Tamil Asylum Diaspora: Sri Lankan Migration, Settlement and Politics in Switzerland.* Oxford: Bergham Books.

Pfaffenberger, Bryan. (1982) *Caste in Tamil Culture: The Religious Foundations of Sudra Domination in Tamil Sri Lanka,* New Delhi: Vikas Publishing House Pvt Ltd.

_____(1990) 'Political Construction Defensive Nationalism: The 1968 Temple-Entry Crisis in Northern Sri Lanka', *Journal of Asian Studies,* Vol. 49 (1): 78-96.

Philip, Gleason. (1996) 'Identifying Identity: A Semantic History', in *Werner Sollors (ed.) Theory of Ethnicity,* pp. 460-487, London: Macmillan Press LTD

Raghavan, M.D. (1953) 'Sociology of Jaffna: The Nalavar and the Koviar', *Tamil Culture,* pp.139-150.

_____(1967) *The Tamil Culture in Ceylon: A General Introduction,* Kalai Nilaiam Limited, Colombo.

_____(1957) *Handsome Beggers: The Rodiya of Ceylon,* Colombo: Government Press.

Rechard, Jenkins. (2004) *Social Identity,* 2nd edition. London and New York: Routledge.

Roberts, Michael. (1984) *Caste Conflict and Elite Formation: The Rice of Karava Elite in Sri Lanka, 1500-1931,* Cambridge: Cambridge University Press.

Ryan, B. (1993) *Caste in Modern Ceylon: The Sinhalese System in Transition,* Navrang, New Delhi.

Satchi Ponnambalam, (1983) *Sri Lanka: National Conflict and the Tamil Liberation Struggle.* London: Zed Book Ltd.

Selvy, Thiruchandran. (1997) *Ideology, Caste, Class and Gender,* New Delhi: Vikas Publishing House Pvt. Lid.

Sidharthan, M. (2003) 'Negotiating Tamilness: a case study of Jaffna-Tamil migrants to Colombo since 1990', in Mayer, D. Rajasingham-Senanyake and Y. Thangarajah (eds.), *Building local capacity for peace: rethinking conflict and development in Sri Lanka.* pp. 305-320, Delhi: Macmillan.

_____(2009) 'Brides as Bridges? Movements, Actors, Documents and Anticipation in Constructing Tamilness', in R. Cheran (ed.) *Pathways of Dissent: Tamil Nationalism in Sri Lanka,* pp.55-80, New Delhi: Sage Publication ltd.

Silva, K.T. Sivapragasam, P.P & Thanges, P (eds) (2009), *Casteless or Caste blind? Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka,* Colombo: International Dalit Solidarity Network, Indian Institute of Dalit Studies & Kumaran Book House.

Silva, K.T. (1982) *Caste, Class and Capitalist Transformation in Highland Sri Lanka,* Melbourne, Monash University (PhD Thesis).

_____(2000) 'Caste, Ethnicity and Problems of National Identity in Sri Lanka', in S.L. Sharma & T.K. Oommen (eds) *Nation and National Identity in South Asia,* Vol. 48, pp. 201-217, Orient Longman, New Delhi,

_____(2003) 'Armed Conflict, Displacement and Poverty Trends in Sri Lanka: Evidence from Selected Displaced Populations', in M. Mayer, D. Rajasingham-Senanayake & Y. Thangarajah (eds) *Building Local*

Capacities for Peace: Rethinking Conflict and Development in Sri Lanka, pp. 245-270, Macmillan, Delhi,

Sivathamby, K. (2007), 'Divine Presence and/or Social prominence: An inquiry into the Social Role of the Places of Worship Jaffna Tamil Society', in Sivathamby (ed.) *Sri Lankan Tamil Society and Politics,* pp. 24-56, Chennai: New Century Book House,

_____(2005) *Being a Tamil and Sri Lankan*, Kumaran Press, Colombo.

_____(2005) 'Sri Lankan Tamil Identity', *Being A Tamil and Sri Lanka*, pp. 67-73, Colombo: Aivakam.

_____(2005) 'TNA and Tamils', *Being A Tamil and Sri Lanka,* pp. 299 303, Colombo: Aivakam.

Sithamparapillai, C. (1989: 15/10/1989) 'New Restrictions and Discrimination on the Rights of the Asylum Seekers', *Tamil Refugee,* pp. 20-22.

Srinivas, M. N. (1962) *Caste in Modern India,* Delhi: Penguin Publication.

Suseedirarajah, S. (1998) 'Caste and Language in Jaffna Society', in Balasubramaniyam. K. Ratnamalar, K. and Subathni, R. (eds) *Studies in Sri Lanka Tamil Linguistics and Culture,* pp. 127-137. Chenai: Professor Swaminathan Suseedirarajh Sixty first Birthday Commemoration Committee.

Thangarajah, C.Y. (2000) 'The Genealogy of Tamil Nationalism in Post idependent Sri Lanka', in S. T. Hettige and M. Mayer (eds) *Sri Lanka at Cross roads: Dilemmas and Prospects after 50 Years of Independence,* Delhi: Macmillan.

Thanges, P. 2006, *Caste and Ethnicity in Jaffna: War-Induced Transformation of Identity,* Unpublished BA Dissertation, University of Peradeniya.

_____(2008), 'Caste and Social Exclusion of IDPs in Jaffna Society', in Sharya Scharenguivel (ed.) *the University of Colombo Review,* Vol.1 (2):80-102, University of Colombo.

Van Hear, N. (2002) 'Sustaining Societies under Strain: Remittances as a Form of Transnational Exchange in Sri Lanka and Ghana', in Al-Ali, N. and Koser, K. (eds) *New Approaches to Migration? Transnational Communities and the Transformation of Home,* pp. 202-203, London: Routledge,

Wilson, A. J. (2001) *Sri Lanka Tamil Nationalism: Its Origin and Development in the 19th and 20th Centuries.* New Delhi: Penguin Books.

World Bank (2003) *Global Development Finance: Striving for Stability Development Finance.*

Yalman, N, (1967) *Under the Bo tree. Berkeley,* California University Press.

தமிழ் உசாத்துணை நூல்கள்

இரகுநாதன், ம. (2004) ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள், கொழும்பு: தென்றல் பப்ளிக்கேஷன்.

சத்தியசீலன், ச. (2006) மலாயக் குடிபெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும், ஐக்கிய இராட்சியம்: அயோத்தி நூலக சேவை.

சிவத்தம்பி, கா. (2000) யாழ்ப்பாணம்: சமூகம் பண்பாடு கருத்துநிலை, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

யோகரட்ணம். (2011) தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும், பிரான்ஸ்: இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி.

வெகுஜனன், இராவணா. (2007) சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், யாழ்ப்பாணம்: புதியபூமி வெளியீடு.

ராஜ ஸ்ரீகாந்தன். (2004) சூரன் சுயசரிதை, 3 ஆம் பதிப்பு. கொழும்பு: சிலம்பு பதிப்பகம்.

சுட்டி

அகதிமுகாம் 70, 74, 96, 98, 100, 117, 118, 119, 121, 123, 125
அகம்படியார் 48, 49, 103
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை 136
அசுத்தம் 120
அஞ்சனன்தாழ் நளவர் 48, 49
அடிமை 21, 22, 31, 104, 105, 106
அண்ணமார் 26, 27, 42, 52
அதிகாரம் 54, 123, 135
அந்தோனியார் தேவாலயம் 28
அம்பட்டர் 19, 20, 45, 47, 48, 72, 73, 78, 105, 115
அம்பனாக்கடவை 41, 42
அம்பாள் 26, 73
அரச கொள்கை 17
அருமைநாயகம், க 20, 71, 104
அனாகரிகதர்மபால 134
ஆகமம் சார்ந்த வழிபாடு 25, 91, 120
ஆகமம் சாராத வழிபாடு 25, 91, 93
ஆச்சாரியார் 19, 45
ஆடை சுத்தம் செய்தல் 30
ஆத்தாள் 44
ஆயுதக் குழுக்கள் 143, 144
ஆலய நிர்வாகம் 27
ஆறுமுகநாவலர் 134
இந்திய இராணுவம் 64, 137
இமையாணன் பாடசாலை 37
இயல்புநிலை அடையாளம் 129
இரகுநாதன் 69, 107
இராவணா 69, 109, 110
இராஜகாரிய 67
இரும்பு வேலை 30, 68, 79, 105
இலவசக் கல்வி 35, 36, 111
இனக்குழு 85, 133, 139, 147
இனத்துவ அடையாளம் 126, 128, 133, 134, 135, 137, 138, 141, 144
இஷ்டம்போன கோவியர் 135
உயர் பாதுகாப்பு வலயம் 66, 70, 71, 120
உள்ளூர் செட்டிமார் 48
உறவுமுறை 18, 23, 24, 40, 42, 44, 50, 57, 58, 59, 60, 73, 75, 79, 80, 82, 87, 97, 96, 133
ஊறணி 71, 72, 115
எட்வெட் ஷில்ஸ் 129
எரிக் எரிக்சன் 130
ஏவின் கொஃவ்மன் 131
ஐக்கிய மலாயஅரசு 61, 62, 63

ஐயனார் 26
கட்டாடியார் 45
கண்ணகியம்மன் 52
கமத்தொழில் 30
கருவிசார் அடையாளம் 129
கரையாம் அம்பட்டர் 47, 48
கரையார் 48, 68, 105, 117
கற்குள நளவர் 48
கற்பனைச் சமுதாயங்கள் 133
காசுக் கட்டளை பொருளாதாரம் 61
காமாட்சி அம்மன் 52
கிறிஸ்தவ மதம் 25, 130
கிறிஸ்தவ மிஷனறி 36, 85
கீட்ஸ் கிலிபோட் 129
குயவப் பிள்ளையார் 27
குடிமக்கள் 19, 20, 21, 104, 105, 106
குயவர் 19, 20, 26, 30, 68
குலதெய்வம் 28
குறியீட்டு ஊடாட்டநிலை வாதிகள் 131
குறைந்த சாதி 19, 41, 55
கெனத் டேவிட் 19, 21, 20, 104
கொமினிஸ்ட் கட்சி 136
கொல்லர் 19, 26, 30, 48, 68, 104, 105
கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் 37
கோணப்புலம் 71, 115, 116
கோவியப் பிள்ளையார் 27
கோவியர் 19, 26, 30, 47, 48, 72, 78, 105
சங்காபிஷேகம் 52
சச்சி பொன்னம்பலம் 138, 139, 141, 148
சத்தியசீலன் 61, 62, 63
சத்தியாக்கிரகம் 138
சம ஆசனம் 109
சம போசனம் 109
சமய அசைவியக்கம் 52, 53, 51
சமஸ்கிருதமயமாதல் 17, 50
சமூக விலக்கு 99, 100
சலவைத் தொழிலாளர் வெண்ணிற ஆடைச் சங்கம் 124
சாண்டார் 19
சாதி அடையாளம் 54, 67, 134, 135, 144, 145
சாதி ஆதிக்கம் 28, 55
சாதிக்குள் சாதி 45, 46, 49, 48, 50, 103
சாதிச் சங்கங்கள் 32, 124
சாதித் தெய்வங்கள் 25, 44
சாதி அடிப்படையிலான பாகுபாடு 113, 118, 119, 120, 122
சாதிப் புவியியல் 17, 41, 86
சாமுண்டி அம்பாள் 26
சார்ல்ஸ் கோற்றன் கூலி 131
சால்வை 107
சாளம்பை முருகன் கோயில் 28, 73, 93, 94
சிகை அலங்கரிப்பாளர் சங்கம் 32, 47, 124
சிங்கள தனிமொழிச் சட்டம் 138
சிற்பாச்சாரி 30, 48, 68, 104, 105
சிமாத்தப்பிராமணர் 48
சிவத்தம்பி. கா 19, 21, 45, 47, 52, 71, 92, 104, 106, 120, 142
சிற்பங்கள் செதுக்குதல் 30, 68, 105
சின்னாத்தாள் 44
சின்னாத்தை 44
சீதன முறைமை 89
சீதனம் 63, 77, 84
சீயாம் அம்பட்டர் 48
சீயாம் பறையர் 48
சீவல் தொழில் 30, 46, 68, 72
சுடலைகள் 148
செம்பகம் 145

செம்பு எடா வெள்ளாளர் 48
செருப்புக்கட்டிகள் 48
செல்வநாயகம் 43, 139
சைமன் காசிச் செட்டி 104
சைவக் குருக்கள் 19, 30
சோளம் நளவர் 48
சௌமியமூர்த்தி தொண்டமான் 141
தச்சகடவை 42
தமிழீழப் பிரகடனம் 137
தவறனை 32
தற்பாதுகாப்புத் தமிழ்த் தேசியவாதம் 101
தாலி 107
தாவணி 107
தீண்டத்தக்கவர் 105
தீண்டத்தகாதோர் 105
துரும்பர் 48
தேசிய மரம் 145
தேசிய மிருகம் 145
தேசியக் கொடி 145
தேசியப் பறவை 145
தேசியப் பூ 145
தேசியம் 133, 136
தேசியவாதம் 99, 101, 102, 110, 125
தேதீர்க்கடைப் பிரவேச இயக்கம் 110
தேவரயாளி இந்துக் கல்லூரி 37
தேவரிக்குள நளவர் 48

நட்டுவர் 19, 26, 30, 68, 72, 78, 105
நவீனமயமாதல் 40, 55
நளவர் 19, 26, 30, 48, 72, 78, 105, 116
நிக்கொலஸ் வான் கியர் 65
நிகண்டு சூடாமணி 20
நீக்ரோ அடிமைகள் 21

பஞ்சமர் 29, 31, 32, 33, 34, 36, 43, 44, 47, 48, 52, 53, 99, 107, 109, 111, 114, 117, 119, 123
பஞ்சவிஸ்வ குலம்/ பஞ்சவிஸ்வ கம்மாளர் 48, 50
பண்டாரம் 19, 26, 30, 34, 68, 105, 115
பள்ளர் 19, 21, 26, 27, 28, 31, 32, 37, 46, 53, 68, 71, 73, 78, 80, 85, 93, 99, 103, 104, 107, 116
பள்ளவேட்டை 37
பறையர் 19, 20, 26, 27, 29, 30, 34, 36, 46, 48, 53, 68, 71, 72, 104, 105, 107, 115, 117
பிறைன் ஃபாபன்பேக்கர் 20, 101, 104, 106, 110
பெரிய தம்பிரான் 27
பெரியாம்பி 44
பெனடிக் அன்டர்சன் 133
பேச்சுத் திருமணம் 49, 50
பொங்கல் 52
பொங்கு தமிழ் 147
மடப்பள்ளி வெள்ளாளர் 48
மரமேறிகள் 48
மலாய யாழ்ப்பாணத்தவர் 61
மலையகத் தமிழர் 141
மறவைக்குள நளவர் 48
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் 111
மைக்கல் பாங்ஸ் 41, 71, 104, 106, 107
ரிச்சட் ஜூகின்ஸ் 132
வண்ணார் 19, 20, 26, 30, 48, 68, 72, 78, 87, 105, 115
வல்லியக்கன் 27
வாகைமரம் 145
வெகுஜனன் 69, 109, 110
வெதுப்பகம் 145
வெள்ளாம் அம்பட்டர் 48

வெள்ளாம் பறையர் 48
வைரவி 44
ஜோர்ச் ஹெபேற் மீட் 131

யாழ்ப்பாணத்தின் பிரதான சமூக ஒழுங்கமைப்பு முறையான சாதி அமைப்பில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வளர்ச்சிகள், மாற்றங்கள் பற்றிய மிக முக்கிய குறிப்புக்களும் கருத்தாடல்களும் பரம்சோதி தங்கேசுடைய கட்டுரைகளில் இடம்பெறுகின்றன. அவரது கட்டுரைகளில் காணப்படும் தரவுகள், கூற்றுக்கள் ஆகியன பல கருத்தாடல்களுக்கு இடம்கொடுக்கக் கூடியனவாக இருக்கும் அதே வேளையில் நேர்மைத் தன்மையினையும் அதனை வெளிப்படுத்தும் புலமை வேட்கையினையும் கொண்டிருக்கின்றன.

கார்த்திகேசு சிவத்தம்பி

மறைந்த தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சமூகவியற் துறையில் விரிவுரையாளராக கடமையாற்றிய பரம்சோதி தங்கேஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியற் துறையில் கலைமாணிப் பட்டத்தினையும் கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் அகதிகள் கற்கையில் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றவர். குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின் சாதி, வர்க்கம், இனத்துவம், பால்நிலை, இடப்பெயர்வு முதலிய விடயங்கள் தொடர்பாக இவர் ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றார்

ISBN 978-81-908076-7-8

9 788190 807678 00001

100 INRS, 160 SLRS, 10 USD, 7 EUR